தமிழினி பப்ளிகேஷன்

இலங்கைத் தமிழ் அறிஞர்களும் முஸ்லிம் அறிஞர்களும்

வ. மா. குலேந்திரன்

C.N. 920



R: 8874

இலங்கைத் தமிழ் அறிஞர்களும் முஸ்லிம் அறிஞர்களும்

(பாகம் - 1)

பொது நூலகம்

தொகுப்பாசிரியர் :

வ.மா. குலேந்திரன்

தமிழினி பப்ளிகேஷன்

மெஜஸ்டிக் அபார்ட்மென்ட்ஸ்
பிளாட் 3, 5வது தளம்,
21, ஸ்டேஷன் ரோடு, வெள்ளவத்தை,
கொழும்பு - 6. இலங்கை.

நூல் விவரம்

நூல் தலைப்பு	இலங்கைத் தமிழ் அறிஞர்களும் முஸ்லிம் அறிஞர்களும் (பாகம் - 1)
தொகுப்பாசிரியர்	வ. மா. குலேந்திரன்
மொழி	தமிழ்
பதிப்பு ஆண்டு	2005
பதிப்பு விவரம்	முதல் பதிப்பு
உரிமை	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	மேப்லித்தோ
நூலின் அளவு	கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	xx + 288 = 308
அட்டைப்பட ஓவியம்	ஐஸ் கிராஃபிக்ஸ்
லேசர் வடிவமைப்பு	கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் சென்னை - 26. ✆ 23725639
அச்சிட்டோர்	ஸ்கிரிப்ட் ஆஃப்ஸெட் சென்னை - 94.
நூல் கட்டுமானம்	தையல்

இந்திய விலை : ரூ. 90.00

இலங்கை விலை : ரூ. 300.00

சமர்ப்பணம்!

என்னைப் பெற்றெடுத்து
பேணி வளர்த்த
என் அன்பு
பெற்றோர்களின்
காலடியில்
இந்நூலை
சமர்ப்பிக்கின்றேன்.

- வ.மா. குலேந்திரன்

இந்நூலை இலவசமாக
200 பாடசாலைகளுக்கு
வழங்க அனுசரணை
வழங்குகிறார்கள்
இலண்டன்
டயமண்ட் பலஸ் – மிதூஸ்
நகை மாளிகைகளின்
உரிமையாளர்
திரு. **செ. யோகநாதன்**
திருமதி. **மேகலா யோகநாதன்**
ஆகியோர்.
– தொகுப்பாசிரியர்

முன்னுரை

- கலாபூஷணம் அ. முகம்மது சமீம்

இலங்கை வரலாற்றில், முக்கியமாக தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய சில வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையைப் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு தான் இந்நூல்.

இக்கட்டுரைகளைப் பல எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். **வ.மா. குலேந்திரன்** அவர்களால் **தமிழினி பதிப்பக**த்தால் வெளியிடப்பட்ட இந்நூல், இலங்கைத் தமிழ் வாசகர்களுடைய அறிவை வளர்க்கும் என்பதில் எள்ளளவு ஐயமுமில்லை.

இவ்வரலாற்று நாயகர்களுடைய செல்வாக்கு எவ்வளவு தூரம், அவர்களுடைய மக்களின் வாழ்க்கையைப் பாதித்தது என்ற கேள்வி எழுகிறது.

தனி மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்கள் வரலாற்றில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமா? என்ற அடுத்த கேள்வி எழுகிறது.

உற்பத்திப் பெருக்கத்தினால், மனித சமுதாயத்தில் ஏற்படும் பொருளாதார, சமூக மாற்றங்கள் தான் அரசியல் மாற்றங்களுக்குக் காரணம் என்பது மார்க்சிய சித்தாந்தம்.

பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, அமெரிக்க சுதந்திரப் போர், இந்திய சுதந்திரப் போராட்டம் ஆகிய இப்பெரும் சம்பவங்கள் ஏற்படுவதற்குக் காரணம் அச்சமூகங்களில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் தான்.

இத்தத்துவத்தின்படி தனி மனிதனுடைய செல்வாக்கு குன்றி விடுகிறது. சமூகத்தில் ஏற்படும் அரசியல் கொந்தளிப்புகள் தான் தனி மனிதனை மேற்பரப்புக்குக் கொண்டு வருகிறது. 'The Hero in History' - வரலாற்றில் வரலாற்று நாயகனின் பங்கு - என்ற விவாதம் பலகாலமாக வரலாற்றாசிரியர்களிடையே நடைபெற்று வந்திருக்கிறது.

மார்க்சியவாதிகளின் கூற்று எப்படி இருந்தாலும், வரலாற்றில் தனி மனிதனுடைய செல்வாக்கை நாம் குறைத்துக் கூற முடியாது. ஒரு தலைவன் தோன்றாவிட்டால் இன்னொரு தலைவன் தோன்றுவான் என்று மார்க்சியவாதிகள் கூறினாலும், அத்தலைவன் தான் இம்மாற்றங்களைச் செயல்படுத்துகிறான் என்பதை நாம் மறுக்க முடியாது.

ஆகவே, தனிமனிதனுடைய செல்வாக்கு வரலாற்றையே மாற்றுகிறது என்ற உண்மையையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு **நெப்போலியன்** என்ற ஒரு தனி மனிதன் தான் காரணம் என்பதை மறுக்க முடியாது.

அதேபோல, இருபதாம் நூற்றாண்டில் உலகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு, இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தொடங்கிய **ஹிட்லர்** காரணம் என்றால் அது மிகையாகாது. அதே போலத்தான் இந்திய சுதந்திரத்திற்கு ஒரு **'மகாத்மா' காந்தி**யும் சீனப்புரட்சிக்கு ஒரு **மாசேதுங்**கும். இந்தோனேஷியச் சுதந்திரத்திற்கு ஒரு **சோகர்னோ**வும் காரணகர்த்தாக்கள் என்ற வரலாற்று உண்மையை நாம் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

இதே போலத்தான் சமூக மாற்றங்களுக்கு, இலக்கியவாதிகளின் தொண்டினை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

'எழுத்தாளன் என்பவன் அங்கீகரிக்கப்படாத சட்டம் இயற்றுபவன் - 'The writer is the unacknowledged legislator of mankind என்று ஓர் அறிஞன் கூறியிருக்கிறான்.

தமிழ் நாட்டில் மக்களின் சுதந்திர உணர்ச்சி வளர்வதற்குப் **பாரதி**யின் கவிதைகள் காரணமாயிருந்தன. பிரெஞ்சுப் புரட்சி தோன்றுவதற்கு **வொல்டெயர், ரூசோ** போன்ற எழுத்தாளர்களின் எழுத்துகள் காரணமாயின என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்வர்.

இந்நூலில் வரும் தமிழ், முஸ்லிம் அறிஞர்களின் சிந்தனைகளும், செயல்களும் எவ்வளவு தூரம் மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தின என்ற உணர்வை இக்கட்டுரைகளை நாம் வாசிப்பதன் மூலம் பெறுகிறோம்.

இலங்கை முஸ்லிம்களின் கல்வித்தரம் உயர்வதற்கும், அதனால் தோன்றிய சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்படுவதற்கும், கல்வி அமைச்சராகக் கடமையாற்றிய கலாநிதி **பதியுத்தீன் மஹ்மூத்**தான் காரணம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர்.

ஏடுகள் சுவடிகளில் மங்கிக் கிடந்த பண்டைய தமிழ் இலக்கியங்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவற்றைப் பதிப்பித்து, இவ்விலக்கியங்கள் பற்றிய அறிவை எமக்கு அளித்த **சி.வை. தாமோதரம்** பிள்ளையவர்களின் சேவையை நாம் மறக்க முடியாது.

இலங்கையில் சைவ நெறி வளர்வதற்குத் தொண்டாற்றிய **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்**ின், சைவத் தொண்டைப் பற்றிய விவரம் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இலைமறை காயாக இருந்து தனது வன்னிப் பிரதேசத்து மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் இலக்கியங்களை உருவாக்கி, உலகத்துக்கு எடுத்துக் காட்டிய பெருமை தமிழறிஞர் **கைலாசபிள்ளை**யையே சாரும்.

இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழ் உணர்ச்சியை ஏற்படுத்தி, உலகத் தமிழ் இலக்கிய மன்றத்தை நிறுவுவதற்கு உதவிய **தனிநாயகம்** அடிகளாரின் வாழ்க்கையைப் பற்றிய குறிப்பும், சர்வகலாசாலையின் தமிழ்ப் பேராசிரியராகவும் யாழ்ப்பாணத்து வளாகத்தின் துணை வேந்தராகவும் கடமையாற்றிய **வித்தியானந்தன்**

அவர்களின் சேவை பற்றிய குறிப்பும் இந்நூலில் வரும் சிறப்பம்சங்களாக வுள்ளன.

தமிழுக்குத் தொண்டாற்றிய பண்டிதர் **வடிவேலு**, புலவர் **முஹம்மது காசிம் ஆலிம்**, கவிஞர் **எம்.சி.எம். சுபைர்**, **குமாரசாமிப் புலவர்**, **அஹமது நெய்னா ஆலிம் புலவர்** தமிழ் இதழியல் துறைக்கு முன்னோடியாகத் திகழ்ந்த **எல்.எம். உதுமான்** ஆகிய பெருந்தகைகள் பற்றிய கட்டுரைகள் இன்று தமிழ் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

திருகோணமலை கோணேஸ்வர கோயிலின் பூர்வீக வரலாறும் தமிழர்கள் இலங்கையில் தொன்று தொட்டு வாழ்ந்ததற்குரிய ஆதாரங்களையும் கொண்ட விவரங்கள், **அகிலேசபிள்ளை**யவர்களின் வரலாற்றுக் கட்டுரையில் இடம் பெற்றிருப்பதனால், இந்நூல் இன்னும் சிறப்புப் பெறுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழர்களின் அரசியல் வாழ்க்கையில் மின்னொளி பரப்பிய ஒரு பெரும் தலைவர், இங்கிலாந்தின் மகாராணியால் போற்றப்பட்டவரும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்தவருமான **சர்.பொன்னம்பலம் இராமநாதன்**, **சர். பொன்னம்பலம் அருணாசலம்** ஆகியோரது முன்னோடியாகிய **சர்.முத்துக்குமார சுவாமி** வாழ்க்கைச் சுருக்கம் இந்நூலுக்கு மகுடம் போல் அமைகிறது. ஒரு தனித்துவ முஸ்லிம் கட்சியை 20-ம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் உருவாக்கிய கவிஞர் **எம்.எச்.எம்.அஷ்றப்** வரலாற்றுடன் நூல் முடிவது சிறப்பு.

சுருக்கமாகக் கூறினால். இலங்கையில் தமிழ்த் தொண்டாற்றிய பெரும் தலைவர்களின் வரலாறு அடங்கிய இந்நூல், இனிவரும் சந்ததியினருக்குப் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்நூலின் தொகுப்பாசிரியர் **வ.மா.குலேந்திரன்,** இங்கிலாந்திலுள்ள லண்டன் மாநகரில் வாழ்ந்தாலும், இலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கு பெரிதும் உதவும் ஒரு நூலை நமக்குத் தந்திருக்கிறார் என்பதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

- கலாபூஷணம்

அ. முகம்மது சமீம்

கொழும்பு - 6
இலங்கை
1.11.2005

கலாநிதி இ. பாலசுந்தரம்

(திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு, அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம் - தமிழ் விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர்)

அணிந்துரை

வரலாறு எல்லோராலும் படித்தறியவேண்டிய ஒரு விடயம். அவரவர் விருப்பத்திற்கேற்ப அவரவர் கல்வித் தகைமை எதிர்பார்ப்புகள், உணர்வுகள் என்பனவற்றுக்கேற்ப அவ்வத்துறை சார்ந்த வரலாறுகளை ஒவ்வொருவரும் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும். இவை யாவற்றுக்கும் மேலாக தாம் பிறந்த நாடு, தம் மொழி, தம் நாட்டுப் பெரியார்களின் பங்களிப்புக்கள் முதலான விடயங்களையும் அறிந்து வைத்திருத்தல் மிகவும் அவசியமாகும். ஈழத்தமிழ் மக்கள் தமது வரலாற்றினை நன்கறிந்து கொள்ளாமையால் ஏற்பட்ட ஆபத்துக்கள், அழிவுகள், அவலங்கள் என்பவற்றை நன்கறிவர். இந்நிலையில் எவர் ஒருவர் தமிழின வரலாறு சார்ந்த விடயங்கள் பற்றி நூல்கள் எழுதுகிறாரோ அந்நூல்களை வாங்கிப் படிக்க வேண்டியது எம்மினத்தின் கடமையாகின்றது. அவ்வகையில் திரு. **குலேந்திரன்** வெளியிட்டுள்ள இந்நூல் காலத்தின் தேவையாக அமைவதோடு, தேசியம் சார்ந்த பணியாகவும் அமைகின்றது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட **வ. மா. குலேந்திரன்** அவர்கள் தமிழ் இலக்கிய

உலகிற்கு நன்கு அறிமுகமானவர். இவர் தமது இளமைக் காலத்தில் '**செய்திமுரசு**' என்ற இதழை வெளியிட்டவர். இனப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க குலேந்திரன் அவர்கள் புலம்பெயர்ந்து வந்த பின்னரும் 'செய்தி முரசு' இதழைத் தொடர்ந்தும் வெளியிட்டவர். இதுவே ஐரோப்பாவில் வெளிவந்த முதல் இதழாகும். அதன் பின்னர் இவர் 1994இல் -'**தமிழினி**' என்ற பத்திரிகையை லண்டனில் ஆரம்பித்து 2004ஆம் ஆண்டுவரையும் இலவசமாக வெளியிட்டு வந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் இதுவரை 14 நூல்களை வெளியிட்டிருக்கிறார். இத்தொகுப்பு அவரது 15ஆவது வெளியீடாகும். குலேந்திரன் அவர்கள் இலண்டனில் குடிவரவுத்துறை சார்ந்து தமிழ் மக்களுக்குச் சமூகப் பணி ஆற்றி வருகின்றார் என்ற செய்தியும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இலங்கை தமிழ் முஸ்லிம் அறிஞர்கள் - என்ற இந்நூலானது இலங்கையில் வாழ்ந்து பெரும்பணி ஆற்றி மறைந்த தமிழ் - முஸ்லிம் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் ஆற்றிய சேவைகள் என்பனபற்றி விளக்குவதாகவும் பல்வேறு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகவும் அமைந்துள்ளது. குலேந்திரன் அவர்கள் வடக்குக் கிழக்கு என்ற பிரதேச எல்லையையும் தமிழ் முஸ்லிம் என்ற சமூக எல்லையையும் கடந்து தமிழர் என்ற கோட்பாட்டில் நின்றுகொண்டு இரு இனத்துப் பெரியார்கள் பற்றிய கட்டுரைகளை இந்நூலில் சேர்த்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

ஈழத்தமிழர் வரலாற்றில் தமிழ் மொழி, இலக்கியம், அரசியல் என்ற துறைகளில் பணிகள் புரிந்த **சி.வை. தாமோதரம்பிள்ளை, சேர். முத்துக்குமாரசுவாமி** ஆகியோரின் பணிகள் முதலில் இடம்பெறுகின்றன. புலவர்

வே. ஆகிலேசபிள்ளை, ஞானசிரோன்மணி பண்டிதர் **வடிவேல்** ஆகியோர் பற்றிய கட்டுரைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. பண்டிதர் வடிவேல் அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த சமய கதாப்பிரசங்கியாகத் திகழ்ந்தமை, அவர் பல்வேறு இலக்கிய ஆக்கங்களைப் படைத்தமை, இவற்றுக்கும் மேலாக அவர் எழுதிய திருக்கோணேஸ்வர வரலாற்று நூல்கள் முதலான இன்னோரன்ன செய்திகளை இந்நூல் கொண்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். திரு. வடிவேல் பற்றிய் இவ்வளவு விவரங்களும் இதுவரையில் தொகுத்து எங்கும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

இன்றைய காலக்கட்டத்தில் தேசியம், தமிழின மேம்பாடு, தமிழர் பண்பாடு என்ற விடயங்கள் தமிழர் மத்தியில் மிக உன்னிப்பாக நோக்கப்படும் விடயங்களாக உள்ளன. **சுவாமி விபுலாநந்தரும் தனிநாயக அடிகளா**ரும் இப்பின்னணியில் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்து உலகத் தமிழ்ப் பண்பாட்டின் வரலாறு பற்றி ஆராய்ந்து அரிய பல நூல்களைத் தமிழினத்திற்கு வழங்கியவர்கள் என்பதை தமிழினம் நன்கறியும். அவ்வகையில் அவர்களைப் பற்றி நினைவுகொள்ளும் வகையில் இரு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

தமிழ் இலக்கியப் பணியில் முஸ்லிம்களது பங்களிப்பும் தனித்துவமானது. உமறுப்புலவர் தொடங்கி வைத்த இப்பணி இன்றைய தலைமுறையினர் வரையும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அவ்வகையில் ஈழத்து முஸ்லிம் பெரியார்களின் தமிழ்ப் பணிகள் பற்றிய பல கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றன.

பல்கலைக்கழகங்களிலே தமிழ்மொழிக் கல்வி பற்றிச் சிந்திக்கும்போது **சுவாமி விபுலாநந்தர்,** பேராசிரியர்

க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் **வி. செல்வநாயகம்** என்போரின் பணிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றை விளக்கும் கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருத்தல் பொருத்தமானதே.

ஈழத்தமிழரது இலக்கியம், கல்வி, பண்பாடு, அரசியல், சமூகம் சார்ந்த துறைகளில் பணியாற்றிய பெரியோர்கள் பற்றிய கட்டுரைத் தொகுப்புகளைத் தொடர்ந்தும் வெளியிட்டுத் தமிழ்ப்பணி ஆற்றுவதற்குரிய எல்லா வளங்களும் **குலேந்திரன்** அவர்களுக்கு வாய்க்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

– பேராசிரியர் இ. பாலசுந்தரம்

ரொறன்ரோ.
12.10.2005.
belayathamby@cicswis.ca

தொகுப்பாசிரியர் பார்வையில்...

இலங்கையில் தமிழ் வளர்த்த தமிழ் அறிஞர்கள், முஸ்லிம் அறிஞர்கள் பற்றிய ஆவண நூலை உங்கள் கரங்களிலே தவழ விடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையைப் பொருத்தவரை இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்ற மும்மதத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ் பேசுகிறார்கள். அவர்களில் இந்துக்கள் தங்களைத் தமிழர்களாகவும், தமிழ் பேசுகின்ற முஸ்லிம்கள் தங்களை முஸ்லிம்களாகவும் இனம் காட்டிக் கொள்கிறார்கள். கிறிஸ்தவர்களைப் பொருத்த வரை வட-கிழக்கில் வாழ்பவர்கள் தங்களைத் தமிழர்களாகவே அடையாளப்படுத்தி நிற்கிறார்கள்.

முஸ்லிம் அறிஞர்கள் நூறையவே தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் சேவையாற்றியுள்ளனர். அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டுகளை ஆற்றியுள்ளனர்.

மலேசியாவைப் பொறுத்தவரையில் இலங்கையில் இருக்கக்கூடிய முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் தமிழ் பேசும் மக்களே. இவர்கள் பேசும் தாய்மொழி தமிழே ஆகும். சிங்களப் பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் தாய் மொழியாக சிங்களத்தைக் கொண்டவர்கள். ஆனால் இந்துவோ, முஸ்லிமோ, சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டவராக எனக்குத் தெரியவில்லை.

எதிர்காலத்தில் தென்னிலங்கைப் பகுதிகளில் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு சுரப்பாக்கியமான மாற்றம் ஏற்படலாம். அது விசனத்திற்குரிய தனி ஆய்வுக்குரியது.

எது எப்படியிருப்பினும் தமிழ்-முஸ்லிம் சகோதரர்கள் இரண்டு இனங்களாக கூறு போடப்பட்டு பெரும்பான்மையினரின் பிரித்தாளும் தந்திரத்திற்கு ஆளாகியுள்ளனர் என்பது வெள்ளிடைமலை.

சமய ரீதியில் தமிழ் பேசும் இனத்தை பிரித்து வைத்ததுடன் மட்டுமல்ல, அவர்களை மோத வைக்கும் சமய பலத்தினைத் தொடர்ந்தும் நிலைப்படுத்தி வருகின்ற பெரும்பான்மையினருக்கு, நம்மவரில் சிலரும் துணைபோவது சுயர் தருகின்றது.

தமிழை வளர்த்தவர்கள், தத்துவமேதைகள், இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ சமயங்களில் இருந்து தோன்றியவர்களே என்ற உண்மை இந்த நூலின் முலம் உணர்த்தப்படுகின்றது.

இலங்கையிலே இனக்கலவரம் ஏற்பட்ட போதெல்லாம் பெரும்பான்மையினரின் இன்னல்களுக்கு இலக்காதவர்கள் இந்துவோ, முஸ்லிமோ, கிறிஸ்தவனோ என்று மதரீதியாக இனம் காணப்பட்டவர்கள் அல்ல-அவன் தமிழைப் பேசுபவனாக இருந்ததால் என்ற உண்மை, யதார்த்தம் இன்னமும் பலருக்குப் புரியவில்லை.

ஆனாலும், இந்த உண்மையை உணர்ந்து எம்மவர் இன்னமும், இணைந்து 'இரட்டைக் குழல்' துப்பாக்கியாக செயற்படத் தவறிவிட்டனர். அந்த இலக்கை எட்டத் தயாராகவும் இல்லாதவராகி விட்டனர்.

நாம் சமயத்தால் வேறுபட்டவர்களே தவிர மொழியால் அல்ல, மேலை நாடுகளில் எத்தனை மதங்கள். ஆனால் மொழி ஒன்றல்லவோ! இலங்கையிலும் தமிழகத்திலும் மட்டுமே இந்துவும் முஸ்லிமும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். மதங்களால் வேறுபட்டிருந்தாலுங்கூட இவர்கள் தமிழுக்கே அளப்பரிய சேவை செய்துள்ளனர்.

இந்து - முஸ்லிம் உறவும், தாய்மொழி தமிழ் மொழி பற்றியும் அரசியல்வாதிகள், ஆய்வாளர்கள் இலக்கிய கர்த்தாக்கள் என்று பலரும் சந்தர்ப்பத்திற்கேற்ப வாய் கிழியப் பேசியும் கை உளைய எழுதியும் வருகின்றனர்.

ஆனால் -

இன்னமும் இந்து, முஸ்லீம் சகோதரர்கள் இரட்டைக் குழல் சுப்பாக்கியாக செயற்பட முடியாத சூழ்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

என்னைப் பொறுத்தவரை என்றுமே என் செயற்பாடுகள் சிந்தனைகள் வேறுபட்டவை. அதன் பெறுபேறே இந்த அரிதாரங்கள் பற்றிய நூல்.

இந்நூலை வெளியிட உந்து சக்தியாக விளங்கிய திரு. குரும்பசிட்டி கனகரத்தினம், சகோதரர் மானா மக்கீன், சகோதரர் ரவி தமிழ்வாணன், கட்டுரைகளை அனுப்பி வைத்த எழுத்தாளர்கள், கட்டுரைகளைப் பெரு மூல காரணமாக இருந்த தினகரன், வீரகேசரி, தினக்குரல், யாழ்-ஈழநாடு, யாழ்-உதயன், சுடரொளி ஆகிய பத்திரிகைகளுக்கும் என் இனிய இதயபூர்வமான நன்றிகள்.

இதற்கு மேலாக இவற்றைத் தொகுக்கும் போது இடைந்தல் ஏதும் தராமல் இன் முகத்தோடு உதவிகளும், உற்சாகமும் வழங்கிய என் இனிய தோழிவியாருக்கும், உயிரான என் மகள் திருமதி. தமிழினி திருக்குமரனுக்கும் என் உளமார்ந்த நன்றிகள்.

அத்தோடன் முன்னுரை வழங்கிய கலாபூஷணம் அ. முகம்மது சமீம் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்த நூல் தமிழ் வளர்த்த அறிஞர்கள் பற்றிய முதலாவது பாகமே. இன்னமும் அச்சில் வராத பல அறிஞர்களைத் தேடிக் கண்டுபிடித்து தொடர்ந்தும் பதிவாக்க ஆண்டவனின் அனுக்கிரகமும் உங்கள் ஆதரவும் வேண்டி விடைபெறுகின்றேன்.

உங்கள் அன்பிற்குரிய

வ.மா. குலேந்திரன்

21-5-3 புகையிரத நிலைய வீதி,
கொழும்பு - 06.

26.12.2005

இலண்டன் முகவரி :

THAMILINI, 112 BICKLEY STREET, LONDON SW17 9NE
TEL : 0044 208 7675156 / 0044 208 6824494
FAX : 0044 208 6829922

உள்ளே உலா வருவோர்...

(உலகுக்கு வந்த காலத்தின் வரிசைப்படி)

1.	ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்	1822	1
2.	சி.வை. தாமோதரம்பிள்ளை	1832	7
3.	சேர். முத்துக்குமாரசாமி	1834	18
4.	பொன். அம்பிகைபாகர்	1837	24
5.	அறிஞர் சித்திலெவ்வை	1838	35
6.	வல்வை ச. வயித்தியலிங்கம்பிள்ளை	1843	43
7.	எல்.எம். உதுமான்	1847	58
8.	வே. அகிலேசப்பிள்ளை	1853	66
9.	குமாரசுவாமிப் புலவர்	1854	76
10.	தி.த. கனகசுந்தரம் பிள்ளை	1863	86
11.	சோமசுந்தரப் புலவர்	1878	90
12.	சி. கணேசையர்	1878	94
13.	அஹ்மது நெய்னா ஆலிம்	1882	105
14.	விபுலானந்த அடிகள்	1892	116
15.	விபுலபீதாம்பரன்	1898	125
16.	பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை	1899	132
17.	த. கைலாசப்பிள்ளை (ஆண்டை அறிய முடியவில்லை. ஆனால் முன் என்பது நிச்சயம்)	1900-க்கு	141
18.	பேராசிரியர் கணபதிப்பிள்ளை	1903	146
19.	புலவர் சிவன் கருணாலய பாண்டியனார்	1903	152
20.	அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத்	1904	156
21.	வி. செல்வநாயகம்	1907	161
22.	தாவீது அடிகள்	1907	191
23.	புலவர் முஹம்மது காஸிம் ஆலிம்	1912	196
24.	தனிநாயகம் அடிகள்	1913	216
25.	கவிஞர் திலகம் அப்துல்காதிர் லெப்பை	1913	227
26.	பண்டிதர் வடிவேல்	1919	235
27.	சு. வித்தியானந்தன்	1924	250
28.	மௌலவி தாசீன்	1932	257
29.	கவிஞர் எம்.சீ.எம். சுபைர்	1933	266
30.	கவிஞர் எம்.எச்.எம். அஷ்றஃப்	1948	277

இலங்கைத் தமிழ் அறிஞர்களும் முஸ்லிம் அறிஞர்களும்

(பாகம் - 1)

தமிழ் வாழும் வரை தரணியில் வாழும்

ஆறுமுக நாவலர்

நல்லூர் என்றுமே இலங்கையில் வரலாற்றுப் புகழ், சமயப் புகழ் இலக்கியப் புகழ் கொண்ட ஊராக விளங்கி வருவது யாவரும் அறிந்ததே.

அந்த நல்லூரிலே சைவ சமயத்தையும் தமிழையும் காக்க 1822ம் ஆண்டு கந்தப்பிள்ளை - சிவகாமி ஆகியோருக்கு பிறந்தவரே **ஆறுமுகநாவலர்**. இவருடைய இயற்பெயர் **ஆறுமுகம்** என்பதாகும்.

இவருடைய தந்தையார் புலவர் பரம்பரையில் தோன்றியவராவர். இவர் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், டச்சு மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்ததோடு ஆராய்ச்சியாளராக அரசில் பணியாற்றியவர். இவர் ஓர் தேச வைத்தியரும் கூட.

ஆரம்பத்தில் தனது தந்தையாரிடமும் பின்னர் **சுப்பிரமணிய பிள்ளை** ஆசிரியரிடமும், சேனாதிராஜா முதலியாரிடமும் பாடம் பயின்று, இலக்கண இலக்கிய நூல்களை **சரவணமுத்துப் பிள்ளை** புலவரிடம் கற்றுக் கொண்டார்.

இவரது பன்னிரண்டாவது வயதில் **பீற்றர் பேர்சிவலை** அதிபராகக் கொண்ட ஆங்கிலப் பாடசாலையில் நான்கு ஆண்டுகள் பயின்று பட்டை தீட்டப்பட்ட வைரமாக ஜொலித்தார். ஏற்கனவே தமிழ், சமஸ்கிருதம் இரு மொழிகளிலும் சிறந்த புலமை பெற்ற நாவலர் அதே ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம், தமிழ் கற்பிக்கும் ஆசிரியராக **16வது வயதில்** நியமிக்கப் பட்டார். அத்துடன் நில்லாது அதிபர் பேர்சிவல் பாதிரியாருக்கும் தமிழ், சமஸ்கிருதம் பயிற்றுவிக்கும் ஆசானாகவும் திகழ்ந்தார்.

அதே வேளையில் 1841ம் ஆண்டு கிறிஸ்தவ வேதநூலை பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுதலுடன் ஐந்து ஆண்டுகள் தினசரி ஆறுமணி நேரமாக மொழி பெயர்த்தார். பலர் இம்மொழி பெயர்ப்பில் ஈடுபட்டிருந்த போதும் இவரது உரை மொழி நடையிலேயே சிறப்பாக அமைந்து காணப்பட்டது. இந்த மொழி பெயர்ப்பு நூல் 1850ல் சென்னை அமெரிக்க மிஷனால் அச்சிடப்பட்டது.

31ம் திகதி மார்கழித் திங்கள் 1847ல் ஆறுமுக நாவலரின் முதலாவது பிரசங்கம் இடம் பெற்றது. சைவ சமய பற்றாளரான இவரது பிரசங்கம் நடைபெற்ற நாள் வெள்ளிக்கிழமை என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து பிரதி வெள்ளி தோறும் வசந்த மண்டபத்தில் இவரது பிரசாரங்கள் நடைபெற்றன.

சைவ சமயத்தில் வெறி கொண்டவராகத் திகழ்ந்த ஆறுமுக நாவலர் சமய அடிப்படையிலேயே சைவத் தமிழ் மாணாக்கர்கள் கல்வி கற்க வேண்டும் என்று விரும்பி தனது இருபத்தி மூன்றாவது வயதில் தமது இல்லத்திலேயே வகுப்புகளை நடாத்த முன் வந்தார். வீட்டிலேயே மாணவர்கட்கு தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை கற்பித்து வந்த இலர் 1848ல் சைவப் பிரகாச வித்தியாசாலையை வண்ணார் பண்ணையில் அமைத்து மாணவர்கள் பயன் பெறச் செய்தார். இலவசக் கல்வி, இலவச நூல் விநியோகம் என்று தமிழுக்காகவும், சைவ சமயத்துக்காகவும் தொண்டாற்றிய பெருந்தகை நாவலர் அவர்களே.

வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை அமைத்ததோடு நின்று விடாது. அதனை கொழும்புத்துறை, கோப்பாய், ஏழாலை, புலோலி பருத்தித்துறை, முல்லைத்தீவு போன்ற பல ஊர்களிலும் அமைத்ததோடு இலங்கை எனும் எல்லை கடந்த தமிழகத் தில்லையிலும் (சிதம்பரம்) 1864ல் வித்தியாசாலையை நிறுவினார். இந்த வித்தியாசாலையின் தமிழ் அதிபராக இவரது மாணாக்கர் **ம.க. வேற்பிள்ளையை** நியமித்தார்.

தான் நிறுவிய வித்தியசாலையில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் நோக்குடன் ஓர் அச்சியந்திர சாலையை யாழ்ப்பாணத்தில் நிறுவும் நோக்குடன் 1849ல் தமிழகம் சென்றார்.

அவர் அங்கே திருவாவடுதுறை ஆதினத்தில் தங்கியிருந்த வேளையில் பல அறிஞர்கள் இவரை "சைவ சித்தாந்தப் பொருள்" பற்றிப் பிரசங்கம் செய்யுமாறு அன்புரிமையுடன் வேண்டிக் கொண்டனர்.

யாழ்ப்பாண மண்ணுக்கே உரித்தான தூய செந்தமிழ், எளிய இனிய நடை, ஆற்றொழுக்கான தமிழ் உச்சரிப்பு, ஆகம ஞானம். சைவ பக்தியுடன் கூடிய சைவம் பற்றிய "**பதி-பசு-ஞானம்**" என்ற தலைப்பிலே ஆறுமுகம் உரையாற்ற அவையே மெய்மறந்து அந்த உரையில் உறைந்திருந்தது.

அன்றுதான், ஆதினத் தலைவர் **அம்பலவாண தேசிகர்** ஆறுமுகத்தை அரவணைத்து ஆனந்தக் கண்ணீர் மல்க "**நாவலர்**" என்ற பட்டத்தை வழங்கினார். இதுவே ஆறுமுகம் "**ஆறுமுக நாவலர்**" என பெயர் மாற்றம் பெற்ற கதை. அந்தப் பெயர் தமிழ் வாழும் வரை நிலைத்து நிற்கும்.

இடையிலே தமிழகத்தில் தி.மு.க.வினரால் நெடுஞ்செழியன் "நாவலர் **நெடுஞ்செழியன்**" ஆனதும், இலங்கையில் தமிழரசுக் கட்சியினரால் அமிர்தலிங்கம் "**நாவலர் அமிர்தலிங்கம்**" ஆனதும் வேறு கதைகள்.

இவ்வாறு அச்சியந்திரசாலை நிறுவும் நோக்குடன் தமிழகம் சென்ற ஆறுமுகம், ஆறுமுக நாவலராக மட்டும் திரும்பி வரவில்லை. திரும்பி வருகையில் அச்சு இயந்திரத்துடன் வந்து 1850ல் வண்ணார்பண்ணையில் "**வித்தியா அனுபாலன இயந்திரசாலை**" நிறுவினார்.

அவ்வாறு அச்சகத்தை ஸ்தாபித்தும் கூட அச்சு வேலைகள் அதி கூடுதலாக இருந்த காரணத்தால் சென்னையிலும் கிளை அச்சகத்தை ஆரம்பிக்க வேண்டிய தேவை அந்தக் காலத்தில் ஏற்பட்டது.

இதிலிருந்து இன்றும் இலங்கையிலும், தமிழகத்திலும் அச்சகங்கள் காய்ந்து கொண்டிருக்கும் வேளையில் தமிழும்,

சைவமும் எவ்வாறு தழைத்து ஓங்கி நின்றது என்பதனையும் நாவலரின் பங்களிப்பு எந்தளவிற்கு தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில் இருந்தது என்பதனையும் ஈழத் தமிழன் உணர வேண்டும்.

1853-1854ம் ஆண்டுகளில் கிறிஸ்துவ மதபோதகர்கள் சைவமரத்தின் போதனைகள், நம்பிக்கைகள் மூடத்தனமானது என்று சைவமதத்தை தூஷித்து அறிக்கைகள் வெளயிட்டதால் அதனைக் கண்டிக்க வேண்டிய பொறுப்பு நாவலருக்கு இருந்தது. இதனால் 1854ல் "சைவ தூஷண பரிகாரம்" என்ற நூலை இவர் வெளியிட்டார்.

கிறிஸ்துவ வேதாகமத்தை மொழி பெயர்த்ததில் அது பற்றிய பெரும் அறிவு கொண்டிருந்த நாவலர் அவர்களது வேதாகமத்திலிருந்தே ஆதாரங்களை கையாண்டு அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி சைவ சமய பெருமையை ஆதார பூர்வமாக நிலை நாட்டி வெற்றியடைந்தார்.

தமிழை மிக இலகுவான உரை நடையிலும், பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணமும் எழுதியதோடு நின்று விடாமல், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றையும் வசன நடையில் எழுதினார்.

இவற்றின் மூலம் இவர் "**வசன நடை கை வந்த வல்லாளர்**" "**தமிழ் உரை நடையின் தந்தை**" எனவும் போற்றப்படுகின்றார்.

அத்தகைய ஒரு தமிழ், சைவ அறிஞர் 1879ல் தனது 57 வயதில் இயற்கை எய்தினார்.

ஐயா நாவலரின் மாபெரும் தொண்டுகளைப் பாராட்டி சிறீலங்கா அரசானது 1971ல் அவரைத் தேசிய வீரர்களில் ஒருவராகப் பிரகடனம் செய்ததுடன் நின்று விடாமல் அவருடைய உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டு சிறப்புச் செய்துள்ளது.

தமிழும் - சைவமும் வாழும் வளர நமது நாவலர் வாழ்வார்.

- **தமிழினி குமரகுருபரன்**
கனடா

தமிழுக்கு அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்றுபேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

- பாவேந்தர் பாரதிதாசன்

19–ஆம் நூற்றாண்டின் தமிழ் மறுமலர்ச்சியாளர்

சி.வை. தாமோதரம் பிள்ளை

சமண சமயமானது சைவ சமயத்தை விழுங்கி ஏப்பமிட இருந்த அந்தக் காலத்திலே வேத நெறி தழைத்தோங்க சைவத் துறை விளங்க உதித்த இருவர்களில் ஒருவர் தான் **சி.வை. தாமோதரம் பிள்ளை.**

ஆங்கிலத்தைப் பயின்று பலர் தமிழன்னைக்கு சமாதி கட்டிய வேளையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருவர் கண்ணீர் விட்டனர்.

ஒருவர் தமிழை நோக்கியும் மற்றவர் தமிழரை நோக்கியும் அழுதார்கள். தமிழரை நோக்கி அழுதவர் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.** தமிழை நோக்கி அழுதவர் **சி.வை. தாமோதரம் பிள்ளை** அவர்கள்.

12 புரட்டாதி 1832ல், இலங்கையின் வடபகுதியான ஏழாலை என்ற கிராமத்தில் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பிறந்தார்.

தனது இருபதாவது வயதில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சித்தி பெற்று ஆசிரியரானார்.

இவரது குடும்பம் மிகப் பெரியதாகும். இவருடன் பிறந்தவர்கள் ஆறு பேர். அவர்களுக்கெல்லாம் மூத்தவர் **சி.வை.** அவர்களே.

இவர் இரு தாரம் மணம் செய்து கொண்டார். முதல் மனைவி இறக்க பின்னர் மைத்துனியை மணம் செய்ததாகவும் இரு தாரத்திலும் இவருக்கு ஆறு குழந்தைகள் பிறந்ததாகவும் அறியப்படுகின்றது.

இவருக்கு ஏற்பட்ட குடும்பத் தொல்லையை மறக்கவே அவர் தமிழ்த் தொண்டை நாடினார் என்றும் சொல்கின்றார்கள்.

இவருக்கு எதிரான அக்காலத்து தமிழ்ப் புலவர்களின் பொறாமை, குடும்பத்துத் தொந்தரவு, ஏடுகளின் தொந்தரவு இவ்வாறு மூன்று பக்க நெருக்குதலின் மத்தியிலும் தமிழுக்காக அந்தக் காலத்தில் அரும்பணியாற்றி பல நூல்களை மறு பிரசுரம் செய்து தமிழ் வாழ வழி செய்தவர்.

தான் பட்ட அவஸ்தைகளை கண்ணீர் சொட்ட சொட்ட கலித்தொகை முகவுரையில் எழுதியுள்ளார்கள்.

இவருடைய தந்தையார் பெயர் குருநாதர் **வைரவநாதர்**. இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுப்பிட்டியை சேர்ந்தவர். அன்னையார் ஏழாலையைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவரின் மகள் **பெருந்தேவி**.

ஆரம்ப காலத்தில் தன் தந்தையாரிடம் கல்வி பயின்ற தாமோதரம்பிள்ளை அவர்கள், அதன் பின்னர் சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரிடம் கல்வி கற்றார்.

தமிழ்க் கல்வி கற்று வருகின்ற காலத்திலே ஏனையோரைப் போன்று ஆங்கிலமும் கற்க விரும்பி சில காலம் தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலையில் கல்வி கற்றார். அதனைத் தொடர்ந்து உயர் கல்வி கற்கும் நோக்கத்தில் "**வட்டுக்கோட்டை செமினறி**" (Vaddukoddai

Seminary) என்ற சர்வ சாஸ்திர கலாசாலையில் இணைந்து கல்வி பயின்றார். இவர் இக்கலாசாலையில் இணையும் போது இவருக்கு வயது பன்னிரண்டே ஆகும்.

இவருடைய ஆசிரியர் நெவின்ஸ் என்பவர் இவருக்கு பண்டிதர் என்று பட்டம் சூட்டி இவரால் தமிழும் தமிழ் கல்வியும் உயர்நிலை அடையும் என்றும் வாழ்த்தினார்.

கலாசாலையை விட்டு அகன்ற இவர் தனது இருபதாவது வயதில் கோப்பாய் போதனா வித்தியாசாலையில் ஆசிரியரானர். அதே காலத்தில் 1853ம் ஆண்டு **நீதிநெறி விளக்கம்** என்னும் நூலினை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

இந்தக் காலக்கட்டத்தில் தான் யாழ்ப்பாணத்தில் தொண்டாற்றிக் கொண்டிருந்தவரும் ஆறுமுக நாவலர் அவர்களைக் கொண்டு "**பைபிள்**" மொழி பெயர்ப்பினை இயற்றுவித்தவருமான **பேர்சிவல் பாதிரியார்** "பாதிரி" உத்தியோகத்தினை விட்டு சென்னை சென்று அங்கே "**தினவர்த்தமானி**" என்னும் பெயரில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை நடாத்திக் கொண்டிருந்தார். தாமோதரம் பிள்ளை அவர்களின் தரம் அறிந்த பேர்சிவல் அவர்கள் இவரைத் தனது பத்திரிகைக்கு ஆசிரியராக்க வேண்டும் என்று எண்ணி இவரைச் சென்னைக்கு அழைத்து ஆசிரியராக்கினார்.

"**தினவர்த்தமானி**" பத்திரிகையின் ஆசிரியரான இவர் தனது ஓய்வு நேரங்களில் சில ஆங்கிலேயப் பிரபுக்களுக்கு தமிழ் மொழியைப் பயிற்றுவித்து வந்தார்.

இவரது தமிழ் - ஆங்கில புலமை அறிந்த அரசு, சென்னை இராசதானிக் கல்லூரியில் இவரைத் தமிழ் பண்டிதராக நியமித்தது.

தாமோதரம்பிள்ளை பத்திரிகாசிரியராகவும் தமிழ்ப் பண்டிதராகவும் திகழ்ந்து கொண்டிருந்த அக்காலத்திலே தான் சென்னைப் பல்கலைக்கழகம் அரசினரால் நிறுவப்படுவதாயிற்று.

1857ல் இப் பல்கலைக்கழகம் முதன் முதலில் நடத்திய **'கலைமாணி'** தேர்வில் முதல் மாணவனாகச் சித்தி பெற்றார். யாழ்ப்பாணச் செமினரியிலே இவரது ஆசிரியருள் ஒருவராய் விளங்கிய **சுதுமலை, கறள் விசுவநாத பிள்ளை** இரண்டாம் மாணவனாகச் சித்தி பெற்றார். கலைமாணிப் பட்டம் பெற்ற பின், இவர் கள்ளிக்கோட்டையிலுள்ள அரச வித்தியாசாலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது சென்னை அரசாங்க வரவு செலவுத் திணைக்களத்தில் (கணக்கு நிலைய முதல்வராக) உயர்நிலை உத்தியோக நியமனம் பெற்றார். அப்பதவியை வகித்துக் கொண்டிருந்தபோது 1871ம் ஆண்டிலே **'முறைமாணி'** (பி.எல்) தேர்வுக்குத் தோற்றிச் சித்தி பெற்றார். அதன் பின் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறிக் கொண்டு சென்னை நகரைவிட்டு நீங்கி திருக்குடந்தை (கும்பகோணம்) நகரத்துக் கறுப்பூரிலே தங்கி வாழ்ந்து கொண்டிருந்தார். அங்கே சில காலம் நியாயத் துரந்தரராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள் சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகவும் நாட்டம் கொண்டார். அதனால் ஏழாலையிலே 1876ம் ஆண்டு, சைவப் பிரகாச வித்தியாசாலை ஒன்றை நிறுவினார். **சுன்னாகம் பூ, முருகேசு பண்டிதர்** அதன் தலைமையாசிரியராகச் சிறிது காலம் விளங்கினார். பின்னர், சுன்னாகம் **அ. குமாரசாமிப் புலவர்** இவ்வித்தியாசாலையிலே 23 வருடங்கள் தமிழ்ப் புலமை சிறக்கப் பணியாற்றினார். பிள்ளையவர்கள் தாம் நிறுவிய

வித்தியாசாலையின் செலவுகளை தமது மரண பரியந்தம் ஏற்று நடாத்தி வந்தார். 1884ம் ஆண்டிலே புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக இவர் நியமிக்கப்பட்டார். 1890ம் ஆண்டு வரை அப்பதவியிலிருந்து பணியாற்றியபின் இளைப்பாறிக் கொண்டார். சென்னைப் பல்கலைக் கழகப் பரீட்சகராகவும் இவர் கடமையாற்றினார். அவர் செய்த பணிகளைப் பாராட்டிச் சென்னை அரசாட்சியார் '**ராவ்பகதூர்**' என்னும் பட்டத்தை அளித்துப் பெருமைப்படுத்தினர். இப்பட்டம் 1895ம் ஆண்டிலே கொடுக்கப்பட்டது. பாடசாலையிலிருந்து படிப்பை முடித்துக் கொண்டு ஆசிரியராகப் பணியேற்றதும் இவர் கொண்ட வாழ்க்கையின் குறிக்கோள் ஒன்றே. '**செல்வதுளைத்த துணையன்றி மெய்ப் புள்ளி விரவாத சென்னாளேடு**' களைத் தேடியெடுத்துப் பெயர்த்தெழுதி அச்சேற்றுதல் வேண்டும் என்பதே அதுவாகும்.

இந்தக் குறிக்கோளை இவர் என்றுமே மறவாமல் தமக்குக் கிடைத்த ஓய்வு வேளைகளிலெல்லாம் ஏடுகளைச் சேகரித்து அவற்றைப் பெயர்த்தெழுதி ஆராய்ந்து கொண்டு வந்தார். அப்படி ஆராய்ந்தவற்றைச் செம்மையான முறையில் அச்சேற்றி வெளியிட்டார். இவர் நல்லூர் ஆறுமுக நாவலரின் அறிவுரைகளைப் பெற்றே அவர்களின் விருப்பப்படி நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வரலாயினர். அவருடைய தமிழார்வம் அவரது உள்ளத்திலே மங்காத ஒளியாகத் திகழ்ந்தது. அதன் பின்னர் பேரொளியாகச் சுடர்விட்டு எரிந்தது.

தாமோதரனார் நாட்டிலும் மதத்திலும் மொழியிலும் பற்றுக் கொண்டவர். எனவே மற்றவர்களிடமும் தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று ஆகியன விளங்க

வேண்டும் என்று விரும்பினார். இவற்றிற்குப் பண்டைய இலக்கியங்களும் பண்பாடும் பெரிதும் உதவுமென்பதை உணர்ந்தார். ஆனால் அவரது காலத்திலே பழைய இலக்கியங்கள் பேணுவாரில்லாமல் அழிந்து வந்தன. ஏட்டுச் சுவடிகள் சிதைந்து மறைந்த வண்ணமாயிருந்தன. இந்நிலை கண்டு அவர் உள்ளங் கொதித்தார். கண்ணீர் வடித்தார். உருக்கமான முறையில் இந்நிலை பற்றி எழுதி வெளியிட்டார். அந்நூல்களைக் காப்பாற்றும் வண்ணம் தமிழ் மக்களை வேண்டினார். தாமே அவற்றைப் பேணும் பணியில் அயராது உழைத்தார். அவர் மேற்கொண்ட முயற்சியில் நேர்ந்த இடையூறுகள் பல. அவற்றை அவர் பதிப்பித்த **கலித்தொகை** என்ற நூலின் பதிப்புரையிலே பின்வருமாறு உருக்கமாகக் கூறியிருக்கிறார்:

> "ஏடு எடுக்கும் போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முறிகிறது. ஒற்றை புரட்டும் போது துண்டு துண்டாய் பறக்கிறது. இனி எழுத்துகளோ என்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது."

இதிலிருந்து அவர் பட்ட கஷ்டங்கள் தெளிவாகும். மேலும் அவர் நூல்களைப் பதிப்பிக்க முயன்றபோது ஏட்டுப் பிரதிகள் கிடைப்பது அரிதாயிருந்தது. பிரதிகளைப் பரிசோதித்துப் பிழையில்லாத பிரதி செய்யத் தெரிந்தவர் மிகச் சிலராய் இருந்தனர். அத்துடன் நூல்களைப் பதிப்பிப்பதற்குப் பணம் தேவைப்பட்டது. பண விடயத்திற் பெரியோர்கள் சிலர் உதவினார்கள். தாமோதரனார் தமது கைப் பொருளையுஞ் செலவிடும்படி நேர்ந்தது. இவ்வாறு ஏட்டுப் பிரதிகளைத் தேடுதல்,

அவற்றைப் பிழையறப் பரிசோதித்தல், நூல்களாகப் பதிப்பித்தல் ஆகிய பணிகளைப் பிள்ளையவர்களே செய்தார். தாமோதரனாரது சிறந்த தொண்டின் பயனாகப் பல பழைய நூல்கள் பதிப்பிக்கப் பட்டன.

> *1881ல் வீரசோழியம் 1853 இறையனார்கல் பொருள் 1885 தொல்காப்பியம் பொருளதிகாரம், 1900ல் தொல் காப்பியம் சொல்லதிகாரம், இலக்கண விளக்கம், 1853ல் நீதி நெறி விளக்கம், 1883ல் சூளாமணி கலித்தொகை தணிகைப் புராணம்* என்பன இவரால் பதிப்பிக்கப் பட்டன. அத்துடன் *நட்சத்திரமாலை ஆதியாகம கீர்த்தனம் ஆறாம் ஏழாம் வாசக புத்தகங்கள், கட்டளைக் கலித்துறை, சைவ மருத்துவம், சூளாமணி வசனம்* ஆகிய நூல்களை இயற்றி வெளியிட்டார்.

பலவகைக் கவிகளையும் பாடுந் திறத்திற் சிறந்தவர். சிறப்புக் கவியுந் துதி கவியுஞ்சீட்டுக் கவியும் பிற கவியுமாகத் தனி நிலைக்கவிகள் பல பாடினவர். இவர் உரையும் பாட்டுமாகச் *சைவ மகத்துவம் கட்டளைக் கலித்துறை* எனும் நூல்களும் வேறு சில நூல்களுஞ் செய்தவர். சைவ மகத்துவத்திலே பரசமயவாதிகள் கூறும் வினாக்களுக்கு விடைகளும் பர சமய கண்டனமுங் கூறுவர். கட்டளைக் கலித்துறையிலே வரற்பாலனவாகிய உத்தமமோனை முதலியனவும், உத்தமச்சீர் முதலியனவும், பிறவுங் கட்டளைக் கலித்துறையில் வித்தகம் பெற விரித்துக் கூறுவர். *சிவசம்புப் புலவர்* கவிகளையும் *வேதநாயகம்பிள்ளை* கவிகளையும் தமது கவிகளால் வியந்து கூறுவர். அவர் கவிகளாலும் அங்ஙனம் வியந்து கூறப்படுவர்.

– '*தமிழினி*'
இலண்டன்

மற்றுமொரு பார்வை

சங்கத் தமிழ் கல்வியின் தந்தையாகப் போற்றப்படும் தமிழ் மறுமலர்ச்சியாளர் ராவ்பகதூர் **சி.வை. தாமோதரம்பிள்ளை** அவர்களின் ஜனன தினம் இன்று 12ஆம் திகதி (செப். 12) தமிழ் உள்ளங்கள் தோறும் நினைவு கூரப்பட வேண்டிய பெருநாளாகும். சமஸ்கிருதம் கலவாத பண்டைய சங்கத் தமிழ் நூல்கள் செல்லரித்து அழிந்து போகாது காத்து அச்சிட்டு வாழவைத்த முதல்வர் **சி.வை.தா.** என்பதை மறுப்பார் உண்டோ?

குறிப்பாக அன்று இழக்கப்பட்டதாக கருதப்பட்டு வந்த தொல்காப்பியம் பொருளதிகாரத்தைத் தேடிக் கண்டுபிடித்து பரிசோதித்து அச்சிட்டுத் தமிழ் நாட்டின் பட்டினங்களில் அந்நூலை அவர் பவனி வரச் செய்த போது வியந்து பாராட்டாதோர் எவரும் இருந்ததில்லை. அவரது அச்செயல் ஒன்றுக்காகவே அவர் பிறந்த ஈழத்துக்கு அன்று திராவிடம் நன்றி கூறிப் பாராட்டும் நல்கியிருந்தது.

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் மட்டுமே அவருக்கு முன் **மகாலிங்க ஐயர்** அவர்களால் வெளியிடப் பட்டதாகவிருந்த பொழுதிலும் தொல்காப்பியத்தை முழுமையாக வெளியிடும் வாஞ்சை மிகுந்து அந்நூலின் முழுமையையும் சி.வை.தா, அவர்களே ஒரு சேர வெளியிட்டிருந்தார்.

சி.வை.தா. வாழ்ந்த நூற்றாண்டின் கால் இறுதிப் பாகத்தில் தமிழ் இலக்கிய ஆய்வில் அவருக்கு ஒப்பாரும்

மிக்காரும் எவரும் இருந்ததில்லை. பண்டைய தமிழ் நூல்கள் தேடுவார் இல்லாது அழிந்துபோகும் நிலையில் இருப்பதைக் கண்டு கவலையுற்ற தாமோதரர் அவற்றை மீள்வித்துப் பதிப்பதையே தமது தலையாய பணியாக ஏற்றுக் கொண்டதுடன் ஏனையோரையும் அப்பணியில் ஈடுபட ஊக்குவித்தும் வந்திருந்தார்.

குறிப்பாக **உ.வே. சுவாமிநாத ஐயர்** தமது முதல் நூலாக சீவகசிந்தாமணியை எடுத்துக் கொண்டு அப்பணியில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டிருந்த வேளையில் அவருக்கு பல வழிகளிலும் உதவியிருந்தவர் **சி.வை.தா.** தமது சொந்தக் கையெழுத்துப் பிரதிகளை சுவாமிநாத ஐயருக்கு கையளித்திருந்ததுடன், அச்சுப் பணிகளைத் தொடர்வதற்குக் கடதாசி வாங்குவதற்குத்தானும் பணம் இல்லாது ஐயர் கஷ்டப்பட்டபோது முற்பணம் செலுத்தாதே அதனைப் பெறும் வாய்ப்பை அவருக்குப் பெற்றுத் தந்திருந்தவர் **சி.வை. தாமோதரன்.** மேலும், ஏற்கனவே பல நூல்களை வெளியிட்டிருந்தவரான சி.வை.தா. தமது அடுத்த நூலான இறையனார் **களித்தொகையை** வெளியிடும் பணிகள் யாவும் பூர்த்தியடைந்திருந்த போதும் உ.வெ. சாமிநாத ஐயர் தமது **சீவகசிந்தாமணி** நூலை வெளியிட்டுப் பிரகடனம் செய்யும் வரை தமது களித்தொகை வெளியீட்டைப் பிற்போட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. டாக்டர் உ.வே. சாமி நாத ஐயர் அவர்களே தமது மேற்படி நூலின் முன்னுரையில் சி.வை. தாமோதரனின் ஊக்குவிப்பின் நிமித்தமே சீவகசிந்தாமணியை அக்காலகட்டத்தில் தாம் வெளியிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரின் வெளியீட்டுப் பணி சோர்வு காரணமாக அவரது முதல் நூலான சீவகசிந்தாமணியுடன் நின்றுவிடக் கூடாது என்பதற்காக மேற்படி நூலின் பாராட்டு விழாவில் வைத்தே அவரைப் பாராட்டிய தாமோதரர், சாமிநாத ஐயர் அவரது இரண்டாவது நூலாக **சிலப்பதிகாரத்தையே** வெளியிடவேண்டும் என அவரை உற்சாகப்படுத்தி ஊக்குவித்திருந்ததுடன், தமது கையிருப்பில் இருந்த அந்நூலின் கையெழுத்துப் பிரதிகள் சிலதையும் ஐயரிடம் கையளித்தும் இருந்தார். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் இதனைத் தமது "**என் சரிதையிலும்**" சிறப்பாகக் குறிப்பிட்டிருக்க காணலாம்.

"ஆகவே எவரும் நினைத்துப் பார்க்காத நிலையில் உழைப்பும் விடாமுயற்சியும் தேவைப்படுகின்ற துறையில், தமிழுக்குத் தொண்டாற்றுவதில் உ.வே.சா. தன்னந்தனியே முனைந்து நின்றார்" என "தினமணி" ஏடு எழுதியிருப்பது (2005 யூலை 23 ஆம் திகதிய "தினக்குரல்" இதழ் காண்க) உண்மையல்ல. அவருக்கும் முன்னோடியாக, அவரையும் அத்துறையில் ஈடுபட உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கும் ஒருவராகத் தன்னந்தனியாக முனைந்து நின்றவர் சங்கத் தமிழ் கல்வியின் தந்தையாகி தமிழ் மறுமலர்ச்சியாளர் ராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் மட்டுமே. தமிழகத்தின் பல பகுதிகளிலும் கிராமப் புறங்களில் ஓலைச் சுவடிகளாகக் கிடந்த சமஸ்கிருதம் விரவாத பண்டைய சங்கத் தமிழ் நூல்களைத் தமது அரிய தேடுதல் மூலம் சேகரித்து முறைப்படுத்தி பரிசோதித்து அச்சில் ஏற்றி அபூர்வசாதனை படைத்தவர் தாமோதரர் என்பதுடன் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களையும்

ஏனையோரையும் அத்துறையில் ஈடுபடும்படி ஊக்குவித்து உற்சாகப்படுத்தியிருந்தவரும் தாமோதரரே! அவர் மட்டும் இல்லாதிருந்தால் பண்டைய சங்கத் தமிழ் நூல்களான இந்த அபூர்வ அறிவுக் களஞ்சியங்களை தமிழர் இழக்க நேரிட்டிருக்கும் என்பதைத் தொல்காப்பியத்துக்கு பாமரரும் புரிந்துகொள்ளும் மொழி நடையில் "தொல்காப்பியப் பூங்கா" எனும் தலைப்பில் விளக்கவுரை எழுதி வெளியிட்டிருக்கும் கலைஞர் மு. கருணாநிதியும் சான்று பகர்வார் என்பது திண்ணம்.

- சா.ஆ. தருமரத்தினம்

நன்றி: 'தினக்குரல்'
2005, செப்-12.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!

- பாவேந்தர் பாரதிதாசன்

இங்கிலாந்தில் மதிக்கப்பட்ட சட்ட வல்லுநர்

சேர். முத்துக்குமார சுவாமி

தக்கார் தகவிலர் என்ப அவரவர்
எச்சத்தால் காணப் படும் - குறள்

இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ் மக்கள் படும் அல்லல்கள் சொல்லிலடங்கா. இத்தருணத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றிய பெரியாரைப் பற்றிய சிந்தனைகள் எழுவது இயற்கையே!

இலங்கையில் 19ஆம் நூற்றாண்டில் தன்னிகரில்லாத் தலைவனாகவும் இங்கிலாந்து நாட்டில் நன்கு மதிக்கப்பட்டவராகவும் விளங்கிய தமிழ் மகனான **சேர் முத்துக்குமாரசுவாமி** மண்ணுலகை விட்டு மறைந்து 125 ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

அவரின் சாதனைகளும் சேவைகளும் ஆச்சரியத்தைத் தரவல்லன. கல்வியின் மேம்பாட்டால் உயர்ந்து இங்கிலாந்தில் சட்ட வல்லுநராக (பாரிஸ்ரர் - Barrister at - Law) தேறிய **முதலாவது ஆசியாக் கண்டத்தவர்** மட்டுமல்லாமல், விக்டோரியா மகாராணியாரால் "சேர்" பட்டம் வழங்கப்பட்டவர் முத்துக்குமாரசுவாமி.

மேலும் ஆங்கிலப் பேச்சு வன்மையினால் Silver Tongued Orator of the East எனப் புகழப்பட்டவர்.

இலங்கைச் சட்ட நிரூபண சபையில் (Legislative Council) தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக 17 ஆண்டுகள் அளப்பரிய சேவை செய்த மகான்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மக்களுக்குப் பாதகமான சட்டதிட்டங்களைக் கொண்டு வந்தபோது அவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்துத் தடுத்துள்ளார். இந்தியாவிலும் ஆங்கிலேய அரசு செய்த அநீதிகளை எதிர்த்து வாதாடி வெற்றி கண்டார்.

உதாரணமாக, தஞ்சாவூர் மகாராணியாரின் சொத்துகளை அரசு பறித்தபோது, மகாராணியார் சேர். முத்துவிடம் முறையிட்டதன் காரணமாக அவர் இங்கிலாந்து சென்று பாராளுமன்ற அங்கத்தவரிடம் பரிந்துரை செய்ததன் பயனாக மகாராணியாரின் சொத்துகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. நன்றிக் கடனாக அழகான வேலைப்பாடுகள் கொண்ட நடராஜர் விக்கிரகம் ஒன்று சேர் முத்துக் குமாரசுவாமிக்கு வழங்கப்பட்டது. இவ்வகையில், இந்தியாவிலும் அவர் நன்கு மதிக்கப்பட்டார்.

அவரின் கல்விச் சேவையில் முக்கியமானது விஞ்ஞான பாடங்களைப் பாடசாலையில் புகுத்தியதும் இலங்கை தொழினுட்பக் கல்லூரி (Ceylon Technical College) அமைப்பதற்கு அரசுக்கு சிபாரிசு செய்ததுமாகும். கல்விச் சேவைக்கென ஒரு பணிப்பாளரை நியமித்தும் அவருக்கு ஆலோசனை வழங்குவதற்கென ஒரு குழுவையும் நியமித்தபடியால் கல்வித்தரம் உயர்ந்தது. இதனை சேர் முத்துவின் மருமகனான சேர் பொன் இராமநாதன் பிற்காலத்தில் பாராளுமன்றத்தில் கூறிப் பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பல சிறப்புகள் கொண்ட சேர் முத்துக்குமாரசுவாமி, குமாரசுவாமி முதலியாருக்கும் மானிப்பாயைச் சேர்ந்த விசாலாட்சி அம்மையாருக்கும் ஏக புத்திரனாக 1834 ஆம் ஆண்டு தை மாதம் கொழும்பில் பிறந்தார்.

குமாரசுவாமி முதலியார் கண்டி அரசனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கும் ஆங்கில அரசுக்கும் மொழி பெயர்ப்பாளராக இருந்தபடியால் அரசனுக்கு அதிகம் துன்புறுத்தல்கள் இல்லாமல் வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார். ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கனின் தாய்மொழி தமிழாகும். **கண்டி உடன்படிக்கை ஆங்கிலத்திலும் தமிழிலுமே எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.**

குமாரசுவாமி முதலியாரின் ஒரே மகனான முத்துக்குமாரசுவாமிக்கு ஒரு சகோதரியும் இருந்தார். அவரே குமாரசுவாமி, சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் ஆகியோரை பெற்றெடுத்த **செல்லாச்சி அம்மையார்** ஆவார்.

முத்துக்குமாரசுவாமிக்குச் சமய அறிவு விருத்திக்கு வித்திட்டவர், தாயாரான விசாலாட்சி அம்மையார். சைவ சமயம் சித்தாந்தம் போன்ற விடயங்களை வீட்டில் மகனுக்கு கற்பித்து வந்த படியால் தான் பிற்காலத்தில் மகன் ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தம் பற்றி உரைகள் நிகழ்த்த முடிந்தது.

இராணியின் கல்லூரி (Queen's Academy) என அழைக்கப்பட்ட றோயல் கல்லூரியில் ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், தத்துவம் போன்ற பாடங்களை நன்கு கற்று சிறந்த மாணவனாகப் பல பரிசில்களைப் பெற்றார். சட்டம்

கற்க விரும்பியபடியால் சோற்றிச் சாட் மோகன் என்பவரிடம் கற்றுத் தேறி ஒரு சட்டத்தரணியானார்.

தாம் ஒரு பாரிஸ்ரர் (Barrister) ஆக வேண்டும் என்ற அவாவினால் இங்கிலாந்து சென்று சட்டக்கல்லூரியில் சேர முற்பட்டபோது அதிர்ச்சியடைந்தார். அதாவது, கிறிஸ்தவரோ அன்றி யூதரோ மாத்திரமே சட்டம் பயில முடியும் என்று கூறினார்கள். முத்து மனம் தளரவில்லை.

தமது நாவன்மையால் பல பாரிஸ்ரர்களுடன் வாதாடி வெற்றியும் கண்டார். **லிங்கன்ஸ்** (Lincoln's Inn) கல்லூரியில் சேர்ந்து மூன்றாண்டுகள் பயின்ற பின்னர் ஆசியாக் கண்டத்திலே முதலாவது பாரிஸ்ரர் ஆனார்.

முத்துக்குமாரசுவாமி அரிச்சந்திரன் கதையை ஆங்கிலத்தில் நாடகமாக எழுதியதோடு அமையாது, ஆங்கிலேயக் கலைஞர்களுடன் சேர்ந்து நாடகத்தை விக்ரோறியா மகாராணியார் முன்னிலையில் மேடையேற்றினார். நாடகத்தைப் பார்த்த மகாராணியார் முத்துக்குமாரசுவாமியின் நடிப்புத் திறத்தை மெச்சி அவருக்கு 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தார். அப்போது **ஆசியக் கண்டத்தில் முதலாவது 'சேர்' பட்டம்** பெற்றவரானார்.

தமது சமயத்திலும் கலை, கலாசாரம் ஆகியவற்றிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்த சேர் முத்துக் குமாரசுவாமி தமது ஓய்வு வேளைகளில் இந்திய தத்துவம், சைவ சித்தாந்தம் போன்ற தலைப்புகளில் இலண்டன் கலைக் கூடத்தில் (Art Council) விரிவுரைகளை நிகழ்த்தினார். அச்சொற்பொழிவுகளைக் கேட்கச் சென்றவர்களுள் இங்கிலாந்துப் பிரதமர்களான பாமஸ்ரர் பிரபு (Lord

Palmerstor) பென்ஞ்சமின் டிஸ்ரேலி (Benjamin Disreli) கவிஞர்களான ரெனிசன் பிரபு (Lord Tenyson) மத்யூ ஆர்னல்ட் (Mathew Arnold) அடங்குவர்.

இங்கிலாந்தில் "சைவசித்தாந்தம்" பற்றி ஆற்றிய ஆங்கில உரைகளைத் திரட்டி "சைவ சித்தாந்தச் சுருக்கம்" என்ற தலைப்பில் அவர் எழுதிய அரிச்சந்திரன் நாடகத்தில் அனுபந்தமாகச் சேர்த்துள்ளார்.

இதனைக் கண்ணுற்ற கலாநிதி ஜீ.யு. போப் எனும் ஆங்கிலேயர் தாம் மொழி பெயர்த்து வெளியிட்ட திருவாசகம் என்னும் நூலில் சைவசித்தாந்தத்தைப் போற்றி தமிழர்களின் தலைசிறந்த தத்துவம் எனப் புகழ்ந்துள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சமகாலத்தவரான சேர் முத்து, அன்னாரைப் புகழ்ந்து சட்டசபையில் கூறியுள்ளார். அவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பஞ்சம் நிலவியபோது ஆறுமுக நாவலர் கஞ்சித் தொட்டித் தருமம் செய்துள்ளார்.

செல்வி எலிசபெத் பேபி (Elizabeth Baby) என்ற ஆங்கிலப் பெண் சேர் முத்துவின் பேச்சு வன்மையிலும் தோற்றத்திலும் கவரப்பட்டு அவரைத் திருமணம் செய்து கொண்டாள். 1875 ஆம் ஆண்டு நடைபெற்ற திருமணத்தின் பின் தம்பதிகள் இலங்கை வந்தனர். கொழும்பில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. கொள்ளுப்பிட்டியிலுள்ள 'Rhineland Place' என்ற இல்லத்தில் வசித்து வந்தனர். சேர் முத்து தொடர்ந்து சட்ட நிரூபண சபையில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக கடமையாற்றி வந்தார். தம்பதியினர்க்கு ஆனந்தன் என்ற குழந்தை 1877 ஆம் ஆண்டு பிறந்தது.

சில ஆண்டுகளுக்கு பின்னர் தாயும் சேயும் சுகவீனம் காரணமாக இங்கிலாந்து சென்றனர். சட்டசபை வேலை காரணமாக சேர் முத்து உடன் போக முடியவில்லை. சில மாதங்கள் கழித்துச் செல்லவிருந்தார். ஆனால், விதி சதி செய்துவிட்டது! அவர் கப்பல் ஏறுவதற்குரிய நாளன்று திடீர் மரணமானார்.

'Brights Disease' என்ற கொடிய நோய் அவரின் உயிரைக் குடித்து விட்டது! இலங்கை மக்கள் அதிர்ச்சியடைந்தனர்!! 1879 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி மரணமடைந்த சேர் முத்துக் குமாரசுவாமியின் பூதவுடல் சகல அரசாங்க மரியாதைகளுடன் இந்து சமய முறைப்படி தகனஞ் செய்யப்பட்டது. 46 வயது மட்டும் உயிர் வாழ்ந்தவரின் சேவைகளோ அதிகம்.

மலேசியாவைச் சேர்ந்த **எஸ். துரைராஜசிங்கம்** என்பாரே இப்பெரியாரை தமிழ் மக்களுக்கு அறிமுகஞ் செய்து வைத்தவர். சேர் முத்து எழுதிய **தாயுமானவரின் பாடல்களின்** மொழி பெயர்ப்பை தமது செலவில் வெளியிட்டதோடு அமையாது, அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் குமாரசுவாமியின் நூல்கள் (Coomaraswamiana) என்ற தலைப்பில் சேர் முத்துவின் சட்டசபைப் பேச்சுகள் முதலியனவற்றையும் கலாயோகி ஆனந்த குமாரசுவாமியின் படைப்புக்களையும் சேர்த்துள்ளார். இவற்றை எமது இளைஞர்கள் படித்து இன்புற வேண்டும்.

- மாணியூர் **சி. குமாரசாமி**

தணிகைப் புராண உரையாசிரியர்

மகாவித்துவான் பொன் அம்பிகைபாகர்

தேனினும் இனிய செந்தமிழும், சிவநெறியும் செழித்து வளரும் இணுவையம்பதி, ஈழத் திருநாட்டில் வடபாலமைந்த இயற்கை எழில் கொஞ்சும் திருநகரமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் நகரில் இருந்து காங்கேசன் துறைக்குச் செல்லும் பிரதான வீதியில் நான்காவது மைல் தொலைவில் உள்ளது இக்கிராமம். எழிலும், ஏற்றமும், தொன்மையும், அருள் வன்மையும் பெற்று சிறந்து விளங்கும் சைவ ஆலயங்கள் இக்கிராமத்துக்குத் தெய்வீகப் பொலிவைத் தருகின்றன. வாழை, மா, பலா முதலிய கனிதரும் மரங்களும் மற்றும் பயன் தரும் பனை, தென்னை மரங்களும், கவினுறு சோலைகளும் தன்னகத்தே கொண்டு சீர் பெற்று விளங்குவது இக்கிராமம். சைவப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து வருவதோடு தமிழ்ப் பண்பாட்டையும் தொன்று தொட்டு வளர்த்து வருகிறார்கள் இக்கிராமத்து பெருங்குடி மக்கள். அத்துடன் அவர்கள் விவசாயத்தைப் பொன்னே போல போற்றும் பண்பு படைத்தவர்கள். இக்கிராமம் பல் வளமும் நிறைந்து பரந்த நிலப்பரப்பைக் கொண்டது.

சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் இத்தொல் பதியைப் பற்றி யாழ்ப்பாணத்துக் கல்விமான்களிலே தனித்துவம் மிக்கவராகவும், அதீத ஞாபக சக்தி உடையவராகவும் விளங்கிய பல்கலைப் புலவர் (அமரர்) சி. குலரத்தினம் அவர்கள், "**தமிழ் தந்த தாதாக்கள்**" என்னும் தமது நூலிலே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை (பக்.100) கவனிக்கத்தக்கது :

> "யாழ்ப்பாணத்து இணுவில் பதி குளத்தங்கரை நாகரிகத்துக்குப் பெயர்போன குடியிருப்புகளில் ஒன்று. சைவத் தமிழ்ப் பண்ணைகளில் ஒன்று. பல்லாண்டுகளாகப் பல கலைகளையும் பேணிக் காத்து வந்த பெருங்கலைவாணர் உறைவிடங்களில் ஒன்று. ஆயகலைகளுள் ஆடல், பாடல் முதலிய அருங்கலைகள் அன்றும் இன்றும் அங்கே களிநடம் புரிந்த, புரிகின்ற அமைவு எல்லோரும் அறிந்ததே. விவசாயம், வர்த்தகம், தொழில்துறை முதலியவற்றிலும் மேம்பாடு கண்ட இணுவிலில் தமிழரசர்களோடு தொடர்பு கொண்ட ஆலயங்களும் பல நூற்றாண்டுக் காலமாக அங்கே நிலவி வருகின்றன."

தென் தமிழ் நாட்டைச் சேர்ந்த திருக்கோவலூரிலிருந்து வந்து இத் தொல்பதியில் ஆதியில் குடியேறிய **பொன்னம்பல பிள்ளை** அவர்கள் முத்தமிழ்ப் புலமையுடன் சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்து விளங்கினார். இப் பெரியாரும் இவரது வாழ்க்கைத் துணைவியார் **சிவகாம சுந்தரி** அம்மையாரும் இணைந்து நடத்திய இல்லறத்தின் நற்பயனாக துர்முகி (1837 ஆம் ஆண்டு) வருடம் ஆவணி மாதம் புனர்பூச நட்சத்திரத்தோடு

கூடிய சுபதின வேளையில் ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தனர். அக்குழந்தைக்கு கதிர்காமர் என்று நாமகரணம் சூட்டி கண்ணும் கருத்துமாக வளர்த்து வருவாராயினர். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து உரிய பிராயத்தில் தமது தந்தையாரால் வித்தியாரம்பம் செய்யப் பெற்று கல்வி கற்று வருவாராயினர்.

"கதிர்காமர், தமது தந்தையாரிடத்து இலக்கிய இலக்கண நூல்களையும், கந்தபுராணம், பெரிய புராணம் முதலிய புராண நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுப் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். இளமைப் பிராயத்திலேயே வடமொழியையும் கற்பதற்கு விரும்பி, அக்காலத்திலே சைவ சித்தாந்த வித்தகராகவும் நைட்டியப் பிரம்மசாரியாகவும் விளங்கிய பிரம்ம ஸ்ரீ மு. வெங்கடாசல உபாத்தியாயரிடம் கற்று வருவாராயினார். அமர கோசம், இராமோ தந்தம் முதலிய வடமொழி நூல்களையும் அவரிடம் கற்று இருமொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றார். அத்துடன் ஆங்கில மொழியையும் நன்கு கற்று மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். 'குல வித்தை கல்லாமலே பாகம் படும்' என்ற முது மொழிக்கேற்ப செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்று விளங்கினார்.

ஸ்ரீ பொன்னம்பல பிள்ளை அவர்கள் தமது மைந்தனின் கல்வித் திறனை உணர்ந்து, வசன நடை கைவந்த வல்லாளராய் நாவன்மை படைத்தவராய் சைவ சித்தாந்த ஞான பானுவாய் சிவபூஜா துரந்தரராய் விளங்கிய நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களிடம் அனுப்பினார். அவர் நாவலரிடம் தொல்காப்பியம், சேனா வரையம், சேது புராணம், தர்க்க சங்கிரகம் முதலிய

நூல்களில் தமக்குரிய சந்தேகங்கள் நீங்கக் கற்று வரும்போது உபாத்தியாயர் அவர்களிடத்து அமைந்துள்ள நுண்ணறிவையும் பேராற்றலையும் வியந்து நாவலர் பெருமான் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். ஆகமங்களிலும், சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் தமக்கேற்பட்ட ஐயங்களையெல்லாம் சைவசித்தாந்த சிரோமணியாய், வேதாகம விற்பன்னராக விளங்கிய இணுவை பிரம்ம ஸ்ரீ த. நடராஜ ஐயர் அவர்களிடம் கேட்டுத் தெளிந்தார்கள்.

திருமணப் பருவம் அடைந்ததும் திருக்கோவலூர் வேளாண் பிரபு பேராயிரமுடையான் சந்ததியில் உள்ளவராகிய கதிர்காமசேகர மாணா முதலியாரின் மரபிலே வந்த இராமலிங்க பிள்ளை என்பவரின் மகளாகிய **பார்வதிப் பிள்ளையை** நன்முகூர்த்தத்தில் விவாகம் செய்து இல்லற வாழ்க்கையிற் சிறந்து விருந்தோம்பல் முதலிய பண்புகளிற் பொலிந்து விளங்கினார் அம்பிகைபாகர் அவர்கள். எண்மருக்குத் தாயாய் விளங்கிய அருந்தவச் செல்வியாம் பார்வதி அம்மையாரவர்கள் தமது நாயகன் பணிவிடைகளில் தவறாதவராய் அவர் செய்யும் சிவ புண்ணியச் செயல்களுக்கு உறுதுணையாக நின்று இல்லற வாழ்க்கையைச் சிறப்புறச் செய்தார்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் கௌரவிப்பு

திருத்தல யாத்திரை செய்ய விரும்பிய அம்பிகைபாகர் இந்தியாவுக்குச் சென்று பாடல் பெற்ற திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறை ஆதீனம் சென்றடைந்தார். அக்காலத்தில் ஆதீனக்கர்த்தராக விளங்கிய **அம்பலவாண தேசிகர்** அவர்களைச் சந்தித்து

பல செய்யுட்களைப் பாடினார். இவரது பாடல்களைக் கேட்டு மனம் மகிழ்ந்து தேசிகர் அவர்கள் இவரைப் பாராட்டியதுடன் தகுந்த சன்மானங்களும் வழங்கிக் கௌரவித்தார். இவருக்கு **'அம்பிகைபாகர்'** என்னும் பட்டப் பெயர் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் அவர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவரைத் தரிசித்த காலத்தில் அம்பிகைபாகர் பாடிய செய்யுட்களின் நயத்தை அறிவதற்காக ஓர் செய்யுளைத் தருகின்றோம்.

> **''மத்தக நன்நோக்கும் மணிக்களனும் மான்மறிசேர்**
> **கைத்தலமு மாற்றிக் கருணையினால் - இத்தலத்தில்**
> **அம்பலவாண வருட்குரவர் மேனி கொண்டார்**
> **நம் பரம ரென்றுளமே நாடு''**

தேசிகர் அவர்களால் வழங்கப்பட்ட 'அம்பிகைபாகர்' என்ற பட்டப்பெயரே நிலையாக இருந்து வருகிறது. அரசாங்க சார்பான பத்திரங்களில் 'கதிர்காமர்' என்ற இயற்பெயரே காணப்படுகின்றது. அம்பிகைபாகர் என்ற பட்டப் பெயரிலேயே இப்பெரியாரது நூல்கள் வெளிவந்தன.

சைவ வித்தியாசாலை அமைத்தல்

திருநெறிய தமிழும் வைதிக சைவமும் நனிசிறந்தோங்க வேண்டும் என்ற பேராவலினால் உந்தப் பெற்று அம்பிகைபாகர் அவர்கள் தாம் பிறந்த ஊரில் 1864ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஓர் நன்னாளில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் தென்பால் அப்பெருமான் அருளால் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க

சுபமுகூர்த்த வேளையில் சைவ வித்தியாசாலை ஒன்றைத் தாபித்து வளர்த்து வருவராயினார். இக்கிராமத்தில் உள்ளவர்கள் மாத்திரமின்றி சுதுமலை, தாவடி, கோண்டாவில், உரும்பிராய் ஆகிய அயற் கிராமங்களில் இருந்தும் பல மாணவர்கள் வந்து இவ்வித்தியாசாலையில் கற்று வந்தனர். 'அம்பிகைபாக வித்தியாசாலை' எனப் பிற்காலத்தில் வழங்கப்படலாயிற்று. பிரம்மஸ்ரீ வெங்கடாசல உபாத்தியாயர் அவர்களையே முகாமையாளராக நியமித்துப் பாடசாலையை மேலோங்கச் செய்தார்கள் அம்பிகைபாகர் அவர்கள், பாடசாலையின் வளர்ச்சியையும், சிறப்பையும் அறிந்த டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் பின்வரும் இரு செய்யுட்களால் வாழ்த்தியிருக்கிறார்கள்.

''திருமலி தமிழினய மெலாந் தெரிந்து
செறிசுவை நூல் பல வியற்றிக்
குருமலி யுரையுமெழுதி யாழ்ப்பாணங்
குலவிநற் புகழ் கொளுங்குரிசில்
தரு மலி யிணுவினம்பிகை பாகன்
தாபித்த வித்தியாசாலை
மருமலி கொன்றை முடியனவனருளால்
மலிநலங் கெழுமிவா ழியவே''

''நூலுரைத் திடுத னூற்குரை வகுத்தல்
நூற் பொருள் மாணவர்க் கியம்பல்
ஏலுமிவ் வெல்லாமொருவர் பாலியைதல்
இரும் புவி தனிலரி தாமால்
சாலு மித்திறஞ்சே ரம்பிகை பாகன் தாபித்த
வித்தியாசாலை மேலு நன்னலங்கள்
யாவையும் பொருந்தி விளை புகழோங்க வாழியவே''

இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திருக்கோயிலின் தென்றபுறத்தே அமைந்திருந்த இப்பாடசாலை பின்னர் கோயிலுக்காக அப்பாடசாலைக் காணியை விட்டுக் கொடுத்ததோடு கோயிலின் வடக்கு வீதிக்கு அருகாமையில் உள்ள நிலப்பகுதியில் பாடசாலை மாற்றி அமைக்கப்பட்டது. பாடசாலையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு 1870ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அரசாங்கம் எற்றுக்கொண்டது. 1941ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் இப்பாடசாலையைப் பொறுப்பேற்றது. பின்னர் 1962ஆம் ஆண்டு தொடக்கம் அரசினர் பாடசாலையாக விளங்கி காலப்போக்கில் மகாவித்தியாலயமாக வளர்ச்சியடைந்தது. இப்பாடசாலையின் பழைய மாணவரும் வட மாநிலக் கல்விப் பணிப்பாளருமான திரு. இரா.சுந்தரலிங்கம் அவர்களால் **இணுவில் இந்துக் கல்லூரி** எனத் தரமுயர்த்தப்பட்டு தலை நிமிர்ந்து நிற்கின்றது.

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பிகைபாகர் அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெரும் புலவர்களில் ஒருவராக நன்கு மதிக்கப்பட்டவர். தாய்நாடாகிய ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் வாழ்ந்து இலக்கியப் பணிகள் புரிந்தவர். அக்காலத்தில் பதிப்புத் தொண்டில் ஈடுபட்டு அழிந்து கொண்டிருக்கும் நிலையில் உள்ள ஏட்டுச் சுவடிகளைத் தேடி எடுத்து நூலுருவாக்கிய ராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் இந்த அரும்பெரும் பணிக்கு உறுதுணையாக விளங்கியவர்.

தணிகைப் புராணமும் அம்பிகைபாகர் உரையும்

திருவாவடுதுறை ஆதீனத்துக் கச்சியப்ப முனிவர் அருளிச் செய்த தணிகைப் புராணத்துக்கு, தொண்டமான் புதுக்கோட்டை இளவரசு ஸ்ரீமத் பாலசுப்பிரமணிய இரகுநாத தொண்டமான் அவர்கள் கேள்விப்படி புத்துரை எழுத முன்வந்தார் அப்பிகைபாகர் அவர்கள். அக்காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களுக்கு "இருப்புக் கடலை"யாக விளங்கியது தணிகைப் புராணம். கடினமான தணிகைப் புராணத்தை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்தவர் உரையாசிரியர் அம்பிகைபாகர் அவர்களே! இவர் சில படலங்கள் வரை உரை இயற்றியதோடு தணிகைப் புராணம் முழுவதற்கும் பொழிப்புரையும் எழுதினார். ஈழத்து சைவப் பெருமக்களால் போற்றப்பட்ட புராணங்களில் ஒன்றாக தணிகைப் புராணம் சிறந்து விளங்கியது. அதற்குப் பாடம் சொல்வதில் ஆற்றல் படைத்தவர் அம்பிகைபாகர் என்பதனை நன்குணர்ந்து திருவாவடுதுறை ஆதீனமுடையவரே இவரிடம் பாடங் கேட்டுள்ளார் எனறு அறியக்கூடியதாக உள்ளது.

புதுக்கோட்டை சமஸ்தான நீதிபதி ஸ்ரீமாந். கு. கதிரவேற்பிள்ளை அவர்கள் அம்பிகைபாகர் அவர்களது தணிகைப் புராண உரையை வாழ்த்திப் பின்வரும் சிறப்புப் பாயிரத்தை வழங்கியுள்ளார்கள்.

"பேராயிர முடையான் சாரிணுவை பிறங்க வரும்
சீரான் மிகுத்தவன் அம்பிகைபாகன் செழுந் தமிழ் நூல்
ஆராய்ந் தறிந்தவன் பாலனைப் பண்டிதன் ஆக்கி வைத்தோன்
நேரார் தணிகைப் புராணக்கு நல்லுரை நேர்ந்தனனே."

மேற்படி சிறப்புப் பாயிரம், பேராயிரவர் வழிவந்த பெருமரபைச் சார்ந்தவர் அம்பிகைபாகர் என்தனை உறுதிப்படுத்துகிறது.

இணுவையந்தாதி ஆக்கம்

இணுவையம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சர்வாபீஷ்ட வரதராகிய விநாயகப் பெருமான் மீது அம்பிகைபாக உபாத்தியாயரவர்கள் '**இணுவை யந்தாதி**' என்னும் நூலை ஆக்கித் தந்துள்ளார்கள். இந்த நூல் சொற்சுவை, பொருட்சுவை பொதிந்து பக்திரசம் ததும்பும் பாக்களைக் கொண்டு சிறந்து விளங்குகின்றது. மஹாவித்துவான் அவர்கள், தமது இறுதிக் காலம்வரை அவ்வாலய ஆதீன கர்த்தராக இருந்து ஆலயத்தின் வளர்ச்சிக்காக அரும்பெரும் தொண்டாற்றினார். இவர் இயற்றிய இணுவையந்தாதியில் ஒரு செய்யுளைக் கீழே தருகிறோம்.

"திருத்தங் கிதழி யுடைத்தாமர் தில்லைத் திருச்சபையில்
நிருத்தங்கொளீச ரளித்தமுன் னோன்சில நீண் மருப்பொன்
றுருத்தங் கொசித்த வணற்செற்ற முன்னோ னுருதுணை காண்
மருத்தங் கிணுவையந் தாதியென் வாயில் வருவிக்கவே"

வசன நூலாசிரியர்

மகாவித்துவான் அம்பிகைபாகர் சிறந்த வசன நூலாசிரியராகத் திகழ்ந்துள்ளார். புதுக்கோட்டை மகாராஜக் கல்லூரிப் பிரதம ஆசிரியரும் தமிழ்ப் பண்டிதருமான **ஸ்ரீமான் எஸ். இராதா கிருஷ்ணையர்** அவர்களது விருப்பத்திற்கு இணங்கி **சூளாமணி வசனம்** என்னும் நூல் ஆக்கப் பெற்றது. இச் சூளாமணி வசனத்தை ஐயரவர்கள் தாம் பதிப்பித்த நூற் கோவைகளோடு

நல்லூர் பிரதேச சபை
பொது நூலகம்
கொக்குவில்

சேர்த்துப் பதிப்பித்தார்கள். அம்பிகைபாகரது காலத்தில் வசன நூலாசிரியராக சிறந்து விளங்கியவர்கள், சபாபதி நாவலர், ஆறுமுக நாவலர், சுன்னாகம் குமாரசாமிப் புலவர், காசி வாசி கன செந்திநாதையர், ஞானப்பிரகாசர், ம.க. வேற்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

ஆறுமுக நாவலர் அவர்கள் கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய நூல்களை வசன நடையில் எழுதியது போன்று அம்பிகைபாகர் அவர்களும் 'காசி காண்டம்' நூலினை வசன நடையில் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்பிகைபாகர் தமிழகத்தில் இருந்த காலத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். ஐயரவர்கள் தமது 'என் சரித்திரம்' என்னும் நூலில் 'சீவகசிந்தாமணிப்' பதிப்புப் பற்றிக் கூறுமிடத்து (பக். 575-576) அம்பிகைபாகர் மற்றும் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களுடன் நடந்த சம்பாஷணையை விரிவாகக் குறிப்பிட்டு, "வென்றிக் களிற்றை' என்ற தொடரையும் அம்பிகைபாகர் உபாத்தியாயரையும் நினைத்துக் கொண்டேயிருக்கிறேன்" என்று நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார்.

சிவபதப் பேறு

ஈழத்திலும், தமிழகத்திலும் பல அறிஞர் பெருமக்களது நட்பையும், பாராட்டுக்களையும் பெற்று இணுவை மாநகரில் சிறப்புடன் வாழ்ந்த இப்புலவர் பெருந்தகை 1902 ஆம் ஆண்டு சிவபதப்பேறெய்தினார். இவரது பிரிவைக் குறித்து சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், வித்துவ சிரோமணி சி. கணேசையர், தாவடி பண்டிதர் அ.மு. சோமாஸ்கந்த பிள்ளை, மகாவித்துவான்

சபாபதி நாவலர், சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் முதலிய பலர் இரங்கற் பாக்கள் பாடியுள்ளார்கள்.

மகா வித்துவான் மறைந்து நூற்றிரண்டு வருடங்கள் கழிந்த போதிலும் அவர் ஆற்றிய சைவத் தமிழ்ப் பணிகள் காலத்தால் அழியாது என்றும் நிலைத்து நின்று இந்நிலவுலகில் அவரது புகழைப் பரப்பும் என்பதில் சந்தேகமில்லை.

வை. அநவரத விநாயகமூர்த்தி
தெஹிவளை.

இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்ந்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்றபேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்

(இனிமைத்)

- பாவேந்தர் பாரதிதாசன்

இலங்கை முஸ்லிம் கல்வி, அரசியல்,
இலக்கியச் சீர்திருத்தச் செம்மல்

அறிஞர் சித்திலெவ்வை

அறிஞர் சித்திலெவ்வை அவர்கள் சமூக, கல்வி, அரசியல், இலக்கியச் சீர்திருத்தங்கள் என்பவற்றில் இலங்கை முஸ்லிம் சமூகம் நோக்கிப் பௌதீக ரீதியில் அணுகித் தீர்வுகாண முயன்றவர் என்பதை யாவரும் அறிவர்.

இத்தியாதி வல்லமையுடைய சரித்திர புருஷர் சித்திலெவ்வை அவர்களை 1948ஆம் ஆண்டுக்கு முன், எவரும் ஆய்வு செய்யத் துணியவில்லை. துணியாமைக்குக் காரணம். அவரது பாரிய சேவைத் திறமையின் பிரதிபலிப்புகள் எழுத்துடனும், காலமாற்றத்துடனும் தூர்ந்து விட்டதெனலாம். அதற்குச் சித்திலெவ்வை அவர்களும் ஒரு காரணந்தான். அவரது எச்செயல்களும் இயக்க ரீதியில் வளரவில்லை. அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபரானமையால், அக்கல்லூரியுடன் தொடர்பான சித்திலெவ்வை அவர்களின் கல்வித் தொண்டினையே ஆராய முற்பட்டார். ஸாஹிறாக் சஞ்சிகையிலும் எழுத முற்பட்டார். இக்காலத்தே சித்திலெவ்வை பற்றி ஆங்கிலம் கற்ற மேற்தட்டினர் அறியலாயினர். இச்செயற்பாடு 1948க்குப் பின்தான் நடந்ததெனலாம்.

ஆனால், "இஸ்லாமும் தமிழும்" எனும் தலைப்பில் சித்திலெவ்வை அவர்களின் ஆக்கங்களை மயிலை சீனி

வேங்கடசாமி அவர்கள் ஆய்வு செய்தமையும் குறிப்பிடத்தக்கதே!

தேசிய இலக்கியச் சிந்தனை எழுந்த காலத்தே 1954க்குப்பின், பரவலாகச் சித்திலெவ்வை பற்றிய ஆய்வு முற்போக்கு எழுத்தாளர் சங்க உந்தலால் அ. முஹம்மது சமீம் அவர்களால் வெளி வந்து கொண்டிருந்தன. 1962ஆம் ஆண்டில் நடைபெற்ற ஸாஹிறாக் கல்லூரி முற்போக்கு எழுத்தாளர் சங்க தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் சித்திலெவ்வை அவர்களை தேசியப் பெரியாராகக் கனம் பண்ணினர். 1963ஆம் வருடம் மட்டக்களப்புத் தெற்றிலுள்ள அக்கரைப்பற்றில் சித்திலெவ்வைக்கு அரங்கமைத்து விழா எடுத்தார்கள்.

அறிஞர் சித்திலெவ்வை அவர்கள் தமிழ் எழுத்துக்கு அதிக தொண்டாற்றியுள்ளார். இம்முயற்சி அவரது செயல்களுக்கு அவரது செயல்களுக்கு அதீத பலத்தையே கொடுத்திருக்கின்றது. "**அஸன்பேயின் கதை**" என்னும் நாவலை அவர் எழுதியதிலிருந்து ஒரு தனி வைதீகப் போக்கில் நின்றும் உயர்ந்து, புதுமைகளை சமுதாயம் அறிந்தே ஆக வேண்டும் எனும் சிந்தனைக்குள்ளாகின்றார். இப்போக்கு ஆறுமுக நாவலரிடமும் காணப்பட்டுள்ளது. சித்திலெவ்வை அவர்களின் "**அஸன்பேயின் கதை**" எனும் நாவல் ஈழத்துத் தமிழ் முதல் நாவல் என்பதை நிறுவ ஆதாரங்கள் நிறைய உள்ளன.

"**பிரதாபமுதலியார் சரித்திரம்**" நாவல் தன்மையற்றதாகின், "**கமலாம்பாள் சரித்திரமே**" முதல் நாவலாகத் தமிழில் இடம் பெறும். "கமலாம்பாள் சரித்திரம்" முதலில் நாவலாகின், அதற்கு முன் வந்த "அஸன்பேயின் கதை"யே தமிழில் வந்த முதல் நாவல்

என்பதில் ஐயமில்லை. இந்நாவல் தேசிய உணர்வுடன் எழுந்த நாவலில்லை என்றும், வீரதீரச் செயல்களை அடக்கியதென்றும் அபிப்பிராயங்கள் எழுகின்றன. ஆனால், அன்றைய ஏகாதிபத்தியவாதிகளின் நாடுபிடிக்கும் ஆசை மத்திய கிழக்கெல்லாம் பரவிய காலத்தே சர்வ்தேசிய ரீதியில் சித்திலெவ்வை அவர்களும் கவலையடைந்துதான் இருக்கின்றார் என்பதை இந்நாவல் நமக்குணர்த்துகின்றது.

அதையும் விட, தெளஹீத் என்னும் ஏகத்துவத்தை எடுத்துக்காட்டியதுடன், போலி வேஷதாரிகளான ஷெய்குகளைத் தோலுரித்து, சமயானுஷ்ட ஒழுக்கங்களை அவருடைய முன்மாதிரி மூலம் காட்ட எத்தனிக்கும் அந்நாவல் ஓர் யதார்த்த நாவல் என்பதை யாரும் மறுத்திட முனையார். இத்துறையில் அவர் கைவைத்ததால், முஸ்லிம் மாதரும் கதை படிக்கும் உந்தலைப் பெற்றனர் எனலாம். அழகிய தமிழில் ஆறுமுக நாவலர் போல் தனித்துவமுடைய வசன நடையை இவர் கையாண்டுள்ள திறமை இன்றும் வியக்கக்கூடியதே! தந்திக்கு "வான் தபால்" என்றும், மொழி பெயர்ப்பாளருக்குத் "**துவிபாஷகர்**" என்றும், இன்னும் பல வேற்றுச்சொற்களைத் தமிழ்ப்படுத்தியுள்ள பான்மையை இந்நாவலில் விரவிக் காண முடிகின்றது.

"**அஸ்ராறுல் ஆலம்**" என்னும் ஞான நூல், "**ஸுநத்துஸ்ஸலாத்து**" என்னும் ஞானத் தொகுப்பு நூல், "**அபுனுவாஸின் கதை**" என்னும் அங்கதச்சுவை நூல், "**இலங்கைச் சோனகர் சரித்திரம்,**" "**துருக்கி கிரேக்க யுத்த சரித்திரம்**" எனும் சரித்திர நூல்கள், பாடப்புத்தகங்கள் யாவையும் எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்த, வாசிப்பில் மிகவும் இடர்படக்கூடியவர்கள் கூட, வாசித்திருக்கிறார்கள் என்பதை வயது முதிர்ந்தவர்களிடம் கேட்கக் கூடியதாக

இருக்கின்றது. இவரது நூல்கள் ஒவ்வொன்றும் தனித்தனி உத்திமுறைகளைக் கையாண்டே எழுதப்பட்டுள்ளமையால், இவர் அன்றைய உலக இலக்கியப் பாதிப்பில் ஊறித் திளைத்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

பாமர மக்களினின்றும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த ஞானவிடயங்களை ஜனரஞ்சமாக்க எண்ணி இவர் வெளியிட்ட நூல், "ஆத்ம இரகசியங்களைப் பகிரங்கப்படுத்தியவர்" எனும் கண்டனத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கதே! அக்காலத்தில் கண்டனங்கள் வெளிவருவது சர்வசாதாரணமானதே! சித்திலெவ்வை அவர்களும் தர்க்கரீதியான கண்டனங்களையும் வெளியிட்டுள்ளார். ஆறுமுக நாவலர்கூட, அதிக கண்டனங்களை வெளியிட்டவர் தான். சித்திலெவ்வை அவர்களின் கண்டனப் பிரசுரங்கள் இன்னும் சிலரது கைகளிலிருக்கின்றன. இவரது இலக்கிய ஆக்கங்கள் சமுதாய ரீதியில் அதிக வாசகர்களையும், ஓர் இலட்சியப்பான்மையுள்ள கூட்டத்தையும் அக்காலத்தில் வளர்த்திருக்கின்றன.

அரசியல், இலக்கியம், உலகப் போக்குகள் என்பனவற்றைச் சமுதாயம் அறிய வேண்டுமென்பதும், உலக அறிவியற் துறை சார்ந்தவராகச் சித்திலெவ்வை அவர்கள் இருந்தமையாலும் ஒரு பத்திரிகை அவசியமென்பதால், "**முஸ்லிம் நேசன்**" பத்திரிகையைத் தொடங்கினார். முஸ்லிம்களைப் பொறுத்தளவில் பத்திரிகைத் துறை, பத்திரிகைப் படிப்பு என்பவையே அக்காலம் சூன்யம்தான். இந்த நிலையை ஓரளவு அகற்றி ஒரு பாரம்பரியப் பத்திரிகை ப்டிக்கும் கூட்டத்தை ஆக்கியும் விட்டார். இப்பத்திரிகை என்னும் ஆயுதத்தால் அநேக

தேவைகளைச் சமுதாயத்திற்குப் பெற்றுக் கொடுத்தார். அந்திமக் காலத்தில் ''ஞானதீபம்'' என்னும் ஞானப் பத்திரிகையை ஆத்ம திருப்திக்காகவே நடத்தியிருக்கின்றார்.

இப்பத்திரிகையின் உத்திமுறையும் புதுமையான ஒன்றுதான். பல சமய உயர் போதகர்களின் கலந்துரையாடல், அதற்கு இவர் கூறும் தீர்ப்புகள் அடங்கிய முறையில் அவ்வப்போது நடக்கும் விடயங்களையும் நுழைத்து மாதாமாதம் ''ஞானதீபம்'' வெளிவந்தது. பத்திரிகைத் துறைப் பாதிப்பால் உந்தப்பட்ட ஒரு பரம்பரையும் வளர்ந்தமைக்குச் சித்திலெவ்வையவர்கள் காரணமாகின்றார். 1893இல் **எல்.எம். உதுமான்** என்பவர் ''**இஸ்லாமிய மித்திரன்**'' என்னும் பத்திரிகையையும், 1901இல் **ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்** என்பவர் ''**முஸ்லிம் பாதுகாவலன்**'' என்னும் பத்திரிகையையும் வெளியிட்டனர். முற்றிலும் இப்பயிற்சிக்கு வித்திட்டவர் சித்திலெவ்வை அவர்கள்தான். உதுமான், அப்துல் அஸீஸ் கூட, முஸ்லிம் நேசனில் வேலை செய்திருக்கின்றனர். (உதுமான்பற்றிய தனிக் கட்டுரை ஒன்றும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது- தொகுப்பாசிரியர்) இப்படி இதுகாலவரை முஸ்லிம்கள் பத்திரிகைத் துறைக்கு முன்னோடியாகச் சித்தி லெவ்வை அவர்களையே கொள்கின்றனர்.

அறிஞர் சித்திலெவ்வை அவர்களின் உரைநடை அறபுத் தமிழ் கலந்த மணிப்பிரவாள நடையாகும். இந்நடை இஸ்லாம் சார்ந்த நூல்களிலேயே காணமுடிகின்றது. நாவலில் சுத்தத் தமிழே விரவி வருகின்றது. தம் கருத்தை இறுக்கமாகவும் சமுதாயம் விளங்கிக் கொள்ளவும் பரவலாக வலியுறுத்தவும் அவருக்கு அந்நடை மிகவும் உதவியிருக்கின்றது. சித்திலெவ்வை

அவர்களின் காலத்தில் இளைஞராக இருந்த அப்துல் அஸீஸ் அவர்கள் 1901இல் தொடங்கிய "முஸ்லிம் பாதுகாவலன்" பத்திரிகையின் மொழி நடையையும் சித்திலெவ்வை அவர்களின் நடையையும் ஒத்து நோக்கும்போது, சித்திலெவ்வை அவர்களின் நடையை அக்காலத்தவர்கள் மிகவும் விரும்பினார்கள் என்பது தெரிகின்றது. உதாரணமாக இருவரது நடையையும் இங்கே தருகின்றேன்.

"அஸ்றாறுல் ஆலம்" சித்திலெவ்வை அவர்கள் :

> றஸீல்மார்களும் நபிமார்களும் பிறப்பிலே அவர்கள் கல்புகள் பரிசுத்தமாயிருப்பதால் மறைவான ஆலங்களும் அஸ்றாறுகளும் அவர்களுக்குத் தெரியும். இரண்டாவது, சிலர் பிறப்பிலே இந்திரியங்களின் தத்துவங்கள் குறைந்தவர்களாகவும் சூக்கும சரீரத்தின் பார்வைக் கூர்மையுள்ளவர்களாகவும் இருப்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்குக் குறித்த ஆலத்திலுள்ள சில மறைவான காரியங்கள் வெளியாகிறதும் உண்டு.

"முஸ்லிம் பாதுகாவலன்" ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் 1907 ஜனவரி இதழ் :

> மரணத்தின் பின் மனிதனுக்குண்டாகும் நிலபரத்தைப் பற்றி பரிசுத்த குர்ஆனின் போதனை எவ்வாறிருக்கிறதென்ற கேள்வி தற்போது கவனிக்கத் தக்கவொன்றாயிருக்கின்றது. சுருக்கமாகச் சொல்லவெனில் மரணத்தின் பின்வரும் நிலை புதிதன்று. அது இந்தச் சீவியத்திலுள்ள எங்கள் ஆத்மாவுக்கடுத்த நிலைபரத்தின் பூரணமான தெளிவான பிரதி ரூபமே.

இவ்விதம் நோக்கும்போது, சித்திலெவ்வை அவர்களின் வசனநடைப் போக்கைப் பின்பற்றியும், பத்திரிகைப் போக்கைப் பின்பற்றியுமே இன்றைய நடை திரிபு அமைந்திருக்கலாம்.

ஒரு பத்திரிகை மூலமே, முஸ்லிம்களின் அரசியல் உரிமையைத் தட்டிக் கேட்டதுடன், சட்ட சபையில் ஓர் அங்கத்துவத்தைப் பெற்றும் கொடுத்திருக்கின்றர். அதே போல் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கின்றார். முஸ்லிம்களின் கல்வி நிலையை ஆரம்பித்து உயர்த்த எண்ணிய இவர் முதன் முதலில் கண்டி திருகோணமலை வீதியில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். அதன்பின் கட்டுக்கலையிலும் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். பெண்களுக்காக அமைத்த பாடசாலையில் தன் சகோதரியை அதிபராக நியமித்து குர்ஆனும், தமிழும் கற்பிக்க வழி செய்தார். உடுநுவரை, கேகாலை பொல்கஹவல குருநாகல், ஹட்டன், நுவரெலியா, பதுளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள முஸ்லிம் பாடசாலைகள் இவராலேயே அமைக்கப்பட்டனவாகும். அறபுத்தமிழ் வரிசையாக மூன்று கிதாபுகளும், தமிழில் மாணவருக்கான முதல் புத்தகமும் எழுதி அச்சிட்டு மாணவருக்கு இலவசமாக விநியோகித்தார்.

இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் மணியெனத் துலங்கும் மருதானை ஸாஹிறாக் கல்லூரியை நினைக்கும்போது, சித்திலெவ்வை அவர்களே முன்னிற்பார். பெரும் போராட்டத்தின் மத்தியில் கொழும்பு முஸ்லிம்களை ஒன்று திரட்டி எகிப்திய இராணுவத்தலைவர் ஜெனரல் அஹ்மத் அறபிபாஷா அவர்கள் இட்ட நாமமான "அல்மத்ரஸதுல் ஸாஹிறா"வை அத்திவாரமிட்டு அமைத்த பெருமைக்குரியவர் சித்திலெவ்வை அவர்களே!

ஜனாப் எம்.ஸி. சித்திலெவ்வை அவர்கள், இலங்கையின் முதல் வழக்கறிஞரான எம்.எல். சித்திலெவ்வை அவர்களின் ஐந்து பிள்ளைகளில் மூன்றாமவராவர். 1838 ஆம் வருடம் ஜூன் 11ஆந் திகதி பிறந்த அவருக்கு வைத்த பெயர் முஹம்மது காஸிம் எனினும், தந்தையின் பெயரும் குடும்பப் பெயருமான சித்திலெப்பையிலேயே பிரகாசித்தார். அவர், அறபு மொழி நன்கு கற்ற ஆலிம். பல புத்தகங்கள், பத்திரிகை இரண்டிலும் எழுதி வெற்றி கண்ட தமிழ்ப் பாண்டித்தியமுடையவராகவும் ஆங்கில அறிவு பெற்ற வழக்கறிஞராகவும் திகழ்ந்த பெரியார். இந்நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் விழிப்புக்குத் தன்வாழ்நாளைத் தியாகம் செய்து நம் முன்னோடியாக வரலாற்றில் தடம் பதித்து 1888ஆம் வருடம் பெப்ருவரி மாதம் 5ஆந் திகதி இறைவனடி சேர்ந்துவிட்டார்கள்.

கலாபூஷணம் ஏ. இக்பால்
தர்ஹா நகர்.

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளால் - இன்பத்
தமிழ்குன்று மேல் தமிழ் நாடெங்கும் இருளாம்.
தமிழுண்டு தமிழ் மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள் தட்டி ஆடு! - நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு!

- பாவேந்தர் பாரதிதாசன்

இயற்றமிழ்ப் போதகாசிரியர்

வல்வை ச. வயித்தியலிங்கம்பிள்ளை

வல்வை ச.வயித்தியலிங்கம்பிள்ளை அவர்கள் 1843 ஆம் ஆண்டு மாசிமாதம் பூர நட்சத்திரத்தில் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் சங்கரநாதர் என்பதாகும். சங்கரநாதர் கடலோடியாகவும், வணிகராகவும் திகழ்ந்தவர். ஆறுமுகநாவலரது இருபத்தியோராவது வயதில் வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் தோன்றினார். நாவலர் காலமானதின் பின்னர் இருபத்தியொரு வருடங்கள் வாழ்ந்தார். நாவலர் இறக்கும்பொழுது வயித்தியலிங்கம் பிள்ளைக்கு வயது முப்பத்தி ஆறாகும்.

இவர் சிறுவயதிலேயே இந்தியா சென்றிருந்தார். அதன்பின்னர் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடம் சென்று இலக்கண, இலக்கியங்களையும், வடமொழியையும் கற்றுப் பண்டிதராகினார். சிவசம்புப்புலவரிடம் மாணவனாக இருந்த காலத்தில் அவரது முக்கிய மாணவர்களில் ஒருவராக இருந்ததோடு, அவரிடம் மாணவர்களாக இருந்த இதர, ஆரம்ப, நடுநிலையினருக்கு வயித்தியலிங்கம்பிள்ளை அவர்கள் பாடஞ்சொல்லிக் கொடுத்தாரென்றும் கூறுப்படுகிறது.

இவரால் பலதரப்பட்ட நூல்கள் இயற்றப் பட்டனவாயினும் யாவற்றையும் ஒருசேர வைத்துப்

பார்க்கும்பொழுது ஐந்து துறையினவாக வகுக்கலாமென்று தெரியவருகிறது.

1) பதிப்புகளும் உரைகளும்
2) நிகண்டு
3) கடவுளர்மீது பாடியவை
4) கண்டனப் பிரசுரங்கள்
5) சமூகம் பற்றியவை

இவரது நூல்களில் பிரசுர ஆண்டு குறிப்பிடப்படாததோடு, முன்னுரையாகவும் குறிப்புகள் இல்லாத காரணத்தினால் நூல்களை காலவரன் முறைப்படி தொகுத்துக் கூறுவது சிரமமாக உள்ளது.

1. பதிப்புகளும் உரைகளும்

யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த **வி.சின்னத்தம்பிப்புலவர்** *(1716-1780)* அவர்கள் எழுதிய **''கல்வளை அந்தாதிக்கு''** உரை எழுதி சென்னை ரிப்பன் அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளியிட்டு வைத்தார். சுன்னாகத்தைச் சேர்ந்த **வரத பண்டிதர்** *(1656-1716)* அவர்கள் இயற்றிய செய்யுள் நூலான **'சிவராத்திரி புராணத்தையும்'** இவரே பதிப்பித்தார். **சி.வை. தாமோதரம்பிள்ளை** அவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழுக்களைந்து இந்த நூல் சென்னை வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில் ஆவணி மாதம் *1885* வருடம் புதிப்பிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. இவர் உரை எழுதி வெளியிட்ட நூல்களில் இன்னொன்று **''நாற்பொருள் கவிராச நம்பியகப்பொருள்''** என்பதாகும். நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்ட இந்த நூலுக்கு சுன்னாகத்தைச்

சேர்ந்த அம்பலவாணபிள்ளை குமாரசாமிப்புலவர் (1855 - 1922) அவர்களினால் 1913ம் வருடம் புதியதாக உரையொன்று சென்னை வித்தியானுபாலன யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. போதகாசிரியர் வயித்தியலிங்கம் பிள்ளையவர்களின் மேற்படி நூலுக்கான புதிய உரையொன்று 1878ஆம் வருடம் எழுதி சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதுவே இவரினால் உரை எழுதப்பட்டு முதன்முதலில் வெளியிட்டு வைக்கப்பட்ட நூல் என்று தெரிய வருகிறது. இந்த நூலுக்கு உடுப்பிட்டி சிவசம்புப் புலவரவர்கள் வழங்கிய சிறப்புப்பாயிரத்தில்.

"பழைய உரைதழீஇப் பலப்பல சேர்த்தும்
விழுமிநின் விளக்கிட வேண்டுவ விளக்கியும்
விரித்திட வேண்டுவ விரித்துமாங் காங்குத்
திருத்திடற் பாலன திருத்தியுமியற்றினன்
---------- வைத்தியலிங்க நாவலனே"

என்று இருப்பதிலிருந்து விளக்கவுரைக்கு வகுத்த உரையில் திருத்தங்கள் செய்தும் சரியானவற்றைச் சேர்த்தும் உரையியற்றினாரென்பது தெரியவருகிறது. நம்பியகப்பொருளுக்கு இவரால் வழங்கப்பட்ட விளக்கவுரையை நோக்கும்போது அகப்பொருள் மரபு இவரிடத்திலிருந்த ஆழ்ந்த இலக்கியப்புலமை நன்கு தெரியவரும். நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் அவர்களினால் இயற்றப்பட்ட "மறசை அந்தாதி" என்னும் நூலுக்கும் இவரினால் உரையெழுதி வெளியிட்டு வைக்கப்பட்டதாக தெரியவரினும் இதற்கான ஆதாரம் ஒன்றுமில்லை. இவர் உரையெழுதி வெளிட்ட நூல்களில் இன்னொன்று அருணகிரிநாதர் அருளிச்செய்த "கந்தரலரங்கார"மாகும். இதன் முதற்பதிப்பு

வெளியிடப்பட்ட காலம் 1878ம் வருடமாகும். அதன் இரண்டாம் பதிப்பு 1912ம் வருடம் வயாவிளான் ஜயசிறீ சாரதா பீடேந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. வயித்தியலிங்கம்பிள்ளையவர்களின் அரிய நூல்களைத் தேடிப்பிடித்து பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நோக்கோடு ''வல்வெட்டித்துறை ஆவணக்காப்பகத்தின்'' ஸ்தாபகரும் தற்போது கனடாவில் வாழ்ந்துவருபவருமான நடனசிகாமணி நகுலசிகாமணி அவர்களினால் மூன்றாம் பதிப்பாக 2001ஆம் வருடம் மேற்குறித்த நூல் வெளியிட்டு வைக்கப் பட்டுள்ளது.

திரு.வயித்தியலிங்கம்பிள்ளைவர்கள் பதிப்பித்து உரை எழுதி வெளியிட்ட நூல்களில் இவரது புகழை நிலைநிறுத்துவதாக அமைந்தவற்றுள் கந்தபுராணத்தின் சில படலங்களுக்கு எழுதிய உரையே காரணமாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. நாவலர் அச்சுக்கூடப் பதிப்பாக வெளிவந்த ''தெய்வயானையம்மை வள்ளியம்மை திருமணப்படலம்'' என்பவற்றிற்கான உரை கந்தரோடையைச் சேர்ந்த வி.சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள் எழுதிய ''கந்தபுராண அண்ட கோசலப்படலத்திற்கு'' எழுதிய உரையை 1885ம் வருடம் திருத்தி எழுதிய உரை, சூரபன்மன் வதைப்படலத்துக்கான உரை என்பன கந்தபுராண சில படலங்களுக்கு இவரால் எழுதப்பட்ட உரைகளாகும். தெய்வயானையம்மை வள்ளியம்மை திருமணப் படலங்களுக்கான உரைகள் வெளியிடப்பட்டபோது இவ்வுரைப் பதிப்புகளுக்கு திரு. சே. வெ. ஜம்புலிங்கபிள்ளை எழுதியுள்ள பதிப்புரையானது இவற்றின் சிறப்பைக் குறிப்பால் உணர்த்துகிறது.

> ''இத்திருமணபடலத்திற்கு யாழ்ப்பாணத்து வல்வெட்டித்துறை ச. வயித்தியலிங்கம் பிள்ளை விரிவுரை எழுதியுள்ளார். அதுபல ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் சைவாபிமானப்பத்திராதிபர் பொ. ஞானசபாபதிப்பிள்ளையால் அச்சிடப் பட்டது. அப்பிரதிகள் இப்போது கிடைப்பது அருமையாதலால் உரைநூலை மறையாதபடி காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையே இப்போது அச்சிடச்செய்தது.''

என்று ஜம்புலிங்க பிள்ளையவர்களினால் அப்பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிக்கப்பட்டுள்ள திருமணப்படலங்கள் 1888 சைவாபிமானிப் பத்திரிகையில் அதனுடன் சேர்ந்து மாதந்தோறும் இரண்டு பாகமாக பதினாறு பதினாறு பக்கமுடையதாக வெளியிடப்பட்டு வந்துள்ளது. இந்தத் திருமணப் படலங்களுக்கான உரைகள் ஆசிரியரது ஆழ்ந்த இலக்கிய ஞானத்தை வெளிப்படுத்துவதோடு, அகப்பொருள் மரபை நுண்ணியதாக உணர்ந்து எழுதப்பட்டுள்ளதென்றும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் நாட்டுச் சிறப்புக் கூறும் முதற்பாடலுக்கான உரையே உரைச்சிறப்பினை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பான கோபுர வாயிலாக அமைந்துள்ளது என்று பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் இவ்வுரைகளின் தன்மையை ஆராய்ந்து கூறியுள்ளார். 122ம் பாடலான ''நாற்றமும் தோற்றமும்'' எனத் தொடங்கும் பாடலுக்கும் 164ம் பாடலான ''தாய் துயிலறிந்து'' எனும் பாடலுக்கும் எழுதப்பட்டிருக்கும் உரைகள் போதகாசிரியரது ஆழ்ந்த தமிழிலக்கிய அறிவுக்கான

'பதச்சோறு' ஆக அமைந்துள்ளதெனவும் அவர் மேலும் கூறியுள்ளார். வள்ளியம்மை தெய்வயானையம்மன் உரைகள் நூல் வடிவில் வருவதற்கு முன்னர் "சைவாபிமானி" சஞ்சிகையில் தொடராக வந்தது போன்றே "சூரபன்மன் வதைப்படல"த்திற்கான உரை நூல்வடிவில் வருவதற்கு முன்னர் சைவாபிமானி சஞ்சிகையில் தொடராக அதனுடன் சேர்த்து வெளியிடப்பட்டு வந்தது.

2. நிகண்டு

வயித்தியலிங்கம்பிள்ளையவர்கள் தனது முப்பத்திமூன்றாவது வயதிலே (1876-1877) "**சிந்தாமணி நிகண்டு**" என்னும் நூலினை இயற்றியுள்ளார். ஆழ்ந்த இலக்கியப் பரிச்சயமில்லாத ஒருவரினால் இதுபோன்ற ஒரு நிகண்டினை இயற்ற முடியாது என்று சொல்லப்படுகிறது. பாரம்பரியமான ஒரு தமிழ்க்கல்வி முறையில் நிகண்டுப்பயிற்சி அத்தியாவசியமாகையால் பெரும் பெயர் பெற்ற போதகாசிரியராக விளங்கிய இவர் இத்துறையில் ஆர்வம் காட்டியது இயல்பே என்றும் அறிந்து கொள்ளலாம். இந்த நிகண்டினை இயற்றுவதற்கு திரு. **ஞானமூர்த்தி** என்பவர் பொருளுதவி வழங்கியுள்ளார் என்பது தெரிய வருகிறது. **சூடாமணி நிகண்டின்** பதினாறாந் தொகுதியை ஒத்த 400 பாக்கள் கொண்டதாயும் இச்சிந்தாமணி நிகண்டு அமைந்துள்ளது. இதில் ககரமுதல் னகரவீறாக எதுகைத் தொடரில் ஒவ்வோரடிக்கும் இவ்விரண்டு சொற்களைச் சேர்த்து இயற்றப்பட்டுள்ளது.

இவரினால் இயற்றப்பட்டு இச் "**சிந்தாமணி நிகண்டு**" இதற்கு முன்னர் எழுதப்பட்ட "நாதார்த்த தீபிகை" தோன்றி 25 வருடங்களுக்குப் பின்னர் 1874ம்

வருடம் யாழ்ப்பாணத்து வயித்தியலிங்கப் பிள்ளையவர்கள் அச்சிடுவித்தார் எனவும் தீபிகையைப் போல் வடமொழிச் சொற்களை மிகுதியாக அமைந்த நூலாகும் எனக் குறிப்பிடுவதோடு,

"சீர்செறி செஞ்சண்டக்கட் டிகழ்மதிப் பிளவுதாங்கும்
ஏர்செறி கரிமுகன்ற னினைமல ரடியை யேற்றி
நேர்செறி இளைஞரோர் சொற்கொருபொரு ணேராயோரப்
பார்செறி நிகண்டு சிந்தாமணியெனப் பகர்வனொன்றே"

என்று ஆசிரியர் கூறுதலால் இது ஒரு சொல்லொரு பொருள் கூறும் நூலென்றறியலாம் என "**அரும்பொருள் விளக்க நிகண்டு**" என்னும் நூல் கூறுகின்றது. ஈழநாட்டினில் நிகண்டு நூல் செய்த புலவர் வயித்தியலிங்கம் பிள்ளையன்றி வேறு யாரும் இலரென்றும் கூறப்படுகின்றது.

3. கடவுளர் மீது பாடியவை

கடவுளர் மீது இவர் பாடியவற்றுள் 1883ம் வருடம் வல்வைச் சிவன்கோயில் ஸ்தாபிக்கப்பட்டு பிரதிட்டை நடைபெற்று கும்பாபிஷேகத்தின் பொழுது இவர் இயற்றிய வல்வை "**வைத்தியேசர் பதிகம்**" "**ஊஞ்சல்**" ஆகியன பாடப்பெற்றன. வைத்தியேசர் பதிகம் ஆகியவற்றுடன் வைத்தியேசர் பாமணியைந்து, "**வாலாம்பிகை பாமணியைந்து**" என்பனவும் இவரினால் பாடப்பெற்றன. செல்வசந்நிதி முருகன் மீது அலங்காரம், மாலை என்ற பகுதிகளோடு 460 பாக்களையுடைய (மாலை) "செல்வச்சந்நிதித் திருமுறையும்" இவரினால் பாடப்பட்டு வெளியிடப்பட்டன. இது தவிர நல்லூர்ப்பதிகம், மாவைப்பதிகம், வல்வை நெடியகாட்டுப்

பிள்ளையார் பதிகம் போன்றவையும் இவரினால் இயற்றப்பட்ட இதர பதிகங்களாகும். இந்தப் பதிகங்கள் யாவும் இவர்தம் பக்திக்கும், கவிநயத்துக்கும் சான்று பகர்கின்றன.

4. கண்டனப் பிரசுரங்கள்

சைவத்தை இழித்துரைத்த கத்தோலிக்க மதக்கருத்துகளுக்கு எதிராகவும், புரட்டஸ்தாந்து மதக்கருத்துகளுக்கு எதிராகவும் கண்டன நூல்கள், பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வந்தன. நாவலரது கண்டனங்கள் பெரும்பாலும் புரட்டஸ்தாந்து பிரிவினர்க்கு எதிராகவும், வல்வை வயித்தியலிங்கம் பிள்ளையவர்களின் கண்டனங்கள் கத்தோலிக்க பிரிவினர்க்கு எதிராகவும் அமைந்தன. கத்தோலிக்க மதக்கருத்தை எதிர்த்த வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் "**சைவமகத்துவ பானு**" என்னும் நூலை மூன்று தனித்தனி பாகங்களாக பிரித்து வெளியிட்டார். கத்தோலிக்க மதத்தினர் "**சைவமகத்துவ பானு பாலம்பனம்**" என்னும் நூல்கொண்டு பதிலிறுத்தனர். இவர் தொடர்ந்து "**சைவ மகத்துவ பானு பாலம்பன வியாபாதனம்**" என்னும் பிரசுரம் மூலம் எதிர்த்தார்.

சி.வை. தாமோதரம்பிள்ளையவர்களின் "**சைவ மகத்துவம்**" என்னும் நூல் வெளியிட்ட போது அதற்கு எதிராக "**சைவ மகத்துவ ஆபாச விளக்கம்**" என்னும் பிரசுரம் தோன்றியது. இதற்கு எதிராக வயித்தியலிங்க பிள்ளையவர்கள் "**சைவ மகத்துவ ஆபாச விளக்க மறுப்பு**" என்பதனை வெளியிட்டு வைத்தார். பிறிதொரு சமயத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களின் "**சைவ மகத்துவம்**" என்னும் நூலுக்கு எதிராக **அருளப்பமுதலியார்**

என்பவரும், **சூசைப்பிள்ளை** என்பவரும் "**சைவமகத்துவ திக்காரம்**" என்னும் நூலினை வெளியிட்டார்கள். வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் "**சைவமகத்துவ திக்கார நிக்கரகம்**" என்பதினால் மறுத்தார். கிறிஸ்தவ மத பாதிரிமார்கள் **சைவ மகத்துவ திக்கார நிக்கிரக எதிரேற்றம்**" என்பதனை வெளியிட்டார்கள். அதற்கு இவர் "**சைவமகத்துவ திக்கார நிக்கிரக எதிரேற்ற மறுப்பு**" என்பதனால் மறுத்து வாதத்தை முடித்து வைத்தார். "வல்வை மாணவன் வைத்தியலிங்கம் பிள்ளை இருக்கும் வரை சைவத்தை இழித்துக் கூற மாட்டோம்" என்று "**கத்தோலிக்கப் பாதுகாவலன்**" வாயிலாக அருளப்ப முதலியார், சூசைப்பிள்ளை வெளிப்படுத்தும்வரை இவருடைய கண்டனங்கள் வெளிவந்துள்ளன. "**இருண்மதி சுடுசுடர்**" "**கபடமடநிடுதேனம்**" என்னும் கண்டனங்களையும் இவர் வெளியிட்டார். இவரது கண்டனங்கள் பெரும்பாலும் "**வல்வை மாணவன்**" என்னும் பெயரில் இவர் நடாத்திய பாரதிநிலைய முத்திராஷரசாலையில் அச்சிட்ட தனது சஞ்சிகையான சைவாபிமானியிலேயே வெளியிட்டு வந்தார்.

5. சமூகம் பற்றியவை

சமூகம் பற்றி இவர் எழுதியவற்றுள் மூன்று பாகங்களாக எழுதப்பட்ட "**கள்ளுக்குடிச்சிந்து**" இரண்டு பாகங்களாக எழுதப்பட்ட "**மாதரொழுக்கத் தங்கச் சிந்து**" மற்றும் "**சாதி நிர்ணய புராணம்**" என்பன அடங்கும்.

வயித்தியலிங்கம் பிள்ளையவர்களினால் வெளியிடப்பட்ட நூல்களின் உரைகளின் சிறப்பைத் தாங்க முடியாதவர்கள் சாதிப்பகுப்பைக் கொண்டு இவரை

எதிர்த்தார்கள். அத்தோடு யாழ்ப்பாணத்தில் வேளாளர் மேலாதிக்கம் இருந்த பகுதியில் கரையார்களின் கையோங்கியதற்கு எதிர்ப்பும் ஏற்பட்டது. ஆறுமுகநாவலர் பகிரங்கமாகவே வேளாளர் நலன்களை ஆதரித்தவர். ஆறுமுகநாவலர் "கரையார் வழக்கு" என்னும் நூலை எழுத வயித்தியலிங்கம் பிள்ளையவர்களின் "சாதிநிர்ணய புராணம்" என்னும் நூலை எழுதி வெளியிட்டு வைத்தார். ஆறுமுகநாவலர் எழுதிய "கரையார் வழக்கு" என்னும் நூல் கரையாரைப் பற்றிக் கீழான தரக்குறைவான கருத்தைப் பரப்புவதற்கே எழுதப்பட்டதாகும். இதன் எதிரொலியாகவே "சாதி நிர்ணயப் புராணம்" எழுதும்படி வயித்தியலிங்கம் பிள்ளையவர்களைத் தூண்டியது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் எவ்வெவ் சாதிகள் எவ்வெவ் அந்தஸ்தினைப் பெற்றிருந்தனவென்பதை அறிந்து கொள்வதற்கு இந்நூல் உதவுகின்றது என்பது தெரியவருகிறது.

நாவலர் கையாண்ட நடைமுறையைப் பின்பற்றி தனக்கென அச்சுக்கூடம் ஒன்றினை வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் நிறுவிக் கொண்டார். வல்வைச் சிவன்கோயிலுக்கு அருகேயுள்ள குளத்தடிக்கு அருகாமையில் உள்ள மடத்திலேயே பாரதிநிலைய முத்திராஷரசாலை என்னும் பெயருடன் அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப் பட்டது. இந்த அச்சகத்திலேயே "சைவாபிமானி" என்னும் பத்திரிகை அச்சிடப்பட்டு வெளிவந்தது. கிறிஸ்தவமதம் பரவிவரும் நிலைக்கு எதிராக எழுந்த சைவ எழுச்சிக்கு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் வெளியிட்ட "சைவ அபிமானி" என்ற பத்திரிகை பெரும்பங்காற்றியதுடன்; வல்வெட்டித்துறை

வர்த்தகர்கள் இவருக்குப் பின்னணியாக இருந்தார்கள் என ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட "மகிமை" என்னும் சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளதாக அறியமுடிகிறது. வடமராட்சிப்பகுதியில் வெளிவந்த பத்திரிகையில் "சைவாபிமானியே" மூத்த பத்திரிகை என்றும், சமய சமூகப்பணியையே முதன்மையாகக் கொண்டியங்கிய போதும் இலக்கிய இலக்கணங்களுக்குப் போதிய இடமளித்துள்ளதெனப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இப்பத்திரிகைகளில் வடமராட்சிக்கு வெளியில் உள்ள அறிஞர்களின் ஆக்கங்களும், வாதப்பிரதிவாதங்களும் இடம் பெற்றன. வயித்தியலிங்கம்பிள்ளையவர்கள் பல்வேறு புனைபெயர்களில் எழுதிய ஜனரஞ்சகமான படைப்புகளும், சமூகச் சீர்கேடுகளைச் சுட்டி எழுந்த பாடல் உரைநடை விஷயங்களும் இப்பத்திரிகையில் வெளிவந்தன.

யாழ்ப்பாணத்தில் தோன்றிய இலக்கிய விழிப்பினை மட்டக்களப்பிற்கு பரப்பியவரும் இவரே. இதனையே பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் மட்டக்களப்பிற்கும் வடமராட்சிக்கும் இலக்கியப்பாலம் அமைத்தவர் வயித்தியலிங்கம் பிள்ளை எனக் குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பில் பேரறிஞர் எனப் போற்றப்படும் வித்துவான் **ச. பூபாலபிள்ளையவர்கள்** (1855-1920) வயித்தியலிங்கம் பிள்ளையவர்களின் மாணவராவர். பூபாலபிள்ளையவர்கள் பாடிய சோமவார விரதமகிமையைக் கூறும் "சீமந்தனிபுராணம்" வயித்தியலிங்கம் பிள்ளையவர்களினால் திருத்தப்பட்டு சென்னையில் 1894இல் அச்சிடப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. அவரினால் திருத்தங்கள்

மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட இன்னொரு நூல் "**கஞ்சனம்மானை**" என்பதாகும்.

இவர் நடாத்திய அச்சகத்துக்கு அருகிலேயே பாடசாலை ஒன்றையும் நடாத்தி வந்தார். தம்மிடத்து வந்த மாணாக்கர்களை அறிஞர்களாக்கி வைத்த பெருமையையும் கொண்டிருந்தார். இவரிடம் பிராமண மாணவர் பலரும் பாடங்கேட்டதாகவும் இவர்களுள் **ஐயாமுத்து ஐயர்** என்பவர் அவரது இறுதிக்காலத்தில் மிகுந்த விசுவாசத்துடன் குருத்தொண்டு புரிந்தவரென்றும் அறியமுடிகிறது.

வல்வைச்சிவன் கோயில் கருமங்களை ஆகம விதிகளுக்கமைய நடாத்தும் பணியில் ஈடுபட்டு கோயில் பரிபாலகர் **வெங்கடாச்சலம்பிள்ளை** அவர்களுக்கு மந்திரி போல் இருந்து கடமைகளைச் செய்துள்ளார்.

சமய இலக்கியத்துறையிலல்லாது கணிதத்துறை, பூமிசாஸ்திரத்துறை, வானசாஸ்திரம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கினார். கணிதத்துறையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வாய்ப்பாடுகள், அவற்றின் விளக்கங்கள் அடங்கிய "**கணிதாதாரம்**" என்னும் நூலை வெளியிட்டார். இவரது வானசாஸ்திர அறிவைப் பற்றி கேள்விப்பட்ட உடுப்பிட்டி வேதபோதகர் **வண. கௌலந்து அடிகள்** (Rev. Howland) இவரை மெச்சியதோடு உடுப்பிட்டியிலிருந்து குதிரை வண்டியில் வந்து தமிழ்மொழியைக் கற்றுக் கொண்டார் என்றும் அறியமுடிகிறது.

புராண படனங்கள் நிகழ்த்துவதிலும் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டவராயிருந்தார். புராண படனங்கள்

வெறுமனே உரையாக அமையாது பொழிப்புரை, விருத்தியுரை - இலக்கணக் குறிப்பு, கிளைக் கதைகள், மேற்கோள்கள், ஒப்பியல் நோக்கு என்பன உள்ளடக்கிய புராணபடனங்களே மேற்கொள்ளப்பட்டன. இவர் ஈழத்தில் மட்டுமல்லாது தமிழ்நாடு சென்றும் புராணபடனங்கள் விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார். தமிழ் நாட்டினரால் நன்கு மதிக்கப்பட்டதோடு சென்னை நகரத்துப் பேரறிஞர்களே "**இயற்றமிழ்ப் போதகாசிரியர்**" என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர். சென்னையில் சி.வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தலைமையில் நிகழ்ந்த பேரவை இவருக்கு இந்தப் பட்டத்தைச் சூட்டியது.

ஒரு சந்தர்ப்பத்தில் புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கும் நல்லை நாவலர் அவர்களுக்கும் இடையில் வாதப்பிரதி வாதங்களும் கண்டனங்களும் மறுப்புகளும் மும்முரமாக இடம்பெற்றன. தமிழகத்தில் மதப்பணி புரிந்த கத்தோலிக்க பாதிரியார் **பாதர் பிறிட்டோ** என்பவருக்கு நாவலர் அவர்களால் தக்க பதில் கொடுக்க முடியவில்லை. காரணம் அவர் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவராக இருக்கவில்லை. நாவலர் விடுத்த எழுத்துருவிலான கோரிக்கையை வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் ஏற்றுக் கொண்டு அதற்கான பதிலை பாதர் பிறிட்டோவுக்கு அனுப்பி வைத்தார். இப்பதிலில் சொல்லற்கரிய உண்மைகளைக் கண்ட பாதர் பிறிட்டோ "**நான் யாழ்ப்பாணத்துப் பனங்காட்டில் நரிகளைத்தான் எதிர்பார்த்தேன். வயித்தியலிங்கம் பிள்ளை போன்ற சிங்கம் இருப்பதைத்தான் தெரிந்து வைத்திருக்கவில்லை**" யென்று கடிதம் அனுப்பியதோடு நாவலருடன் தான் தொடங்கிய தர்க்க வாதங்களை தானாக முடிவுக்கு கொண்டு வந்தார்.

வயித்தியலிங்கம் பிள்ளையவர்களின் சமகாலத்தவருள் முக்கியமானவர்கள் நல்லை ஆறுமுகநாவலர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர், சுன்னாகம் பூ. முருகேசபண்டிதர், சிறுப்பிட்டி சி.வை. தாமோதரம்பிள்ளை, நல்லூர் வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை ஆகியோராவர்.

இத்தகைய பெரியார் 03.08.1900ல் ஆவணி மூலத்தில் இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தார். இவரது மறைவைக் குறித்து சிவப்பிரகாச பண்டிதர், சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், வயித்தியலிங்கம் பிள்ளையின் முதன் மாணாக்கர் சி. ஆறுமுகம் பிள்ளை (அப்புக்குட்டி உபாத்தியாயர்) ந.ச. பொன்னம்பலபிள்ளை, ஐயாமுத்தையர், கந்தசாமிப்பிள்ளை உபாத்தியாயர், சுன்னாகம் பூ. முருகேசபண்டிதர், சி.வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் கையறு நிலைக்கவிகள் பாடியுள்ளனர்.

உசாத்துணை நூல்கள்

1. வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் ச. வயித்தியலிங்கம் பிள்ளை - பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி 1975

2. வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கியவளமும், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 1984

3. வயித்தியலிங்கம் பிள்ளை பற்றிய கட்டுரை - பண்டிதர் பொ.கிருஷ்ணபிள்ளை 1975 தினகரன்

4. ஈழத்துத் தமிழ்க்கவிதைக்களஞ்சியம் - ஆ. சதாசிவம் 1966

5. வல்வெட்டித்துறை ஊரின்னிசை - பூ.க. முத்துக்குமாரசாமி 1982

6. வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் - ந. நகுலசிகாமணி 1997

7. ச. வைத்தியலிங்கம் அவர்கள் சிவபதம் எய்தியமை குறித்த நினைவுமலர் 1986

8. அரும்பொருள் விளக்க நிகண்டு - அருமருந்தைய தேசிகர் 1931

தமிழே தாய்த்தமிழே தாரணியின்
தேன்மொழியே நீ
அமிழ்தாய் நாவினிலே ஆடும்
இளம் கனிமொழியே நீ
தமிழே தாய்த்தமிழே நீ நாமுந்தன்
புகழ் இசைப்போமே!
பாரிலே பழமொழியாய்ப் பரிமளித்தே
பயன்தரும் மொழியே!

- கவிஞர் எம்.ஸி.எம். சுபைர்

தமிழகத்திற்கே எடுத்துக்காட்டாக இலங்கையில்
முதல் முஸ்லிம் தமிழ் நாளிதழ் தந்த முன்னோடி

உதுமான்

இதழியல் துறையில் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடிக்கத் தவறியவர்கள் தமிழ் பேசும் முஸ்லிம்கள். இந்தியத் தமிழகத்திலும் அப்படியே.

இந்தச் சூழ்நிலை இப்பொழுதும் - மிலேனியத்திலும் தொடர்கிறது.

ஏதோ சென்னையில் மிகச்சிரமத்துடன் மங்கிய ஒளியில் 'மணிச்சுடர்' மட்டும் ஒரேயொரு நாளோடாக நான்கு பக்கங்களில் மாலையில் வெறும் 3500 பிரதிகள். அதுவும் இப்பொழுது நின்றுவிட்டது!

எவ்வாறாயினும், 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பொழுதுகளில் 108 ஆண்டுகளுக்கு முன், 1897 ஜூலை 20இல் - இலங்கை, கொழும்பில் ஒரு நாளேடு உதித்தது. சுமார் ஒன்பது ஆண்டுகள் இனிய '**மித்திர**'னாக உலாவும் வந்தான்.

அச்சாதனையைப் புரிந்த பிதாமகனார் கொழும்பு வாசியாகிய **லெப்பை மரக்காயர் உதுமான்** என்ற **எல்.எம்.உதுமான்.** அன்னார் வெளியிட்ட நாளேடு "**இஸ்லாம் மித்திரன்**" ஒரே பக்கம். இரண்டே சதங்கள்!

பிரபல வணிக கேந்திரமாக இன்று விளங்கும் பெட்டா என்கிற புறக்கோட்டை குமாரவீதியில் அச்சாகி, வெள்ளிக்கிழமை தவிர்ந்த எல்லா நாட்களிலும் வந்தது. முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது தமிழ் தெரிந்த அத்தனைபேருக்குமாக அது வெளியாயிற்று.

> உதுமானியர் வெற்றியின் நினைவாக தினவர்த்தமானியாக வெள்ளிக்கிழமை தவிர தினந்தோறும் பிரகடனம் செய்யப்படும்.

எனக் கட்டியங் கூறிக்கொண்டு 1897 ஜூலை 20இல் வந்தான் அந்த '**இஸ்லாம் மித்திரன்!**' ஒரே மாதத்தில் இரு பக்கங்களாகவும் ஆகி (1897, ஆகஸ்ட் 28) கொழும்பு - 15 மோதரவீதி 352 ஆம் இலக்கத்திற்கு இடமாற்றமும் கண்டான்! 1906இல் அதே கொழும்பு - 15இல், முகத்துவார வீதி 15ஆம் இலக்கத்திலிருந்து தினம் விட்டுத் தினம் 4 சத விலையில் நான்கு பக்கங்களில் வரவும் செய்தான்.

இந்நாட்களைப் போன்று, முக்கியத் தலைப்புச் செய்திகளை முதல் பக்கத்தில் தர வேண்டுமென்ற யோசனை ஏற்படாமல், முதல் பக்கம் முழுதும் விளம்பரங்களையும், 2ஆம் பக்கத்தில் 'புறதேச சமாசாரம்' என வெளிநாட்டுச் செய்திகளையும், 3ஆம் பக்கத்தில் தலையங்கங்கள், ஆசிரியருக்குக் கடிதங்கள் ஆகியவற்றையும் 4ஆம் பக்கத்தில் நீதிமன்றச் செய்திகள் எனவும் அச்சிடப்பட்டிருந்தன.

இருந்தபோதிலும், இன்று 'இன்வெஸ்டிகேட்டிங் ரிப்போர்ட்' என இதழ்களில் சக்கைபோடு போடுகிற விடயங்களும் அப்பொழுது இருந்தன. 'பாட்டனும் பூட்டனும்' - 'விநோத சம்பாஷணை' - 'அகடவிகடம்' -

'தம்பிக்கும் தமையனுக்கும் நடந்த சம்பாஷணை' என்ற தலைப்புகளில் பரபரப்புத் தகவல்கள் இருந்தன.

இதழ் தோறும் சீதனக் கொடுமையும் சாடப்பட்டிருந்தது. அத்துடன், தமிழகத்திலும் சிங்கப்பூரிலும் பிரபலமாக விளங்கிய நாகூர் தர்ஹா வித்துவான் குலாம் காதிறு நாவலரைக் கடுமையாக விமர்சித்தவர்களுக்கு எதிராகவும் எல்.எம்.உதுமான் அவர்கள் பேனா பிடித்தார். அப்பேனாமுனைக்கு முகம்மது காசிம் (சித்தி லெப்பை) நடத்திய 'முஸ்லிம் நேசன்' கூடத் தப்பவில்லை!

மேலும், நாவலர் குலாம் காதிறு அவர்களுக்கும் ஆசிரியர் உதுமான் அவர்களுக்கும் ஏற்பட்டிருந்த இலக்கிய நட்பு மிகமிக நெருக்கமானது. அதற்குத் தனிக்கட்டுரை அவசியம்.

இவ்வாறே சுமார் ஒன்பது ஆண்டுகள் ஒரு முஸ்லிம் நாளேட்டைக் கொண்டுவந்த பெருமை லெப்பை மரக்காயர் உதுமான் ஆகிய எல்.எம். உதுமான் அவர்களையே சாரும்.

பெருமதிப்பிற்குரிய அன்னார் 1847-03-17ல் பிறந்து, தமது 48வது வயதில் 'இஸ்லாம் மித்திர'னைப் பொறுப்பெடுத்து, ஓய்வுறக்கம் கொள்வதற்கு சற்று முன் கூட (25.8.1932) இதழியல் பணி செய்தவர். அப்பொழுது அவருக்கு 85 வயது! பக்கவாத நோயால் பரிதவித்துக் கொண்டிருந்தார்.

அவரைப் பொறுத்தவரையில் அவருக்கு 'இஸ்லாம் மித்திரன்' இரண்டாவது இதழே. முதல் இதழ் 'முஸ்லிம் நேசன்!'

இது அதிசயப்பட வைக்கும் தகவல்!

அறியாமை காரணமாகவோ, வேண்டுமென்றோ இருட்டடிப்புக்குள்ளான சேதி!

பலர் கருத்துக் கொண்டிருப்பது போல, இலங்கை - கண்டி வழங்கிய 'முஸ்லிம் நேசன்' இதழுக்கு ஆசிரியராகக் கடமை புரிந்தது முகம்மது காசிம் என்ற சித்திலெப்பை மரக்காயர் மட்டுமல்லர், **லெப்பை மரக்காயர் உதுமான்** அவர்களுந்தான்!

> நான், 'முஸ்லிம் நேசன்' என்னும் பத்திரிகைக்கு 1887 முதல் 1895 வருஷம் மார்ச் 31ஆம் திகதி வரை பத்திராதிபராகவிருந்து நடாத்தி வந்து. சென்ற ஏப்ரல் 5ஆம் திகதி முதல் நீங்கி இப்போது 'இஸ்லாம் மித்திரன்' நடாத்தி வருகிறேன்!

இந்த வரிகள் அன்னாரது சொந்த வரிகள். அச்சிலே உள்ளவை. 1895 ஜூன் 3ம் தேதி (1312-துல்ஹஜ்) வெளியான 'இஸ்லாம் மித்திரன்' தந்துள்ள ஆசிரியர் குறிப்பு!

இதன்படி, முகம்மது காசிம் சித்திலெப்பை மரக்காயர் அவர்கள் தமது 44ஆவது வயதில் 1882-இல் பெற்றெடுத்த 'முஸ்லிம் நேசன்' வார இதழுக்கு ஆசிரியராக கிட்டத்தட்ட ஐந்தே ஆண்டுகள் மட்டுந்தான் பணி புரிந்துள்ளார் என்பதைப் புரிய முடிகிறது. அதன்பின் அந்த 'நேச'னை ஏழெட்டு ஆண்டுகள் சுமந்ததும், பின்னர் 'மித்திர'னுக்குத் தந்தையானதும் எல்.எம். உதுமான் மரக்காயரே என்பதும் தெட்டத் தெளிவாகிறது.

'முஸ்லிம் நேசன்' பற்றி ஆய்ந்து முத்தெடுத்த பல தமிழறிஞர்கள் இந்த முத்தையும் வழங்காது போனது ஏன்?

ஒருவேளை, கொழும்பு அருங்காட்சியகத்தில் சுழியோடாத காரணமாக இருக்கலாமோ? இருக்கலாம்! இருக்கலாம்!

இவ்வாறாக, 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் ஒரு வார இதழுக்கும் (முஸ்லிம் நேசன்), ஒரு தின இதழுக்கும் (இஸ்லாம் மித்திரன்) பத்திராதிபராகப் பணிபுரிந்த பெருமைக்குரியவர் **எல்.எம். உதுமான் அவர்கள் மட்டுமே!** அந்த வகையில் மொத்தமாக 45 ஆண்டுகள் இதழாளராகச் சேவை. **இச்சிறப்பை முகம்மது காசிம் சித்திலெப்பை கூடப் பெற்றவரல்லர்.**

மேலும், உதுமான் அவர்களது செல்லக்குழந்தையான 'இஸ்லாம் மித்திரன்' இதழுக்குத் தனியான வாழ்க்கை வரலாறும் உண்டு. ஒரு நூலே வெளியிடலாம்.

உண்மையில், அவ்விதழின் தோற்றம் 1893 ஆகும். அதாவது, நாளேடாக மிளிர்வதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே மாதமிருமுறையாகப் புத்தக வடிவில் வந்தது. பின் திங்கள் தோறும் வார இதழாக (முஸ்லிம் நேசன் போன்று).

அப்பொழுது அதன் ஆசிரியரும் வெளியீட்டாளரும் **மு.அ. சாஹிபு சுல்தான்.** அவர், **தோப்பூர் சாகிபு சுல்தான்** என அழைக்கப்பட்டார். இவ்வூர், கிழக்கிலங்கை மூதூர் - தோப்பூர் அல்ல. தமிழ்நாட்டில் உள்ளது. அன்னார் 19ஆம் நூற்றாண்டின் கொழும்பில் பெரும் வணிகராகத் திகழ்ந்ததோடு, '**தென்னிந்திய இஸ்லாமிய மார்க்கப் பரிபாலன சபை**' போன்ற சமூக அமைப்புகளின் தலைவராகவும் விளங்கினார். 1893-95 பொழுதுகளில், சொந்த அச்சு சாதனை உதவிகளைக் கொண்டு 'இஸ்லாம் மித்திரன்' வெளியிட்டார். புறக்கோட்டை 32-ஏ,

குமாரவீதியில் அலுவலகம், சுமார் இரண்டு - இரண்டரை ஆண்டுகளே நடத்தினார்.

பின், பொருத்தமான ஒருவராக உதுமான் அவர்களை 'முஸ்லிம் நேசனி'லிருந்து கண்டுபிடித்து அவரிடம் ஒப்படைத்து இதழியல் சேவையை விட்டு விலகினார். இதற்கு ஆதாரமான குறிப்பு, 1895-ஜூன் 5இல் (1312-துல்ஹஜ்) வெளியான 'இஸ்லாம் மித்திர'னில் இப்படிக் காணப்படுகின்றது:

> இஸ்லாம் மித்திரன் என்னும் பத்திரிகை எமது அத்தியந்த மித்திரரும், ஔதாரியம் (வள்ளல்) பிரபுவுமாகிய ஸ்ரீமான் மு.அ. சாஹிப் சுல்தான் அவர்களால் தொடங்கி நடத்தப்பட்டு வந்தது. அவரே இயந்திரசாலையையும், இப் பத்திரிகையையும் உதவி நடத்தப் பணித்தார்.

ஆக, 'முஸ்லிம் நேசன்' ஆசிரியப் பொறுப்போடு கணக்கிட்டால், எல்.எம். உதுமான் அவர்களது இதழியல் சேவை 45 ஆண்டுகள் முழுமை பெற்றவை.

அத்தோடு, அவர், **'முஸ்லிம்களுக்கு முதல் நாளேடு'** வழங்கியவர் என்ற பெருமையுடன், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைத்து தரப்பினருக்கு **இரண்டாவது** **'நாளித'**ழை வழங்கிய கௌரவத்தையும் அடைகிறார்!

இது எவ்வாறெனில், 'இஸ்லாம் மித்திரன்' வரு முன்னர் அதே புறக்கோட்டையில், முதலாம் குறுக்குத் தெருவிலிருந்து 1886ல் **த.ச. இராஜப்பிள்ளை** என்பவரால் வெளியிடப் பெற்ற **இலங்கை தினவர்த்தமானி'**

என்றொரு தின ஏடு, **எண்பதே எண்பது நாட்கள்** வந்து மரணித்தது. பின் பதினொரு ஆண்டு இடைவெளியில் 'இஸ்லாம் மித்திரன்' நாளேடு வந்தது (1897).

இப்படியொரு 'தின வர்த்தமானி' வந்திருக்காதபட்சத்தில், **'இலங்கைத் தமிழ் நாளேடுகளின் தமையன்'** என்றே 'இ.மி.' பெயர் பெற்றிருக்கும். உதுமான் அவர்களும் **'முதல் தமிழ் நாளேட்டின் ஆசிரியர்'** எனப் பதிவாகி இருப்பார்.

இருந்தாலும், **'தமிழில் முதல் முஸ்லிம் நாளேடு தந்த முன்னோடி' அவரையே** சென்றடைகின்றது.

அன்னாரது அந்திம வயதிலும் இதழியல் சேவை புரிந்தவராக இருந்தார். அவருக்கு உதவியாக அவரது பதினொரு மக்களில் சிலர் விளங்கினர். இவர்கள் அவரது துணைவியர் மூலம் கிடைத்த செல்வங்கள்.

முகம்மது சுக்ரீ. முகம்மது றஸீன், முகம்மது பவுமி முதலானோரில், தந்தையாரது மறைவின் பின்னும் இதழ் தொடர்ந்துவர சுக்ரீ பெரும்பணி புரிந்தார். அவருக்கு **ஓ.எம். றஸீன்** துணை நின்றார். (இவர், இப்போதைய மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் என்ற முன்னைய டென்ஹாம் பாடசாலை அதிபராகவும் இருந்துள்ளார்! கிட்டத்தட்ட தந்தையாரின் வயதை எட்டும் சமயத்திலேயே கொழும்பு, தெமட்ட கொடை இல்லத்தில் ஓய்வுறக்கம்!)

பெரியார் உதுமான் அவர்களது இரத்தபந்தங்கள் சுமார் 14 ஆண்டுகள் (1946 வரை) தொடர்ந்து இதழை வெளியிட்டு வந்தது சமூகத்திற்குச் செய்த மாபெரும்

சேவையே. ஆனால், நாளேடாகக் கொண்டுவர முடியாமல் வாரமிருமுறையாக புதன் - சனிக்கிழமைகளிலும், பின்னர் செவ்வாய் - வியாழன் - சனிக்கிழமைகளிலும் வெளியிட்டனர். அப்பொழுது பிரதிகள் ஆயிரம் போனது. விலையோ இரண்டே சதமாக இருந்தது.

இதன்பின் 'இஸ்லாம் மித்திர'னும் இயற்கை எய்தினான்.

ஒரு எல்.எம். உதுமான் அவர்களும், அவர்தம் சந்ததியினரும் செய்த தொண்டினைத் தொடராத சமூகமாக முஸ்லிம் சமுதாயம் இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது இங்கும் தமிழ்நாட்டிலும்!

'தேசத்தின் கண்'

மானா மக்கீன்

கொழும்பு

மலைகளின் இன்பக் காட்சி
மேலென எழுதும் கவிஞர் - தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?
செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை - கட்டித்
தயிரோடு மிளகின் சாறும்,
நன்மது ரஞ்செய் கிழங்கு - காணில்
நாவிலி னித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா! - உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

- பாவேந்தர் பாரதிதாசன்

திருகோணமலைப் பகுதிப்
பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்தவர்

புலவர் வே. அகிலேசபிள்ளை

சிவபூமியாகிய இலங்கையில் தென் கையிலை எனப் பெயர் பெற்ற புனிதபூமி திருகோணமலை கிழக்கு மாகாணத்தில் ஒரு மாவட்டமாய் பண்டைக்காலம் முதலாக சைவத் தமிழரின் வாழ்விடமாய் அமைந்துள்ளது. வரலாற்றுக் காலத்துக்கு முந்திய இதிகாச காலத்துப் பெருமையும் வாய்ந்தது. திருகோணமலை அகத்தியர் முதலிய முனிவர்களாலும், இராவணன் முதலாய அரசர்களாலும் புகழ்பெற்றது. பண்டைக்காலத்தில் கிரேக்கர், உரோமர், பினீசியர், பாரசீகர், அறபியர் எனப்படுவோர் திருகோணமலையிலுள்ள உலகப்புகழ்பெற்ற இயற்கைத் துறைமுகத்தை நன்கறிந்திருந்தனர். அவர்கள் பொன்னோடு வந்து ஈழத்து முத்தும், மணியும் யானைத் தந்தமும், ஏலம் கிராம்பு முதலிய பொருளோடு போன வரலாறு உலகறிந்ததே.

புலமைப் பாரம்பரியம்

திருகோணமலையில் நிலவிய தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தை 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்து ஆராய முற்படும் போது, இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சைவக்குருக்கள் **ஸ்ரீ சின்னப்பு** ஐயருடைய

முன்னோர்களில் ஒருவர் **சுப்பிரமணியர்.** இவருடைய மகன் **ஆறுமுகப்புலவர்.** திருகோணமலையிலிருந்த சைவ ஆதினமொன்றிலிருந்து தமிழ்ப்பணியும், சமயத் தொண்டும் செய்த காலத்தில் **"கோணமலை அந்தாதி"** என்னும் நூலை எழுதியுள்ளார். "மறை முதலா மரன்வைகிய கோணமலை" என்று திருகோணமலையை சிவபெருமானுக்குரிய பூமியே எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் ஆறுமுகப் புலவரைத் தொடர்ந்து, பல்வேறு புலவர்கள் தனிப் பாடல்கள் பலவற்றைப் பாடித் தமிழ் வளர்த்தார்கள். அவர்களின் வழிவந்தவர்களுள் ஒருவரே செந்தமிழ்ப் புலவர் **அகிலேசபிள்ளை** அவர்கள்.

தோற்றமும் இளமைக் காலமும்

இவர் திருகோணமலையில் பெரிய இராசகோன் முதலியாரின் ஐந்தாவது வழித்தோன்றலாகிய **அகிலேசபிள்ளை வேலுப்பிள்ளை** என்பவருக்கு ஏகபுத்திரனாக சாலிவாகன சகாப்தம் *1774*ல் நிகழ்ந்த கிறிஸ்தாப்தம் *1853*ல் பிரதாபி வருடம் மாசி மாதம் *26*ம் திகதி திங்கட்கிழமை இரவு உதயாதி நாளிகை *48* வினாடி *45*ல் தனுலக்கினத்தில் பிறந்தார்.

அகிலேசபிள்ளைக்கு ஐந்து வயதானவுடன் குமாரவேலு ஆசிரியரால் வித்தியாரம்பம் செய்யப்பட்டது. இவர் வளர வளர நெடுங்கணக்கு நூல்களையும் மூதுரை முதலிய நூல்களையும் கற்பித்தனர். நிகண்டு முதலிய கருவி நூல்களையும் கற்றார். இவருடைய நினைவாற்றலையும் விடாமுயற்சியையும் இயற்கை விவேகத்தையும் அவதானித்த இவருடைய சிறிய தந்தையார் தையல்

பாகம்பிள்ளை என்பவர் இவருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தார். தமிழ்க் கல்விக்கு உதவியாக வடமொழியையும் கற்பித்து வந்தார். அன்று ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மதிப்பிற்குரியதாயிருந்த ஆங்கிலத்தையும் தாமறிந்த அளவில் கற்பித்தார்.

இவ்வாறாக 20 வயது வரை இடைவிடாது படித்து வந்த இவர் 1872ஆம் ஆண்டளவில் ஆசிரியப் பயிற்சி பெற்று அரசாங்கப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராயிருந்து சில ஆண்டுகள் கழிந்தபின் தலைமை ஆசிரியரானார். இவ்வாறு ஏறக்குறைய 10 ஆண்டுகள் படிப்பித்த பின் 1882ம் ஆண்டளவில் தாம் சிவ பணியும் தமிழ்ப் பணியும் செய்ய வேண்டுமென்று துணிந்து ஆசிரியர் தொழிலை உதறிவிட்டு அயலில் இருந்த ஆலயம் ஒன்றை மையமாக கொண்டு இளைஞர்களுக்கு சைவ சமய நூல்களைக் கற்பித்து சைவ ஆசாரத்தையும் பழக்கி வந்தார். இந்த மையம் இன்றுள்ள வீரகத்திப்பிள்ளையார் கோயிலாக இருக்கலாம் அகிலேசபிள்ளை அவர்களுடைய ஆர்வத்தினாலும் முன்மாதிரியினாலும் தான் **அழகக்கோன்** அவர்களுக்கும் அவருடைய பேரன் **கணேசலிங்கம்** அவர்களுக்கும் சிவபணி புரியும் ஆர்வம் வளர்ந்தது போலும்.

சுவடிச் சோதனையும் வெளியீடுகளும்

பழந்தமிழ்ச் சுவடிகளைப் பரிசோதித்து புத்தக வடிவில் அச்சேற்றி வந்த **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சி.வை. தாமோதரம்பிள்ளை** போன்றவர்களின் சேவையைக் கண்டறிந்து தாமும் தம்மால் இயன்ற வரையில் தமது பிரதேசத்துப் பழந்தமிழ் ஏடுகளை நூலுருவாக்கும் பேராவத்தோடு அகிலேச பிள்ளை அவர்கள் இரவு பகலாக

ஏடுகளைத் தேடிச் சேர்த்து வருவாராயினார். **திருகோணாசல வைபவம், கோணேசர் கல்வெட்டு, திருக்கரைசைப் புராணம்** முதலிய நூல்கள் இவரது முயற்சியால் நூலுருவம் பெற்றன.

திருகோணாசல வைபவம்

இந்நூல் 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் புலவர் அகிலேச பிள்ளை அவர்களால் ஆக்கப்பட்டு அன்னாரின் மகன் காலஞ்சென்ற **அ. அழகக்கோன்** அவர்களால் 1950ம் ஆண்டில் திருகோணமலை கோணேஸ்வர அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதனை ஒரு சரித்திர ஆராய்வு நூலாக ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் பல முக்கிய வரலாறுகளைக் கூறுவதாக கற்றறிந்த பெரியோர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்நூல் வெளியீடு செய்யப்பட்ட 1950ம் ஆண்டில் திருகோணமலையில் தெய்வீக அற்புதச் செயலொன்று நிகழ்ந்தது. 1624ம் ஆண்டு போர்த்துக்கேயர் கோணேசர் கோயிலை அழித்த போது, பக்தர்களின் பேரன்பினாலும் பக்திப் பெருக்கினாலும் மிலேச்சர்களின் கையில் அகப்படாமல் நிலத்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிள்ளையார், கோணேசப்பெருமான், **மாதுடை அம்பாள், போகசக்தியாகிய இராஜராஜேஸ்வரி, அஸ்திரதேவர், அன்னப்புள்** (குத்துவிளக்கில் பொருத்தும் அன்னம்) முதலிய பஞ்சலோக திருவுருவங்கள் நிலத்துள் இருந்து வெளிப்பட்டன. புராதன மூர்த்திகளின் திருவுருவங்கள் நிலத்தினுள் புதையுண்டு வெளிவந்ததும் புராதன வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டு திருகோணாசல வைபவம் நூல் வடிவில் வெளிவந்ததுமான அற்புத

நிகழ்ச்சிகள் கோணேசர் ஆலயத்தையும், திருகோணமலை வரலாற்றையும் ஆராயத் தூண்டும் அற்புத நிகழ்ச்சியாக அமைந்தது.

திருக்கரைசைப் புராணம்

புலவர் அகிலேசபிள்ளை அவர்கள் சைவசமயப் பற்றுமிகுந்தவரென்பது அவர் அரிதின் முயன்று பதிப்பித்த திருக்கரைசைப் புராணத்தால் அறியக் கிடக்கின்றது. திருகோணமலையில் கடலோடு கலக்கும் மாவலி கங்கைக் கரையிலே அகத்தியர் ஸ்தானம் என வழங்கும் திருக்கரைசையம் பதியிலே எழுந்தருளியுள்ள சிவபிரான் மீது யாரோ என்றோ பாடியருளிய திருக்கரைசைப் புராணத்தின் பழைய ஏடுகளைத் தேடி எடுத்துப் பரிசோதித்துப் புராதன ஏடுகளை ஆதாரமாகக் கொண்டு கையெழுத்துப்பிரதியாக ஒரு பிரதி தயாரித்து தமது சமகாலப்புலவரும் நெருங்கிய நண்பருமாகிய **சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவரைக்** கொண்டு அரியதோர் உரை எழுதுவித்தார். உரையெழுதி முடிந்ததும் அதனை மயிலிட்டி அச்சியந்திர சாலையில் 1893ம் ஆண்டில் பதிப்பித்தார். இப்புராணத்தின் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

''கொற்றங்குடிவாழும் பிரானின் சரணத்துறுதி கொண்டே பாடுகிறேன்'' என்பது நூலாசிரியர் வாக்காக திருக்கரைசைப் புராணத்துள் அகச்சான்று காணப்படுகிறது. நூலாசிரியர் **கொற்றங்குடி உமாபதி சிவாச்சாரியாரின்** அன்பிற்கும், ஆசிக்கும் உரியவராயிருக்கலாம்.

பிள்ளையவர்கள் காலத்துக்கு முன் இப்புராணம் ஏட்டிலிருந்தவாறே ஆடியமாவாசைக் காலத்தில் திருகோணேச மலையில் மாவலிகங்கைக் கரையிலுள்ள

திருக்கரசையம் பதியில் (அகத்தியர் ஸ்தானம் உள்ள இடம்) கொட்டியாபுரப்பற்று தம்பலகாமப் பற்றிலுள்ள மக்கள் அன்று இரவு முழுவதும் விரதமனுட்டித்து திருக்கரைசைப் புராணம் படித்து, மறுநாள் உதயத்தில் கங்கையில் நீராடிப் பாறணை செய்வார்கள். இவர்களின் நலன் கருதி இப்புராணத்தை நூலுருவில் அமைத்தால் நன்மை பயக்கும் என்று நண்பர்கள் வேண்டிக்கொள்ள, அதனைச் சிவப்பணி எனக்கருதி அகிலேசபிள்ளை அவர்கள் திருக்கரைசைப் புராணத்தைப் பதிப்பித்துதவினார்.

வெருகல் சித்திரவேலாயுதர் காதல்

தம்பலகாமம் **ஐ. வீரக்கோன்** முதலியார் அவர்கள் இயற்றிய இந்நூலை திருகோணமலை **நா. கதிர்காமத்தம்பி** அவர்கள் கேட்டுக் கொண்டபடி புலவர் **வே. அகிலேசபிள்ளை** அவர்களினால் பரிசோதிக்கப்பட்டு சென்னை ரிப்பன் அச்சுயந்திர சாலையில் 1906ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ ஐ. வீரக்கோன் முதலியார் தம்பலகாமம் என்னுமிடத்திலிருந்தவரென்பது அவரது பாடலில் நன்கு விளங்குகின்றது. இவர் வாழ்ந்த காலம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் இற்றைக்குச் சுமார் 310 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர் என்பதை நூலின் அகச்சான்றுகளால் அறியக்கிடக்கின்றது. இந்நூல் காப்புச் செய்யுளுடன் 421 ஈரடிக் கலித்தாழிசைப் பாவால் நிறைவடைகிறது.

இந்நூலை அச்சில் பதிக்கும்படி சமய பக்தி அடியார் பக்தியிற் சிறந்தவரும் சித்திரவேலாயுத சாமியின் திருவடிக்கன்பு பூண்டவருமாகிய நா. கதிர்காமத் தம்பி

அவர்கள் கேட்டுக் கொண்டபடியால் திரு. அ. அகிலேசபிள்ளை அவர்கள் 1906ம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார்.

நரேந்திர சிங்கராசன்

இலங்கையில் சிறப்புற்று விளங்கும் கண்டி நகரை இற்றைக்கு அநேக வருடங்களுக்குமுன் நரேந்திர சிங்கராசன் ஆட்சிசெய்யும் போது, மட்டக்களப்பில் உள்ளதும், அன்பருக்கருள் பாலிக்கும் சித்திரவேலாயுதப் பெருமான் எழுந்தருளியிருப்பதுமாகிய திருக்கோயில் என்னுமிடத்தில் வசித்த ஒரு பிராமணன் கண்டி அரசனிடம் பரிசுபெற வேண்டுமென்று விருப்பம் கொண்டு அரசனும் பிரதானிகளும் இருக்கும் சபாமண்டபத்திற்குப் போய் அரசனை ஆசீர்வதித்தார். பிராமணனுடைய விருத்தாத்தங்களைக் கேட்டறிந்த பிரதானிகள் அரசன் பேரில் வசந்தன் சிந்து பாடும்படி கேட்டனர். பாடும் திறன் அற்பமேனும் இல்லாத பிராமணன் நீங்கள் எல்லோரும் வசந்தன் விளையாடுவீர்களாயின் நான் பாட்டுச் சொல்வேன் என்றார். அப்படியே செய்வோம் என்று பிரதானிகள் எழுந்து வருவ்தைக் கண்ட பிராமணன், தெய்வமே நான் என்ன செய்வேன் என்று கவலைப்படும் போது, தேவ கடாட்சத்தால் பாடும் சக்தியுண்டாக இப்பாடலைப் பாடினார் என்பது கர்ணபரம்பரைக்கதை.

நரேந்திர சிங்கன், சோழநாட்டிலிருந்து அரசியற்றிய மனுநீதி கண்ட சோழன், சிபிச்சக்கரவர்த்தி என்போரின் சூரிய குல வம்சத்தில் வந்தவன் என்பதைக் காட்டும் பொருட்டு, அவர்களுக்குரிய கீர்த்திப் பிரதாபங்களை இந்த மன்னனுக்குக் கூறியிருப்பதாகப் பாடல்களில் காணப்படுகின்றன. பாடல் எழுதப்பெற்ற ஏட்டுப்பிரதிகள் கிடைக்காததால் சொற்பிழைகளைத் திருத்தி 1908ம் ஆண்டு

புலவர் அகிலேசபிள்ளை அவர்கள் பதிப்பித்தார்கள். இந்நூல் 40 இரண்டுவரிப் பாடல்களைக் கொண்டது.

நுண்மான் நுழைபுலம்மிக்க புலவராயிருந்த அகிலேசபிள்ளை அவர்கள் பல ஏடுகளை நுணுக்கமாக ஆராய்ந்தமையும், வெளியீடுகள் செய்தமையும் ஒரு புறமிருக்கத் தாமே தரமான புலவராய்த் தமிழ்நயம் செறிந்த பல பிரபந்தங்கள், பதிகங்கள், வைபவங்கள், நாடகங்கள் என்பவற்றை இயற்றியுள்ளார். இவற்றின் வேறாகப் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார் என அறியக்கிடக்கிறது.

நெஞ்சறி மாலை

புலவர் வே. அகிலேசப் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு அவருடைய குமாரன் **இராசக்கோன்** அவர்களால் பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையில் 1913ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது இந்நூல். இப்பிரபந்தத்திற்கு சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார்.

பஞ்சணி மெல்விரலார் மயநீங்கிப் பரகதியே
தஞ்செனக் கொள்ளுவர் கோணப் பொருப்பிற்றமிழறிஞன்
பிஞ்சகன் பாதம் பணியகிலேச நற்பிள்ளை செய்த
நெஞ்சறிமாலை படிப்பவர் கேட்பவர் நீணிலத்தே

விசாலாட்சியம்மை பெருங்கழிநெடில் விருத்தம்

பலவாய பாவினங்கள் பாடும் வகையறிந்த நாவலராய் இவர் பாடிய விருத்தப்பா வரிசையில் **திருகோணமலைச் சிவகாமி அம்மன் விருத்தம். விஸ்வநாதர் விருத்தம், விசாலாட்சியம்மை விருத்தம்** என்பன இவருக்குப் பெருமை தருவன.

விசாலாட்சியம்மை பெருங்கழிநெடில் விருத்தம் என்பது பத்துப்பாடல்களோடு காப்புப் பாடலாக மாணிக்க வீரகத்திப் பிள்ளையார் பாதம் வணங்கி அன்பைக் காணிக்கையாக வைக்கும் திறன் பக்திபூர்வமின்றி இலக்கிய நயத்தாலும் இனிமையாயிருக்கின்றது.

பதிக்கப்படாத ஆக்கங்கள்

ஸ்ரீமான் அகிலேசபிள்ளை அவர்களின் புலமைப் பெருக்கில் கனிந்த பாடல் வரிசைகள் பல. அவற்றில் பதிக்கப்படாத ஆக்கங்கள் பின்வருவன ஆகும்.

1. சித்திர வேலாயுதர் பதிகம்
2. வில்லூன்றிக் கந்தசுவாமி பதிகம்
3. கோணைநாயகர் பதிகம்
4. சித்திரவேலாயுதர் தரிசனப்பத்து
5. வேற்பத்து
6. மயிற்பத்து
7. வில்லூன்றிக் கந்தசாமி கலிவெண்பா
8 வில்லூன்றிக் கந்தசாமி கீர்த்தனை
9. சிவகாமி அம்மன் ஊஞ்சல்
10. பத்திரகாளி ஊஞ்சல்
11. சித்திவிநாயகர் ஊஞ்சல்
12. விசாலாட்சி அம்மன் விருத்தம்
13. சிவகாமி அம்மன் கும்மி
14. கண்டி நாடகம்
15. தனிப்பாடல்கள்

திருகோணமலையில் வரலாற்று நாயகனாக 57 வருடங்கள் வாழ்ந்து 1910ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் நாளில் உலக வாழ்வை நீத்துப் புகழுடம்பெடுத்த

புலவர் வே. அகிலேசபிள்ளை அவர்களின் மறைவுபற்றி 05.01.1910இல் 'Ceylon Daily News' பத்திரிகையில் அனுதாபச் செய்தி வெளியிடப் பட்டிருக்கின்றது.

புலவர் வே. அகிலேசபிள்ளை அவர்கள் சிவபதமடைந்த போது அமைத்த நினைவுச்சின்னம் திருகோணமலை இந்து மயானத்தின் மேற்கு மூலையில் ஆங்கில வாசகங்களுடன் அமைந்துள்ளது. இது இற்றைக்கு 89 வருடங்களுக்கு முன் சமாதியடைந்த இப்பெரியாரின் நூற்றாண்டை நினைவு படுத்தி எதிர்நோக்க வைத்துள்ளது. (01.01.2010)

- கலாவிநோதன், கலாபூஷணம்,
க. சித்தி அமரசிங்கம்
திருகோணமலை

"தென்குமரிப் பேராழி செந்தமிழை வையகத்தில்
பொன்மகுடம் சூட்டிவைத்துப் பொற்பூறப் பார்ப்பதனை
என்மனத்தில் நான்கண்டே ஏந்துகின்றேன் பாமாலை"

- புரட்சிதாசன் (தமிழகம்)

இலக்கிய – இலக்கண வரம்புகளைப் பாதுகாத்தவர்

குமாரசுவாமிப் புலவர்

குமாரசுவாமிப் புலவர் யாழ்ப்பாணத்து சுன்னாகம் பதியில் 1854ம் ஆண்டு தை மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (பிரமாதீச வருடம்) பிறந்தார்.

பணக்காரச் **சின்னத்தம்பியார்** என்று அழைக்கப்பட்டவரின் கடைசி மகனான அம்பலவாணபிள்ளையின் மகனே புலவரின் தந்தையவார். இவருடைய தாயார் **சிதம்பர அம்மை** ஆவார்.

புலவருடைய சகோதரிகள் **சிவகாமியம்மை, காமாட்சியம்மை** ஆவர்.

இவருடைய பெற்றோர் மயிலணி முருகமூர்த்தியை வணங்கி வந்ததால் அவர் அருளால் புத்திர பாக்கியம் கிடைத்ததாக எண்ணி புலவருக்கு **குமாரசுவாமி** என்று பெயரிட்டனர்.

குமாரசுவாமி ஐந்து வயது ஆனதும் தந்தையார் தனது குலகுருவான வேதராணியம் **நமச்சிவாய தேசிகரிடம்** வித்தியா ஆரம்பம் செய்து வைத்தார். அப்போது இவரது தந்தையார் ஆங்கிலப் பாடசாலையில் விளையக் கூடிய சுனாசாரங்களைக் கருத்தில் கொண்டு தமிழ் பயில்வதற்கு சுன்னாகம் **முருகேசபண்டிதரிடம்** தமிழ் கற்க அனுப்பி வைத்தார்.

மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா என்பதற்கிணங்க இவருடைய முன்னோராகிய முத்துக்குமார கவிஞருடைய புலமை இவரையும் பீடித்துக் கொண்டது.

தினமும் புத்தகமும் கையுமாக இருந்த புலவர் அவர்கள் கற்பனவற்றை கற்றும் கேள்விச் செவியூடாகவும் தனது புலமையை பலவாறு வளர்த்துக் கொண்டார்.

மாணவராக இருந்தபோதே எழுத்து, பேச்சு, பாடல் ஆகியவற்றில் சிறந்து விளங்கியதால் 'புலவர்' என்ற பட்டம் இவரோடு ஒட்டிக் கொண்டு இயற்பெயரானது.

தமிழ் கற்று முடிந்த குமாரசுவாமி அவர்கள் வடமொழி கற்பதற்காக **நாகநாத பண்டிதரை** நாடினார்.

முதலில் அவர் **நீதிசாரம், இராமோதந்தம், சாணக்கிய சாதகம்** முதலிய நூல்களையும் பின்னர் **முக்தபோதம், இரகுவமிசம், மாகம், சாகுந்தலம்** முதலிய நூல்களையும் கற்று வல்லவரானார்.

பண்டிதர் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்ற பின்னர் புலவருக்கு பல காவியங்களையும் வியாகரணங்களையும் தமிழில் மொழி பெயர்த்து அனுப்பினார். இவரால் மொழி பெயர்த்து அனுப்பப்பட்ட **"இதோபதேசம்"** என்ற நூல் புலவரால், 1886ல் அச்சிடப்பட்டது. வடமொழி கல்வியை செவ்வனே கற்ற புலவர் பல வடமொழி நூல்களை மொழி பெயர்த்தும் பல அரிய தமிழ் நூல்களை இயற்றியும் வெளியிட்டார்.

இதன் பின்னர் அறிவுப்பசி கொண்ட புலவர் சமய நூல்களை கற்க விரும்பி தமது குல குருவாகிய நமச்சிவாய

தேசிகரிடம் சென்று சித்தாந்த சாஸ்திரங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்தார்.

புலவரைப் பொறுத்தவரையில் அகலக் கால் வைக்க விரும்பாதவர். படித்தவற்றை ஆழமாக தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்பட்ட பெருந்தகை. தனக்குத் தெரியாதவற்றை தெரியாதவர்கட்கு சொல்லியும் மனநிறைவு பெற்றவர்.

முக்குரவர் வாழ்த்து

புலவர் தமது குரவர்களாகிய நமச்சிவாயதேவர், முருகேச பண்டிதர், நாகநாத பண்டிதர் என்னும் மூவரிடத்தும் மிக்க நன்றியுள்ளவராய் இருந்தனர். இவ்வுண்மையை அவரியற்றிய மேகதூதக் காரிகைக் குரு வணக்கச் செய்யுள் நன்கு புலப்படுத்துகின்றது. அது வருமாறு:

தூய மயிலணிச் சுப்ர மணியனைத் தூநமச்சி
வாய குருவை முருகேச பண்டித மாமணியைப்
பாய வடகலை தேர்நாக நாத சபாமணியைக்
காய மொழிமனஞ் சேர்த்ததும் நங்கண் மணிகளென்றே

ஆறுமுக நாவலர் தொடர்பு

புலவருடைய இளமைக் காலத்தில் நாவலர் இந்தியாவிற் பல வருடங்கள் தங்கியிருந்தமையாற் புலவருக்கு அவரை நேரிற் காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. நாவலர் 1869ம் ஆண்டு இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த போது அவருக்களிக்கப்பட்ட குதூகலமான வரவேற்பு விழாவில் புலவர் நாவலரை நேரிற் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

நாவலருடைய சைவவேடப் பொலிவழகும், நாவன்மையும், கல்வியறிவு மாட்சியும், தியாகசிந்தையும், அஞ்சா நெஞ்சமும் புலவருடைய உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. புலவருக்கு அப்போது வயது பதினைந்து. நாவலர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் செய்த சைவப்பிரசங்கங்கள் எல்லாவற்றிற்கும் தவறாது சென்று கேட்டு மகிழ்ந்தனர். அவரோடு பழகவேண்டும் என்னும் ஆசை புலவருடைய உள்ளத்திற் குடிகொண்டது. இவ்வாசையைத் தீர்ப்பதற்கு ஊரெழு சரவணமுத்துப் புலவர் உதவி செய்தனர்.

ஒருநாள் அவர் புலவரை நாவலர் வீட்டுக்குக் கூட்டிச் சென்று புலவரை அவருக்கு அறிமுகப்படுத்தினர். புலவர் முத்துக்குமார கவிராயர் பரம்பரையினர் என்று அறிந்ததும் நாவலர் அவரை மிக அன்போடு உபசரித்தனர். புலவர் கல்வி கற்பதிற் கொண்டுள்ள ஊக்கத்தை அறிந்த நாவலர் அவரைத் தம்மிடம் இடையிடையே வந்து இலக்கணவிலக்கியங்களிலுள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளியுமாறு கூறினர். நாவலருடைய அன்பையும், ஆதரவையும் பெற்ற புலவர் அவர் இறக்கும் வரையும் அவரிடஞ் சென்று தமக்குள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தனர்.

புலவர் தாமியற்றிய கவிதைகளையும், கட்டுரைகளையும், கண்டனங்களையும் நாவலருக்குக் காட்டியபோது அவர் அவற்றின் சொற்சிறப்பையும், பொருளாழத்தையும், உரைநடைச் சிறப்பையும் மிகவும் மெச்சினர். புலவர் 1878ம் ஆண்டு கந்தபுராண விருத்தியுரைகாரரைக் கண்டித்து **இலங்கை நேசன்** பத்திரிகையில் வெளியிட்ட கண்டனமொன்றிற்குச் சார்பாக

ஒரு கடிதத்தை நாவலரும் எழுதி அப்பத்திரிகையில் வெளியிட்டனர்.

நாவலருக்கும் புலவருக்குமிடையிலுள்ள நெருங்கிய தொடர்பினை நாவலர் இறந்தபோது புலவர் அவர்மீது பாடிய பாக்கள் நன்கு புலப்படுத்துவன.

புலவர் அவர்கள் ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலை தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். முதல் வருடத்திலேயே யாழ்ப்பாண பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளை வித்தியாசாலையில் சேர்த்து கல்வி கற்பித்தார். இந்நேரத்தில் யாழ்ப்பாணத்தில் கொடிய பஞ்சம் நிலவிற்று.

வடமொழிக் குரவர், தாய்தந்தையர் இறப்பு

புலவருடைய வாழ்க்கையில் மிகத் துக்ககரமான சம்பவங்கள் இக்காலத்தில் நிகழ்ந்தன. அவருடைய வடமொழிக் குரவரும், சுற்றத்தவருமாகிய நாகநாத பண்டிதர் 1884ம் ஆண்டு இறந்தனர். இத்துயரத்தினின்று நீங்குவதற்கு முன், தாயார் 1885ம் ஆண்டிலும் அவர் தகப்பனார் 1886ம் ஆண்டிலும் காலமாயினர். ஒன்றன்பின் ஒன்றாகச் சம்பவித்த மரணங்கள் காரணமாகப் புலவர் துக்கக் கடலுள் மூழ்கினர்.

முதலாவது இந்திய யாத்திரை

தந்தை தாயார் இறந்ததனால் ஏற்பட்ட துயரத்தைத் தணித்தற் பொருட்டும், அவர்களுடைய சாம்பரைப் புண்ணிய சேது தீர்த்தத்திற் கரைத்தற் பொருட்டும் புலவர் 1886ம் ஆண்டு ஆனி மாதம் இந்தியாவுக்குப் போயினர். முதலில் அவர் சேதுக்கரையையடைந்து தந்தை

தாயாருடைய சாம்பரைக் கரைத்துத் தீர்த்தமாடியபின் இராமேசுவரஞ் சென்று ஆலய தரிசனஞ் செய்தனர். பின்னர் கும்பகோணஞ் சென்று பொற்றாமரை உயர்தரப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராயிருந்த முருகேச பண்டிதரைச் சந்தித்து அவருடன் சில தினங்கள் தங்கினர். அவருடன் தங்கியிருக்கும் போது அங்குள்ள கோயில்களைத் தரிசித்தனர். **உ.வே. சாமிநாதையர்** கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராயிருக்கிறார் என்பதை அறிந்து அவரைச் சந்தித்து உரையாடினர். பின்னர் சிதம்பரஞ் சென்று ஆனித் திருமஞ்சனத்தன்று ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு சென்னை சென்றனர். அங்கு அவர் **சி.வை. தாமோதரம்பிள்ளை**யால் உபசரிக்கப்பெற்று அவர் வீட்டிற் சிலகாலம் தங்கியிருந்தனர். அவர் அங்கு தங்கிய காலத்தில் சுன்னாகம் நாகநாத பண்டிதரியற்றிய **இதோபதேசம்** என்னும் மொழிபெயர்ப்பு நூலை அச்சிட்டனர். அச்சுவேலை முடிந்ததும் யாழ்ப்பாணம் திரும்பினர்.

புலவர் விவாகம்

புலவருக்கு மயில்வாகனம் பிள்ளையின் மகள் **சின்னாச்சியம்மையாரை** விவாகஞ் செய்துவைப்பதாக 1884ம் ஆண்டு நிச்சயஞ் செய்யப்பெற்றது. ஆனால், தாய் தந்தையர் மறைவினாலும் வேறு காரணங்களாலும் எதிர்பார்த்தவாறு விரைவில் விவாகம் நடைபெறாது தடைப்பட்டது.

எவ்விதத்திலும் புலவருக்கு விவாகத்தைச் செய்துவைக்க வேண்டும் என்று கருதிய சுற்றத்தவர்கள் அவருக்கு முன்னரே நிச்சயிக்கப்பட்டவாறு

சின்னாச்சியம்மையாரை 1892ம் ஆண்டுக்குச் சமமான நந்தன வருடம் கார்த்திகை மாதம் விவாகஞ் செய்து வைத்தனர்.

மக்கட்பேறு

புலவரும் சின்னாச்சியம்மையாரும் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது ஓம்பி **விசாலாட்சியம்மை** *(1893)* என்னும் புத்திரியையும், **அம்பலவாணபிள்ளை** *(1895)*, **முத்துக்குமாரசுவாமி பிள்ளை** *(1900)* என்னும் புத்திரரையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் இன்புற்று வாழ்ந்தனர்

இரண்டாவது இந்திய யாத்திரை

மூத்த தமக்கையார் இறந்ததினால் ஏற்பட்ட துயரத்தைத் தணித்தற் பொருட்டும்,' விஜய வருடம் தை மாதம் நிகழவிருந்த அர்த்தோதய புண்ணிய காலத்தில் சேது தீர்த்தமாடும் பொருட்டும் தமது பிரிய நண்பர் **வைத்தியநாத பிள்ளை**யுடன் புலவர் இந்தியா சென்றனர். முதலில் அவர்கள் சேதுக்கரையில் அர்த்தோதய புண்ணிய தீர்த்தமாடியபின் இராமேசுவரம், கும்பகோணம், நாகபட்டினம், வேதாரணியம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினர். அக்காலத்தில் இந்தியாவில் பேதிநோய் பரவியிருந்தமையால் அவர்கள் யாத்திரையை மிகக் குறுகிய காலத்தில் முடித்துக் கொண்டனர்.

புலவர் அவர்கள் ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலை தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். முதல் வருடத்திலேயே யாழ்ப்பாண பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளை வித்தியாசாலையில்

சேர்த்து கல்வி கற்பித்தார். இந்நேரத்தில் யாழ்ப்பாணத்தில் கொடிய பஞ்சம் நிலவிற்று.

கண்டனத் திறன்

புலவர் இளமைக் காலந்தொடக்கம் கண்டனம் எழுதுவதில் மிகவும் திறமை படைத்திருந்தனர். அக்காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களான முருகேச பண்டிதர், சங்கர பண்டிதர், ஆறுமுகநாவலர் முதலியோர் புலவருக்குக் கண்டனம் எழுதும் விஷயத்தில் நல்ல பயிற்சியும், ஊக்கமும் அளித்தனர். புலவரும் அவர்கள் சூழலில் வளர்ந்து கண்டனம் எழுதுவதில் ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கினர். யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் **த. கைலாயபிள்ளை** புலவருடைய கண்டனத் திறமையை வியந்து பின்வருமாறு கூறியுள்ளார்.

"போலிப் புலவருடைய பிழைகளைக் கண்டிப்பதில் இவருக்கு நிகரானவரில்லை. பிழைகளை வெகுசீக்கிரத்திற் காண்பர். காண்பதும் வெகு சித்திரமாயிருக்கும். இது பற்றி இவரை "Born Critic" என்று சிலர் சொல்லுவர்;

- (கணேசையர் - கு. புலவர் சரித்திர முகவுரை)

புலவருடைய மாணாக்கருள் ஒருவராகிய **தென் கோவைக் கந்தையாப் பண்டிதர்** புலவருடைய கண்டனத் திறமையைப் பின்வருமாறு வியந்தனர்.

"புலவர் பத்திரிகைக்கு எழுதும் விஷயங்கள் விவாதச் செறிவால் போலிக் கொள்கைகளைப் பரப்புவோரை தலைகுனியச் செய்வன" *(செந்தமிழ் 1922)*

நல்லூர் சு. சரவணமுத்துப் புலவர் யாப்பருங்கலக் காரிகைப் பதிப்புக்குக் கொடுத்த சிறப்புப் பாயிரத்தில்

புலவருடைய கண்டனத் திறமையைப் பின்வருமாறு வியந்தனர்.

எம்மை விஞ்சிடுவோர் எவருமிங் கிலையெனத்
தம்மைத் தாமே தனிவியந் தெழுதும்
போலி நாவலர் புரைபட இயற்றிய
நூலுரைப் பிழைகளை நுண்ணிதி னாய்ந்தோன்.

கண்டிக்கும் முறை

'வாழி செந்தமிழ் இலக்கிய விலக்கணவரம்பு' என்பது புலவர் வாக்கு. அதுவே அவரது இலட்சியமாகும். அவர் செந்தமிழிலக்கிய விலக்கண வரம்பைப் பாதுகாத்தலைத் தலைமேற்கொண்டு நூலுரைப் பிழைகளை ஆராய்ந்து கண்டனங்கள் வரைந்தனர். புலவர் பிழைகளைக் கண்டித்தனரேயன்றிப் பிழைபட எழுதினவரைக் கண்டித்திலர். அவர் சில கண்டனங்களைத் தமது கையெழுத்தோடும், சிலவற்றைப் புனைபெயரோடும் எழுதிவந்தனர்.

நூலுரைப் பிழைகளை வெளிப்படுத்துவதன் அவசியத்தை யாப்பருங்கலக்காரிகை, தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னுமிரு நூல்களுக்கு அவர் எழுதிய முகவுரைகளால் நன்கறியலாம். இது விஷயமாக யாப்பருங்கலக்காரிகை முகவுரையிற் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இவ்வுரையிலே வழுக்கள் வாராதென்பது எமக்கொரு போதுங் கருத்தன்று. எம் உரைகளிலே கவிகளிலே எத்தனையோ வழுக்கள் பின் பார்க்கும் போது புலப்பட்டன. அவை பிறர்க்கெல்லாம் விரைந்து புலப்படும். புலப்படும் வழுக்களைப்

புலவராயுள்ளோர் எடுத்துக் காட்டி உலகறிய வெளிப்படுத்தல் நன்று. அவை வெளிப்படுங்காற் பற்பல திருத்தங்கள் சித்திக்கும். எமக்கும் பெரும் பயனுண்டாகும்."

தமிழ்ப்புலவர் சரித்திர முகவுரையிலும் இது விஷயமாகப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"பிழைகளைக் காணும் அறிஞர்கள் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் அவைகளைப் பிரகடனஞ் செய்தல் நன்று. பிழை கூறல் அவமானஞ் செய்தலன்று. அது சம்மானமாய் நமக்கும் பயன்படும்; கற்போர் பிறர்க்கும் பயன்படும். திருத்தமும் பலவாகும்."

புலவர் தாம் எழுதும் நூலுரைகளில் பிழைகள் வராதவாறு மிக்க கவனஞ் செலுத்தினார்.

- ஏழாலை **அ. குமாரசுவாமிப் பிள்ளை** நினைவு மலரிலிருந்து தொகுத்தது.
வெளியீடு : **சைவப்பிரகாச வித்தியாசாலை**
நன்றி.

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!

- பாவேந்தர் பாரதிதாசன்

சென்னையில் தமிழ்ப்பணி செய்த திருமலை

தி.த. கனகசுந்தரம்பிள்ளை

திருகோணமலை பிரபல பெண் எழுத்தாளர் திருமதி பாலேஸ்வரி நல்லரெட்டினசிங்கம், தட்சணகானாசபாவின் ஸ்தாபகர் அமரர் இராஜராஜேஸ்வரி, திருகோணமலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நேமிநாதன், திருகோணமலையின் சமூகசேவையாளர் அமரர் விஜயநாதன் ஆகியோரின் பெரிய தந்தையாரே தி.த. கனகசுந்தரம் பிள்ளை என்பார்.

1863ஆம் ஆண்டு ஆவணி 23இல் திருகோணமலையில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் தம்பிமுத்துப் பிள்ளை. தாயார் அம்மணிப்பிள்ளை. இவர்கள் வித்தியாலயம் வீதியில் உள்ள றோல் பீல்டில் வசித்தார்கள்.

தி.த. கனகசுந்தரம்பிள்ளையின் சகோதரர்கள் தி.த. சரவண முத்துப்பிள்ளை (இலக்கிய வரலாற்று முதல் நாவல் "மோகனாங்கி" "தத்தைவிடு தூது" ஆகியவற்றை எழுதியவர்) முகாந்தரம் பால சுப்பிரமணியம், சகோதரி திருமதி தையல்நாயகி சுப்பிரமணியம்.

தி.த. கனகசுந்தரம்பிள்ளை, தி.த. சரவணமுத்துச் சகோதரர்கள் திருகோணமலை அறிஞர்களான ஸ்ரீ கதிரவேற்பிள்ளை, ஸ்ரீ. கணேச பண்டிதர்

என்பாரிடம் தமிழிலக்கியம், இலக்கணங்களும் ஆங்கிலமும் கற்று கல்விமானானார். பதினான்கு வயதில் திருவாதவூர் புராணம், மறைசையந்தாதி முதலிய நூல்களுக்கு பொருள் கூறும் ஆற்றலுடையவர்களாக இருந்தார்கள்.

இவர்களது பெயர்களின் முன் உள்ள **'தி'** என்பது திருகோணமலையைக் குறிக்கும்.

இவரது பதினேழாவது வயதில், 1880 ஆம் ஆண்டு சென்னை மாநகர் சென்று, முதலில் செங்கல்வராய நாயக்கர் பாடசாலையில் கற்று, மத்திய கல்லூரியில் பி.ஏ. வகுப்பிலும் சித்தியெய்தியமையோடு, பி.ஏ. வகுப்பில் தத்துவ சாஸ்திரத்திலும் தமிழிலும் விசேட சித்தியடைந்தார். சிறந்த பரிசுகளும் பெற்றார்.

இதன் காரணமாக அவர் சென்னை சைதாப்பேட்டை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பதவி பெற்றார். அதே வேளையில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராக விளங்கினார். பல நூல்களை இவர் வெளியிட்டார்.

கம்பராமாயணத்திற்கு உரை எழுதினர். சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் பெற்றமையால், வால்மீகி ராமாயணத்தின் கிஷ்கிந்தா காண்டத்தையும், **சுந்தர காண்டத்தையும்** தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரித்துள்ளார்.

சுன்னாகம் குமாரசாமிப் புலவருடன் இணைந்து **"நம்பியகப் பொருள்"** என்னும் பழந்தமிழ் நூலுக்கு தெளிவான உரை ஒன்றினை எழுதி வெளியிட்டார்.

சென்னை அரசாங்கம் வெளியிட்ட முதல் தமிழ் பேரகராதியான Tamil Lexicon உருவாக்குவதில் சிரேஷ்ட உதவி ஆசிரியராக இருந்து பங்களிப்புச் செய்துள்ளார். இவர் எழுதி வெளியிட்ட மற்றொரு தரம் வாய்ந்த நூல் **"ஈழமண்டலத் தேவாரமும் திருப்புகழும்"** என்பனவாம்.

தி.த.க.வின் பதிப்பு முயற்சிகளுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:

01. தென் எழுத்ததிகாரம் 02. தொல் சொல்லதிகாரம் 03. கம்பராமாயணம் - பாலகாண்டம் 04. தமிழ் நாவல் சரிதை

இவர் எழுதிய கட்டுரைகள்: ***1. யாப்பிலக்கணம் 2. இராமாயணம் 3. மகாபாரதம் 4. தமிழ் வரலாற்றின் ஆராய்ச்சி.***

புலோலி நா. கதிரவேற்பிள்ளையும் தி.த.க.விடம் இலக்கண இலக்கியம் கற்றதாக அறியப்படுகிறது. சென்னை பல்கலைக்கழக பரீட்சகராகவும், பரீட்சைக் குழுத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். அ. குமாரசாமிப்புலவரது நூல்கள் - தமிழ் நாட்டில் பாடப் புத்தகங்களாக்குவதற்கு வழிவகுத்தார். இலங்கை அறிஞர்களது நூல்கள் தமிழ்நாட்டில் பிரசுரமாவதற்கும், விற்பனையாவதற்கும் ஒத்தாசைகள் புரிந்தார். அவை மறுபதிப்பாக வெளிவருவதற்குக் காரணமாகவும் இருந்துள்ளார்.

32 வயதில் சுந்தரத்தம்மையாரை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு நான்கு குமாரர்கள் **இராசராசன், இராசசேகரன், இராசேஸ்வரன்,**

இராசமார்த்தாண்டன் என்னும் நான்கு மக்களோடு செல்வநாயகி என்பாரும் மகளாவாள்.

இவரது காலத்தில், வெளிவந்த நூல்கள் யாவும் தி.த.க.வால் பார்வையிடப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது என்ற முத்திரையோடுதான் வெளிவந்தன.

ஆறுமுகநாவலர் தம் பதிப்பு நூல்களை தி.த.க.வைக் கொண்டு பிழை திருத்துவது உண்டு.

இவர் 1922 ஆவணி இல் இறையடி சேர்ந்தார். இது தி.த. கனகசுந்தரம்பிள்ளை பற்றிய சிறுகுறிப்பே. மேலும் விபரங்களுக்கு ''**திறனாய்வாளர் திருகோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை**'' என்ற நூலை வாசித்து அறிந்து கொள்ளவும்.

– கலாபூஷணம் **த. சித்தி அமரசிங்கம்**
திருகோணமலை

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன் பிறந்தோம்
நாங்கள், ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம்செய்
முழங்கு சங்கே! (எங்)

– பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ் உணர்விலும் சமயசேவையிலும் ஆழ்ந்த

சோமசுந்தரப் புலவர்

யாழ்ப்பாணம் நவாலி என்னும் சிற்றூரில் **கதிர்காமர் இலக்குமிப் பிள்ளை** தம்பதியினருக்கு 1878ம் ஆண்டு சோமசுந்தரம் பிறந்தார். கதிர்காமர் பருத்தித்துறை நீதிமன்ற இலிகிதராகப் பதவி வகித்து வந்தார்.

நவாலிப் பாடசாலையில் அருணாசலம் ஆசிரியரிடம் ஆரம்பக் கல்வியை பயின்றதோடு சைவ சமயம் தொடர்பான பாடங்களையும், நீதி நூல்களையும், கற்றபின் இன்னுமோர் பாடசாலையில் சேர்ந்து பயின்றார். இதன்பின்னர் **மாரிமுத்து ஆசிரியர்** மானிப்பாயில் நடாத்தி வந்த பாடசாலையில் சேர்ந்து கல்வி பயின்றார். அங்கே ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் பற்றிய அறிவை ஆழமாகப் பெற்றார்.

இதன் பின்னர் சித்தன்கேணி எனும் இடத்தில் இவரது ஆங்கில ஆசான் ஆரம்பித்த பாடசாலையில் ஆசிரியராக தனது இருபத்தோராவது வயதில் இணைந்து கொண்டார்.

இதன்பின்னர் வட்டுக்கோட்டை இந்து ஆங்கில பாடசாலையில் பணியாற்றி வந்தார். பத்து வயதில் தீட்சை பெற்ற இவர் தனது மாணவர்களையும் சைவ சமயத்தின் மீது ஈடுபாடு கொள்ள வைத்தார். தனது ஓய்வு நேரங்கள்,

விடுமுறை தினங்களில் பாலபண்டித, பண்டிதர் தேர்வுகளுக்கு இலவச வகுப்புகளை நடாத்தி வந்தார். சைவ சித்தாந்த வகுப்புகளையும் சமயப் பிரிவினருக்கும் நடாத்தி வந்தார்.

தேவாரங்களை மிக இனிமையாகப் பாடினார். புராணங்களுக்கு பொருள் விளக்கம் கொடுப்பதிலும் வல்லவராக திகழ்ந்தார். இளம் வயதிலேயே பல செய்யுள்களை இயற்றினார். சைவ சித்தாந்த நூல்களின் நுண்பொருளை மிக இலகுவாக அறிந்து கொண்ட இவர் ஆயுள்வேதம், சித்த வைத்தியம் ஆகியவற்றிலும் சிறந்து விளங்கினார்.

மாணவப் பருவத்திலேயே தனது சிநேகிதர்களுடன் சிந்தித்து **"சைவ வாலிபர் சங்கம்"** அமைத்தார். இதுவே இன்று வை. எம்.எச்.ஏ (Young Men Hindu Association) என்று பல இடங்களில் கிளை பரப்பி நிற்கின்றன.

இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் இவர் புகழ் பெற்றிருந்ததோடு பாராட்டும் பெற்றுள்ளார்.

1919ம் ஆண்டு **"சைவ வாலிப சம்போதினி"** என்ற மாத இதழில் கிறிஸ்துவ மதக் கொள்கைகள், போதனைகளுக்கு எதிரான காரசாரமான கட்டுரைகளை எழுதினார்.

இவருடைய பிள்ளைகளும் சைவத்திற்கும் தமிழிற்கும் அளப்பரிய பணியினை வழங்கியுள்ளனர்.

இலக்கிய நூல்களை மிகத் தெளிவான இலகு நடையில் படிப்பித்தும் வந்தார்.

இளமையிலேயே செய்யுள் இயற்றும் கலை புலவரிடம் இருந்த போதும், **இராமலிங்கம்** என்ற ஆசிரியரிடம் முறையாக யாப்பு இலக்கணம் கற்று அறிந்து கொண்டார்.

இவர் இயற்றிய **அட்டகிரி முருகவேள் பதிகம்** **அனேகரால்** வெகுவான பாராட்டைப் பெற்றது எனலாம். சொற்பிரயோகத்திலும், இசையிலும் இப்பதிகம் சிறந்து விளங்கியது. இவரால் இயற்றப்பட்ட செய்யுள்கள் இவரை சங்ககாலப் புலவரோ இவர் என்ற ஐயப்பாட்டை அக்காலப் புலவர்களிடையே ஏற்படுத்தியது. அதே வேளை பாரதியார் போன்றே யாப்பமைதி, சந்தம், எளிமை ஆகியன இவரின் செய்யுள்களில் காணப்பட்டன. இவர் பதினையாயிரம் செய்யுள்களை தனது பதினெட்டாவது வயதிலிருந்தே இயற்றியுள்ளார். ஈழத்துப் புலவர்களும் இந்தியப் புலவர்களும் இவரைப் பாராட்டி பெருமைப்படுத்தியுள்ளனர்.

இவர் சமயசார்பான செய்யுள்களையே பெருமளவில் இயற்றியுள்ளார். கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், மானிப்பாய் விநாயகர் மீது இயற்றிய பிரபந்தங்கள் பிரபல்யமானவையாகும்.

சமய உணர்வு, தமிழ் உணர்வு மட்டுமல்ல, தேசிய உணர்வும் கொண்டு புலவர் செய்யுள் பாடினார் என்பதற்கு **"சைவ சித்தாந்தக்கும்மி" "செந்தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்" "இலங்கை வளம்"** ஆகியன உதாரணமாகும். அவர் இயற்கையையும் நாட்டு வனப்பையும் கூட விட்டு வைக்கவில்லை.

இத்தோடு நின்று விடாத புலவர் சிறுவர்களுக்கான பாடல்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார். அவை

"அன்புடையதாய்," "ஆடிப்பிறப்பு," "இலவு காத்தகிளி," "மனம் நிறைந்த செல்வன்", "கொழுக்கட்டைப் பொன்னன்" ஆகியவையும் அடங்கும்.

ஆடிப்பிறப்பு என்ற சிறுவர்களுக்கான பாடலில்

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

என்ற மாணவர்கள் அடையும் மகிழ்ச்சியைச் சிறப்பாகச் சித்திரிக்கின்றார்.

சோமசுந்தரம் எப்படி நாவலர் ஆனார் என இனிப் பார்ப்போம். 1925ல் இவர் படைப்பில் வெளிவந்த **"உயிரிளங்குமரன்"** என்ற நாடகம் 1927ல் அத்தகிரி ஆலய வளாகத்தில் அரங்கேற்றப் பட்டது. அந்நாடகத்தை கண்டுகளித்த வட்டுக்கோட்டை மகாவித்துவான், முதலியார் இராசநாயகம், நவாலி உடையார் மயில்வாகனன் ஆகியோர் **"புலவர்"** எனும் பட்டத்தினை வழங்கி கௌரவித்தனர். அன்று முதலே **"சோமசுந்தரப் புலவரானார்"** இவர் நவாலி எனும் ஊரிலே பிறந்த காரணத்தாலேயே **"நவாலியூர் சோமசுந்தரப் புலவர்"** என அழைக்கப்படலாயினார்.

தமிழ்பணி - சமயப்பணி என்று இறுதிவரை இயங்கி வந்த புலவர் தன்னுடைய எழுபத்தைந்தாவது வயதில் 1953ல் இயற்கை எய்தினார்.

- திருமதி. **டில்லிராணி தெய்வேந்திரராஜா**

தமிழ்ப் பணிகளின் வித்துவசிரோமணி

சி. கணேசையர்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களுக்கு மிக முக்கியமான இடமுண்டு. இவரது பன்முகப்பட்ட தமிழ்ப்பணிகளுக்குச் சிகரம் வைத்தாற் போல் திகழ்வது இவரது உரைவிளக்கக் குறிப்புகளுடனான தொல்காப்பியப் பதிப்புகள். இவை இலங்கையில் மாத்திரமின்றித் தமிழகத்திலும் ஆய்வறிஞர்களால் போற்றப்படுகின்றன. தென்னிந்திய பல்கலைக் கழக ஆய்வு மாணவர்கள் இவரது தொல்காப்பியப் பதிப்புகளைச் சிரத்தையுடன் தேடிப் படிக்கின்றனர். கணேசையர் அவர்களது தமிழ்ப் பணிகளைப் பலவாறு பகுத்தாராயலாம். இலக்கண வித்தகர், உரையாசிரியர், கட்டுரை ஆசிரியர், விவாத அறிஞர், பாடஞ்சொல்லி ஆட்கொண்டவர், பாடபேத ஆய்வாளர் என்றெல்லாம் தமிழ் கூறு நல்லுலகம் இவரைப் போற்றுகின்றது. கற்றல், கற்பித்தல், ஆய்வு செய்தல் என்பவற்றில் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர்.

வாழ்க்கை

கணேசையர் அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள புன்னாலைக் கட்டுவன் என்னும் கிராமத்தில் அந்தணர் குலத்தவரான சின்னையருக்கும், சின்னம்மாளுக்கும்

மகனாக 15.4.1878இல் பிறந்தார். புன்னாலைக் கட்டுவனில் இவரது பெரிய தந்தையார் **கதிர்காமையர்** நிறுவிய சைவப்பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்றார். கதிர்காமையர், கணேசையருக்கு மாலையிலும் பாடங்கற்பித்தார். கதிர்காமையர் தமிழிலும், வடமொழியிலும் சிறந்த பாண்டித்தியம் உடையவர். பாடசாலையில் கெட்டிக்கார மாணவர் எனப் பெயர் வாங்கியதற்கு கதிர்காமையரிடம் மேலதிகமாகப் பாடங்கேட்டமை காரணமாக அமைந்தது. பெரிய தந்தையாரின் இலக்கிய ரசனை ஐயருக்கும் தொற்றிக் கொண்டது.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் பிராமணர்கள் உயர்வானவர்களாகக் கருதப்பட்ட போதும், இவர்களின் பொருளாதார நிலை உயர்வானதாக இருக்கவில்லை. நிலமும் சொத்தும் வேளாள சமூகத்தினர் வசம் இருந்ததுபோல பிராமணர்களிடம் இருக்கவில்லை. இதனால் இவரின் பெற்றோரின் பொருளாதார நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. இதனால் இவரை வேதனம் பெறும் உபாத்தியாயராக்கவே பெற்றோர் விரும்பினர். ஆனால் ஐயர் அவர் மேலும் மேலும் இலக்கண இலக்கியங்களை நல்லாசிரியர்களிடம் கற்கவே விரும்பினார். இவர் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது வித்துவ சிரோமணி **பொன்னம்பல பிள்ளை**யைச் சந்திக்கும் பேறு கிடைத்தது. வித்துவசிரோமணி நாவலரின் மருகரும் மாணாக்கருமாவார். **கம்பராமாயணம்**, **சீவகசிந்தாமணி** முதலான காவியங்களை ரசனை சொட்டச் சொட்ட விரித்துரைப்பாராம். இவரின் மாணவர்கள் என்னும் **மதுகரங்கள்** (வண்டுகள்) பசி தாகம் மறந்து

திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருப்பார்களாம். வித்துவ சிரோமணியிடம் இலக்கண இலக்கியங்களைப் பாடங்கேட்க வேண்டும் என்ற ஆசை ஐயருக்கு வந்துவிட்டது. இதற்கு இவரது பெற்றோர் விரும்பாத போதும் ஐயரின் மைத்துனரான **சுந்தரையர்** ஆதரவு நல்கினார். வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையிடம் பாடங்கேட்டது ஐயரின் புலமைப் பரப்பையும் இரசனை மட்டத்தையும் ஆழமாக்கியது. பொன்னம்பல பிள்ளையின் மறைவுக்குப் பின்னர் **சுன்னாகம் குமாரசாமிப்** புலவரிடம் கற்கும் வாய்ப்பு ஐயருக்குக் கிட்டியது. புலவரின் தொடர்பு ஐயரை இலக்கண இலக்கிய ஆராய்ச்சிக்குத் திசை திருப்பியது. படித்துக் கொண்டிருக்கும் போதே ஐயர் அவர்கள் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையிலும் சித்தியெய்தினார்.

ஐயர் அவர்கள் வண்ணார் பண்ணை விவேகானந்த வித்தியாசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் நாவலரின் காவிய பாடசாலையிலும் சிறிது காலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். புன்னாலைக் கட்டுவன், குரும்பசிட்டி வயாவிளான், தையீட்டி பாடசாலைகளிலும் கற்பித்தார். பத்து ஆண்டு ஆசிரியப்பணி பூர்த்தியானதும் அவரது மாமனாரான யோகவன சாஸ்திரியின் மகள் **அன்னலக்குமி அம்மையாரைத்** திருமணம் செய்து கொண்டார்.

நயினாதீவு சைவப் பாடசாலையில் கற்பித்த ஏழு ஆண்டுகள் கற்பதற்கும் சிந்திப்பதற்கும் வாய்ப்பாக இருந்தது.

1921 ஆம் ஆண்டு பிரம்மஶ்ரீ சதாசிவையர் சுன்னாகத்தில் தமிழில் உயர்கல்வி கற்பதற்கேற்ற பிராசீன

பாடசாலையை நிறுவினார். இப்பாடசாலை ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித பரீட்சைக்குத் தோன்றும் மாணவர்க்கான கல்விக்கூடமாக அமைந்தது. இப்பாடசாலைக்குப் பொருத்தமான தலைமையாசிரியராக கணேசையர் நியமிக்கப்பட்டார். 1921 தொடக்கம் 1932 வரைப் பிராசீன பாடசாலைத் தலைமையாசிரியராகப் பணியாற்றிய போது உயர் இலக்கண இலக்கியங்களைப் பெரும்பாலும் கணேசையர் அவர்களே கற்பித்தார்கள். ஐயரின் ஆய்வுப் பணிக்கு இவர் வகித்த பதவி மேலும் உதவியது. கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களை நீக்குவதற்காக மேலும் மேலும் தான் கற்றதாக அவரே குறிப்பிடுகின்றார்.

ஐயரின் பாரியார் சிவபதமடைந்த பின்னர் தவ வாழ்க்கையையே மேற் கொண்டார். துறவு நிலையிலும் மாணவர்களுக்குக் கற்பிப்பதை நிறுத்தவில்லை. சீவிய காலம் முழுவதிலும் கற்றலிலும் கற்பித்தலிலும் ஆய்வு செய்வதிலும் ஈடுபட்ட ஐயர் அவர்கள் 1958 ஆண்டு சிவபதம் அடைந்தார்.

இலக்கண வித்தகர்

ஈழத்து மரபு வழித் தமிழ்ப்புலமையின் இறுக்கம், பலம் முதலிய இலக்கண முயற்சிகளிலேயே துல்லியமாகத் தெரிந்தது. தொல்காப்பியத்துக்கு இவர் எழுதிய உரை விளக்கக் குறிப்புகள் தமிழகத்து அறிஞர்களின் பெருங்கவனத்தை ஈர்த்தன. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (1937) சொல்லதிகாரம் (1938) பொருளதிகாரம் (1943, 1948) என்னும் ஐயரின் உரைவிளக்கக் குறிப்புகளுடனான பதிப்புகள் வெளிவந்ததும் 'தொல்காப்பியக் கடல்' என்றும் 'இலக்கண ஞாயிறு'

என்றும் ஐயர் அவர்கள் பலவாறாகப் புகழ்ந்துரைக்கப் பட்டார். தொல்காப்பியக் கடலுள் துணிந்திறங்கி நன்முத்துகளை வெளிக்கொண்டு வந்தவர் எனப் புகழாரம் சூட்டப்பட்டார். தொல்காப்பியக் கடலுள் புகுவோருக்கு ஐயர் அவர்களின் குறிப்புகள் மரக்கலம் போல் உதவுவன என ஐயரின் நன்மாணாக்கரான பண்டிதர் **இ. நமசிவாயம்** குறிப்பிடுவது மனங்கொளத்தக்கது.

மிக நுணுக்கமான இலக்கண விடயங்கள் பற்றி ஐயர் அவர்கள் **செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, ஈழகேசரி** முதலான பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் எழுதினார். இக்கட்டுரைகள் ஐயரின் இலக்கணப் புலமையைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குப் புலப்படுத்தின. தமது வாழ்நாளில் பெரும்பகுதியைத் தொல்காப்பிய ஆய்விலே செலவிட்டு ஈழநாட்டின் தமிழ்ப் புலமைக்கும் கல்விப் பாரம்பரியத்துக்கும் பெருமை தேடித் தந்தார்.

உரையாசிரியர்

ஐயர் அவர்களின் உரை முயற்சிகள் தனித்தன்மை வாய்ந்தவை. பாரம்பரிய மரபுவழி உரையாசிரியராகக் காணப்படுகின்ற அதேவேளை, இருபதாம் நூற்றாண்டுக்குரிய எளிய உரைநடையையும் கையாண்டார். **இரகுவம்ச உரை, மகாபாரதம் சூதுபோர்ச்சருக்க உரை, ஒருதுறைக் கோவை உரை, அகநானூறு உரை** (முதல் 100 செய்யுள்கள்) என்பன இவர் எழுதிய உரைகளாகும்.

பண்டைய உரையாசிரியர் மரபைப் பின்பற்றி 'பொருள் விளக்கம்' 'இலக்கணக் குறிப்பு,' கொண்டு கூட்டு நயப்பாடு முதலியவற்றை உணர்த்தும் வகையில் இவரது உரைகள் அமைந்திருந்தன.

கணேசையரின் மொழி ஆளுமைத் திறனைச், சொல்லாட்சியை அவர் வசனநடையில் எழுதிய **குமாரசாமிப் புலவர் சரித்திரம், ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், குசேலர் சரிதம்** முதலிய நூல்களிலே கண்டு கொள்ளலாம். பண்டைய இலக்கண இலக்கியங்களிலே ஊறித் திளைத்த ஐயர் காலத்துக்கேற்ற மொழிநடையைக் கையாண்டமை பாராட்டிற்குரியது. குசேலர் சரிதம் என்னும் நூலைப் பள்ளிப் பிள்ளைகளுக்காக எழுதினார். ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் இலக்கிய வரலாற்றாசிரியருக்குப் பயனுள்ள தகவல்களைத் தருகின்றன.

விவாதத் திறன்

19ஆம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்கள் சமயம், இலக்கியம் சார்ந்த விவாதங்களை நடத்தினர். இவற்றுக்குப் பத்திரிகைகள் களம் அமைத்துக் கொடுத்தன. பெரும்பாலும் ஈழநாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ் நாட்டு அறிஞர்களுக்குமிடையே விவாதங்கள் இடம் பெற்றன. இவை **செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, கலாவல்லி, ஞானசித்தி, ஈழகேசரி, சுதேச நாட்டியம்** முதலிய பத்திரிகைகளில் இடம் பெற்றன. இவ்விவாதங்களில் ஐயர் அவர்கள் முழு மூச்சாக ஈடுபட்டார்.

இவர் கலந்து கொண்ட விவாதங்கள் இருவகைப்பட்டன.

1. தமக்குச் சந்தேகமாக இருந்தவற்றை விவாதத்திற்கென விட்டு நல்ல முடிவைக் காண விரும்புவது.

2. தமிழ் அறிஞர்களின் கருத்துகளில் தவறு கண்ட போது கண்டிப்பது.

ஆகுபெயர், அன்மொழித்தொகை விவாதம் ஈழநாட்டின் இலக்கணப் பாரம்பரியத்தை வெளிக்காட்டியது. ஐயரின் நுண்மாண் நுழைபுலம் இவ்விவாதத்தினூடு புலனாகியது.

கவிபாடும் புலமை

ஐயர் காலத்தில் செய்யுள் இயற்றும் திறமை படைத்தவர்களே தமிழ் அறிஞர்கள் எனக் கருதப்பட்டனர். படித்தவர்கள் செய்யுள் இயற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப் பட்டது. ஐயர் ஐந்திலக்கணம் கற்றவர்; வரன்முறையான இலக்கியப் படிப்பும், இயல்பான ரசனை உணர்வும் கொண்ட ஐயர் பல கவிதைகளை யாத்துள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை சமயச்சார்புடையவை. வெண்பா, விருத்தம், அகவல், கட்டளைக் கலித்துறை முதலான பல்வேறு யாப்பு வடிவங்களை அநாயாசமாகக் கையாண்டு செய்யுள் இயற்றினார்.

திருச்செல்வச்சந்நிதி நான்மணி மாலை, புன்னை மும்மணிமாலை, வருத்தலைவிளான் மருதடி விநாயகர் பிரபந்தம், வருத்தலை விளான் கண்ணகி அம்மன் ஊஞ்சல், மேலைக்கரம் பொன் சண்முகநாதர் திருவரட்டைமணிமாலை என்பன ஐயரின் செய்யுள் நூல்கள். தனிப்பாடல்கள் பல ஆண்டு மலர்களிலும் நினைவு மலர்களிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. ஐயரின் கவித்துவ ஆற்றலைக் காட்டுவனவாக இவை அமைகின்றன.

இவர் தனது மனைவியின் நினைவாக ஒரு கிணறு வெட்டுவித்து அதற்கு **'அன்னலட்சுமி கூபம்'** எனப் பெயரிட்டார். வருத்தலை விளான் மருதடி விநாயகருக்கு

அதனைத் தருமை சாதணம் பண்ணினார். இந்தக் கிணறு நாற்பதடி வரை அகழப்பட்ட பின்னும் நீரூறவில்லை. ஐயரவர்கள் மருதடி விநாயகரை நினைத்துப் பாடினார்.

ஆட்டாதே எங்கள் அரனார் திருமகனே
கோட்டாலே குத்தியிந்தக் கூபமதை - நாட்டிடுவாய்
மாமருதி வீசா மதமா முகத்தானே
காமுறுவேற் குள்ளம் கனிந்து

எனப் பாடிப் பணிந்ததைத் தொடர்ந்த போது நீர் ஊறக் கண்டு மகிழ்ந்தார்.

ஈழகேசரிப் **பொன்னையா,** ஐயரவர்களின் மாணாக்கர். பொன்னையா அவர்களே ஐயரின் உரைவிளக்குக் குறிப்புடனான தொல்காப்பியப் பதிப்புகளை தனது செலவில் வெளிக் கொணர்ந்தவர். அவருக்குச் சமாதான நீதிபதிப் பட்டம் கிடைத்தபோது கவிதையில் வாழ்த்துத் தெரிவித்தார். அந்தப் பாடல் :

கல்விபயில் சாலைகட்குக் கனகமெலாம்
கைகவியா தள்ளி யீவோன்
பல்விதமா மேழைகட்கு மிகவுதவிக்
கல்விதனைப் பயிலச் செல்வோன்

நல்விதத்துப் புலவர்கட்கும் பரிசில்பல
நயந்தளித்து நண்பு செய்வோன்
செல்வமதைப் பெற்றபயன் ஈத்துவக்கும்
இன்பமெனத் தெளிந்து நின்றோன்

பாடஞ்சொல்லி ஆட்கொண்டவர்

கணேசையர் தம் காலத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத போதனாசிரியராகத் திகழ்ந்தர்.

நல்லாசிரியருக்குரிய பண்புகள் யாவும் இவரிடம் காணப்பட்டன. வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையிடமும் புலவரிடமும் கற்றுக் கொண்டிருக்கும் போதே அவ்வப்போது மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார். யாழ்ப்பாணத்தில் குரு சிஷ்யப் பரம்பரை இடைவழியில் அறுந்து போகாது காத்த பெருமை ஐயரையும் சாரும். பாடசாலைகளில் மாத்திரமன்றி தன்வீட்டிலும் மருதமர நிழலிலும் அவர் தனிப்பட்ட வகுப்புகளை நடத்தினார். ஐயரும் மாணவர்களும் நிலத்திலே சம்மாணங் கொட்டி இருந்தபடியே தான் வகுப்புகள் நடைபெற்றன. மாணவர்கள் அசட்டையாகவோ சோம்பலாகவோ இருந்தால் ஐயருக்கு அறவே பிடிக்காது. கடுமையாகக் கண்டிப்பார்.

''எறும்பு கடித்தாலும் ஆடாமல் அசையாமல் இருந்தே பாடம் கேட்போம்'' என்று பண்டிதர் **இ. நமசிவாயம்** குறிப்பிட்டுள்ளார்.

சில நேரங்களில் மாணவர்களுடன் நடந்து செல்லும் போதும் பாடம் சொல்லுவர்.

கணேசையருக்கு இலங்கை முழுவதும் மாணவர்கள் உள்ளனர். மாணாக்கர்கள் கற்பதுடன் அடக்கம், பணிவு, சீலம் முதலிய நற்குணங்கள் இருப்பதையே ஐயர் பெரிதும் விரும்பினார்.

இந்நாளில் பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் ஆக விளங்குபவர்கள் ஐயர் அவர்களிடம் பாடங்கேட்டவர்களே ஆவர். ஆசிரிய கலாசாலைகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பேராசிரியர்களும், மாணாக்கர்களும், ஏனைய கல்விமான்களும் இடையிடையே

ஐயர் அவர்களைச் சந்தித்துத் தமக்கேற்பட்ட ஐயங்களைப் போக்கிக் கொண்டதுண்டு.

பாடம் சொல்வதன் மூலம் பல மாணவர்களை ஆட்கொண்ட பெருமை ஐயரைச் சாரும். ஐயரிடம் நீண்டகாலமாகப் பாடங்கேட்டு பண்டித பரீட்சையில் தேறி ஆசிரியராகக் கடமையாற்றுவோர் பலராவர். **பண்டிதர் வித்துவான் க.கி. நடராஜன், பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிதர் இளமுருகனார், பண்டிதர் ஆர்.கே. முருகேசன், பண்டிதர் இ. நமசிவாயம், பண்டிதர் செவ்வந்தி தேசிகர்** என்போர் ஐயரிடம் பாடம் கேட்டவர்கள். தமது எச்சங்களாக மாணாக்கர்களேயே அவர் கருதினார்.

சமயத் தொண்டு

தமிழியல் ஆய்வுத் துறையில் முன்னோடிகளுள் ஒருவராகத் திகழும் ஐயர் அவர்கள் சமயத் தொண்டுகளிலும் சிறந்து விளங்கினார். 'கூடும் அன்பினில் கும்பிடலே' என்ற திவ்விய கருத்தோடு தம் வாழ்வின் இறுதிப் பகுதியிலே பயணம் செய்த ஐயர் ஆலயத் திருப்பணிகளிலும் உற்சாகமாக ஈடுபட்டுழைத்தார். விநாயகத் தொண்டராகிய இவர் புன்னை ஆயக்கடவை விநாயகப் பெருமானுடைய ஆலயத் திருப்பணிகளுக்குத் தம் பெரும் பொருளை அர்ப்பணஞ் செய்து கும்பாபிஷேகம் செய்வித்தார்.

தமது அறுபதாமாண்டு விழாவில் தமக்கு அளிக்கப்பட்ட பொற்கிழி கொண்டு விநாயகப் பெருமானுக்குப் பொற்கிரீடம் செய்வித்துச் சாத்தி மகிழ்ந்தார். தமக்கெனப் பொருள் பண்டம் எதனையும் சேர்த்து வைக்காத ஐயர் உபரியாகக் கிடைத்த

பொருள்களைத் தெய்வத் திருப்பணிக்கே செலவு செய்தார். வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் கற்றலையும் கற்பித்தலையும் விட கடவுள் வழிபாடே உயர்ந்தது என்று கருதி முழு நேர வழிபாட்டாளர் ஆனார்.

தொல்காப்பியக் கடலாகவும் இலக்கண இலக்கிய ஆய்வாளராகவும் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், இலக்கிய வரலாற்று ஆசிரியராகவும், சமயத் தொண்டராகவும், நல்லாசிரியராகவும் எண்பது ஆண்டுகள் வாழ்ந்து அவர் ஆற்றிய பணியும் அவர் வாழ்க்கையும் தமிழ் அறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

- கலாபூஷணம் **முல்லைமணி**
வன்னி

உசாத்துணை நூல்கள் :

1. அம்பலவாணபிள்ளை கு, "ஐயரும் புலவரும், 1960
2. நமசிவாயம், இ., பண்டிதர் மறைத்திரு கணேசையர், 1977
3. நடராசன் க.கி., கணேசையர் நினைவுமலர், 1960
4. குமாரசுவாமிக் குருக்கள் சிவஸ்ரீ. கணேசையரின் சைவத் தொண்டுகள்
5. எஸ். சிவலிங்கராசா, கணேசையரின் வாழ்க்கையும் பணியும், 1960-1989

தென்னிலங்கை இலை மறைத்த கனி

அஹ்மது நெய்னா (டப்பி) ஆலிம் புலவர்

மாத்தறை காஸிம் புலவரின் சமகாலப் புலவரான அஹமது நெய்னா (டப்பி ஆலிம்) பிரபல்யம் பெறாத ஒரு படைப்பாளி. வெலிகமையில் 1882ல் பிறந்து மீயல்லையில் மணமுடித்த அவர், தன்னை "மீயல்லை அஹமது நெய்னா" என்றே அறிமுகப்படுத்திக் கொண்டார். ஏனெனில் அவரது வாழ்வின் பெரும்பகுதி மீயல்லையிலேயே கழிந்தது. மாத்தறையிலிருந்து 20 மைல் தொலைவில் அமைந்துள்ள கிராமமே மீயல்லை.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை இங்கிருந்த வர்த்தக மனப்பான்மை காரணமாக புலவர்கள் மதிக்கப்படவில்லை. அவர்களது படைப்புகள் பாதுகாக்கப்படவில்லை. சமயக்கிரியைகள் சார்ந்த பாடல்கள் சிலவே நின்று நிலைக்கின்றன.

மாத்தறைக் காஸிம் புலவர் தமிழ், சிங்களம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தது போல, அரசியல் விவகாரங்களில் ஈடுபாடு காட்டியது போல, டப்பி ஆலிம் புலவர் ஈடுபாடு காட்டவில்லை. இவர் மதத்துறை சார்ந்த இலக்கியங்களையே பெரிதும் படைத்தாலும் கிராமிய

கலாசார சூழலுக்கேற்ற யதார்த்தப் பண்புமிக்க கவிதைகளும் நிறைய எழுதினார். நூறு வருடங்களுக்கு முந்திய தென்னிலங்கை முஸ்லிம்களது கலாசார வெளிப்பாடுகளை இவரது கவிதைகள் தத்ரூபமாகப் பிரதிபலிக்கின்றன.

நூறாண்டுகளுக்கு முந்திய சமூக நிலை

அக்கால முஸ்லிம்களது சமயவாழ்வு இன்று போன்றதல்ல. எழுத்தறிவு கொண்டவர்கள் மிகச்சிலரே இருந்தனர். அறபி மொழியை வாசிக்கத் தெரிந்தோர் இருந்தபோதிலும் அது அறிவோடு சம்பந்தப்படவில்லை. பாடல் இலக்கியங்கள், சமய சொற்பொழிவுகள் என்பவற்றின் வாயிலாகவே சமூக வாழ்வோடியைந்த அறிவுகளைப் பெற முடிந்தது. இலங்கையில், தென்னிந்திய கலாசாரம் பரவியிருந்தமையால் **"அவுலியா வழிபாடு"** மிகவும் அழுத்தம் பெற்றிருந்தது.

தென்னிந்தியாவில் இருந்த நிலப்பிரபுத்துவ அம்சங்களும் இங்கு காணப்பட்டன. அவுலியாக்கள் (மெய்ஞ்ஞானிகள்) பேரில் அன்னதானம் வழங்குவது, சமாதியுற்றுள்ள பெரியோர்கள் பேரில் இரங்கல், காப்பு பாடுவது, இந்தியா, அறபுநாடு, அந்தரத்தீவு போன்ற இடங்களிலிருந்து விஜயம் செய்யும் ஷெய்க்மார், தங்ஞள் மாரை (ஆன்மிக சீலர்கள்) பக்தியோடு வரவேற்று உபசரிப்பது அன்றைய மரபாக இருந்தது. இப்பெரியார்களை கௌரவிப்பதன் மூலம் இறைவனின் அன்பைப் பெறலாம் என்று மக்கள் நம்பினர்.

அஹமது நெய்னா புலவர் இந்தச் சமூக சூழலுக்கேற்ற கவிதைகளையே இயற்றினார். அவை இசைப்பாடல்களாக இருக்கக் காரணம், சமயக்

கிரியைகளின் போதும் வரவேற்பு வைபவங்களின் போதும் ராகம் கூட்டிப் பாடப்பட்டமையே.

இளம் வயதில் அவர் காலியில் தமது மாமி வீட்டில் தங்கியிருந்து ஓரளவு தமிழ் படித்தார். காலி கோட்டை மத்ரஸாவில் அறபு கற்றார். அதனால் அவர் ஆலிம் என அழைக்கப்பட்டார். அவரது தமிழ், சிங்களக் கவிதைகள் அறபு லிபியிலேயே அமைந்துள்ளன. தமிழ், சிங்கள வரிவடிவங்களில் ஒட்டம் போதாமையும் அறபுத் தமிழுக்கு ஓரளவு மவுசு இருந்தமையுமே இதற்குக் காரணம். அவர் தமிழறிவை தமது சுய முயற்சியினால் வளர்த்துக் கொண்டார். தமிழ் யாப்பை முறைப்படி படிக்காது விடினும் அவரது கவிதைகள் சிறந்த யாப்பமைதியும் சந்தமும் கொண்டிருந்தன.

'அதி விற்பன விவேக சிந்து' 1920இல் வெளியிடப்பட்ட அரபுத் தமிழ் கவிதை நூலாகும். கொழும்பு ஹமீதியா பிரஸில் அச்சிடப்பட்ட இந்நூல் **அப்துல்லா மௌலானா** மீது பாடப்பட்டது. 17 கண்ணிகள் கொண்ட இக்கவிதை நூலில் புர்தா (நபி புகழ்ப்பாமாலை) ஓதுவதன் சிறப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தென்னிலங்கை முஸ்லிம்களது கலாசாரத்தில் கந்தூரிகளின் இடம் மிகவும் அழுத்தமானது. இவை அன்றைய கட்டத்தில் ஒன்று கூடும் (Get together) வைபவமாக அமையினும் சமயக்கிரியைகள், நம்பிக்கைகள் என்பவற்றோடு பின்னிப் பிணைந்திருந்தன. வெளிநாடுகளிலிருந்து இங்கு விஜயம் செய்து மார்க்கப் பிரசாரத்தில் ஈடுபட்ட பெரியார்களது பேரிலும் அவுலியாக்கள் பேரிலும் வருடாந்தம் (கந்தூரி) விழாக்கள்

நடைபெறும். நிலப்பிரபுக்கள், முதலாளிமார் வீடுகளிலும் அறபுப் புகழ்ப்பாக்களை பக்தி சிரத்தையுடன் சுற்றி வர அமர்ந்து இசைப்பார்கள். இவ்வைபவம் அன்னதானத்துடன் முடியும். அவுலியாக்கள் பேரில் பக்தர்கள் ஆடு, கோழி, அரிசி, தேங்காய், எண்ணெய் போன்றவற்றை நேர்ச்சைப் பொருளாக வழங்குவர்.

ஓதும் முறாதுகள் நேர்ச்சை காணிக்கைகள்
எப்போதும் ஏற்றிடும் நாயகமே
பஞ்சம் பலாய்கள் கொஞ்சமும் அணுகாமல்
நஞ்சாயகற்றும் எம் தாயகமே

(முறாத் - நாட்டம். பலாய் - மிடிமை)

இது தெனிப்பிட்டி பள்ளிவாசல் கந்தூரிக்காகப் பாடப்பட்டது. நபி (ஸல்) அவர்களது பேரர்களான **ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி)** பேரில் நடத்தப்படும் இக்கந்தூரி தென்னிலங்கையில் மிகப் பிரபல்யமானது. இப்பள்ளி வாசலில் நம்பிக்கை கொண்டு வைக்கும் நேர்ச்சைகளால் என்னென்ன நோய்கள் தீரும் என்பதை,

எக்காலும் பாலர் கக்கல் இருமலை
சக்கின்றி நீக்குவர் நாயகமே

(சக்கு - சந்தேகம்)

எனும் அடி மூலம் விளக்குகிறார்.

இன்றும் உயிர் வாழ்கின்ற ஹிளுர் நபி...?

தென்னிலங்கையில் **ஹிளுர்** (அலை) பற்றிய விசுவாசம் மரபு வழியாக இருந்து வருவது. குர் ஆனில் (18:65) **மூஸா நபி** (அலை) அவர்களோடு தொடர்புபடும்

இப்பெரியார் '**மாஉல் ஹயாத்**' என்ற நீரைப் பருகியதால் அமரத்துவம் பெற்றதாகவும் கதிர்காமத்தை அண்டிய காடுகளில் அன்னார் 'தர்வேஷ்' (துறவி) கோலத்தில் உலாவுவதாகவும் மக்கள் நம்புவர். காட்டினூடாகப் பயணம் செய்வோரும், வேட்டைக்காரரும் ஹிளுர் (அலை) அவர்களிடம் பாதுகாவல் தேடிக் கொண்டால் காட்டு விலங்குகளால் ஆபத்து ஏற்படாதென்பதும் பராம்பரிய நம்பிக்கை. கதிர்காமப் பயணம் பற்றி புலவனார் இப்படி வர்ணிக்கிறார் :

காத வழி நடைத் தூரமடி
காவலாய் வாகனம் ஏறுங்கடி
ஓங்கிய ஹிளுர் பாதம் பணிவோமடி
தாங்கியே தவம் மிக்கோரடி
மாங்கனி தேன்கனி பாருங்கடி
தேன் தினை தயிர் சாதம் உண்ணுங்கடி

ஸியாரம் தோன்றிய கதை

பனம்வெளி அவுலியா (மெய்ஞ்ஞானி) பேரில் பதம், **முனாஜாத்து காப்பு** என புலவனார் பல கவிதைகள் இயற்றியுள்ளார். பிரபல்யம் பெறாத இந்த அவுலியாவுக்கும் ஒரு வரலாறுண்டு. பீர் நூர்தீன் என்ற அந்த அவுலியா லாஹூரைச் சேர்ந்தவராம்.

அக்கால கட்டத்தில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சமய இலக்கியங்களின் கதாநாயகர்களாக இருந்தவர்கள் **முஹ்யதீன் ஆண்டகையும், நாகூர் சாஹூல் ஹமீத் ஆண்டகையுமே.** புலவனாரும் இந்தப் பெரியார்கள் இருவர் பேரிலும் காப்புச் செய்யுள்கள் பாடியுள்ளார்.

முஹ்யதீன் ஆண்டகை ஆபத்தில் கை கொடுப்பார் என்பதும் ஷாஹுல் ஹமீத் ஆண்டகை விவசாய விருத்தி கடற்பயணம் போன்றவற்றுக்கு உதவுவார் என்பதும் அன்றைய மரபு வழி நம்பிக்கையாகும்.

நெல்லு குரக்கன் பயறெள் சோளகம்
நல்லாய் விளையுது பார் - இன்ன
தெல்லாம் மலிந்திட உதவிடும் பாலகர்
செய்யிது ஷாஹுல் ஹமீத்

உணர்ச்சிக் கவிதைகள்

அக்கால மக்களிடையே இருந்து வந்த பாரம்பரிய நம்பிக்கைகள், மரபு சார்ந்த வழிபாடுகள் என்பவற்றை அஹமது நெய்னா ஆலிம் புலவர் ஆழ்ந்த சமயத் துலாக்கோல் கொண்டு ஆதாரபூர்வமாகவோ தர்க்க ரீதியாகவோ பார்க்கவில்லை. மாறாக ஒரு கலைஞனின் பார்வையிலேயே அவர் அணுகியுள்ளார். சமூகத்திலே பாவனையில் இருந்த **ரஸூல் மாலை, ஜலாலியா றாத்திபு, தலைப்பாத்திஹா** போன்றவற்றின் செல்வாக்கு அவரது கவிதைகளில் காணப்பட்டது.

அக்காலத்தில் சமய நடைமுறைகளுக்கு மாத்திரமின்றி அன்றாட வாழ்க்கை முறைக்கும் ஊர் கட்டமைப்புக்கும் ஊட்டமளிக்கும் அற நூல்களாக விளங்கியவை பாடல் இலக்கியங்களும் அறபுத் தமிழ் கித்தாபுகளுமே. ''மனிதர் நன்னெறி நடக்க வேண்டும்'' என்ற நோக்கில் புதைகுழியில் செய்யப்படும் வேதனை, மஹ்ஷர் வெளியின் அவலம் போன்ற அம்சங்கள் பயவுணர்ச்சி தோன்ற வர்ணிக்கப் பட்டுள்ளன.

புலவனார் இயற்றிய கவிதைகளுள் 'ரமழானுக்குப் பிரியாவிடை' என்ற கவிதையும் கவித்துவம் மிக்கது; உள்ளத்தைத் தொடுவது.

எங்கெங்கே யானாலும்
ஏங்கித்துடித்தாலும் சேருமோ - மாதம்
எங்கள் வியாகூலம்
எப்போது சொன்னாலும் தீருமோ
மெள்ள முணங்கி முணங்கியே
ஈரலும் கொதிக்குதே - ஆற்றில்
வெள்ளம் போல் மாதமும்
நாளுக்கு நாளாய்ப்போகுதே
அலறி அலறி நான்
ஆவலாய்த் தேடும் நூர் ஏகுதே - காலம்
குளறிக் குளறி என்
வாழ்நாளும் வீணாய்ப் போகுதே.

(நூர் - ஒளி)

வெலிகாமத்தில் இன்றும் வழக்கில் உள்ள பாடல் ஹஜ்ஜுயாத்திரிகர்களுக்கான வரவேற்புப்பா; புலவனார் இயற்றிய பாடல்களுள் கருத்தாழம் மிக்கது இது. முன்னைக் காலங்களில் விமானம் இராததால் கப்பல் மூலமே ஹஜ் பிரயாணம் மேற்கொள்ளப் பட்டது. இதனால் ஹஜ் யாத்திரை பல மாதங்களை விழுங்கிவிடும். பயணச் சிரமம், தொற்று நோய் காரணமாக ஹஜ் பலருக்கு மரண யாத்திரையாக அமைவதுமுண்டு. ''ஹஜ்ஜுக்குப் போய் வருகிறேன்'' என்று கூறாமல் ''ஹஜ்ஜுக்குப் போகிறேன்'' என்று கூறும் சம்பிரதாயத்துக்குக் காரணமும் இதுவே. ஹஜ்ஜிலிருந்து திரும்பி வருவது என்பது ஒரு சாதனை.

எனவே வரவேற்பு மிக விமரிசையாக இருக்கும். ஊர்ச் சந்தியிலிருந்து ஹாஜிமார் மாலையணிவிக்கப்பட்டு ஊர்வலமாக பைத்து முழக்கத்தோடு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

மாத்தறைக் காலிம் புலவர் போல, அஹமது நெய்னா புலவரும் சிங்களப் பாடல்கள் இயற்றினார். இதற்குச் சமூக சூழலே காரணம். தென்னிலங்கையில் உள்ள எல்லாக் கிராம முஸ்லிம்களும் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளில் சிங்களவரோடு இணைந்தே செயல்படுகின்றனர். இது பண்டைய மரபு. இன ரீதியான ஐக்கியத்துக்கும் இது வழிவகுத்தது. சிங்கள அரசியல்வாதிகள் பிரமுகர் போன்றோர்க்கு முஸ்லிம்கள் வரவேற்பு வைபவங்கள் நடத்தினர்.

அறபுச் சிங்களத்தின் பிதாமகன்

1930ல் வழக்கறிஞர் **டீ.பி. அத்தபத்து** பனம்வெளியைச் சேர்ந்த **தயாவதி** என்ற பெண்மணியை மணமுடித்த போது பெண்ணழைப்பு பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. மீயல்லை முஸ்லிம்கள் தம்பதிகளுக்கு சந்தியில் வரவேற்பு கொடுத்தனர். புலவனாரின் சிங்களப்பாடல் அனைவரையும் கவர்ந்தது. அதனைப் பாடிய முஹம்மது அமீர், அபூபக்கர் இருவருக்கும் 50 ரூபா அன்பளிப்புக் கிடைத்தது.

தெனியாய எம்.பி. **விக்டர் ரத்னாயகாவை** வரவேற்பதற்காகவும் புலவனார் சிங்கள வாழ்த்துப் பாடலொன்று இயற்றினார். இக்கவிதையிலிருந்து 'அறபுச் சிங்களத்தின் பிதாமகன் அஹமது நெய்னா புலவரே' எனலாம். அவர் சிங்கள ஒலிகள் சிலவற்றை வெளிப்படுத்த

உருதுப் பாணியைப் பின்பற்றியுள்ளமையும் இங்கு அவதானிக்கத் தக்கது.

திட்டமிடாது மனத்தில் எழுந்ததை பாடும் புலவர்கள் பற்றி நாம் கேள்விப்பட்டுள்ளோம். அஹமது நெய்னா புலவர் கூட இத்தகைய பாடல்கள் பாடியுள்ளார். அவை வாய்வழி வழங்கியமையால் பல அழிந்துவிட்டன. ஒருமுறை வீட்டுப் பெண்களின் கவலையீனம் காரணமாக புலவனாரின் வீடு தீப்பற்றி எரிந்தது. அப்போது சூடேறிய உள்ளம் கவிதையாக உருகி வழிந்தது.

எட்டு கோணி தட்டுமுட்டு குற்றமற்று எரிந்ததே
திட்டு பத்வா ஆயிற்றென்று திட்டம் மனதில் சொல்லடி
வட்டி பெட்டி கட்டில் தொட்டில் மற்றுடை பிடவைகள்
மட்டிலடங்கா முட்டிவையும் தொட்ட தீயைப் பாரடி
ஸபரில் பதிமூன்றாம் ஞாயி றிரவு பத்துமணியடி
ஸப்ரை இழந்த பெண்ணினங்கள் சபை குலைந்தவாறடி
ஆதியிட்ட கட்டளைக் கடக்கமற் றோர் யாரடி
நீதிபெற்ற வேதியர்க்கும் நித்தம் ஆபத்துண்டடி

(பத்வா - சாபம்,
ஸபர் - முஸ்லிம் மாதங்களில் ஒன்று,
ஸப்ர் - பொறுமை)

எரிந்த பொருள்களைப் பாவிப்பது மிடிமையை வருத்தும் என்பது பாரம்பரிய நம்பிக்கை. புலவனார் இதனைக் கணக்கில் எடுக்காது எரிந்த வீட்டைத் திருத்தி அதிலேயே வாழ்ந்தார். ஒரு கவிதையிலே -

வெந்த மனையில் குந்தியிராதே யெறன்றுரைத்த தாரடி
கந்தம் கமழும் சொந்த நபியால் வந்தமொழியைத் தேடடி

ஏட்டில் எழுத்தில் காட்டொணாத மோட்டுச் சொல் இதாமடி
கூட்டும் புர்க்கான் காட்டவந்தோர் சாற்றினரரோ சொல்லடி

என்று இந்த நம்பிக்கைக்குச் சூடு வைக்கிறார்.

ஒருமுறை புலவனாரின் வீட்டிலிருந்த பெரிய செம்புச்சட்டி (அண்டா) ஒன்று களவு போயிற்று. எவ்வளவு முயற்சி செய்தும் சட்டி கிடைக்கவில்லை. ஆத்திரமுற்ற புலவனார் வசைகவி யொன்றை இயற்றி சிறுவர்களைக் கொண்டு இரவில் பாடிக் கொண்டு ஊரை வலம்வரச் செய்தார்!

சற்றும் பிசககன்ற பராபரனே - எந்தன்
சட்டியை மீட்டுத் தா தயாபரனே
தொட்டான் குடிகுடும்பம் பற்றி எரிந்திட
கர்த்தன் அருள்புரிவாய் இலாஹி...

ஏழு நாட்களுக்குள் சட்டியை திருடன் வீட்டில் கொண்டு வந்து வைத்தானாம்!

அஹமது நெய்னா புலவர் திருமணத்துக்கு முன் வெலிகமை ஹிளுர் தக்கியாவிலும் மாத்தறையிலும் அறபு கற்பித்தார். பின்னர் தமது இறுதி காலம் வரை மீயல்லையில் குர்ஆன் பள்ளிக்கூடமொன்றை நடத்தினார். குர்ஆன் ஓதும் முறை மாணவர் ஒழுக்கம், குருபக்தி போன்ற தலைப்புகளில் இசைப்பாடல்கள் இயற்றிப் பாடமிட வைத்தார். கந்தூரி சார்ந்த பதங்கள், கழிக்கம்புப்பாடல், மணவாழ்த்துப் பாடல், கூடு தூக்கும் பாடல் என்று கலாசார நிகழ்ச்சி சார்ந்த பல படைப்புகள் அவரால் ஆக்கப்பட்டன. அவர் இயற்றிய திருமண வாழ்த்துப் பாடல்களில் கூட பாரம்பரிய அம்சங்கள் வர்ணிக்கப்படுவதைப் படித்து ரசிக்கலாம்.

சீர்பெற முழுகாட்டி சிறப்பாய் உடுத்தாட்டி
சிம்மாசனமிருத்தாட்டி சிறந்த பெண்ணினர் ஸலாம்
பலவர்ணச் சேலைகள் பட்டாடை சீத்தைகள்
பட்டுச் சட்டை ரவிக்கைகள் இட்ட பெண்ணுக்கும் ஸலாம்
கொண்டைப்பூ பதக்கமும் கொங்கைக் கிணைக்கும் துலக்கமும்
தண்டை கிண்கிணி இணக்கமும் பூண்ட சொகுசியான ஸலாம்
பசும்பொன் ஸில்ஸிலத்து பங்கால் அரங்கோல் கும்மத்து
வாவிலி அல்குத்து வரைந்த பெண்ணாலே ஸலாம்

(ஸில்ஸிலத்து - சங்கிலி. அல்குத்து - வாவிலி - ஒரு நகை. காதில் அணியும் ஓர் ஆபரணம்)

புலவனாரின் கவிதைகளுள் இரண்டே இரண்டு தான் அச்சில் வெளிவந்தன. ஒன்று ***அதி விற்பன விவேக சிந்து,*** *மற்றது* ***அப்துல்லா வொலி மீதில் பதம்.*** *ஏனைய கவிதைகள் எழுத்துப் பிரதிகளாக இன்றும் உண்டு. அவை கூட படிப்படியாக அழிவுற்று வருகின்றன. சில வாய் வழி ஓதல்களாகப் பாடப்படுகின்றன. மீயல்லை அஹமது நெய்னா ஆலிம் புலவர் 14.06.1957 அன்று வெலிகமையில் காலமானார். அன்னாரது பாடல்கள் தொகுப்பாக வெளியிடப்பட வேண்டும். அதுவே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்*

- ஆ.ஆ.ஆ. பயாஸ் அஹமத்
கலைப்பிரிவு (2005 - உயர்தரம்)
மதீனா தேசியப் பாடசாலை
மடவளை பஸார்,
கண்டி

தமிழிசை தலைதூக்க வித்திட்ட

விபுலானந்த அடிகள்

விபுலானந்த அடிகளின் எப்பணியை உலகம் மறந்தாலும் அவருக்கு வரலாற்றில் அழியாத இடம் கொடுத்திருப்பது அவரின் **யாழ் நூலா**கும். அவர் படைத்த தலையாய படைப்பு Master Piece என்றும் இலத்தீனில் 'Magnum Opus' என்றும் அறிஞர் கூறுவர். அடிகளாரின் யாழ் நூல் ஆக்கத்திற்கு அருந்தமிழ் நூல்களும் வடமொழி நூல்களும் ஆங்கில நூல்களும் துணை நின்றது உண்மை. அவர் ஓர் இளங்கலை அறிவியல் (B.Sc) பட்டதாரி. பெற்ற அறிவியல் அறிவு யாழின் நுணுக்கங்களை நுகர்ந்து உலகத்துக்கு உணர்த்த துணை நின்றது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

தேனூறும் மூவர் தேவாரமும், தித்திக்கும் திருவாசகமும், பக்திச் சுவை நனிசொட்டும் பரிபாடல் போன்றவையும் யாழ் நூல் பற்றிய அவரின் ஆய்வுக்குத் துணை நின்றன என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. எனினும் அவருடைய யாழ்நூலை நாம் தோய்ந்து படிப்போமாயின் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் அவரின் உள்ளத்தை முற்றாக ஆட்கொண்டதற்குச் சான்றுகள் நிறைய உண்டு.

சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுக் காதை, கானல்வரி மற்றும் ஏனைய பகுதிகளும் தமிழரின் ஆடற்கலையில் அருந்திறனையும் வியத்தகு யாழின் நுட்பத்தையும் பறை சாற்றி நிற்கின்றன. இத்தகைய செம்மைமிகு சிலப்பதிகாரம் அவர் பிறந்த 1892ஆம் ஆண்டிலேயே அச்சேறி நூல் வடிவம் பெற்றிருப்பதை எண்ணிப் பார்க்கும் போது இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் இடையில் பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளது என்பதை அறிய முடிகின்றது.

அவ்வாறே தமிழகத்தின் கரந்தைத் தமிழ் சங்கத்தில் இவரது தலையாய படைப்பாகிய **யாழ் நூல்** அரங்கேறிய ஓரிரு மாத இடைவெளியில் அவரது வாழ்வு முற்றுப் பெற்றது.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் கூட தனது யாழ் நூலில் '**பேரியாழ்**' என்ற பகுதியில் ஆனந்த குமாரசுவாமி தமிழிசை மரபை பற்றிக் கொண்டிருந்த கருத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்:

> அமராவதி நகரில் உள்ள சிலப்பதிகார காலத்துக் கல்லோவியம் எழில்மிக்க நரம்புகள் உள்ள யாழின் உருவத்தை நமக்குக் காட்டுகின்றது. இவ்வோவியத்தின் நிழற்படத்தினைக் கண்ணுற்ற ஆனந்த குமாரசுவாமி என்னும் ஈழநாட்டுப் பேரறிஞர் பழமையான இக்கருவி சிலப்பதிகாரத்தின் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழ்நாட்டிலே வழங்கி வந்தது என்பதையும் மிகப் பழமையான இசை மரபு ஒன்று தமிழகத்தில் இருந்து இல்லாமல் போனது

என்பதையும் உலகிலுள்ள பேரறிஞர்களுக்கு வெளியிட்டார்.

ஈழம் 19ஆம் நூற்றாண்டில் இருபெரும் தமிழ் அறிஞர்களை ஈன்றுள்ளது. இவர்கள் இருவரும் ஈழத்திலும் தமிழகத்திலும் ஏன் உலகத்திலுமே சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். 1822 இல் தோன்றி 1879 இல் தனது 57 ஆவது வயதில் மறைகிறார் யாழ்ப்பாணம் தந்த நல்லை நகர் ஆறுமுகநாவலர், '**நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே**' என்று தமிழ்காத்த தாமோதரனார் விடுக்கின்ற வினாவும் அதில் பொதிந்துள்ள விடையும் நாவலர் யார் என்பதை உலகுக்கு ஏற்றமுற எடுத்துக்காட்டுகின்றது. எனினும் அதன் விரிவு இங்கு வேண்டாம்.

இங்கு நாம் ஆய்வுக்கும் சிந்தனைக்கும் எடுத்துள்ள பொருள் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரைப் பற்றியதே. இவர் 'மீன் பாடும் தேன் நாடாம்' மட்டக்களப்பில் காரைத் தீவில் 1892 இல் தோன்றி 1947 இல் தனது 55ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

27.03.1892இல் பிறந்த இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் **மயில்வாகனன்.** இவர் பண்டிதர் பட்டம் பெற்றபோது **பண்டிதர் மயில்வாகனன்** என இவரை உலகம் அழைத்தது. இவர் யாழ்ப்பாணக் கல்லூரிகள் பலவற்றில் பயின்றதோடு அங்கு ஆசிரியராகவும் விளங்கியுள்ளார். அதுபோல மட்டக்களப்பிலும் பல பகுதிகளில் இவர் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இளமையிலே துறவுள்ளம் பூண்டிருந்த பண்டிதர் மயில்வாகனனார் இராமகிருஷ்ண பரமஹம்சரினாலும்,

வீரத்துறவி விவேகானந்தராலும் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் இராமகிருஷ்ண தொண்டர் அவையுடன் (மிஷன்) தன் இதயத்தை இணைத்துக் கொண்டார். இவ் இராமகிருஷ்ண சங்கத்தினூடாக இவர் கல்வித் துறைக்கு ஆற்றிய பணி மட்டக்களப்புக் கல்வித் துறையில் ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

ஒரு காலத்தில் மட்டக்களப்பு, கல்வித் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் விளங்கியது. பின்பு கிறிஸ்தவ தொண்டர்களின் வருகையால் முன்னேற்றம் கண்டதை நாம் மறப்பதற்கில்லை. ஆனால் மதமாற்ற அடிப்படையில் தான் கல்வி வாய்ப்பினைப் பெற்றனர். இது கல்விக்காக மனமாற்றம் ஏற்படாத நிலையில் ஏற்பட்ட மதமாற்றம். இது விபுலானந்த அடிகளுக்கும் அவரைச் சார்ந்த அறிஞர்களுக்கும் விரும்பிய செயலாக அமையவில்லை. எனவேதான், விபுலானந்த அடிகள் மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் 'குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலையிலும்' கல்லூரிகளைத் தோற்றுவித்துத் தமிழ் மக்களுக்குக் கல்வியைக் கொடுத்து தமிழ் மக்களின் கண்ணைத் திறந்தார்.

நாம் உலகில் எத்தகைய அறங்களைச் செய்தாலும் அவ்அறங்களின் தன்மைக்கு ஒரு எல்லையுண்டு. ஆனால், கல்வித்துறையில் நாம் ஆற்றுகின்ற பணிதான் மக்களுக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்கு ஏற்ற மிக்க வாழ்வினைக் கொடுக்கும் என்பதை நன்குணர்ந்த விபுலானந்த அடிகள் 'பாட்டிற்கு ஒரு புலவன் பாரதி' கண்ட பின்வரும் கனவை நனவாக்கும் முறையில் செயற்பட்டார். தமிழ் ஈழப்பகுதிகள் அனைத்திலும் கல்வி வெள்ளம்

பெருக்கெடுத்து ஓடும் வகையில் விபுலானந்த அடிகளின் பணி அமைந்திருந்தது.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்னையாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்

என்ற பாரதி தன் பாடலில் தந்த வடிவத்துக்கு உணர்ச்சி செயல் வடிவம் கொடுத்தவர் நம் விபுலானந்த அடிகள்.

அவர்களின் அறிவுக்கண்ணைத் திறக்கின்ற முறையில் தம் விடுதலை வேட்கையை வெளிக்காட்டுகின்ற முறையில் பாரதியின் பாடல்களைப் பாடி இந்திய தேசியக் கொடியை உயர்த்தி வைத்த பெருமை இவரையே சாரும். பாரதக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வெள்ளையர் ஆட்சி வீழ்ச்சியுற இவர் ஆற்றிய பெருமையை எளிதில் எவரும் மறக்க முடியாது. பொதுவாக அறிஞர் உலகம் ஒதுங்கி வாழும் குற்றத்திற்கு ஆளாகுவது வழக்கம். ஆனால் நம் விபுலானந்த அடிகளோ 'அறிவுடைமைக்கு அழகு துணிவுடமை' என்ற வள்ளுவர் கூற்றை நினைவுகொண்டு துணிவோடு துடித்தெழுந்து ஆற்றிய பணிகள் வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சிகளாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சுற்றாடலில் ஏழை, எளிய மக்கள் சேரியில் வாழ்ந்தனர். சேரியில் வாழ்ந்த மக்களிடம் நேரிற் சென்று அவர்களின் வறுமையைப் போக்கி அவர்கள் கல்வி வளம் பெறும் வகையில் வாழ்வில் முன்னேற இவர் ஆற்றிய பணியை

இன்றும் அங்கு வாழ்கின்ற மக்கள் நன்றி உணர்வோடு நவில்கின்றனர். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர் நம் விபுலானந்த அடிகள் என்பதற்கு வேறு என்ன எடுத்துக்காட்டு தேவை?

அவரது தலையாய படைப்பாகிய யாழ் நூல் அவருக்கு அழியாப் புகழைத் தந்தது. எனினும் அவரது ஏனைய படைப்புகளை நாம் மறப்பதற்கில்லை. **மதங்க சூளாமணி** அவருக்கு நாடகத் துறையில் இருந்த ஆர்வத்தையும், ஆற்றலையும் எடுத்துக் காட்டுகின்றது. அவரின் கவித்துறை ஆற்றலும் தனித்தன்மை வாய்ந்தது. அவர் நண்பர் தமிழ் அறிஞர் **கந்தசுவாமி** மறைந்தபோது அவர் எழுதிய '**கங்கையில் விடுதலை ஓலை**' என்ற கவிதை எம் நெஞ்சை கசிந்துருகச் செய்யும் இரக்க உணர்வுப் பாடலாகவும் தமிழின் உருக்கும் தன்மைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது.

மகாகவி வாழ்த்தும் விபுலானந்தர்

விபுலானந்த அடிகளாரின் ஆங்கிலப் புலமை அவருடைய தமிழ்ப் புலமைக்கு எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல என்பதை எடுத்துக் காட்டுகின்ற முறையில், ஆங்கிலத்தில் இருந்து பாடல்கள் பலவற்றைக் குறிப்பாக செகப்பிரியன் (ஷேக்ஸ்பிரியர்) பாடல்கள் பலவற்றை அவர் தமிழில் தந்ததை நாம் படிக்கின்ற போது அவற்றை மொழிபெயர்ப்புக் கவிதை என்று கொள்ளாது மூலக்கவிதை என்றே கொள்ளுமளவுக்கு அமைந்துள்ளன. அவரின் பாடல்களில் மூழ்கிய **கவிஞர் மகாகவி** அவர்கள் அவரின் கவித்துவ ஆற்றலைப் பின்வருமாறு பாடி மகிழ்கின்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, பிரபுத்தர பாரத, இந்தியன் ரிவியூ (Indian Review) ஆகிய இதழ்களிலும் அவர் வரைந்துள்ள கட்டுரைகள் எம் சிந்தனைக்கு விருந்தாகும். எடுத்துக் காட்டாக அண்ணாமலைப் பல்கலைக்கழக இதழில் முதலில் வெளிவந்த பின்பு 'தமிழ்ச்சால்பு' (Tamil Culture) இதழில் வெளிவந்த 'The Development of Tamilian Religious Thought' (தமிழர் சமய சிந்தனையின் வளர்ச்சி) என்ற கட்டுரை அவரது ஆழ்ந்த தமிழ்ப் பற்றுக்கும் ஆய்வுள்ளத்துக்கும் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இக்கட்டுரையில் நச்சினார்க்கினியாரை மேற்கோள்காட்டி வியாசருக்கு முன்பு தொல்காப்பியர் இருந்தார் என்பதை எடுத்துக் காட்டுகின்றார். அவரின் கட்டுரையில் முருக வழிபாட்டின் சிறப்பு பேசப்படுகின்றது. அத்தோடு சுருக்கம். விளக்கம், தெளிவு தருகின்ற சங்க நூல்களின் சிறப்பு செப்பப்படுகின்றது. இக்கட்டுரையில் சித்தாந்தம் விளக்கப்படுகிறது. வேதாந்தத்தின் இயல்பு கூறப்படுகின்றது. தமிழுக்கு வருகை தந்த புத்தமும், சமணமும் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்கியுள்ளார். மெய்மறந்த நிலையில் இக்கட்டுரையில் திருவள்ளுவரின் அளவிடற்கரிய பெருமையை விவரித்துள்ளார்.

'பிறநாட்டார் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும். அத்தோடு இறவாத புகழுடைய தமிழ் இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும், என்பது கவிஞர் பாரதியின் விருப்பம். இவற்றை நினைவு கொண்டு 1936 இல் தமிழில் கலைச்சொல் ஆக்க மாநாடு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் தலைமையில் நடைபெற்றது. காலத்தின்

கருத்தோட்ட வளர்ச்சிக்கு ஏற்ப தமிழை எப்படி வளம்படுத்த வேண்டும் என்பது பற்றி அன்று அவர் ஆற்றிய உரை இன்றும் எம் தேவையை நிறைவேற்றும். அது மீண்டும் படிக்க வேண்டிய உரையாக விளங்குகின்றது.

அவர் படைத்த யாழ் நூல் அவருக்கு அழியாப் புகழைத் தந்துள்ளதை நாடும், நானிலமும் ஏற்கும். ஆனால் அது கொண்டு அவரின் புகழை அவ் எல்லைக்குள் வைத்திருப்பது தவறு. அவர் தொடாததுறையும் இல்லை. தொட்டுத் துலங்காத துறையும் இல்லை எனக்கூறுவதற்கமைய அனைத்துத் துறைகளிலும் அவர் பணி துலங்கியது. துறவறம் பூணுவது யார்க்கும் எளிது. ஆனால் உண்மைத் துறவியாக வாழ்தல் என்பது எல்லோரும் கடைப்பிடிக்கத்தக்க நெறியல்ல. ஆனால் குறிப்பிடத்தக்க அளவு உள்ளும், புறமும் தூய்மையாகத் துலங்கும் துறவியாக விளங்கிய இவர் தூயோன் அருளை நாடி நின்றார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே. தன் கடன் அடியேனைத் தாங்குதல்' என்ற அப்பர் கூற்றுக்கு இலக்காக வாழ்ந்த விபுலானந்த அடிகள் இறைவனைப் பற்றி எண்ணுகின்ற போதல்லாம் தான் இயற்றிய பின்வரும் பாடலையே அவர் அடிக்கடி உச்சரித்து இறையருளில் தோய்வதுண்டு. மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள அவர் நினைவிடத்தில் (சமாதி) இப்பாடல் பொறிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் பிரானார்க்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலரும் அல்ல
உள்ளக் கமலடி உத்தமனார் வேண்டுவது

இப்பாடலில் கூறியதற்கமைய வேறு எதனையும் வேண்டாது நின்ற நம் விபுலானந்த அடிகள் தம் உள்ளக் கமலத்தை இறைவனிடம் ஒப்படைக்கும் நோக்குடன் 19.07.19447இல் இறைவன் திருவடியில் அமைதி கண்டார்.

கிழக்கெழுங் கதிராய் நாட்டில் கிளம்பிய விபுலானந்த அடிகள் முழங்கிய தமிழின் மேன்மையை முழு உலகமும் அறிந்த நிலையிலும் இங்குள்ளோர் அறிய வேண்டியளவிற்கு அறியாதது வருந்தத்தக்கதே.

அறிவியற் பட்டம் பெற்ற ஆய்ந்திடும் புலமை கொண்டவர். திறம்மிகு யாழ்நூல் தந்தே முத்தமிழ் இசையை வளர்த்தவர். அறமிகு அறிவின் பாலது இதுவென எமக்கு எடுத்துக்காட்டியவர்.

–மா.க. ஈழவேந்தன் எம்.பி

- நன்றி : 'தினக்குரல்'

இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் -
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும்.

- பாவேந்தர் பாரதிதாசன்

தமிழை அழகொழுகப் பேசுபவர்

விபுல பீதாம்பரன்

தமிழை அழகொழுகப் பேசுபவர் விபுலானந்த அடிகளார். அப்பேச்சை அடியொற்றிப் பேசப் பழகியவர்கள் பலர். வெற்றி இரண்டொருவருக்குத்தான். அதில். **பீதாம்பரனார்** ஒருவர் எனக் கூறின் மிகையாகாது.

தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரால், தம்பி என்று அழைக்கப்படும் ஒரே ஒருவர் எம் **பீதாம்பரன்** என்றால், அடிகளாருக்கு இவர்மேல் எத்தகைய பற்றும் பாசமும் இருந்திருக்க வேண்டும் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. அப்படியொரு பற்றும் பாசமும் அடிகளாருக்கு நம் பீதாம்பரனில் இருப்பதென்றால் நம் பீதாம்பரன் எத்தகைய மேன்மகனாக இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கும் போது நெஞ்சு பூரிக்கின்றது.

1898-11-09இல் சாவகச்சேரியில் பிறந்தார். இவரது தந்தையார் **நன்னித்தம்பி மாரிமுத்து.** தாயார் **திருமதி வைரவநாதனின்** மகள் **அன்னமுத்து** என்பவராவர்.

முன்னாள் பல்கலைக்கழகப் பதிவாளராக இருந்த **ஏ.எம்.கே. குமாரசுவாமி** அவர்கள் இவரின் சகோதரர் ஆவார்.

"நற்குடிப் பிறப்பும், பெற்றோரின் இல்லச் சிறப்பும், பரம்பரைக் கல்விச் சிறப்பும் பெரியோர் உறவும், சங்கநூற் பயிற்சியும், ஒருங்கே சேர்ந்ததனால் கல்விக்கு அடித்தளம் மிக ஆழத்தில் இடப்பட்டது. படிப்பதெல்லாம் பழந்தமிழ் நூல்களாகி, நினைப்பதெல்லாம் தமிழ்த்தாயின் உயர்வுமாகி, ஒரு இல்லறத் துறவிபோல் வாழ்ந்தார் பீதாம்பரனார்"

என்று பீதாம்பரனாரோடு திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக் கல்லூரியில் கற்பித்த தம்பலகாமத்தைச் சேர்ந்த பண்டிதர் **ஐ. சரவணமுத்து** தன் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி விபுலானந்தர் "**விவேகானந்தம்**" என்ற சஞ்சிகைக்குச் சிலகாலம் ஆசிரியராக இருந்தார். அந்நாளிலிருந்தே பீதாம்பரனார் இச்சஞ்சிகைக்கு கட்டுரைகள் எழுதியுள்ளார்.

ஈழகேசரி ஆண்டு மடல் ஒன்றில் '**நாடகச் சுவடிகள்**' என ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருந்தார். அது மட்டுமன்றி இந்தியாவில் வெளிவந்த பத்திரிகைகளிலும் சிறந்த கட்டுரைகள் எழுதியுள்ளார்.

"**விபுலானந்தர் வெண்பா**" என்ற நூலினையும் எழுதியுள்ளார். 1918இல் அகில இலங்கை தமிழ்க் கட்டுரைப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றார்.

பீதாம்பரனார் ஒரு சிறந்த கவிஞராகவும் விளங்கினார்.

திரு **அருணந்தி** அவர்கள் வடபெரும்பாக வித்தியாதரிசியாக இருந்த காலத்தில் பாலர்களுக்கு ஏற்ற

பாடல்கள் தமிழில் இல்லாதது கண்டு அக்குறையைத் தீர்க்கும் பொருட்டு, தமிழ்ப் புலவருக்கிடையில் ஒரு போட்டியை ஏற்படுத்தினார். நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பீதாம்பரனார் உட்பட பல புலவர்கள் இப்போட்டியிற் பங்கு பற்றினர்.

சிறந்த பாடல்களைத் தெரிந்தெடுக்க நியமிக்கப்பட்ட குழுவில் **சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், நவநீத கிருஷ்ண பாரதியார், மகாலிங்க சிவம், பண்டிதமணி கணபதிப்பிள்ளை** ஆகியோர் இருந்தனர். இவர்களின் தீர்ப்பின் படி பீதாம்பரனாருக்கு முதலாம் படியில் (grade) முதற்பரிசும், இரண்டாம் படியில் (grade) இரண்டாம் பரிசும் கிடைத்தது. இரண்டாம் படியில் முதற்பரிசு சோமசுந்தரப் புலவருக்குக் கிடைத்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு வந்த சிறந்த பாக்களில் முதற் பதிப்பு 1935ம் ஆண்டிலும், இரண்டாம் பதிப்பு 1941இலும் வெளிவந்துள்ன.

பீதாம்பரனார்க்கு பல பைத்தியங்கள். ஒன்று தனித்தமிழ்ப் பைத்தியம். தனது பெயரை "**பொற்பூந்துகிலார்**" எனத் தமிழ்ப்படுத்திக் கொண்டு வழங்கிய பெருமை அவருக்கு உண்டு. இதே சமயத்தில் 'தனித்தமிழ்' பைத்தியம் என்று எதிர்ப் பிரசாரஞ் செய்து கொண்டு மேடையேறி விவகாரம் பண்ணிய பெருமை தமையன் குமாரசுவாமிக்குண்டு.

அடுத்த பைத்தியம் ஒன்று அது அச்சுக்குப் போகும் பைத்தியம் - நூலெழுத வேண்டும் அவை அச்சேற வேண்டும்; பாடினார் யார்? பாடுவித்தார் யார்?

பதிப்பித்தார் யார்? என்று வரலாற்றுக்கு வழிசெய்ய வேண்டும் எனத் துடியாகத் துடித்துக் கொண்டிருந்தார் அவர்.

அவரின் இன்னொரு பைத்தியம். அது யாழ்ப் பைத்தியம். விபுலானந்த அடிகளாரின் யாழ்நூலைப் படிக்க வேண்டும், பரப்ப வேண்டும் என்னும் பைத்தியம் தலைக்கேறி அது பின்னர் அவரது வீடு முழுவதையுமே பற்றிக் கொண்டது. தமது வீட்டுக்கு "**யாழ் அகம்**" என்றே பெயரும் வைத்துக் கொண்டார்.

பீதாம்பரன் அவர்களின் பிரதான பைத்தியம், தனது குருவின் துறவுக்கோலங் கண்டதால் பிறந்த பைத்தியம். தானும் தலையை மொட்டை அடித்தார்; உச்சியில் நாலு மயிர் வைத்துக் கொண்டு வெள்ளைக் கலையுடுத்தி பிரமசரியம் பூண்டு கொண்டு சிலகாலம் திரிந்தார்.

பீதாம்பரன் அவர்கள் கணிதத் துறையிலும் பேராற்றல் படைத்தவர். தேசிய நோக்குடன் கணித நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

பீதாம்பரன் அவர்கள் படியாத பிள்ளைகளுக்கு அடியாத ஆசிரியர், நண்பர்களைப் புரிந்து அவர்கள் குறும்புகளைச் சகித்துக் கொண்ட நல்ல நண்பர், மென்மையும் இளமையும் செம்மையும் எளிமையும் வாய்ந்த இன்கவிப் புலவர்; ஈழத்தின் இயற்கை அமைதியை நன்கு பயன்படுத்த வழிசெய்த தேசியச் செல்வர். வடக்கையும் கிழக்கையும் மனத்தாலும் குணத்தாலும் இணைத்து வைத்து வாழ்க்கை நடத்திய மாபெருஞ் சாதனை மன்னர். மற்றவர்களின் மகிழ்ச்சியில் மனநிறைவு கொண்ட வளர்தமிழ்ப் பண்பாளர்.

இவர் திருகோணமலை திருவாட்டி **பொற்கொடி நாயகியைத்** திருமணம் செய்து கொண்டார். இவர்களது இல்லறம் இனிதே பல ஆண்டு கழிந்தது. எதிர்பாராத விதமாக இவர் மனைவி இறைபதம் சேரவே சிலகாலம் கழித்து உடுப்பிராயைச் சேர்ந்த திரு. திருமதி தம்பையாவின் புதல்வி **நாகரத்தினம்** அவர்களை மறுமணம் செய்துகொண்டார்.

இவரது திருமண வாழ்வின் பயனாக அவருக்கு

திருமதி **லீலா சோதி ஸ்ரீஹரி** (U.K.)

திருமதி **சந்திரா எட்கார் தாமோதரம்** (U.K.)

விவேகானந்தராஜ் (Alkemie, Ceylon Ltd)

திருமதி **நல்லநாயகி ராஜரெட்டினம்**

ஜெகதீஸ்வரன் (ஜெர்மனி)

செல்வி **புவனேஸ்வரர் பீதாம்பரம்**

(Hoemeopathy Medical Mission Madras State)

பரமேஸ்வரன் - கோணேஸ்வரன் ஈழத்தில் முதல் மெல்லிசைப்பாடல் இசைத்தட்டு வெளியீட்டாளர். **பரமேஸ் கோணேஸ்** இசைக்கழக உரிமையாளர்கள் ஆகிய செல்வக்குழந்தைகள் பிறந்தன. ஆரம்பத்தில் பாடசாலை வித்தியாதிபதியாகவும் கோப்பாய் அரசாங்க பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும்,

1. Member of the Advisory Committee on the Production of Tamil Text Books

2. Assistant Examiner (Education Department)
Assistant Secretary and Examiner J.O.S.S

3. First Head Master, Saiva English School, Sanka thanai
(Chavakachcheri Hindu College)

4. First Principal (Reorganised)
Stanley Govt Central School, Jaffna

5. Mathematics Master and Tamil Pandit
R.K.M. Hindu College, Thirukkonamalai (1925-1928)

6. Head Master Govt. Rural Scheme Schools
Batticaloa, 1934 - 1941

- ஆகிய பதவிகளை வகித்தும்,

7. மதங்கசூளாமணி மான்மியம் (சாகித்திய மண்டல விரிவுரை) விபுலானந்தர் வெண்பா, விவேகாநந்த பதிகள் ஸ்ரீ இராமகிருஷ்ண அகவல் 192 இளைஞர் கணிதம் 1-5 (1923)

- முதலிய நூல்கள் எழுதியும்,

8. (a) Cambridge Senior Tamil Texts 1923
(b) Educational Publications S.P. Press
(c) Angilavani ஆங்கிலவாணி

- ஆகியவற்றின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

தோன்றிற் புகழோடு தோன்றுக என்பதற்கேற்ப தோன்றிய ஈழத்தமிழறிஞர் மா. பீதாம்பரன் அவர்கள் தமது 74ஆவது வயதில் எதிர்பாராத விதமாக 05.04.1972இல் இறந்தார்.

தண்டமிழிற் பேரன்பும் சைவத் திருநெறியால்
மண்டும் ஒழுக்கமும் வாய்த்தவனை - அன்டுமன்பு
துன்றும்பீ தாம்பரனைக் கோணேச் சுரத்தோனை
என்று நாம் காண்போம் இனி.

புலவர் பெருமையினை போற்றி யறிந்தோன்
புலவர்பால் அன்பு பொருந்தி - நலஞ்செய்யும்
பீதாம் பரன் மறைந்தான் என்றதொரு பேரிழவந்
தேதேதோ செய்த தெனக்கு.

சைவ நெறிவளர்த்தான் தண்ணந் தமிழ்வளர்த்தான்
உய்யும் நெறியால் ஒழுகினன் - மெய்வளரும்
பீதாம் பரன்றாள் பிரிந்தான் துயர்மற்ற
ஏதா றுதலும் இலை.

தமிழ்ச் சுடர் கவிஞர் விபுல பீதாம்பரன் அவர்களின் பிரிவைத் தாங்கொணாது நொந்து மனம் வெந்து குமுறி எழுந்த உணர்ச்சிப் பெருக்கால், பீறிட்டு வந்த இரங்கற்பா இது.

இந்த உள்ள நெகிழ்ச்சிக்கு உந்தப்பட்டவர் சாதாரண மனிதர் அன்று. சைவத்திலும் தமிழிலும், தோய்ந்தெழுந்த சுந்தரன், தமிழ்வித்தகன், கலைமகளின் காவலன் கி.வா. ஜகந்நாதன் அவர்கள்.

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதற்கமைய தமிழ் அறிஞர் **கி.வா. ஜகந்நாதன்** அவர்களின் நெஞ்சை எம் பீதாம்பரனாரின் பிரிவு நெகிழவைத்ததென்றால், எம் பிதாம்பரன் எத்தகைய அறிஞன், கல்விமான், பண்பான படைப்பாற்றல் கொண்டோன், சைவத்தின் சான்றோன் என்பதை நாம் கூறவேண்டியதே இல்லை.

- கலாபூஷணம்
த. சித்தி அமரசிங்கம்
திருகோணமலை

இலக்கிய கலாநிதி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

இந்த சமுத்திர நித்திலம் எனத் திகழும் ஈழமணித் திருநாட்டின் இருதய ஸ்தானம் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் நீர்வளம், நிலவளம் மிக்க பகுதி தென்மராட்சி. தென்மராட்சியைச் சேர்ந்த தனங்கிளப்பு என்னும் மருத நிலப்பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார் காரைத்தூவிநாயகர்.

தென்மராட்சிப் பிரிவில் கல்வி நலஞ் சான்ற மக்கள் வாழும் இன்னொரு பதி மட்டுவில். உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை, பண்டிதர் வே. மகாலிங்கசிவம் உள்ளிட்ட பல அறிஞர் பெருமக்களைத் தந்த பதி மட்டுவிற் பதி. மட்டுமல்ல தருமர் என்று அன்போடு அழைக்கப்பெற்ற சின்னத்தம்பி அவர்களும் தனங்கிளப்பு முருகர் மகளான **வள்ளியம்மை**யாரும் சென்ற நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சிறப்புடன் வாழ்ந்த இலட்சியத் தம்பதிகள்.

சென்ற விகாரிக்கு முந்திய விகாரி வருடம் ஆனி மாதம் 14ஆம் நாள் செவ்வாய்கிழமை இரவு 12 நாழிகை 40

விநாடி அளவில் (27.06.1899 செவ்வாய்க்கிழமை இரவு 11 மணி) உதயநட்சத்திரத்தில் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தார் வள்ளியம்மையார். தந்தையாரான சின்னத்தம்பியார் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்த சந்தோஷ மிகுதியால் துள்ளிக் குதித்தார். கணபதியின் திருவருளை முன்னிட்டுப் பிறந்த ஆண்குழந்தைக்குக் கணபதிப்பிள்ளை என்று நாமகரணமுஞ் செய்தனர். (மரபுவழிப்பெயர் சட்டநாதர்) அவரே இலக்கிய கலாநிதி **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** அவர்கள்.

1902ஆம் ஆண்டு மாசிச் சிவராத்திரியன்று திருமதி சின்னதம்பி வள்ளியம்மையார் தமது 30ஆவது வயதில் திடீரெனக் கண்ணை மூடிவிட்டார். சிவராத்திரியுற் சிவகதி சேர்ந்த புண்ணியவதி வள்ளியம்மை என்று உலகம் அம்மையாரைப் பாராட்டியது.

மட்டுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையில் (இப்பொழுது சந்திர மௌலீச வித்தியாசாலை) ஆரம்பக் கல்வியைப் பெற்ற கணபதிப்பிள்ளைக்குப் படிப்பில் தடை ஏற்பட்டது. **உரையாசிரியர் ம.க.வே.** அவர்களது பிள்ளைகளுடன் கூடிக்குலாவியும் சேர்ந்து படித்தும் வந்தார் கணபதிப்பிள்ளை.

1912 இல் தந்தையார் சின்னத்தம்பியார் மகன் கணபதிப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு தனங்கிளப்புக்குப் போய் அங்கு குடியேறினார். அறிஞர்களான சாவகச்சேரி **பொன்னையா** உபாத்தியார், சாவகச்சேரி **பொன்னம்பலப்புலவர்,** சாவகச்சேரி **பொன்னப்பா பிள்ளை** ஆகியோரிடத்தில் கணபதிப் பிள்ளை பாடங் கேட்டார்.

1917 கார்த்திகையில் நாவலர் காவிய பாடசாலையிற் சேர்ந்து பேரறிஞரான சுன்னாகம் ஸ்ரீமத் **அ. குமாரசுவாமிப் புலவர்** அவர்களிடம் பாடங்கேட்கும் பெரு வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அப்பொழுது நாவலர் காவிய பாடசாலை மானேஜராக இருந்தவர் நாவலர் தமையனார் புத்திரர் ஸ்ரீமத் **த. கைலாசபிள்ளை** அவர்கள்.

ஸ்ரீமத். கைலாசபிள்ளை அவர்களுடன் கணபதிப்பிள்ளைக்கு ஏற்பட்ட விசேட கல்வித் தொடர்பு கல்வியில் மேலும் வளர்ச்சி பெற இடமளித்தது. குமாரசுவாமிப் புலவர் அவர்களின் மறைவுக்குப்பின் வித்தகம் **ச. கந்தையாப்பிள்ளை** (தென்கோவை பண்டிதர் ச.க.) அவர்களுடனும் கல்வித் தொடர்பு ஏற்பட்டது. தொடர்ந்தும் நாவலர் காவிய பாடசாலையில் வித்துவான் **ந. சுப்பையா பிள்ளை** அவர்களிடம் பாடங்கேட்டார். கணபதிப்பிள்ளை அவர்கள் 1926 இல் மதுரை தமிழ்ச்சங்க பண்டிதரானார்.

நாவலர் காவிய பாடசாலையில் இவரோடு சேர்ந்து கற்றவர்களில் மட்டக்களப்பு புலவர்மணி **ஏ. பெரியதம்பிப்பிள்ளை** அவர்களும் வட்டுக்கோட்டை சிவஸ்ரீ **குருமூர்த்தி** ஐயரவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். கணபதிப் பிள்ளை அவர்கள் மிகவும் சிறப்பாகப் பண்டித பரீட்சையிற் சித்தியெய்தியமையைப் பாராட்டி மானேஜர் ஸ்ரீமத் கைலாசபிள்ளை அவர்கள் மாணவரான கணபதிப் பிள்ளைக்குப் பொற்பதக்கம் ஒன்றைச் சூட்டி உற்சாகப்படுத்தினார். மட்டுவில் பெருஞ்சபை ஒன்றைக் கூட்டிப் பதக்கத்துக்கு ஏற்ற சங்கிலியைப் பரிசாக அளிக்க ஒழுங்கு செய்திருந்தவர் மட்டுவில் **செல்லப்பா** அவர்கள். திரு. செல்லப்பா அவர்களை லோச்செல்லப்பா என்றே அழைப்பது வழக்கம்.

காரைநகர் அருணாசல உபாத்தியாரின் ஆலோசனைப்படி ஆசிரியப் பயிற்சி பெறும் பொருட்டு 1927ஆம் ஆண்டு கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையிற் சேர்ந்தார் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள். எதிர்பாராத விதமாக அதேயாண்டில் தந்தையை இழந்து தனிமரமானார். பயிற்சி பூரணம் அடைந்தது. 1920இல் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை விரிவுரையாளர் பதவி இவரைத் தேடிவந்தது.

இவர் சைவாசிரிய கலாசாலை விரிவுரையாளார் பதவியை அலங்கரித்த முப்பது ஆண்டுகளும் தொடர்ந்து வந்த காலமும் சைவ தமிழ் வளர்ச்சியின் பொற்காலம் எனலாம். மிகவும் கம்பீரமான தோற்றமும் ஆளுமையும் பொருந்தியவரான மயிலிட்டி **சி. சுவாமிநாதன்** B.A அவர்கள் அதிபர். மௌன தவ முனிவரான **ஸ்ரீ பொ. கைலாசபதி** அவர்கள் உப அதிபர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையைத் தலைமைப் பாடசாலையாகக் கொண்டு ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகளை நிறுவிய பெருமையும் சைவ அநாதசாலையை நடத்திய சிறப்பும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்கு உண்டு.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தவர் சைவப்பெரியார் அப்புக்காத்து திரு. **சு. இராசரத்தினம்** அவர்கள். 'நாவலருக்குப்பின் நமக்கோர் காவலர் திரு. **இராசரத்தினம்** அவர்கள்' என்பார்கள். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் நடத்திவந்த மும்மொழிக் காவிய பாடசாலை அந்தக் காலத்தில் ஒரு பல்கலைக்கழகம் போல விளங்கியது.

மௌன தவ முனிவரான உப அதிபர் **ஸ்ரீ பொ. கைலாசபதி** அவர்களது நெருங்கிய தொடர்பு தான் இலக்கிய உலகில் சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்த பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களைச் சமய உலகுக்கும் இழுத்து விட்டது. என்றே கூறலாம். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர்களுக்கெல்லாம் பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் பண்டிதர் ஐயாவாகவே காட்சி அளித்தார்கள். சைவாசிரிய கலாசாலையிற் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குக் கல்விக்கூடங்களில் நல்ல வரவேற்பும் இருந்தது.

பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க வளர்ச்சிக்கு உழைத்த உழைப்பு மகத்தானது. கலாநிலையத்துடன் கொண்டிருந்த தொடர்பு என்றும் நினைவுகூரத்தக்கது.

1915இல் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியில் இடம்பெற்ற தமிழ் விழாவில் தமிழ் பற்றிய அவரது உரை உச்சமாயமைந்தது. இலங்கை இந்தியப் பத்திரிகைகள் பண்டிதமணி அவர்களின் பொருள் பொதிந்த பேச்சினை மிகவும் பாராட்டி எழுதின. கல்விமான்கள் வியந்தார்கள். "**பண்டிதமணி**" என்ற பட்டமும் வந்து சேர்ந்தது. இப்பொழுது அவர்கள் பண்டிதமணி கணபதிப்பிள்ளை 1959இல் விரிவுரையாளர் பதவியிலிருந்தும் ஓய்வுபெற்றார்கள்.

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் கேளாரும் வேட்ப மொழியும் ஆற்றல் மிக்கவர்களான பண்டிதமணி அவர்களது சமயம் இலக்கியம் சமூகம் சம்பந்தமான பேச்சுகள் ஈழத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம்

நிகழ்ந்திருக்கின்றன. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று எடுத்துச் சொல்லும் பண்டிதமணி அவர்களின் கூரிய மதியினைப் பாராட்டாமல் யாருமே இருந்ததில்லை.

சைவாசிரிய கலாசாலையில் பதவி வகித்த காலங்களிலும் அதன் பின்னரும் அயல் நாட்டு அறிஞர்கள் விசேடமாகத் தமிழ்நாட்டு அறிஞர்கள் ஈழத்துக்கு விஜயஞ்செய்த காலங்களில் பண்டிதமணி அவர்களைக் கண்டு கலந்துரையாடி அவரது கருத்துகளை அறிந்து மிகவும் மகிழ்ந்ததுண்டு.

ஈழத்துப் புலவர்களது உண்மைச் சரித்திரங்களை நிலைநாட்டிய பெருமைக்கு உரியவர்கள் பண்டிதமணி அவர்களே. நாவலர் பெருமானின் எழுத்துகளையெல்லாம் எழுத்தெண்ணிப் படித்து அவர்களது சரித்திரத்தையும் அவர்களோடு சம்பந்தப்பட்டவர்களது சரித்திரங்களையும் ஆராய்ந்து பல கட்டுரைகளாகத் தந்துள்ளார்.

கலைக்களஞ்சியத்தில் நாவலர் பற்றியும், **சிதம்பரம் கும்பாபிஷேகமலரி**ல் ஞானப்பிரகாச முனிவர் குறித்தும் **கலைமகள்** மலரில் பஞ்சகன்னிகைகள் என்ற தலைப்பிலும் எழுதிய கட்டுரைகள் விலைமதிக்க ஒண்ணாதவை.

இலக்கிய சம்பந்தமாகவும் சமய சம்பந்தமாகவும் பண்டிதமணி அவர்கள் எழுதிய கட்டுரைகள் ஆயிரத்துக்கு மேல் என்று துணிந்து கூறலாம். பண்டிதமணி அவர்கள் எழுதிய அணிந்துரைகள் வாழ்த்துரைகள் பல நூற்றுக்கணக்கானவை. அவர்களது தனி நடையை வாசித்து மகிழ்வதற்கென்றே ஒரு பெருங் கூட்டம் இருந்தது. அன்னவரது ஆக்கங்கள் இருபத்துமூன்று நூல்களாக

வெளிவந்துள்ளன. இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசில்களைப் பெற்ற நூல்களும் இவற்றுள் அடங்கும். ஏனைய கட்டுரைகளும் நூலுருவம் பெற்றுள்ளன என்பது நம்பிக்கை.

பல பல சந்தர்ப்பங்களையொட்டிப் பண்டிதமணி அவர்கள் கவிதைகளையும் செய்திருக்கின்றார்கள். காலகதியில் அவர்களது கவிதைகள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு நூலுருவம் பெறக்கூடும். தமது குலதெய்வமான காரைத்தீவு விநாயகர் மீது அவராலே பாடப்பெற்ற ஊஞ்சற்பாக்கள் பக்திச்சுவை நனிசொட்டுவன.

பண்டிதமணி அவர்கள் ஓய்வுபெற்ற சமயம் திருநெல்வேலியிலும் மட்டுவிலிலும் யாழ்நகர மண்டபத்திலும் பெருவிழாக்கள் நடந்தன. இக்காலத்தில் மட்டுவிலில் அமைக்கப்பெற்ற பண்டிதமணி மணிமண்டபம் இப்பொழுதும் பூரணப் பொலிவுடன் விளங்குகிறது. நூல் வெளியீட்டு விழாக்களோ அனேகம். கந்தபுராணம் தஷகாண்டம் உரை நூல் வெளியீட்டு விழா மிகமிக உச்சமாக விளங்கியது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலைச் சமய விழாவிலும், பேராசிரியர் **ஆ.வி. மயில்வாகனம்** அவர்களால் பேராதனைப் பல்கலைக்கழகம் கலை மண்டபத்தில் இடம்பெற்ற கந்தபுராணம் தஷகாண்டம் உரைநூல் வெளியீட்டு விழாவிலும், சைவாசிரிய கலாசாலை முன்னைநாள் அதிபர் **திரு.சி. சுவாமிநாதன்** அவர்களால் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் இடம்பெற்ற கந்தபுராணம் தஷகாண்டம் உரைநூல் சிறப்பு விழாவிலும்

பண்டிதமணி அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்கள். இவற்றைவிட வேறுபல சந்தர்ப்பங்களிலும் பொன்னாடை மரியாதைகள் இவருக்குக் கிடைத்தன.

பிற்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தால் பண்டிதமணி அவர்களுக்கு வழங்கப்பெற்ற பட்டம் **'இலக்கிய கலாநிதி'** என்பதாகும். இன்னும் எத்தனை எத்தனையோ பட்டங்கள் எல்லாம் இடையில் வந்து அவரைச் சேர்ந்து கொண்டன. பட்டங்கள் அவரைத் தேடிவந்த காரணத்தினால் அவர்கள் ஒரு நொடிப்பொழுதாவது பெருமிதம் அடைந்ததுமில்லை. இறுமாந்ததுமில்லை.

தமக்குக் கிடைத்த பொன்னும் புகழும் குலதெய்வமான காரைத்தூ விநாயகப்பெருமானும் மட்டுவில் மருதடி பனையடி விநாயக மூர்த்திகளும் அநுக்கிரகித்தவை என்றும் எல்லாம் அத்தெய்வங்களுக்கேயுரியவை என்றும் பண்டிதமணி அவர்கள் குறிப்பிடுவார்கள்.

அருள் கனிந்த பார்வை, அன்பு கெழுமிய வார்த்தை, மனநிறைவைக் காட்டும் புன்னகை, மௌனமாரவாழ்த்தும் பண்பு, ஆன்றவிந்தடங்கிய கொள்கையை விளக்கும் தோற்றம் என்பன பண்டிதமணி அவர்களுக்கு இறைவனாலே வழங்கப்பெற்ற அருட்கொடைகளாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் பிறந்து இருபதாம் நூற்றாண்டின் பிற்காலம் வரை வாழ்நாள் முழுவதும் நைட்டிகப் பிரமசாரியாக வாழ்ந்தவர்களான பண்டிதமணி அவர்கள் போதனையோடு

மட்டும் நிற்கவில்லை. சாதனையிலும் மக்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். 86 வருடங்கள் 8 மாதங்கள் 16 நாள்கள் இப்பூவுலகை அவரது பொன்மேனி தீண்டி இருந்தது.

குரோதன வருஷம் மாசிமாசம் 28ஆம் நாள் புதன்கிழமை இரவு (13.3.1986 வியாழக்கிழமை அதிகாலை 4 மணி) இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இயற்கை எய்தினார்கள்.

- திருக்குமார் சரூபன்
இணுவில் சுன்னாகம்

அன்னிய மொழியல்ல அருந்தமிழ்
அதையொதுக்கித் தள்ளின் வருமோ புகழ்?
தன்னிலை உணராதார் செய்கை
தறுக்கனுக் கொப்பாவார் உண்மை!

அன்னியப் பெண்ணல்ல தமிழ்த் தாய்
அழகற்ற ஒலியல்ல **ழகரம்!**
பொன்னியாய் மின்னுவாள் அமிழ்தாய்!
பொலிவோடு சொல்லிடின் **ழகரம்!**

அன்னிய நாப்போல் தமிழை
அளவின்றி உளறித் தமி'ளே'ன
மென்னியைக் கடிப்பதாய்ப் பேசி - அதன்
மேன்மையைக் கெடுக்காதே தமிழா!

வன்னித் தமிழன் பேசான்
வளவளா மொழியள்ளி வீசான்!.
முன்நா மேலண்மை தொடாவிடில்
முழுவொலி ழகரம் வரும் பார்!

- 'ழகரப் பணிக் கவிஞர்' **கடலூர் அ. தேவநாதன்**

வன்னிப்பிரதேசத் தமிழ் அறிஞர்

த. கைலாசபிள்ளை

வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த முல்லைத்தீவில் பிறந்து தமிழுக்குத் தொண்டாற்றியவர் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள். இலக்கிய இலக்கண அறிவுடைய இவர் பல இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார். 'கதிரையப்பர் பள்ளு' என்னும் நூலை முதன் முதலில் பதிப்பித்த பெருமை இவரைச் சாரும். 1927ஆம் ஆண்டிற்குச் சமமான பிரபவ வருஷம் கார்த்திகை மாதம் இந்நூலைப் பதிப்பித்தார்.

இந்நூலின் முதற்பக்கம் பின்வருமாறு அமைகிறது.

உ

கணபதி துணை

கதிரையப்பர் பள்ளு என்னும் உழத்திப்பாட்டு. இது கதிர்காமத்திலே எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணிய சுவாமி மேலது. முல்லைத்தீவு ரேகு என்றிக் கிளார்க்கு த. கைலாச பிள்ளையால் பரிசோதித்து யாழ்ப்பாணம் அச்சிரயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. பிரபவ வரு. கார்த்திகை மீ.

கதிரையப்பர் பள்ளுப்பாடல்கள் வன்னிப் பிரதேசத்தின் அரிவி வெட்டுப் பாடலாகவும் திகழ்ந்தன. பல ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து செம்மையான இப்பதிப்பைத் தந்துள்ளார் கைலாசபிள்ளை அவர்கள்.

ஈழத்தில் தோன்றிய முதல் பள்ளுப் பிரபந்தம் இதுவாகும். இதனை இயற்றியோர் பெயர் தெரியவில்லை. இதன் கடவுள் வணக்கப் பாடல்கள் பின்வருமாறு அமைகின்றன.

கந்தமேவு கார்முகத்தோனே
கருணையாகிய சங்கரி மைந்தா

முன்பு போலென்ன அன்புவைத் தாழ்வாய்
முள்ளியவளை மூத்த நைந்தை

முழுகி வந்து பகவானைக் கும்பிட்டு
மூத்த நாதனை முத்தண்டம் பண்ணி

முள்ளியவளை மூத்த நயிந்தை, மூத்தநாதன் என்னும் தொடர்கள் முள்ளியவளைக் காட்டு விநாயகரைக் குறிப்பன. இதனை நோக்கும் போது இப்பிரபந்தத்தை முள்ளியவளையைச் சேர்ந்த புலவர் ஒருவரே யாத்துள்ளார் எனக் கொள்வது தவறாகாது.

இந்தப் பிரபந்தத்தைத் தெல்லிப்பளை **வ. குமாரசாமி** அவர்கள் கதிரைமலைப்பள்ளு என்னும் தலைப்பில் 1953 ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். இதன் முகவுரையில் **கதிரையப்பர் பள்ளு** எனவும் **கதிரைமலைப் பள்ளு** எனவும் வழங்கும் இந்நூல் கதிர்காம வேலவர் மீது பாடப்பட்ட பள்ளு... என்ற குறிப்புண்டு.

கைலாசபிள்ளை பதிப்புப் பற்றி குமாரசாமி அவர்கள் 1933 ஆம் ஆண்டு வரை அறிந்திருக்கவில்லை. இந்நூலைப் பதிப்பிக்கும் நோக்குடன் ஏட்டுப்பிரதிகளைப் பெறவிரும்பி Hindu Organ பத்திரிகையில் இரண்டு கட்டுரைகள் எழுதினார்.

இக்கட்டுரைகளை வாசித்த சுவாமி ஞானப்பிரகாசர் பின்வருமாறு எழுதினார். "Kathiraimalai Pallu has already appeared in print under the name of Kathirai appar Pallu... Here is the tittle page of the edition I speak of (கதிரைமலைப் பள்ளு கதிரையப்பர் பள்ளு என்னும் பெயரில் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளது. இதன் முகப்புப்பக்கம் இதோ)"

தமிழ் அறிஞரான கைலாசபிள்ளை புனைகதை இலக்கியத் துறையிலும் ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தார். வன்னிப்பிரதேச முதல் நாவலாகக் கருதப்படும் **'இன்பவதி'** என்னும் நாவல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்க இதழான **கலாநிதியில்** 1942இல் தொடராக வெளிவந்துள்ளது. இக்கதை 40 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது எனச் சஞ்சிகை ஆசிரியர் குறிப்புக் கூறுகின்றது. அப்படியானால் இந்த நாவல் 1902 ஆம் ஆண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு வன்னி நாட்டுக் கதை என்னும் குறிப்புடன் **கலாநிதி** சஞ்சிகையில் வெளியானதுடன் வன்னிப்பிரதேசம் என்னும் உணர்வுடன் எழுதப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அறுபதுகளிலேயே மண்வாசனை இலக்கியம் ஈழத்தில் முனைப்புப் பெற்றது எனப் பரவலாகப் பேசப்படுகின்றது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின்

ஆரம்பத்திலேயே கைலாசபிள்ளை அவர்கள் வன்னிப்பிரதேச மண்வாசனையுடன் நாவல் ஒன்றையாத்துள்ளார் என்பது வியப்புத்தரும் செய்தியாகலாம்.

காதலையும் சொத்துடைமை தொடர்பான பிரச்சினைகளையும் கொண்டதாக **'இன்பவதி'** திகழ்கின்றது. இவற்றைக் கதையாக அமைப்பதிலும் கதையை வளர்த்துச் செல்லும் பாங்கிலும் கைலாசபிள்ளை அவர்கள் நவீன இலக்கியத் துறையில் கொள்கைத் தெளிவுடையவராகக் காணப்பட்டார்.

இக்கதை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமாரபுரம் சித்திர வேலாயுதர் ஆலயச் சூழல் பின்னணியில் நகர்கிறது.

குமாரபுரம் வன்னிமன்னர்களது இராசதானிகளில் ஒன்றாகும். அந்நியர் படையெடுப்பினாலும் மலேரியா நோயினாலும் மக்கள் இடம் பெயர்ந்து செல்ல ஆலயமும் மக்கள் குடியிருப்புக்களும் அழிந்து விட்டன. பிரதேசம் காடடர்ந்த நிலையில் இருந்தது. 1904ஆம் ஆண்டு நா. குமாரசாமிக் குருக்கள் காடாக இருந்த ஆலயச் சூழல் பகுதியை அரசினரிடமிருந்து விலைக்குப் பெற்று மீண்டும் ஆலயத்தைக் கட்டுவித்தார். ஏறக்குறைய இக்காலப் பகுதியிலேயே இக்கதை எழுதப்பட்டிருக்க வேண்டும்.

கதையின் இரண்டாவது அத்தியாயத்தில் கதையின் களம் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

வன்னிக்காட்டில் ஒருவன் அரை மைல் தூரம் பிரயாணம் செய்தால் அவ்விடம் முன்பு வயல், குளம், ஊர் ஆகிய இம்மூன்றில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்று

இலகுவில் அனுமானித்துக் கொள்வான்... சோழமண்டலம் காவேரி முதலிய நதிகளால் சிறப்படைந்தாற் போல, வன்னி நாடும் அநேக குளங்களால் சிறப்பெய்தி மாரி கோடை என்ற பேதமின்றிப் பயிர்ச்செய்கை உடையதாய் வளஞ்சிறந்து விளங்கியது.

தொழில் முறைகளையும் சமூகப் : பழக்க வழக்கங்களையும் இந்த நாவல் சித்திரிக்கிறது. பேச்சுமொழியை அளவாகப் பயன்படுத்துவதன் மூலம் நாவலின் நிகழ்ச்சிகளை உயிரோட்டம் உடையதாக்குகின்றார். இவற்றை நோக்குமிடத்து ஈழத்தின் தரமான நாவலாசிரியர்களில் ஒருவராகத் திகழ்கிறார் கைலாசபிள்ளை அவர்கள்.

பிற்காலத்தில் வன்னிப் பிரதேசக் களத்தில் நாவல் எழுத முற்பட்ட **அ. பாலமனோகரன், செங்கை ஆழியான், முல்லை மணி** முதலானோருக்கு முன்னோடியாகக் கைலாசபிள்ளை திகழ்கின்றார்.

இவர் பல இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகளை எழுதியுள்ளார் என அறிகின்றேன். துர் அதிர்ஷ்டவசமாக அவை தற்போது கிடைக்கவில்லை. இவர் வன்னி நாட்டில் தோன்றிய சிறந்த தமிழ் அறிஞர் என்பதற்கு ஐயமில்லை.

மரபுக்கும் நவீனத்திற்கும் பிரதிநிதியாகவும் இணைப்புப் பாலமாகவும் திகழ்ந்த இவரின் ஆக்கங்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றால் இவரது இலக்கிய ஆளுமை பற்றி முற்றாக நிர்ணயிக்க முடியும்.

- கலாபூஷணம் **முல்லைமணி**
வன்னி

புலமைப் பாரம்பரிய உருவாக்க சக்தி

பேராசிரியர் கணபதிப்பிள்ளை

பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை என்ற கிராமத்தில் 02.07.1903ல் **க. கந்தசாமிப்பிள்ளை** என்ற வைத்தியருக்கு மகனாகப் பிறந்தார்.

கணபதிப்பிள்ளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தமது ஆரம்ப ஆங்கிலக் கல்வியைப் பெற்று, 1972ல் இலங்கைப் பல்கலைக் கழக கல்லூரியில் சேர்ந்தார். அங்கு இந்தோ ஆரிய மொழித் துறையிலே சிறப்புப் பட்டதாரி மாணவராகப் படித்தார். அக் காலத்தில் தமிழைச் சிறப்பு பாடமாக பயிற்றும் முறைமை இருக்கவில்லை.

இவர் பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றை ரம்புக்வெல்லை **சித்தார்த்த தேரர்,** பேராசிரியர் **ஜி.பி. மலலசேகரா** ஆகியோரிடம் பயின்றார். பாளி பௌத்த மூல நூல்களின் மொழியாகையால் கணபதிப்பிள்ளை அவர்கள் இந்த இரண்டு சிங்கள அறிஞர்களிடமும் அறிவைப் பெற வேண்டியிருந்தது.

1930ம் ஆண்டில் இவர் கலைமாணிப் பரீட்சையில் மிகத் திறமையான முறையில் முதல் வகுப்பில் சித்தி பெற்றார். இச் சிறப்புச் சித்தியால் வெளிநாடுகளில் நான்கு

ஆண்டுகள் கல்வி பயில புலமைப் பரிசில் கிடைத்தது. இதன் காரணமாக அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கும், பின்னர் இலண்டன் பல்கலைக் கழகத்துக்கும் சென்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பயிற்சி தமிழ் நூல்களைப் பாரம்பரிய முறையில் கற்கும் வாய்ப்பினை அவருக்கு வழங்கியது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் **வித்துவான்** பட்டத்தைக் கணபதிப்பிள்ளை 1932ல் பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக பின்புலத்துடன் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேய ஆய்வுப் பள்ளிக்குச் சென்றார். அங்கே கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ் கல்வெட்டுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இங்கு இவர் பேராசிரியர் ஆர்.எல். ரேணரின் (R.L. Turner) வழிகாட்டலின் கீழ் ஆய்வினை ஆரம்பித்தார். 1935ல் தமது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து விட்டு 1936ம் ஆண்டு இலங்கை திரும்பினார்.

அதே ஆண்டில் பல்கலைக் கழகக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக பதவி ஏற்றார். இவர் தமிழ்த் துறை தலைவராக நியமிக்கப்பட்ட போது, சுவாமி விபுலானந்தர் பேராசிரியரான பின்னரும் தமிழ்த் துறை தலைமை கலாநிதி கணபதிப்பிள்ளையிடமே இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

1965ல் இவர் இளைப்பாறும் வரை 29 ஆண்டுகள் பல்கலைக்கழக தமிழ்துறையின் புலமை, நிர்வாகப் போக்கினை நிர்ணயிக்கும் பிரதான சக்தியாக விளங்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே.

இவர் எடுத்துக் கொண்ட பிரதான ஆய்வுத்துறை சாசனவியல் (Epigraphy) ஆகும். பேராசிரியர் ரேணரின் மேற்பார்வையின் கீழும் வழிகாட்டலிலும் கணபதிப்பிள்ளை அவர்கள் தனது கலாநிதிப் பட்டத்திற்கு மேற்கொண்ட தலைப்பு "A Study of the Language of the Tamil Inscriptions of 7th and 8th Centuries AD." இதுவே தமிழ்ச் சாசனங்கள் பற்றிச் செய்யப்பட்ட முதலாவது கலாநிதிப் பட்ட ஆய்வாகும்.

இந்த ஆய்வின் மூலமாகவே பல முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் நிலைப்பட்ட வரலாற்று நிலைத் தகவல்கள் வெளிவந்ததுடன், தமிழ் எழுத்துகள் கிறிஸ்துவிற்குப் பின்னர் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் எவ்வாறு அமைந்திருந்தன என்றத் தகவல்களையும். சங்க இலக்கியங்கள், இலக்கியங்களிலுள்ள மொழியமைப்பு எவ்வாறு மாறுபாடு அமைந்துள்ளது என்ற உண்மையும் தெரிய வரலாயிற்று. இவருடைய இவ் ஆய்வால் தொல்காப்பியத்திலிருந்து நன்னூலுக்கு வருகின்ற தமிழ் இலக்கண வளர்ச்சிப் படிகளுக்கான காரணத்தை அவர் நன்கு தெரிந்திருந்தார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை மொழி ஆய்வுத்துறையில் மிக ஈடுபாடு கொண்டிருந்தார். ஒலிப்பியலிலே (Phonology) இவர் ஆர்வம் காட்டியதால் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கை மிக நுண்ணியதாக ஆய்ந்தார். இதனால் யாழ்ப்பாணக் கிளை மொழி பற்றிய மிக முக்கியமான இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியிருந்தார்.

இவருடைய ஆய்வுச் சிறப்புக்கு மிக முக்கியமான காரணி அவரது பன்மொழிப் புலமையாகும். தமிழ். ஆங்கிலம், சிங்களம், தெலுங்கு, கன்னடம், மலையாளம்,

பிரெஞ்சு ஜேர்மனிய மொழிகளிலும் இவர் சிறந்து விளங்கினார்.

ஈழத்துத் தமிழர் வரலாறு, வாழ்வியல் இலக்கியம் என்பன இவரின் அடுத்த முக்கிய ஆய்வுத் துறையாக விளங்கியது. இவ் ஆய்வின் முலம் ஈழத்துத் தமிழர் வாழ்வியல், வரலாறு பற்றிய தகவல்களைப் பதிவு செய்து வைக்க வேண்டும் என்று அவாக் கொண்டிருந்தார். இவரது "**ஈழத்து வாழ்வும் வளமும்**" என்ற கட்டுரைத் தொகுப்பு 1962ல் வெளிவந்தது.

பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு ஆக்க இலக்கியத் துறையிலும் நிறையவே ஈடுபாடிருந்தது. செய்யுள், நாவல், சிறுவர் இலக்கியம் என்று அவருடைய இலக்கியப் படைப்புகள் மூன்று வகைப்பட்டன. இவருடைய செய்யுள் நூல்கள் இரண்டு வெளிவந்துள்ளன. "**காதலியாற்றுப்படை**", "**தூவுதும் மலரே**" என்பனவே இத் தொகுதிகளாகும். நாவல்களைப் பொறுத்த வரையில் "**பூஞ்சோலை**", "**வாழ்க்கையின் வினோதங்கள்**" என்ற இரு நாவல்களும் இவரால் எழுதப்பட்டவை. இவை இரண்டுமே பிறமொழி நாவல்களின் தமிழ் வடிவமாகும். சிறுவர் இலக்கியமாக இவர் படைத்தது "**நீரா மங்கையர்**" என்ற சிறுவர் இலக்கியம் எனலாம்.

நாடகங்களைப் பொறுத்தவரை இவர் எழுதிய நாடகங்கள்

1. உடையார் மிடுக்கு
2. நாட்டவன் நகர வாழ்க்கை
3. முருகன் திருகுதாளம்
4. கண்ணன் கூத்து

5. பொருளோ பொருள்
6. தவறான எண்ணம்
7. சங்கிலி
8. சுந்தரம் எங்கே
9. துரோகிகள்
10. மாணிக்கமாலை

''மாணிக்கமாலை'' நாடகத்தைத் தவிர்ந்த ஏனையவை யாழ்ப்பாணத்தை மையமாக கொண்டு அமைந்திருந்தன. சங்கிலி வரலாற்று நாடகமான போதும் இதில் அரசியல் உள்ளுறைப் பொருள் செறிந்திருந்தது. ஏனைய எட்டு நாடகங்களும் யாழ்ப்பாண வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுவனவாகவே அமைந்திருந்ததுடன் இந்த நாடகங்களில் இவர் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கைப் பதிவு செய்து வைத்திருந்தார்.

தமிழ் ஈழ அரசியல் அரங்குக்கு கணபதிப்பிள்ளையே கால்கோள் விழா நடாத்தியவர் என்றால் மிகையாகாது.

'சங்கிலி' நாடகம் தமிழரசு வாதத்தினை நிலைப்படுத்தும் படைப்பாக அமைந்திருந்தது. ''துரோகிகள்'' என்ற இவரது அரசியல் நாடகம் 1956ல் எழுதப்பட்டது. இருபது ஆண்டுகளின் பின்னர் மேற்கிளம்பிய இளைஞர் போராட்டத்தைக் காட்டி நின்ற இந்நாடகத்தில் **புலிநாடு** என்ற நாட்டின் பகுதிக்கும் **மந்தை நாடு** என்ற நாட்டிற்கும் நடந்த போராட்டமாகவே சித்திரிக்கப்பட்டிருப்பதுவும் குறிப்பிடத்தக்கது.

ஐம்பதுகள் முதல் படிப்படியாக பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமிழ் உணர்வாளராக மாறி வந்ததை

அவரது எழுத்துகளில் இருந்தும், சமூக அரசியல் நடவடிக்கைகளிலிருந்தும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு இலங்கையில் ஒரு பல்கலைக்கழகப் பாரம்பரியம் உருவாகக் காரணியாக அமைந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை 12.05.1968ல் காலமானார்.

- முதுதமிழ்ப் பேராசிரியர்
கார்த்திகேசு சிவதம்பி
நினைவுப் பேருரையிலிருந்து தொகுப்பு
நன்றி

ஒப்பில்லா இலக்கியத்தால் ஒளிபரவும்
உலக நன்மொழியே
தப்பில்லாத் திருமுறைகள் தரும் கருத்தால்
தழைத்த நன்மொழியே
இயலிசை நாடகத்தின் எழில் தவழும்
இனிய நன்மொழியே
பயில் பவர் உளந்தனைப் பாங்காய்க் கவரும்
பாச நன்மொழியே

- கவிஞர் எம்.ஸி.எம். சுபைர்

ஈழத்து பகுத்தறிவுப் பகலவன்

புலவர் சிவன் கருணாலய பாண்டியனார்

கொழும்பின் புறநகர் பகுதியான இரத்மலானை சிங்கள மக்கள் நிறைந்த பிரதேசம். அங்கு அடி மூலையில் அமைந்திருந்தது **புலவர் சிவன் கருணாலய பாண்டியனாரின்** இல்லம். தமது மனைவி இரண்டு மகன்களுடன் வாழ்ந்து வந்தார் அந்தத் தமிழ்ப் புலவர்.

சங்க காலப் புலவர்களுக்கு ஒப்பாக இந்த நூற்றாண்டில் வாழ்ந்து வந்த அந்தத் தமிழ் முனிவரிடம் தமிழ் கற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது என் பேறு என்று தான் கூற வேண்டும். அவருடைய இரு புத்திரர்களும் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றதால் அவர்களோடு மிகக் கூடிய நேரங்களை அவர்கள் வீட்டிலேயே கழித்தவன் நான். அப்போது க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு அந்தத் தமிழ் முனிவரிடம் தமிழ் பயிலும் சந்தர்ப்பமும் பாக்கியமும் கிடைத்தன. 1965 முதல் 1968 வரை அவர்கள் வீட்டில் ஒரு மகனாகவே என்னைக் கணித்தனர்.

1903ம் ஆண்டு ஆவணி மாதம் 09ம் திகதி தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மலையடிக்குறிச்சி

என்ற சிற்றூரில் இவர் பிறந்தார். மதுரைத் தமிழ் சங்கம் நடாத்திய பாலபண்டிதர் பரீட்சையில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார்.

தனது தமிழ்ப் பணியை - சேவையை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்க இலங்கையில் ஆசிரியத் தொழில் புரிந்தார். அப்போது யாழ்பபாணம் வண்ணார் பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை மதுரைத் தமிழ் சங்கத்தின் பரீட்சைக்கு தோற்றி பண்டிதராகத் தேர்வானார்.

உருவத்தில் சிறியவராகத் தோற்றமளித்தார். சிங்களப் பகுதியில் வசித்தாலும் எப்போதும் வெள்ளை வேட்டி, உடம்பைப் போர்த்தும் வெள்ளைச் சால்வை, நெற்றியிலே விபூதி இவற்றுடன் பேரூந்திலும், நடையிலும் கொழும்பு மாநகரையே வலம் வந்தார். **சிங்கள மக்களால் மிக அன்புடன் நேசிக்கப்பட்டு வந்தார். 1958ல் நடைபெற்ற இனக் கலவரத்தின் போது கூட அந்த மக்களால் இவர் அவர் வீட்டிலேயே வைத்து பாதுகாக்கப்பட்டார்.**

இவரது மூத்த மகன் கொழும்பு பல்கலைக் கழக சட்டப் பட்டதாரி. தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். இவரது பெயர் **திருவருள் வள்ளல்,** இவரது சகோதரர் **பிஞ்சகன் செம்மல்** இலங்கையில் தான் இருக்கின்றார்.

தமிழ் மீதும், சைவத்தின் மீதும் உயிராக இருந்த இவர் சிறந்த பாக்களை யாத்தவர். சிறந்த பல நூல்களின் ஆசிரியராகவும் இவர் விளங்கினார்.

இவருடைய மாணவர்களாக காலஞ் சென்ற **இ. இரத்தினம்,** அமைச்சர் **க. நடேசபிள்ளை,** கலாநிதி

க.செ. நடராசா, செ. வேலாயுதபிள்ளை, ஆ. குணநாயகம், முதலியார் குலசபாநாதன் இவர்களைத் தவிர கலாநிதி **ஆ. கந்தையா, திருமதி. ப. பாலகிருஷ்ணன், பொ. கணபதிப்பிள்ளை, வே. வல்லிபுரம்** இருந்தனர் என்றால் தமிழ் புலவர் பாண்டியனாரின் தமிழ் பாண்டித்தியம் புரிகிறது அல்லவா?

இவர் எழுதிய நூல்களில் **கதிர்காமப் பிள்ளைத் தமிழ், எழினி, நம்பி அகவல், அழகியது, நெடுமால் பெயராயிரம், திருவருட் செற்றம்** ஆகியவை பிரபல்யம் பெற்றவை.

பல தமிழ் அறிஞர்கள் கூட இவரிடமே தமது நூற்பிரதிகளைத் திருத்துவித்தனர் என்றால் இவரது தமிழ் ஆற்றல் என்ன என்று பார்த்து அறிந்து கொள்ளுங்களேன்.

இந்தத் தமிழ் முனிவர் வாழ்ந்த அதே காலத்தில்தான் திருநெல்வேலி **பண்டிதமணி கணபதிப்பிள்ளை** ஐயா, கல்வியங்காடு **வெள்ளை அண்ணா,** சுவாமி **ஞானப்பிரகாசர், நவநீத கிருஸ்ண பாரதியார், சுவாமி விபுலானந்தர், வேந்தனார், இளமுருகனார்** ஆகியோர் வாழ்ந்து தமிழ் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தையார் பெயரில் உள்ள **சிவன்** என்ற பெயரை தன்னுடன் சேர்த்து "**சிவன் கருணாலய பாண்டியனார்**" என்று அழைக்கப்பட்டார்.

பழகுவதற்கு மிக மிக எளியவரான இவர் எப்போதும் தன் வெண் தாடியை நீவி விட்டபடியே பேசுவார்.

1971ல் இவருக்குப் பாராட்டு விழா எடுக்கப்பட்ட போது தமிழ் குறுமுனியாகப் பாராட்டப் பட்டார்.

1958ம் ஆண்டு முதல் 1976ம் ஆண்டு வரை இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் வகுப்புகளை நடாத்தி பல ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கட்கு தமிழ்ப் பணியாற்றி வந்தார்.

குறள் பற்றி இலங்கை வானொலியில் இவர் ஆற்றிய விளக்க உரைகள் அக்காலத்தில் அனைத்துத் தமிழ் மக்களாலும் பாராட்டுப் பெற்றன.

தமிழகம் அறிந்த **வெண்தாடி வேந்தர் பெரியார்** போல பகுத்தறிச் சிந்தனைகளைப் பகர்ந்து வந்த **ஈழத்துப் பகுத்தறிவுப் பகலவன் - பகுத்தறிவுச் சிங்கம்** 30.06.1976 அன்று இயற்கை எய்தினார்.

நூற்றாண்டுகள் என்ன ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆனாலும் நம் மத்தியில் வாழ்ந்த சமகால தமிழ்க் குறுமுனிவரின் புகழ் தமிழ் உலகு உள்ளவரை அழியாது.

- வ.மா. குலேந்திரன்
இலண்டன்

பழமையை வாழவைத்தும் புதுமைசெய்தும்
பொலிவுறும் மொழியே
சீரிளம் கன்னியெனச் செழிப்படையும்
செந்தமிழ் மொழியே
சிந்தையில் குடியிருந்தே சீரிய
வாழ்வளித்திடும் மொழியே

- கவிஞர் எம்.ஸி.எம். சுபைர்

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோரின்
கல்வி உயர்வுக்கு உதவிய

அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத்

இலங்கையில் குறிப்பாக வடமத்திய மாகாணத்தில் பல பாடசாலைகள் ஆசிரியர் பற்றாக்குறையினால் மூடப்படக்கூடிய ஒரு பயங்கரச்சூழலின் போது 1977 ஆம் ஆண்டு மே மாதம் அல்ஹாஜ் "பதி" அவர்கள் வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 130 பேருக்கு ஒரே நேரத்தில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கி இம்மாகாணத்தின் பாடசாலைகளை இயங்க வைத்தது இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரப்பட வேண்டிய நிகழ்வொன்றாகும்.

'மாத்தறை மகத்தயா' என்றழைக்கப்படுகின்ற **மஹ்மூது நைனா மரக்காயர்** என்பவருக்கும், வெலிகாமம் **செய்யது முஸ்தபா நொத்தாரிஸ்** அவர்களின் மகள் **பாத்திமா நாச்சியார்** என்பவருக்கும் மகனாக "பதி" 1904 யூன் 23ஆம் திகதி பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை வெலிகம அரபாவில் தொடங்கி மாத்துறை சென்தோமஸ், கொழும்பு வெஸ்லி, கொழும்பு ஸாகிராக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். இவர் பாடசாலையில் கற்கும் போதே பல்வேறு துறைகளில் மிளிர்ந்தார்.

கொழும்பு ஸாகிராவில் படிக்கும் போதே **எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்காவின் நண்பர்** ஆனார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்னும் எண்ணக்கரு பதியுதீனின் சிந்தனையிலிருந்து உருவாகியது. அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களினதும் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கா அவர்களினதும் உறவு எவ்வளவு நெருக்கமாக இருந்தது என்பதற்கு சான்றாக 1956 தேர்தலில் பண்டாரநாயக்க பிரதமராகிய போது அமைச்சரவையைத் தெரிவு செய்ய ''பதி'' அவர்களையும் அழைத்திருந்தமையைக் குறிப்பிடலாம்.

அல்ஹாஜ் ''பதி'' அவர்கள் பண்டாரநாயக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ.நா.சபையின் இலங்கைப் பிரதிநிதியாக இருந்துள்ளார்.

1960 ஆம் ஆண்டு கல்வி ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்தார். இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு மாபெரும் புரட்சியைச் செய்தார். தனியார் பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலைகளாக்கினார். இதனால் அவர் முகம் கொடுத்த அச்சுறுத்தல்களோ அதிகம்.

சிலோன் முஸ்லிம் அசோசியேசன், அகில இலங்கை முஸ்லிம் லீக் எனப்பெயர் மாற்றப்பட்டதும் பதியுத்தீன் காலத்திலேயாகும். கௌரவ **என்.எச்.எம் அப்துல் காதர்** தலைவராகவும், அல்ஹாஜ் ''பதி'' செயலாளராகவும் இருந்து முஸ்லிம் லீக்கை வழிநடாத்திச் சென்றனர்.

அலிகார் சர்வகலாசாலை சென்று எம்.ஏ (M.A) பட்டதாரியானார். அலிகாரில் இருக்கும் போதே அனைத்திந்திய மாணவர் சம்மேளனத் தலைவராக

திகழ்ந்தார். இவர் ஒருமுறை ''லக்னோ'' மாணவர் மகாநாட்டில் வீராவேசமாக பேசிய போது, **ஜின்னா**வும் நேருவும் இவரைப் பாராட்டினர். தனது 27வது வயதில் பர்மாவிலும் மலேசியாவிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரச்சாரம் செய்தபோது பிரித்தானியர்களால் நாடு கடத்தப்பட்டார். முகம்மது அலி, சவுக்கத் அலி, குவாஜா கமால்தீன் ஆகியோர் இவரின் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்தனர்.

1970ஆம் ஆண்டு கல்வியமைச்சராக நியமிக்கப்பட்டார். அவருடைய பதவிக் காலத்தில் வியத்தகு சாதனைகளைப் புரிந்து முஸ்லிம் சமுதாயத்தை உயர்த்தி வைத்தார். ''பதி'' இணங்களுக்கிடையே சமத்துவம், சௌஜன்யம் சகவாழ்வு என்பவற்றை விரும்பினார். தேசிய ரீதியில் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் சிங்கள மக்களுக்கும் பெரும் சேவை ஆற்றியுள்ளார்.

''பதி'' கட்சி பேதம் பார்க்காத அரசியல்வாதி. சாக்கு நிரப்பாதவர். உயர் பதவிகளில் முஸ்லிம்களின் விகிதாசாரம் மிக மிக குறைவாக இருந்த காலத்தில் பதியின் சிபார்சின் பேரில் பலர் நியமிக்கப் பட்டனர். அத்தகையவர்களை அழைத்து விருந்து கொடுத்து சமுதாயத்துக்கு ஆற்ற வேண்டிய கடப்பாடுகளை உணர்த்தி வைத்தார். எவராவது சமுதாய நலனைப் புறக்கணிக்கின்ற போது அல்லது முஸ்லிமின் மாண்பைக் குறைத்து மதிப்பிடும் போது எந்த நேரத்திலும் எந்தச் சபையிலும் அவர் போர்க்கொடி தூக்கத் தயங்கவில்லை.

''பதி'' பதவியிலுள்ள போதும் இல்லாத போதும் ஆட்சியாளர்களுக்கு அவர் விஷயத்தில் ஒருவித பயம்

இருந்தது. தான் ஆட்சியில் இல்லாத போதும் ஆட்சியாளர்களை ஆட்டிவைத்திருக்கின்றார். ''பதி'' பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் இலங்கைப் பல்கலைக்கழகம் என்னும் பொதுமைப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். **யாழ்ப்பாணத்திற்கென புதிய வளாகம் உருவாக்கிக் கொடுத்தார்.** மூன்று பல்கலைக்கழகங்கள் அவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்களை வழங்கின. ஜனாதிபதி பிரேமதாஸ **"தேசமான்ய"** விருதை வழங்கினார். கிழக்கு மாகாண மக்கள் **"காயிதே மில்லத்"** எனப் பட்டம் சூட்டினர்.

கிராமத்து மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று தமது திறமைகளை வெளிக்காட்டி அதன் மூலம் சமூகத்திற்கு சேவை செய்ய அவர் வழியமைத்தார். கிராமத்திலோ, பட்டினத்திலோ முஸ்லிம் இளைஞனை கௌரவமான தோற்றத்தில் காணவிரும்பினார்.

1985இல் திம்பு பேச்சுவார்த்தையின் போது தனது 85வது வயதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலுக்கு தலைமை தாங்கி இலங்கை அரசுடன் மட்டுமன்றி, தமிழ்நாடு சென்று தமிழ்த் தலைவர்களுடன் கலந்துரையாடி வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளைத் தெளிவுப் படுத்தினார். இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கென தீர்வு முன்வைக்கப்படும் போது முஸ்லிம்களின் நலனும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்ற அத்திவாரத்தை முன்னமேயே நாட்டி வைத்தவர் "பதி."

அல்ஹாஜ் பதியுத்தீன் அவர்கள் ஒரு சமுதாய சிற்பி, சாதனை வீரர், போராளி, அஞ்சா நெஞ்சினர். அவர்

நாட்டிய பயிர் ஆயிரங்காலத்துப் பயிர். முஸ்லிம் சமூகத்தை எங்களுடைய சமுதாயம் என்றே அழைத்தார். இந்த சமுதாயத்தின் செழுமை, சீர்மை, சிறப்பு என்பவற்றிற்கு அவர் ஏற்றி வைத்த தீபம் மங்காத மணிவிளக்காக ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது.

பொதுவாக இந்நாட்டின் ஒவ்வொரு முஸ்லிம் பாடசாலையின் பின்னணியிலும் அல்ஹாஜ் ''பதி'' அவர்களின் நாமம் பதிந்திருக்கின்றது. ஆயிரம் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை அவர் உருவாக்கினார். அவர்களில் ஒரு சிறு துளியினரே இன்று வெள்ளிவிழா கொண்டாடுகின்றனர்.

இவ்வுலகத்திலே தொண்ணூற்றி இரண்டு வருடங்கள் வாழ்ந்த அல்ஹாஜ் பதியுத்தீன் மஃமூத் அவர்கள் 1996ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி இறையடியெய்தினார்கள். இப்பிரிவானது முஸ்லிம் மக்களின் மனதில் நிரப்ப முடியாத ஒரு இடைவெளியை விட்டுச் சென்றுள்ளது. இத்தினத்தில் அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தவ்ஸ் என்னும் சுவர்க்கம் கிடைக்க பிரார்த்திப்போமாக.

- எம்.எஸ். கமால்தீன்
அநுராதபுரம்

தமிழ்ப்பகை பெருகினால்தான் - தரமாகத்
தாமாக நம்மொழி வளரும்!
தமிழ்மொழி உயரவேண்டின்
தேவையோர் பகைவர் கூட்டம்!
உமிழ்நீர்தான் சுரந்தால் வாயில்
உடலது ஒம்பி வாழும்!
- 'ழகரப் பணிக் கவிஞர்' **கடலூர் அ. தேவநாதன்**

திறனாய்வில் முன்னோடி பேராசிரியர்

வி. செல்வநாயகம்

1. ஈழத்துக் கல்விப் பாரம்பரியம்

ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தினை இரு பெரும் பிரிவுகளிலே நோக்கலாம். ஒன்று நாவலர் மரபு வழிவந்த கல்வியென்றும், மற்றையது இலங்கைப் பல்கலைக் கழகம் வழிவந்த கல்விமரபென்றும் கூறலாம். நாவலர் வழிவந்த கல்வி மரபு நவீன விஞ்ஞான நோக்குடன் தொடர்புற்றதன்று. இவ்விடத்தில் இ. முருகையன் **கல்வியியல் நோக்கில் நாவலர்** என்னும் கட்டுரையிலே *(1979 : 17)*

> "நவீன கல்வியியலின் நியமங்களையும் கருத்தோட்டங்களையும் நாவலர் பெருமானின் கல்விப் பணிகளுக்கும் கல்விக் கோட்பாடுகளுக்கும் நாம் பிரயோகிக்க முயலும் போது மிகவும் சாவதானமாக இருத்தல் வேண்டும். விஞ்ஞான, தொழில்நுட்ப விரிவுரைகளின் தாக்கம் நாவலர் காலத்தில் எமது தேசத்தில் அவ்வளவாக உணரப்பட்டவை அல்ல. அதனால் அதன் கூறுகள் நாவலரின் கல்விச் சிந்தனையில் இடம் பெறவில்லை. விஞ்ஞான நோக்குப் பற்றிய உணர்வோ அதன் நலந்தீங்குகள் பற்றிய எண்ணமோ நாவலரின்

கவனத்திற்கு உட்பட்டவை அல்ல. ஆகையால் அவற்றை நாவலரிடம் தேடுதல் பொருந்தாது.''

என்று கூறியிருப்பது மனங்கொள்ளத் தக்கதாகும். நாவலருடைய கல்வி மரபு சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், புன்னாலைக் கட்டுவன் கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோரூடாக வந்து சேர்ந்தது.

இலங்கையிலே பல்கலைக்கழகமொன்று அமைவதற்கு முன்னர் வட்டுக்கோட்டையிலே அமைந்த அமெரிக்கன் மிசனரிமாரின் ''**வட்டுக் கோட்டைச் செமினரி**'' ஒரு பல்கலைக்கழகக் கல்விப் பாரம்பரியத்தை ஈழத்திலே தொடக்கி வைத்ததெனலாம். விஞ்ஞான, தொழில்நுட்ப விரிவுகளின் தாக்கம் இசெமினரிக் கல்வியிலே செறிவுற்றிருந்தது. 1823லே திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட இந்நிறுவனம் பல்கலைக்கழக அந்தஸ்துடைய கல்லூரியாக அமைந்தது. எனினும் இது ஒரு சமயத்தைச் சார்ந்த நிறுவனமாக அமைந்ததென்பது உண்மையே. 1905ல் இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 1921ல் கொழும்பிலே பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. இது 1942ல் இலங்கைப் பல்கலைக்கழகமாக மாறியது. இப்பல்கலைக் கழகக் கல்வி மரபு **சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் ஆ. சதாசிவம்** ஆகியோரூடாக வந்து கொண்டிருக்கிறது.

பேராசிரியர் வி. செல்வநாயகம் மேற்குறிப்பிட்ட இரு கல்வி மரபுகளையுஞ் சார்ந்தவராக அமைந்தார். இவர் நாவலர் கல்வி மரபிலே வந்த வித்துவசிரோமணி **சி. கணேசையர்** அவர்களிடம் கல்வி கற்றதுடன்

பல்கலைக்கழகக் கல்வி மரபுடைய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அறிஞர் **நீ. கந்தசாமிப்பிள்ளை, நாவலர் சோமசுந்தரப் பாரதியார்** ஆகியோரிடமும் பயின்றார். இவ்விரு கல்வி மரபுகளும் இப்பேராசிரியருடைய ஆளுமையினை உருவாக்கின என்பதை அவரிடம் பயின்றவர்கள் நன்கறிவர். அவருடைய எழுத்துகளும் இதனை நன்கு பிரதிபலிக்கின்றன. பாரம்பரியக் கல்விமரபுடனும் தொடர்புற்றிருந்த காரணத்தினாலே மேனாட்டுச் சிந்தனைகளும் கோட்பாடுகளும் தான் எம்முடைய இலக்கியங்களின் திறன்களை அளவிடும் அளவுகோல்களென அவர் முற்றாகக் கொள்ளவில்லை. எம்முடைய இலக்கியங்களின் திறன்களை அளவிட எம்மவரே சில அளவுகோல்களைத் தந்துள்ளனர் என்பதை இவர் போன்றவர்களாலேயே உணர முடியும்.

2. சிறிய வரலாற்றுக் குறிப்பு

பேராசிரியர் செல்வநாயகம் 1907ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி கொழும்புத்துறையில் **வினாசித்தம்பி - அலங்காரம்** தம்பதிகளுக்குப் பிறந்தார். அவருடைய ஆரம்பக்கல்வியும் இடைநிலைக் கல்வியும் யாழ்ப்பாணம் புனித ஜோன்ஸ் கல்லூரியிலேயே நடைபெற்றன. பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே சேர்ந்து படித்து, லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பரீட்சைகளிலே தேறிக் கலைமாணிப் பட்டம் (முதற்பிரிவினைப்) பெற்றார். பட்டம் பெற்றுச் சிலகாலம் இடைக்காடு இந்துக் கல்லூரியிலே ஆசிரியராகப் பணியாற்றினார்.

இக்கல்லூரியிலே கற்பித்துக் கொண்டிருக்கும் வேளையிலேதான் கணேசையருடன் தொடர்பு

கொள்ளலானார். வித்துவசிரோமணி கணேசையரிடமும் பண்டிதர் வேதநாயகத்திடமும் மரபுவழிக் கல்வியைப் பெற்றார். பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இங்கு கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது தான் 1942ல் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று முதுமாணிப் பட்டம் பெற்றுத் திரும்பினார்.

1940ல் கொக்குவிலிலே திருமணஞ்செய்து கொண்ட இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண்குழந்தைகளும் பிறந்தன. மனைவி அருகிலே நின்று உணவு பரிமாற அதனை இரசித்துச் சாப்பிடும் கணவனைக் காண்பதென்றால், பேராசிரியர் செல்வநாயகம் வீட்டுக்கே சென்றிருக்க வேண்டும். வீட்டுப் பொறுப்புகள் யாவற்றையும் அவரே மேற்கொண்டு செய்வது வழக்கம். நாளாந்த சந்தை விபரங்களையெல்லாம் நன்கு அறிந்து கொள்வார்.

3. பல்கலைக்கழகப் பேராசிரியர்

இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழை ஒரு பாடமாகக் கற்றவர் எவரும் பேராசிரியர் செல்வநாயகத்தை இலகுவிலே மறந்து விடமாட்டார்கள். தூய வெள்ளை வேட்டியும், நாஷனலும், சால்வையும் அணிந்து கம்பீரமாகப் பல்கலைக்கழக வளாகத்தினுள் திரியும் இவரை எல்லா மாணவர்களுமே நினைவில் வைத்திருப்பர். தமிழ்த் துறையைச் சார்ந்த இருவர் இத்தோற்றத்தில் வருவர். ஒருவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, மற்றவர் பேராசிரியர் செல்வநாயகம். தமிழிலே புலமை பெற்ற இவர்கள், தூய

தமிழ் உடையுடுத்தும் இவர்கள் சரளமாக ஆங்கில மொழியையும் பேசுவார்கள்.

வகுப்புகளுக்கு உரியநேரத்துக்கு வருவதும், குறிப்பிட்ட பாடத்தை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையிலே போதிப்பதும் எல்லா ஆசிரியர்களுக்கும் உரிய கடமைகளாகும். இவர் அக் கடமைகளிலே தவறுவது கிடையாது. மாணவர்களுடைய சிந்தனைகளைத் தூண்டுவதற்காக அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டும், சில வேளைகளில் அவர்களைக் 'கிண்டல் பண்ணியும்' வகுப்புகளை நடத்துவது இவருடைய தனித்துவமான பண்பாகும். தமிழை ஒரு பாடமாகக் கற்கும் ம்ாணவர்கள் சிலருக்கு ஒரு தமிழ்ப் பாடலைச் சரியாக வாசிக்கத் தெரியாமலிருக்கும். இப்படியானவர்களை இனங்கண்டு வகுப்பிலே குறிப்பிட்ட பாடநூலில் உள்ள பாடல்களை வாசிக்கும்படி கேட்பார். இத்தகைய மாணவர்களுக்கு இவரைப் பிடிப்பதேயில்லை. எனினும் பேராசிரியர் தன் கடமையிலிருந்து இம்மியும் தவறமாட்டார்.

மாணவர்களுடன் கருத்துமோதல் செய்வதிலே இவருக்கு நல்ல விருப்பம். கம்பராமாயண வாலிவதைப் படலம் எங்களுடைய காலத்தில் குறிப்பிட்ட பாடப் பகுதியாக அமைந்திருந்தது. அப்பகுதியினைப் படித்து முடித்த பின்னர், வாலிவதை தொடர்பாக மாணவர்களுடைய கருத்துகளை அறிவதற்காகக் கடைசி இரண்டு விரிவுரை நேரங்களிலும் அப்பகுதி தொடர்பாக எந்தக் கேள்வியும் கேட்கலாம் என்று வாய்ப்புக் கொடுத்தார். ஒரு மாணவன் "இராமன் வாலியைக் கொன்றது பிழையான காரியம்" என்று கூறினான். அதற்கு அவர் "அது பிழைதான்,

அதற்கென்ன?'' என்று திருப்பிக் கேட்டார். இப்படியே மாணவர்கள் ஒவ்வொருவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவரும் திருப்பிக் கேள்விகள் தொடுத்தார். ஏன் இப்படி அவர் திருப்பித் தம்மிடம் கேள்விகளைத் தொடுக்கிறார் என்பதன் உண்மையை உணராத மாணவர்கள், அவர் தங்களைக் கேலி பண்ணுகிறார் என்றே நம்பினர். எந்த மாணவனுக்கோ, மாணவிக்கோ தன்னுடைய கேள்விக்குப் பதிலளித்து வாதிடக்கூடிய ஆற்றல் உண்டா என்பதை அவர் அறிய முயன்றார். ஆற்றல் உள்ளவர்களும் தப்பபிப்பிராயம் காரணமாக அவருடைய வகுப்புகளிலே பேசாமல் இருந்து விடுவது உண்டு.

வகுப்புகளுக்கு ஒழுங்காக வராதவர்கள், குறிப்பிட்ட பாடங்களைப் படிக்காமல் வகுப்புக்கு வருபவர்கள் இவருடைய கண்டிப்புக்கு உட்படுவார்கள். தமிழ் இலக்கியப் பாடல்களையோ, தொல்காப்பிய இலக்கணத்தையோ, இலக்கிய விமர்சனத்தையோ இவர் கற்பிக்கும் போது மாணவர்களுக்குத் தெளிவான விளக்கம் ஏற்படவும் அவற்றையொட்டி மேற்கொண்டு சிந்திக்கத் தூண்டும்படியும் விளக்கங்கொடுத்துக் கற்பிப்பார். அவர் எதனைப் படிப்பித்தாலும், அப்பாடந் தொடர்பான சிந்தனைத் தெளிவு அவரிடமிருந்தது. இதனால் மாணவர்களின் சிந்தனையை அவருடைய கற்பித்தல் ஒருபோதும் குழப்பமடையச் செய்வதில்லை. சிந்தனைத் தெளிவில்லாத ஆசிரியர்கள் சிலர் தாமும் குழம்பி, மாணவர்களையும் குழப்பி விடுவர்.

பேராசிரியரிடம் தமிழைச் சிறப்புப் பாடமாகப் படித்தவர்கள் அவருடைய கற்பித்தல் திறனை நன்கு அறிவர். தொல்காப்பியம் பொருளதிகாரத்து

நச்சினார்க்கினியருடைய உரையினை நுண்ணாய்வு செய்து அவர் கற்பித்தது போல எவருமே கற்பிக்க முடியாதெனப் பல பெரியவர்கள் அப்பொழுதும் கூறிக் கொள்வார்கள். ''உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்'' என மரபு வழிக்கல்வியாலே ஏற்றுக் கொண்ட பேராசிரியர் செல்வநாயகம், அதே மரபில் வந்த நக்கீரப் பார்வையினை நச்சினார்க்கினியருடைய உரையிலே செலுத்தத் தவறவில்லை. பொருளதிகாரச் சூத்திரங்கள் சிலவற்றுக்கு எழுதப்பட்டுள்ள நச்சினார்க்கினியரின் முரண்பட்ட உரைகளைச் சுட்டிக்காட்டி ''மாணவர்களாகிய நீங்கள் எங்களுடைய விரிவுரைகளைச் சில வேளைகளிலே பிழையாகக் குறிப்பெடுப்பது போல, இவ்வுரைப் பகுதிகளும் நச்சினார்க்கினியருடைய யாரோ ஒரு மாணவனால் எழுதப்பட்டிருக்க வேண்டும்'' என்று கூறுவார். உரைகளிலே காணப்படும் முரண்பாடுகளை இனங்கண்டு விளக்கும் அதே வேளையில் இவ் உரைகளின் சிறப்புப் பண்புகளையும் மாணவர்கள் உணரும் வகையிலே கற்பிப்பார்.

சிந்தனை விரும்பும் இரசனை உடைய மாணவர்களுக்கு அவருடைய இலக்கியத் திறனாய்வு வகுப்புகள் சுவையுடையனவாக அமைவன. அப்படி இல்லாதவர்களுக்கு அவை வேப்பங்காயாகவே இருப்பதுண்டு. ஏதாவது ஒரு பாடலை உரத்து அப்பாடலோசைக்கேற்ப வாசிப்பார். அப்பாடல் நல்ல பாடலா அல்லது கூடாத பாடலா என்று ஒவ்வொரு மாணவராகக் கேட்பார். நல்ல பாடலென்றோ, கூடாத பாடலென்றோ கூறினால், அதற்குரிய காரணங்களைக் கூறும்படி கேட்பார். இலக்கியத்தைப் பகுத்துணர்ந்து

சுவைக்கக்கூடிய பயிற்சியினை மாணவர்களுக்கு அளிப்பதே இப்பெரியாருடைய நோக்கமாயிருந்தது. இலக்கியத்தைச் சுவைக்கத் தெரியாமல் அதிலே சமூகவியல், வரலாற்றியல் தரவுகளை மட்டும் தேடுகின்ற நிலையுடைய இக்காலத்திலே பேராசிரியர் செல்வநாயகத்தினுடைய இலக்கியத் திறனாய்வுப் பயிற்சியினை எம் போன்ற மாணவர்கள் இன்று திரும்ப அசைபோடுவதுண்டு.

ஆசிரியருக்குரிய துணிவு, சிந்தனைத் தெளிவு, கண்டிப்பு, தான் கருதியவற்றை மறைக்காமல் கூறுதல், மாணவர் கருத்து வளர்ச்சியைத் தூண்டுதல் எனப் பல்வேறு பண்பு நலன்களைக் கொண்டவர் பேராசிரியர் செல்வநாயகம். "இத்தகைய ஆசிரியரிடம் நாம் படிப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று எண்ணுவதுண்டு. ஆனால் அவரைத் தமிழ்த் துறை நன்கு பயன்படுத்தவில்லை என்ற குறையும் சிலராலே கூறப்படுவதுண்டு. மரபுவழிச் சிந்தனையும், நவீன சிந்தனையுங் கொண்ட மிகச் சிறந்த பல்கலைக்கழகத் தமிழாசிரியர் பேராசிரியர் செல்வநாயகம் என்பதனை எவரும் மறுக்க மாட்டார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

4. இலக்கிய வரலாற்றாசிரியர்

தமிழ் இலக்கியப் பரப்பினை தெளிவாகத் தெரிந்து கொண்டு, அதன் வளர்ச்சிக் கட்டங்களைப் பாகுபாடு செய்து, அப்பாகுபாட்டுக்கான அடிப்படைகளுள் அரசியல் மாற்றங்களை முதன்மைப்படுத்தி, ஒவ்வொரு பகுதியினையுஞ் சார்ந்த இலக்கியங்களின் பொருளமைதிக்கான காரணிகளைச் சுட்டி அவ்விலக்கியங்களின் வடிவ அமைதி, மொழிப் பிரயோகம் ஆகியவற்றையும் விளக்கி எழுதப்பட்ட ஒரு தமிழ் இலக்கிய

வரலாற்று நூலுக்கு ஆசிரியராக அமைந்தவர் பேராசிரியர் வி. செல்வநாயகம். இவருடைய இந்நூலே தமிழ் நாட்டிற் பலரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களுக்கு மாதிரியாக அமைந்தது. ஆனால், இத் தமிழ் நாட்டு அறிஞர்கள் எவரேனும் இவ்வுண்மையைத் தங்களுடைய நூல்களில் எவ்விடத்திலேனும் குறிப்பிடாது விட்டுள்ளனர். தமிழ்நாட்டு அறிஞர்களுடைய இம் "மாரிச"த் தனத்தை பேராசிரியர் கா. சிவத்தம்பி தன்னுடைய கட்டுரையொன்றிலே குறிப்பிட்டுச் சொல்கிறார். பேராசிரியர் செல்வநாயகம் சிலப்பதிகாரம் மணிமேகலைக் காப்பியங்களின் காலம் பற்றி "**D**ate of **S**ilappatikaram and **M**animekalai" என்றொரு கட்டுரையினை *1948*ல் எழுதினார். (University of Ceylon Review Vol. III)

இக்கட்டுரையிலே மொழிப் பிரயோகங்களை அடிப்படையாகக் கொண்டு மணிமேகலையின் காலம் சிலப்பதிகாரத்துக்குப் பிற்பட்டது எனப் பேராசிரியர் நிறுவியுள்ளார். *1961*ல் **மணிமேகலையின் காலம்** எனும் நூலை எழுதிய **சோ.ந. கந்தசாமி** என்பவர் பேராசிரியர் குறிப்பிட்ட அதே காரணிகளைக் காட்டி மணிமேகலை சிலப்பதிகாரக் காலத்துக்குப் பிற்பட்டதெனக் கூறியுள்ளார். ஆனால், தன்னுடைய நூலில் எவ்விடத்திலேனும் பேராசிரியருடைய கட்டுரையைக் குறிப்பிட்டாரில்லை. இது பற்றி, "Vaiyapuri Pillai's Dating of Cilappatikaram" என்னும் கட்டுரையை *(1976)* எழுதிய பேராசிரியர் சிவத்தம்பி,

> "As for the linguistic variations between the two works the Consensus is to take. Silappatikaram as pre - Manimekalai. Chelvanayagam raised this point.

Kandasamy riterated it. Unfortunately with no mention whatsoever to the earlier writing of Chelvanayagam.

என்று குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

''**இலக்கிய வரலாறு**'' எனுந் தொடர், இலக்கியங்களுடைய வரலாறு எனவும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாறு எனவும் பொருள் படும். தமிழ் இலக்கியங்களைக் கற்கும் மாணவர்கள் இலக்கியங்களுடைய வரலாற்றிலே சிறப்பாக ஈடுபடுவர். இலக்கியங்கள் வழி வந்த வரலாற்றிலே வரலாற்றியல் மாணவர்கள் சிறப்பாக ஈடுபடுவர். பேராசிரியர் செல்வநாயகம் தமிழ் கற்கும் மாணவர்களுக்காகவே இலக்கிய வரலாறு எழுதினார். எனவே, அவர் இலக்கியங்களுடைய வரலாற்றினையே எழுதினார். இந்த வரலாற்றின் மூலமாக தமிழ் இலக்கியங்கள் எவையெவை என அறிதலுடன் இலக்கிய இரசனையையும் மாணவர்களுக்கு ஊட்ட முடியும். பேராசிரியருடைய நூல் இவ்விரு பணிகளையும் செய்தன.

வரலாறு என்றால் அதற்கொரு காலப்பகுப்புத் தானாக வந்தமைந்து விடும். இலக்கிய வரலாற்றுக்கும் காலப்பகுப்பு இன்றியமையாததாகும். தமிழ் இலக்கிய வரலாறுகளை எழுதியவர்கள் எவ்வகையான காலப்பகுப்புகளை என்ன அடிப்படையிலே

1. கா. சிவத்தம்பி தன்னுடைய ''தமிழில் இலக்கிய வரலாறு'' என்னும் நூலில் தமிழ் இலக்கிய வரலாற்றுக்குக் காலப்பகுப்பு செய்தவர்கள் வரிசையில் றொதேட் கால்டுவேல் அவர்களைக் குறிப்பிடுகிறார்.

மேற்கொண்டனர் என்பதை இங்கு சுருக்கமாகத் தருகிறோம்.

தமிழ் இலக்கிய வரலாறு பற்றி முதன்முதல் சிந்தித்தவர் **சி.வை. தாமோதரம்பிள்ளை**யாகும்.[1] அவருடைய பாகுபாடு, அபோத காலம், அஷசர காலம், சமுதாய காலம், அநாதர காலம், சமணர் காலம், இதிகாச காலம், ஆதிதக் காலம் என அமைகின்றது. இப்பாகுபாட்டின் பொருத்தமின்மை பற்றிப் பிற்காலத்தவர் குறிப்பிட்டனவற்றையெல்லாம் தொகுத்து **மனோன்மணி சண்முகதாஸ்** (சி.வை. தாமோதரம்பிள்ளை ஓர் ஆய்வு, *1983, பக். 168-171*) கூறியுள்ளார். இவருக்குப் பின்னர் எழுந்த இலக்கிய வரலாற்று நூல்களின் காலப்பகுப்பு அடிப்படைகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

(அ) பொதுவாகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை ஆதி காலம், மத்திய காலம், நவீன காலம் என வகுக்கலாம். **கமில் ஸ்வெலெபில்** *(1957)*, **அ. சிதம்பரநாதன் செட்டியார்** *(1958)*, **மு. வரதராசன்** *(1972)*, **தேவநேயப் பாவாணர்** *(1979)* ஆகியோருடைய எழுத்துகளிலே இத்தகைய பாகுபாடு காணப்படுகின்றது.

(ஆ) சமய நோக்கினை முக்கிய அடிப்படையாகக் கொண்டு காலப் பகுப்பினை மேற்கொள்ளுதல், **எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை** *(1904)*, **எம். சீனிவாச ஐயங்கார்** *(1914)*, **மறைமலையடிகள்** *(1930)*, **கா. சுப்பிரமணியபிள்ளை** *(1930)* ஆகியோருடைய காலப்பகுப்பு இவ்வகையிலேயே அமைகின்றது.

(இ) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையான சில நிறுவனங்கள், இயக்கம், போக்குகள், இலக்கிய வடிவங்கள் ஆகியனவற்றின் பின்னணியிலே **எஸ். வையாபுரிப்பிள்ளை** *(1957)*, **திரு. திருமதி. ஜேசுதாசன்** *(1961)*, **ந. சுப்பிரமணியம்** *(1981)* ஆகியோர் காலப் பாகுபாட்டினைச் செய்துள்ளனர்.

(ஈ) அரசியல், சமயம், நிறுவனம், இலக்கிய வடிவம் என்னும் அடிப்படையிலே **மு. அருணாசலம்,** காலப் பாகுபாட்டினை மேற்கொண்டுள்ளார்.

(உ) இலக்கியத்தின் வழி வரலாறு என்ற அடிப்படையிலே **கா. சிவத்தம்பி** *(1988)*, *1. ஆரம்பம் முதல் கி.பி. 600 வரை, 2. கி.பி. 600 முதல் கி.பி. 1400 வரை, 3. கி.பி. 1400 முதல் கி.பி. 1800 வரை, 4. கி.பி. 1800 முதல் இற்றை வரை* என நான்கு பிரிவுகளாக வகுக்கின்றார்.

மேற்காட்டியவர்களினின்றும் வேறுபட்ட நோக்கினை உடையவராகப் பேராசிரியர் செல்வநாயகம் அமைந்தார். அவர் "**சங்கம்**" என்னும் நிறுவனத்தையும் தமிழ்நாட்டு அரசியல் மாற்றங்களையுமே தன்னுடைய தமிழிலக்கிய வரலாற்றுக் காலப் பகுப்புக்கு அடிப்படைகளாகக் கொண்டார். கி.பி. ஆறாம் நூற்றாண்டுடன் தொடங்கும் பல்லவ மன்னர்களுடைய ஆட்சி போன்று, அதற்கு முன்னர் சேரரோ, சோழரோ, பாண்டியரோ, களப்பிரரோ நீண்ட கால நிலையான ஆட்சியினை அமைக்கவில்லை. அத்துடன் சங்க இலக்கியச் செய்யுட்களை ஆராய்ந்தால், அவற்றிலே குழுத் தலைவர்கள் நிலையிலிருந்து அரசர் என்ற நிலைக்கு மாற்றமடையும் அரசியல் வளர்ச்சி பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

எனவே, பல நூற்றாண்டுகளுக்கு முன் **இறையனார் களவியல்** உரைகாரர் குறிப்பிட்ட சங்கம் என்னும் நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 600 வரையிலான தமிழிலக்கிய வரலாற்றுக் காலத்தைச் ''சங்ககாலம்'' என்றும், ''சங்கமருவிய காலம்'' என்றும், பேராசிரியர் செல்வநாயகம், பாகுபாடு செய்தார். ஏனையவை பல்லவர் காலம், சோழர் காலம், விஜயநகர - நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என அரசியல் மாற்றத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட பாகுபாடுகளாகும். நவீன நோக்கத்தினை ஓரளவு அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களுக்கெல்லாம் பேராசிரியர் செல்வநாயகத்தினுடைய தமிழ் இலக்கிய வரலாறு (1951) காலத்தால் முந்தியதாகும். பேராசிரியருடைய தமிழ்ப் பணிகளுள் இத்தகைய நூலை எழுதித் தமிழுலகுக்கு அளித்தமையுடன் பின்வந்த பல தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்தமை மிகச் சிறந்த பணியெனலாம்.

பேராசிரியரின் தமிழ் இலக்கிய வரலாறு நூலின் அமைப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு காலப்பகுதியின் இலக்கியங்களையும் அவை தோன்றிய காலப் பின்னணியினையும், அவ்விலக்கியங்களுடைய பொருள், செய்யுள், மொழி ஆகியனவற்றையும் தெளிவாக விளங்கும் வண்ணம் அமைந்துள்ளது.

பேராசிரியர் செல்வநாயகத்தின் இந்நூல் தொடர்பாகக் கா. சிவத்தம்பி தன்னுடைய தமிழ் இலக்கிய வரலாறு (பக். 131-132) என்னும் நூலிலே கூறியிருப்பதை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

"இக்கால கட்டத்தில் (அதாவது, ஐம்பதுகளில்) தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களில் கலைமாணி (B.A.)ப் பட்டத்துக்கான தமிழ்ப் பாட நெறியில் இலக்கிய வரலாறும் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டதாகும். காலஞ் சென்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் தீட்சண்ணிய நோக்குக் காரணமாக நாற்பதுகளிலேயே இப்பாடம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ், பொது, சிறப்புத் தமிழ்த் தேர்வுகளில் இடம் பெற்றது. அங்கு அப்பாடத்தினை முதன் முதலிற் படிப்பித்த வி. செல்வநாயகம், இதற்கான ஒரு பாடப் புத்தகத்தின் தேவையை அறிந்தவராய் படிப்பித்தல் காரணமாக அத்தகைய ஒன்றினை எழுதுவதற்குத் தகுதியுடையவராகவிருந்தார். அவர் எழுதிய "தமிழ் இலக்கிய வரலாறு" எனும் நூல், தமிழ் இலக்கியத்தின் வரலாற்றைத் தமிழ் நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளின் பின்னணியில் வைத்துக் காட்டிற்று. முன்னர் சமண காலம், தேவார காலம், காப்பிய காலம், இடைக்காலம் எனக் குறிப்பிடப் பெற்றவை, இவர் நூலில் சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழப் பெரு மன்னர் காலம், விஜய நகர நாயக்க மன்னர் காலம் எனக் குறிப்பிடப்பட்டன. செல்வநாயகத்தின் நூலின் திறனை வையாபுரிப்பிள்ளை முதல் ஜேசுதாசன், அருணாசலம் வரை பல அறிஞர்கள் போற்றியுள்ளனர். இந்நூல் இதன் பின்னர் வந்த பாடப்புத்தகங்கள் பலவற்றுக்கு மாதிரியாக அமைந்தது. பின்வந்த பாடப்புத்தக ஆசிரியர்கள் பலர் எடுத்த இடத்தைக் கூறாது, பாடப்புத்தக ஆசிரியர்களுக்குரிய பண்பு தவறாது, இவருடைய கால

வகுப்பு முறைமையினைத் தாமதமாகப் பயன்படுத்திக் கொண்டனர்."

பேராசிரியர் செல்வநாயகத்தின் பங்களிப்பினை மிகப் பொருத்தமாக கா. சிவத்தம்பி மதிப்பீடு செய்துள்ளார்.

5. 'தமிழ் உரைநடை' வரலாறு ஆசிரியர்

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை மாணவர்களுக்குக் கற்பித்ததாலும், ஆய்வு செய்ததாலும், தமிழ் மொழி செய்யுள் மரபிலிருந்து உரைநடை மரபுக்கு ஐரோப்பியருடைய வருகையின் பின்னர் மாற்றமுற்றதை நன்கு உணர்ந்த பேராசிரியர் செல்வநாயகம் தமிழ் உரைநடையின் வரலாற்றை நுணுகி ஆராயலானார். தக்க சான்றாதாரங்களுடன், உரைநடை வளர்ச்சிப் படிகளை இனங்காட்டி, அவற்றை இறுக்கமான நல்ல தமிழ் நடையிலே விளக்கி எழுதியுள்ளார். பேராசிரியருக்குக் கலாநிதிப் பட்டம் இல்லை எனச் சில கட்டங்களிலே குறிப்பிடப்பட்டதுண்டு. இத் "தமிழ் உரைநடை வரலாறு நூலினை அக்காலத்திலே அவர் ஏதாவதொரு பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பித்திருந்தால், உடனடியாக அவருக்குக் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டிருக்கும். இவ்வுண்மையை உணர்ந்தபடியாற்றான் இலங்கைப் பல்கலைக்கழகம் அவரைப் பேராசிரியராக நியமித்தது.

"உலகிலுள்ள எந்த மொழியிலாயினும் இலக்கியம் தோன்றும் பொழுது அது செய்யுள் வடிவத்திலேயே முதலிற்றோன்றுகின்றது. பாட்டைத் தொடர்ந்து உரைநடை வெளிவருகின்றது. எனவே தமிழ் மொழியிலும் முதலிலே தோன்றியது பாட்டு என்றும் அதனைத் தொடர்ந்து உரைநடை

தோன்றிற்றென்றும் கொள்ளுதல் பொருத்தமுடைய தாகும்.''

இவ்வாறு தன்னுடைய உரைநடை வரலாற்றினைத் தொடங்குகிறார் பேராசிரியர் செல்வநாயகம். தமிழ் உரைநடைப் பரப்பினை ஐந்து கால கட்டங்களாகப் பகுத்து ஆராய்கின்றார். அக்காலங்களாவன; சங்ககாலம், களவியலுரைக் காலம், உரையாசிரியர்கள் காலம், ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு.

கி.பி. 6ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் எழுந்த உரைநடை வகைகளைச் சங்க காலம் என்னும் காலப்பகுதியிலே பேராசிரியர் ஆராய்கின்றார். தமிழிலே ஆரம்பத்தில் உரைநடை தோன்றியபோது அது செய்யுளை ஒத்ததொரு நடையாகவே அமைந்திருக்க வேண்டுமென்னும் கருத்து முன்வைக்கப் படுகின்றது. தன்னுடைய இக்கருத்துக்குப் புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களிலிருந்து சான்றாதாரங்கள் காட்டுகின்றர். புறநானூற்றில்,

மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தென்ப
பாறர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பென....

எனத் தொடங்கிச் செல்லும் பாடலடிகள் புலப்படுத்தும் ஓசை சாதாரண பேச்சோசையைக் கொண்டதாய் அமைகின்றது எனக் குறிப்பிடும் ஆசிரியர், சிலப்பதிகாரத்தில் இடம்பெறும்,

''கயலெழுதிய இமய நெற்றியின்...'' எனத் தொடங்கும் உரைப்பகுதி பாட்டுப் போல அமைகின்றது எனக் குறிப்பிடுவர். இச்சான்றுகளாலே ''உரைநடை

தோன்றுகின்ற காலத்துச் செய்யுள் நடைக்கும், அவ்வுரை நடைக்கும் உள்ள பேதம் பெரிதன்று. காலஞ் செல்லச் செல்ல அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடு கூடிக் கொண்டு போகின்றது'' என்று அவர் கூறக் கூடியதாயுள்ளது. தொல்காப்பியர் செய்யுள் வகைகளுள் ஒன்றாக உரைநடையைக் குறிப்பிட்டதன் காரணமும் இதனாலே தெளிவுறுத்தப்படுகின்றது,

இவ்வாறு உரைநடையின் தோற்றத்தினை நோக்கிய ஆசிரியர் பின்னர் எழுந்த உரைநடை நூல்களிலே பயின்றுவந்த உரைநடையின் பண்புகளையும், அப்பண்புகளுக்கான பின்னணிக் காரணிகளையும் நுணுகி ஆராய்ந்து கூறுகின்றார். கி.பி. 6ம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுந்த இறையனார் களவியலுரையிலே காணப்படும் இரண்டு வகையான நடைகளை இனங்கண்டு அவற்றுக்கு உதாரணங்கள தந்து விளக்கியிருப்பது சிந்தனைக்கு விருந்தளிக்கின்றது '(அவள்) சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து - கண்டாள்' என்னும் உரைப்பகுதியை உதாரணங்காட்டி,

> *''இவ்வுரைப் பகுதியின்கண் இடையிடையே*
> *எதுகை மோனை முதலிய ஓசைப் பண்புகள்*
> *வாய்ந்த சொற்றொடர்கள் வந்துள்ளன.*
> *அவற்றைப் பொருளறிந்து படிக்கும்போது*
> *செய்யுளொன்றைப் படிக்கும் நேரத்தில்*
> *எம்மிடத்தில் உண்டாகும் உணர்ச்சி*
> *எத்தகையதோ அத்தகையதோர் உணர்ச்சி*
> *எம்மனத்தில் எழுகின்றது''*

என்று கூறி அவ்வுரைப் பகுதியை ஒரு பாடல் வடிவாகத் தந்துள்ளமை அவருடைய இரசனைத் திறனையும், திறனாய்வுப் போக்கினையும் காட்டுகின்றது. இன்னொருவகையான உரைப்பகுதியும் இறையனார் களவியலுரையிலே இடம்பெறுகின்றது. அது "என் பயக்குமோ இது கற்க எனின் வீடுபேறு பயக்கும் என்பது. என்னை இது களவியலன்றே. இது கற்க வீடு பேறு பயக்குமாறு என்னை" என அமையும் உரைப்பாங்காகும். "ஆசிரியன் மாணவனுக்கு ஒன்றை விளக்கும் போது எழுப்பும் கடாக்களும் அவற்றிற்கு அவன் கூறும் விடைகளும் பேச்சில் எவ்வாறு அமையுமோ அவ்வாறே எழுத்திலும் அமைதலை" இத்தகைய உரைநடை காட்டுவதாகப் பேராசிரியர் கூறுவர்.

ஒவ்வொரு காலத்து உரைநடை வகைகளை இலக்கியச் சான்றாதாரங்கள் மூலம் வகைப்படுத்திக் காட்டுகின்றார். ஒவ்வொரு வகை நடையின் தனித்துவமான பண்புகளை இனங்கண்டு, அத்தகைய நடையினாலே ஏற்படக்கூடிய பயன்களையும் சுட்டிச் செல்கிறார். உதாரணமாக, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை பற்றிக் கூறும்போது,

> "இனி இக்காலத்து உரை நடையிற் காணப்படும் பண்புகள் சிலவற்றை நோக்குவோம். சமுதாய வாழ்க்கையிலே பொதுமக்கள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்ற இக்காலத்தில் அம்மக்கள் படித்துப் பொருளறிதற்கு ஏற்ற ஒரு நடைவகை உருவாதல் இயல்பாகும். அந்நடையிற் காணப்படும் சிறப்பியல்புகளுள் கடினமான சந்தி விவகாரங்களின்றி மொழிநடை அமைதல், பேச்சு வழக்கிலுள்ள

சொற்கள், சொற்றொடர்கள், இலக்கண அமைதிகள் என்பன இடம்பெறுதல், ஆங்கில மொழியிற் கையாளப்பட்ட குறியீட்டு முறைகள் பயின்று வருதல் போல்வன சிலவாகும்.''

என இக்கால உரைநடையின் இயல்புகள் சுட்டப் படுகின்றன. இலக்கியத் திறனாய்வினை, பிற்காலத்தில் திறனாய்வார்களெனச் சிறப்புற்ற க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, போன்றவர்களுக்கு தம் வேறு பல பெருந்தொகையான மாணவர்களுக்குக் கற்பித்தும், அத்துறை பற்றி எவரும் சிந்திக்காத காலத்திலே சிந்தித்தும், ஆய்வுகளும் மேற்கொண்டார் பேராசிரியர் செல்வநாயகம். அத்துறை தொடர்பான முயற்சிகளுள் முதற்படியான முயற்சி தான் இலக்கியங்களுடைய வரலாற்றை மிக விரிவாகவும் நுணுக்கமாகவும் நோக்குவதாகும். தமிழ் இலக்கிய வரலாற்றை முழுமையாகத் தரிசித்து எழுதிய பேராசிரியர், தமிழ் உரைநடையின் வரலாற்றை நுணுக்க ஆய்வாக மேற்கொண்டார்.

6. திறனாய்வுக் கட்டுரையாளர்

இன்று எழுத்துலகில் ஒரு துரதிஷ்டமான நிலை காணப்படுகின்றது. அது என்னவெனில், இலக்கியங்களின் திறன்களை ஆய்ந்து எழுதுபவர்களை விடுத்துத் திறனாய்வு பற்றி எழுதுபவர்களையே திறனாய்வாளர் எனக் கொள்ளும் சிலருடைய மனோபாவமாகும். பேராசிரியர் செல்வநாயகம் இலக்கியங்களின் திறன்களை ஆராய்ந்தும் எழுதியுள்ளார். இலக்கியத் திறனாய்வு பற்றியும் எழுதியுள்ளார். அக்கட்டுரைகளை ஓரளவு காலவரன் முறையிலே நோக்கலாம். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க மலரான **'இளங்கதிர்'** இவருடைய பல கட்டுரைகளை

வெளியிட்டது. "**சொல்லும் பொருளும்**" (மலர் 6, பக். 91-104, 1953-54) என்னும் கட்டுரை இலக்கியத்துக்குச் சொல்லினுடைய, சொற்பொருளினுடைய இன்றியமையாமை பற்றியும் சொற்பொருள் என்னென்ன வகையிலே உணரப்படுகின்றது என்பது பற்றியும் கூறுகின்றது.

> "இவ்வாறே இலக்கியத்திற்குச் சொல் கருவியாகின்றது. ஆகவே இலக்கியத்தைக் கற்று அனுபவிக்க விரும்புவோருக்குச் சொற் பொருளறிவு இன்றியமையாததாகின்றது.... கவிதையில் அமைந்து கிடக்கும் அனுபவப்பொருள் புலவனுடையது. ஆனால், அவன் கருவியாகக் கொண்ட சொல் அவனுக்கும் எமக்கும் பொதுவாயுள்ளது. அதன் உதவியைக் கொண்டுதான் கவிதையில் அவன் குறித்துள்ளதை நாம் அறிய வேண்டியிருக்கின்றது."

எனச் சொல்லினுடைய முக்கியத்துவத்தைச் சுட்டிச் செல்கிறார். "சொல் ஒலிவடிவு வரிவடிவுடையது. அது பொருளோடு புணராதவிடத்தும் சொல்லெனப்படாது" எனச் சொல்லினுடைய பண்பு கூறப்படுகின்றது. சொற்பொருளுக்கும் சமுதாய மக்களுக்குமிடையேயுள்ள தொடர்பு குறிக்கப்படுகின்றது. காட்சிப்பொருள், கருத்துப் பொருள் என்ற அடிப்படையிலும், செம்பொருள், சுவைப்பொருள் என்ற அடிப்படையிலும் சொல்லும் பொருளும் இக்கட்டுரையிலே நோக்கப்படுகின்றன. "**பாட்டும் ஓசையும்**" (இளங்கதிர், மலர் 7பக். 114-22 1954-55) என்னும் கட்டுரையிலே கவிதைக்கு இன்றியமையாத ஓசைபற்றிக் கூறுகிறார்.

> "சொற்களின் பொருள் எமக்குப் புலப்படாத இடத்தும் பாட்டின் ஓசையைக் கொண்டே

> அதன்கண் பொருந்தியுள்ள சுவையைக் கிரகித்துக் கொள்ளலாம். இந்தத் தத்துவத்தை உரைநடை பாட்டு என்பனவற்றில் மட்டுமன்று, சாதாரண பேச்சிலும் நாம் கண்டு தெளியலாம்''

என்று பேராசிரியர் கூறியுள்ள உண்மையினை உணர்ந்து கொண்டால் புதுக்கவிதையின் போக்கினைக் கிரகித்துக் கொள்வது இலகுவாயிருக்கும்.

பேராசிரியருடைய "**வழக்குஞ் செய்யுளும்**" (இளங்கதிர், மலர் 14. பக். 128-35, 1961-62) என்னுங் கட்டுரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அறுபதுகளில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களிடையே "மரபு" தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன. ஒரு சாரார் தமிழிலக்கியங்களில் பேச்சு வழக்கு இடம் பெறக் கூடாதென அபிப்பிராயப்பட்டனர். இன்னொரு சாரார், பேச்சு வழக்கினை உபயோகித்து இலக்கியங்கள் கதைத்தனர். அத்துடன் பேச்சு வழக்குத் தமிழிலக்கியங்களிலே உபயோகிக்கப்பட வேண்டும் என்று அபிப்பிராயமும் தெரிவித்தனர். இம்மரபுப் போராட்டம் தொடங்குவதற்குச் சற்று முன்னர்தான் பேராசிரியர் தன்னுடைய "வழக்குஞ் செய்யுளும்" கட்டுரையிலே,

> "பேச்சு வழக்கில் உள்ள மொழி தான் வாழும் மொழி; அதற்கு உள்ள ஆற்றலை அவதானித்து அறிந்து, அதனைப் பயன்படுத்திக் கொள்கின்றவனே சிறந்த எழுத்தாளனாகின்றான்.''

என்று இலக்கியத்திலே பேச்சு வழக்கின் உபயோகத்தின் தேவையினை எடுத்துக் காட்டியுள்ளார். அது மட்டுமின்றி, இத்தகைய தேவையை உணராதவர்கள்

இரு வகைப்பட்டவர்களெனவும், பாகுபடுத்தியுள்ளார் (1) வழக்கொழிந்த சொற்கள், சொற்றொடர்கள், இலக்கண மரபுகள் ஆகியனவற்றைக் கையாளும் எழுத்தாளர், (2) முற்காலத் தமிழ் மொழிதான் இலக்கண வரம்புடையது. இக்காலப் பேச்சு வழக்குக்கு அத்தகைய இலக்கண வரம்பு இல்லையென்பவர். இவ்விரு சாராருடைய கருத்துகளும் பிழையானவை என்பதைத் தகுந்த ஆதாரங்களுடன் பேராசிரியர் காட்டியுள்ளார்.

திறன்பல செறிவுற்றுள்ளன எனத் தான் கருதிய செய்யுட்கள், உரைநடைகள், இலக்கிய வடிவம் ஆகியனவற்றைப் பேராசிரியர் பகுப்பாய்வு செய்து தெளிவான நடையிலே கட்டுரைகள் எழுதியுள்ளார். "**கடலோசை**" (இளங்கதிர் மலர் 10, பக். 86-94, 1957-58) என்னுங் கட்டுரை சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். **ராஜம் அய்யர்** எழுதிய **கமலாம்மாள் சரித்திரம்** என்னும் நாவலிலிருந்து ஓர் உரை பகுதியினைத் தெரிந்தெடுத்து அதனைத் திறனாய்வு செய்து, அதிலே காணப்படும் நலன்களை ஆசிரியர் விவரிக்கின்றார். கவிதையிலே நலன்களைக் கண்டு கூறும் மரபே நம்மிடையே நீண்ட காலமாக இருந்து வந்தது. உரைநடையிலும் அத்தகைய நலன்களைக் காணலாம் என்பதை,

> "நயச் சிறப்புக்கள் பாட்டில் இருத்தல் போல உரைநடையிலும் உண்டு. ஒன்றைத் தர்க்க முறைப்படி ஆராய்ந்து, காரண காரியத் தொடர்பு உளதேல் அதனை எடுத்துக் காட்டித் தெளிவாகக் கட்டுரைத்தற்கு உரைநடை பெரும்பாலும் கையாளப்படுகின்றதெனினும், கவிதையைப் போல் கற்பனையுருவங்களை அமைத்தற்கும் உணர்ச்சி

> பேதங்களை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப் படுகின்றது. அத்தகைய இடங்களில் அது பாட்டின் பண்புகள் சிலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குதலைக் காணலாம்.''

என்னும் அவருடைய கூற்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. நாவலிலே இடம் பெறும் ஒரு பாத்திரம் கடலோசையைக் கேட்டுக் கூறுவதாக இவ்வுரைப்பகுதி அமைகின்றது. கடலோசை சோகத்தினை உணர்த்துவதாகக் கூறும் நாவல் ஆசிரியர் பல வகைப்பட சோகங்களுக்கிடையே காட்டும் வேறுபாடுகளை நன்கு உணர்ந்து, அவற்றுள் உச்சமான சோகம் எதுவென்பதை உணர்த்துகின்றார் என்பதை எடுத்துக்காட்டும் பேராசிரியர் செல்வநாயகம், அதனை நாவலாசிரியர் எப்படி உணர்த்துகின்றார் என்பதனை,

> ''சோகங்களுக்கிடையேயுள்ள வேறுபாடு (Contrast) இப்பந்தியிலே குறிப்பாகச் (Implied) சொல்லப்படுகிறது. ''புத்திரனை இழந்த பிதாவின் சோகமும்'', ''புருஷனை இழந்த மனைவியின் சோகமும்'' சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை. அது ''தனி மனிதனது தனித் துயரம் (Individual grief) '' அர்ச்சுனன் போர்க்களத்தில் அடைந்த சோகம் மகத்தானது; அது சர்வத்தையும் இழந்த அல்லது இழக்கப் போகின்ற ஒருவனது பெருந்துயர் (Universal Grief)''

என்னும் பகுதியினைப் படிப்பதன் மூலம் உணர முடிகின்றது. ''கடலோசை'' என்னும் கட்டுரை ஈழத்துத் திறனாய்வு வரலாற்றிலே முக்கியமான இடத்தைப் பெறக்கூடியது. உரைப்பகுதியைத் திறனாய்வு செய்து

காட்டிய முன்னோடி எனப் பேராசிரியர் செல்வநாயகத்தைக் குறிப்பிடுவதிலே எவ்வித தவறும் இல்லை.

திறனாய்வாளன் இலக்கியங்களின் திறன்களை மட்டும் ஆராய்பவனல்ல. அவற்றிலுள்ள குறைகளையும் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்ட வல்லவன். பேராசிரியர் செல்வநாயகம் தேசிக விநாயகம் பிள்ளை பாடிய "**கடல்**" என்னும் கவிதையினை எடுத்துப் பகுப்பாய்வு செய்து, அதனிடையே காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் எழுதிய "**கடல்**" (இளங்கதிர், மலர் 9, பக். 80-86, 1956-57) என்னுங் கட்டுரையிலே இத்தகைய திறனாய்வினை மேற்கொண்டுள்ளார். குழந்தைக்காக எழுதப்பட்ட இப்பாடலைப் படிக்கும் போது, தே.வி. தன்னைக் குழந்தையாகவே பாவனை பண்ணிப் பாடவில்லை என்பதற்கு அப்பாடலிலிருந்தே பல ஆதாரங்கள் காட்டப்படுகின்றன.

கம்பனிலேயிருந்து இரண்டு பாடல்களை எடுத்துப் பகுப்பாய்வு செய்து, அவற்றின் நலன்களை "**கண்ணுற்றான் வாலி**" (இளங்கதிர் மலர் 11 பக். 48-154, 1958-59) என்னுங் கட்டுரையாகவும், : "**கம்பனில் ஒரு பாட்டு**" (இளங்கதிர், மலர் 16, பக். 109-113, 1963-64) என்னும் கட்டுரையாகவும் எழுதியுள்ளார். இராம பாணத்தால் வீழ்ந்து விட்ட வாலி முன்னர் இராமன் வருகின்ற போது, வாலியினுடைய உணர்வுகளைக் கம்பன் "**கண்ணுற்றான் வாலி**" என்னும் செய்யுள் மூலம் எப்படிப் புலப்படுத்துகிறான் என்பதை முதற் கட்டுரை விவரிக்கின்றது. "இச்செய்யுளில் மருட்கை, வெகுளி, இளிவிரலல் ஆகிய சுவைகளை முறையே அமைந்திருத்தல் கண்டு இன்புறற்பாலது. இவ்வாறு

வாலியின் மனோபாவத்தையும் அவனிடத்தே தோன்றிய மூவகை மெய்ப்பாடுகளையும் ஒரு பாட்டிலே தெளிவுறக் காட்டும் ஆற்றல் கம்பன் முதலான பெரும் புலவர்களுக்குத்தான் உண்டு'' எனக் கட்டுரையை முடித்து வைக்கிறார். சுந்தரகாண்டத்தில் அசோகவனத்திலிருந்த சீதை முன் அனுமான் தோன்றிய போது சீதைக்கேற்பட்ட ஐயத்தினை உணர்த்துவதாக,

> ''அரக்கனே ஆக வேறோர் அமரனே ஆக அன்றிக்
> குரங்கினத் தொருவனே தான் ஆகுக,
> கொடுமையாக இரக்கமேயாக, வந்திங்கெம்பிரான்
> நாமஞ் சொல்லி உருக்கினணுணர்வதைத்
> தந்தானுயிர் இதினுதவியுண்டோ''

என்னும் பாடலைக் கம்பன் அமைக்கிறான். இப்பாடலின் திறன்களை நன்கு ஆராய்ந்து கூறும் கட்டுரையாகக் ''**கம்பனிலே ஒரு பாட்டு**'' என்னுங் கட்டுரை அமைகின்றது. கம்பன் ''கொடுமையாக'', ''இரக்கமேயாக'' என்னும் இரு தொடர்களை உபயோகித்ததின் உட்பொருள் கட்டுரையிலே தெளிவுறுத்தப்படுகின்றது. ''அரக்கனே குரங்கு வடிவில் வந்து என்னுடைய இறப்பினைத் தடுப்பதென்றால், அவனுடைய நோக்கம் வேறுபட்டதே. அது கொடுமையானது. தேவர்களில் ஒருவன் இவ்வாறு வந்து நான் இறப்பதைத் தடுப்பானாயின், இது தங்களுடைய உய்வுக்காகவே இருக்கும், எனவே அதுவும் கொடுமையானதே. வானரங்களில் ஒருவன் தான் வந்து இச்செயல் செய்தானாயின் அது உண்மையில் இரக்கத்தினாலேயாகும்,'' என்று சீதை எண்ணுவதாக இப்பாடலின் அடிப்படையிலே பேராசிரியர் இக்கட்டுரையிலே கூறியிருப்பது நயத்தற்குரியது.

பேராசிரியருடைய திறனாய்வுப் போக்கினையும் இலக்கியங்களிலே அவருக்கிருந்த ஈடுபாட்டினையும், குறை காணின் அவற்றைத் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டும் தன்மையினையும் "**புறநானூற்றில் ஒரு பாட்டு**" (இளங்கதிர், மலர் 12, பக். 84-88, 1959-60) என்னுங் கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது. "களிறு கடை இயதாள், கழலுரீஇய திருந்தடி" எனத் தொடங்கும் புற நானூற்றுப் பாடலே இக் கட்டுரையில் பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. பொருளே இலக்கிய வடிவத்தை நிச்சயிக்கின்றது என்னும் உண்மை இக்கட்டுரையாலே தெளிவுறுத்தப்படுகின்றது. சங்கப் புலவர்கள் அகவற்பாவினையும் வஞ்சிப் பாவினையும் தாம் எடுத்துக் கொண்ட பொருளினைப் புலப்படுத்தப் பொருத்தமுற உபயோகித்துள்ளனர் என்பதை இப்பாடலிலே இடம்பெறும் அகவல், வஞ்சியடிகளையே சான்றாகக் காட்டி விளக்கங் கொடுக்கின்றார். இப்பாடலுக்கு உரை எழுதியுள்ளார் உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர். அவ்வுரையிலேயே குறை காணுகின்றது செல்வநாயத்தின் நக்கீரப்பார்வை. மன்னனுடைய வீரச் சிறப்பினைக் கூறுகின்ற இப்பாடலிலே "மா மறுத்த மலர் மார்பு" என்னும் அடி இடம் பெறுகின்றது. இப்பாடலடிக்கு உரை கூறிய நச்சினார்க்கினியர் "திருமகள் பிறர் மார்பை மறுத்தற்கு ஏதுவாகிய பரந்த மார்பு" எனப் பொருள் கொண்டுள்ளார். இது தவறான உரை எனக்கொள்ளும் பேராசிரியர் செல்வநாயகம், மன்னன் மார்பிலே திருமகளுறைவதாகக் கூறும் மரபு பிற்காலத்தது என்றும், வீர மன்னனுடைய மார்பு பற்றிக் கூறும் போது இப்படிக் கூறுவது பொருத்தமில்லை என்றும் வாதிடுவார். அவர்

இப்பாடலடிக்குக் கொள்ளும் பொருள் மிகப் பொருத்தமாக அமைவதைக் காணலாம். "மா" என்றால் "திருமகள்" என நச்சினார்க்கினியர் பொருள் கொள்ள "**வில் நாண்**" என பேராசிரியர் பொருள் கொள்கின்றார். வீரனாகிய அம்மன்னன் எண்ணில்லாத் தடவைகள் வில்லை வளைத்து பகைவர் மேல் அம்புகள் தொடுத்திருப்பான். அவ்வாறு வில்லை வளைக்கின்ற போது, அதன் நாண் அவனுடைய மார்பிலே உராய்ந்து செல்லும். மலர் போன்றது அவனுடைய மார்பு. எனவே அந்நாண் உராய்வு அம்மார்பிலே மறுவினை ஏற்படுத்துகின்றது என்று "மா மறுத்த மலர் மார்பு" என்னும் செய்யுளடிக்குப் புத்துரை வகுத்துள்ளமை கண்டு இன்புறற்பாலது.

தமிழில் எழுந்த இலக்கியங்களிலே காணப்படும் இலக்கிய மரபினைத் தன்னுடைய இலக்கிய வரலாற்று நூலிலே சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அவற்றுட் சிலவற்றை விவரித்து விளக்கமாகத் தனித்தனிக் கட்டுரைகளாக எழுதியுள்ளார். சங்க இலக்கிய மரபினை "Tradition in Early Poetry" (University of Ceylon Review Vol. XXIV 142 1966 PP 106-114) என்னுங் கட்டுரை விளக்குகின்றது. சங்க இலக்கியத் திணைக் கோட்பாடு பற்றியும் இக்கட்டுரையே முதன் முதலாகப் புதியதொரு கருத்தினை முன் வைத்ததெனலாம்.

> The tradition of having five division in akam or love originated at a time when people lived in all the five regions, Paalai, Mullai, Kurinji, Marutham and Neithal in the Tamil land. During the time of Kapilar and Paranar the people of Paalai had moved into the more fertile regions of Kurinji and Mullai for permanent settlement,

and therefore, the theme of separation had to be modified to fit into the new pattern of society that occupied only four of the five natural regions. Therefore, the *paalaiththinai* or separation in love, which was meant earlier for the people of the Paalai region was considered appropiate during the time of Kapilar and Paranar for the men of the hilly tracks who had to go to distant places through the arid Paalai region in search of their livehood. This change in *paalaiththinai* occured by the time of Kapilar and Paranar. This is only an example to show how the early tradition of love poetry was changing as the life of people was changing in the early days.

என அவர் எழுதியுள்ள பகுதியினைப் படித்துப் பார்ப்பின் சங்க இலக்கிய கருத்திணை மரபு எப்படி மக்கள் வாழ்க்கைக்கேற்ப மாறி வந்துள்ளது என்பதை அறியக் கூடியதாயுள்ளது. இத்தகைய மரபு மாற்றத்தினை ஒழுங்காக அறிந்து கொள்வதற்குத் தற்போது எம்மிடமுள்ள எட்டுத் தொகை பத்துப்பாட்டு நூல்களிலேயுள்ள செய்யுட்கள் வரலாற்றடிப்படையிலே புதிதாக நிரைப்படுத்த வேண்டும் என்பதை There fore, this change in the tradition and the stages by which it took place cannot be traced historically as long as the poems in the eight Anthologies and the ten Idylls are not arranged in their chronological order. Until Tamil scholars take to this aspect of study seriously, the history of early Tamil Poetry cannot be traced என்னும் மேற்காட்டிய கட்டுரைப் பகுதியிலே குறிப்பிட்டுள்ளார். துரதிஷ்டவசமாகப் பேராசிரியர் குறிப்பிட்ட இப்பணி இன்னும் முற்றுப்பெறவில்லை. புறநானூறு என்னும் தொகுதியிலே காணப்படும் பாடல்கள்

எல்லாம் ஒரே காலத்தவை எனக் கூற முடியாதுள்ளது. நெல்லரிசிப் பண்பாட்டுக்கு முன்னரே எழுந்த பாடல்களும் இத்தொகை நூலிலே இடம் பெற்றுள்ளன என்பதை இவ்விடத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழிலக்கியங்களிலே பக்திப் பாடல்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. இப் பாடல்களிலே காணப்படும் இலக்கிய மரபினையும், தமிழிலக்கிய மரபுப் பின்னணியிலே இப்பாடல்கள் வகிக்கும் இடத்தினையும் "**தமிழிலக்கியமும் பக்திப்பாடல்களும்**" (கணேசையர் நினைவு மலர் 1960) என்னும் கட்டுரை விபரிக்கின்றது.

7. முடிவுரை

இலங்கைப் பல்கலைக்கழகம் இரண்டு தமிழ்ப் போக்குகளை உருவாக்கியது. ஒன்று திராவிட மொழியியல், நாட்டாரியல், இலக்கணம், நாடகம் என்னும் துறைகள் தழுவிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை போக்கு, மற்றையது இலக்கிய விமரிசனம், நடையியல் என்னும் துறைகள் தழுவிய பேராசிரியர் செல்வநாயகம் போக்கு. ஈழத்திலே தலையாய விமரிசகர்களை உருவாக்கிய ஆசான் இவராகும். ஆனால், எவராவது இதுவரை தம்முடைய இலக்கியத் திறனாய்வுப் பயிற்சிக்கு இவர் காரணமாயிருந்தாரென்று எங்கேனும் தெளிவாகக் கூறியதாகவில்லை. இது விசனிக்கத்தக்கதே. தமிழ் இலக்கிய வரலாறு என்றொரு நூலை எழுதி ஈழத்துக்குப் புகழ் தேடித் தந்தவர். "இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் கேரளப் பல்கலைக்கழகத்திலும் தான் அறிவியல் ரீதியான தமிழிலக்கிய ஆய்வுகள் நடைபெறுகின்றன" என்று 1968ல் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலே கமில் ஸ்வெலெபில் குறிப்பிட்டார். அப்படி அவர்

குறிப்பிட்ட அறிவியல் ரீதியான தமிழிலக்கிய ஆராய்ச்சி இலங்கைப் பல்கலைக் கழகத்திலே நடைபெறுவதற்குக் காரணமாயிருந்தவர்களுள் பேராசிரியர் செல்வநாயகமும் ஒருவராவார். அவர் செய்த இலக்கியப் பணி எல்லோராலும் நினைவு கொள்ள வேண்டியது.

உசாத்துணைகள் :

1. சிவத்தம்பி கார்த்திகேசு, தமிழில் இலக்கிய வரலாறு - நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 1988.

2. மனோன்மணி சண்முகதாஸ் "சி.வை. தாமோதரம் பிள்ளை - ஓர் ஆய்வு" முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1983.

3. முருகையன், இ.: "கல்வியியல் நோக்கில் நாவலர்" - நாவலர் நூற்றாண்டு மலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, யாழ்ப்பாணம், 1979 பக். 17-26

4. Suvathamby, K. "Vyapurupillai's Dating of Cilappathikaram" Vidyodaya Journal of Arts, Science and Letters, Vol. 5, Nos. 1&2, 1972-76 p.p. 1-12.

- பேராசிரியர் அ. சண்முகதாஸ்

கொழும்பு தமிழ் சங்க நினைவுப் பேருரை நன்றி.

குமரியந் தமிழே அலைவாய் ஊழி
குமரியந் தமிழே நீந்திச்
சிலையாய் நின்றாய் குமரியந் தமிழே

- பரட்சிதாசன் (தமிழ்நாடு)

பன்மொழிப் புலமைமிகு வியத்தகு அறிஞர்

தாவீது அடிகள்

எழுப்பத்தி ஐந்து மொழிகளில் ஆழ்ந்த புலமையும் மேலும் சுமார் எழுபது மொழிகளில் பரிச்சயமும் பெற்றிருந்த வியத்தகு அறிஞர் ஒருவர் 1981ம் ஆண்டு மே மாதம் 31ந் திகதி நள்ளிரவு யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்று யாழ்ப்பாண நூல் நிலையம் தீக்கிரையானதைக் கேட்டு அடைந்த அதிர்ச்சியினால் அவருடைய உயிர் போயிற்று. அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது எழுபத்தி நாலு ஆகும்.

இந்த வியத்தகு மனிதர், புகழ் பெற்ற மொழி வல்லுநர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் சீடரும் அவருடைய வழியில் நின்று சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதியை ஆக்கியவரும் **தாவீது அடிகள்** எனத் தமிழ் மக்களால் அன்புடனும் பெருமையுடனும் அழைக்கப்பட்டு வந்தவருமான வணக்கத்துக்கரிய **பிதா ஹயசிந்து சிங்கராயர் டேவிட்** (தாவீது) என்பவரே ஆவார். தமிழ் மொழியின் சேவையில் அவர் தன்னை ஈடுபடுத்துவதற்கு முன்பு அவர் **டேவிட் சுவாமி** என்று அழைக்கப்பட்டு வந்தார். சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் அவரைத் **தாடிக்காரச் சுவாமி** என்று அழைத்ததுமுண்டு.

தாவீது அடிகள் 1907ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் திகதி பருத்தித்துறையிலுள்ள தும்பளை என்னும் ஊரில்

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவிருந்த **ஆபிரகாம் பிள்ளை டேவிட்** என்பவருக்கும் **பாவிலுப்பிள்ளை** என்பவரின் மகளாகிய **எலிசபேத்து** என்பவருக்கும் மகனாகப் பிறந்தார்.

கல்லூரி ஆசிரியர்

தாவீது அடிகள் தனது முதலாம் வகுப்பிலிருந்து தனது தந்தையார் படிப்பித்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் படித்து வந்தார். 1912ம் ஆண்டு அக்கல்லூரியில் சேர்ந்து 1924ம் ஆண்டு வரை பயின்று, இலண்டன் மெற்றிகுலேசன் பரீட்சையில் தேறியிருந்தார். அதன் பின்பு தனது மதமான கத்தோலிக்க மதகுரு ஆவதற்குப் படித்துப் பயிற்சி பெறுவதற்காக கொழும்பிலுள்ள புதின பேனாட் செமினறியில் சேர்ந்து படித்துப் பயிற்சி பெற்று குருவானவர் ஆனார். தாவீது அடிகள் தனது தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அவ்வாறு செய்தார்.

குருப் பட்டம் பெற்றுக் கொண்ட தாவீது அடிகள் 1933ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 1936ம் ஆண்டு ஜூன் மாதம் வரை கொழும்பிலிருந்து யூனிவசிற்றிக் கல்லூரியில் பயின்று சரித்திரப் பாடத்தில் இலண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலைமாணி (ஆனர்ஸ்) பரீட்சையில் முதலாம் பிரிவில் தேறியதோடல்லாமல் பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் முதல் மாணவனாகவும் தேறியிருந்தார். அதைவிட யூனிவசிற்றிக் கல்லூரியில் பொருளாதார பாடத்தில் தங்கப்பதக்கமும் பெற்றிருந்தார். அங்கு காலஞ்சென்ற கலாநிதி என்.எம். பெரேரோ, அடிகளுடைய விரிவுரையாளர்களில் ஒருவராக இருந்தார்.

கொழும்பு யூனிவசிற்றிக் கல்லூரியில் தனது படிப்பை முடித்துக் கொண்ட தாவீது அடிகள் தனது பழைய கல்லூரியான சம்பத்திரிசியார் கல்லூரியில் - ஓர் ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார். அப்பொழுது அவருடைய தந்தை ஆபிரகாம்பிள்ளையும் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

நல்லூர் அறிஞர்

தாவீது அடிகள் சம்பத்திரிசியார் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் **நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின்** புகழ் பரவி இருந்தது,

கொழும்பில் தனது படிப்பை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய பின்புதான் தாவீது அடிகள், சுவாமி ஞானப்பிரகாசருடன் நெருங்கிப் பழகலானார். தமிழ் மொழி ஒதுக்கப்பட்டிருந்த அந்தக் கால ''ஆங்கில இலங்கை''யில் படித்த தாவீது அடிகள் சுவாமி ஞானப்பிரகாசரிடம் தமிழை முறையாகக் கற்பதற்குப் போயிருந்தார். ஆனால் சுவாமி ஞானப்பிரகாசரோ அவரை முதலில் சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொள்ளும்படி சொன்னதோடு அல்லாமல் அதை ஒரு கட்டளையாகவும் கூறியிருந்தார். அத்துடன் தானே தாவீது அடிகளுக்குச் சமஸ்கிருத பாடம் சொல்லிக் கொடுக்கவும் முன் வந்திருந்தார். சுவாமி ஞானப்பிரகாசரே வியக்கும் அளவுக்கு தாவீது அடிகள் சமஸ்கிருதத்தைப் பயின்று கொண்டார்.

தாவீது அடிகள் தமிழ் மொழியை முறையாக ஆழமாகக் கற்கத் தொடங்கியது 1948ம் ஆண்டில், இங்கிலாந்துக்குச் சென்றதன் பின்பேயாகும். தனிநாயகம் அடிகள் தமிழில் ஆற்றிய சொற் பிரவாகங்கள் 1947ம்,

ஆண்டுகளில் கேட்க நேர்ந்த தாவீது அடிகளுக்குத் தானும் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று ஓர் உற்சாகம் பிறந்திருந்ததாக தாவீது அடிகள் இக்கட்டுரையாளனுக்கு நேரிலும் எழுதிய குறிப்புகளின் மூலமும் தெரிவித்திருந்தார்.

சம்பத்திரிசியார் கல்லூரியில் படிப்பித்து வந்த தாவீது அடிகள் 1947ம் ஆண்டில் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மைசூர் பல்கலைக்கழகம், பம்பாய்ப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் 1948ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மொழி ஆராய்ச்சிகள் செய்து வந்தார். அதன்பின்பு அவர் அங்கிருந்து இங்கிலாந்துக்குச் சென்ற இலண்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1952ம் ஆண்டு ஜூன் மாதம் வரை பயின்று வந்தார். 1949ம் ஆண்டில் அவர் சமஸ்கிருதம், பாளி முதலிய இந்தோ ஆரிய மொழிகளில் முதுமானிப் பட்டத்தையும் 1952ம் ஆண்டில் தமிழ், தெலுங்கு முதலிய திராவிட மொழிகளில் செய்த ஆராய்ச்சிகளுக்குக் கலாநிதிப் பட்டமும் பெற்றார். பின்பு ஜெர்மன் நாட்டுக்குச் சென்று அங்குள்ள முயோன்ஸ்டர் என்னும் பல்கலைக்கழகத்தில் டிசம்பர் மாதம் வரை ஜெர்மன் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

அதன்பின்பு இலங்கைக்குத் திரும்பி தனது பழைய கல்லூரியாகிய சம்பத்திரிசியார் கல்லூரியில் படிப்பித்தலைத் தொடர்ந்து வந்தார். 1967ம் ஆண்டில் ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.

மொழி ஆராய்ச்சி

தாவீது அடிகள் 1970ம் ஆண்டில் தனது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியில் திட்டமிட்டிருந்த

ஒன்பது பாகங்களில் முதலாம் பாகத்தை வெளியிட்டார். இரண்டாம் பாகம் 1972ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மூன்றாம் பாகம் 1973ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இம்மூன்று பாகங்களும் யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் அச்சகத்தில் பதிப்பிக்கப் பட்டன. நாலாம் ஐந்தாம் பகுதிகளை ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள ஸ்பாட்டன் அச்சகத்தில் பதிப்பித்திருந்தார். அவர் இறப்பதற்கு முன்பு தனது அகராதியில் ஒன்பது பாகங்களையும் வெளியிட்டிருந்தார்.

தாவீது அடிகளின் அறிவு வளர்ச்சியில் அவருக்கு உற்சாகம் அளித்தவர்களென்று தனது தந்தை ஆபிரகாம் பிள்ளையையும், சுவாமி ஞானப்பிரகாசரையும், தனிநாயகம் அடிகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார். தனிநாயகம் அடிகள் தான் ஆங்கிலத்தில் வெளியிட்டு வந்த **தமிழ்ப் பண்பாடு** (Tamil Culture) என்னும் இதழில் தாவீது அடிகளின் பன்னிரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டிருந்தார்.

தாவீது அடிகளைப் போன்று அபூர்வமான முறையும் பல மொழிகளில் புலமையும் உடைய ஒருவர் தோன்றுவது அரிதினும் அரிது! அவர் ஒரு தமிழராகப் பிறந்தது தமிழ் மக்களின் பாக்கியமாகும், பெருமையாகும். அவர் ஆராய்ச்சி செய்து வைத்திருக்கும் எல்லாவற்றையும், அவை அழிந்தோ தொலைந்தோ போவதற்கு முன்பு, தேடிப்பிடித்து புத்தக வடிவில் வெளிக்கொண்டு வருவதோடல்லாமல், அவருடைய மொழி ஆராய்ச்சியின் முடிவுகளைக் கற்றறிந்த தமிழ் மக்கள் உலகத்துக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டும்.

- அருள் மா. இராசேந்திரன்
கொழும்பு.

வன்னியில் புகழ் பூத்த 'தமிழ் முழக்கம்'

புலவர் முஹம்மது காஸிம் ஆலிம்

வன்னிப் பெரும் புவியின் வடமுனையான மன்னார் மாநிலத்தின் தென்புறத்திலே, பூநகரி - மன்னார் நெடுஞ்சாலையின் பதினைந்தாவது மைல் கல்லில், எழில் கொஞ்சும் இயற்கை வனப்புடன் அமைந்துள்ள கிராமம் விடத்தல் தீவாகும். முல்லை, மருதம், நெய்தல் போன்ற முன்னிலங்கள் புடை சூழ அமைந்துள்ளது இச்சிற்றூர். இங்கே, பேரும் புகழுடன் திகழ்ந்தவர் **புலவர் எம்.பீ.எம். முஹம்மது காஸிம் ஆலிம் ஸாஹிப்** அவர்களாகும்.

ஈழத்து இஸ்லாமியப் பெரியார்கள் அறிஞர்கள் மத்தியிலே, பிரபல்யம் மிக்க, குறிப்பிடத்தக்க சில சான்றோர்களிலே, காஸிம் புலவரவர்களும் முக்கியமானவராவர். ஈழத்து இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்புச் செய்தவர்கள் வரிசையிலே, காஸிம் புலவரவர்கள் ஆற்றிய தொண்டு பெருமை மிக்கது!. மெச்சத்தக்கது.

சுயசரிதை

காஸிம் புலவரென்றும், '**ஆலிம்சா**' என்றும் அனைத்து மக்களாலும் அன்பாக அழைக்கப் பெற்ற இப்பெரியார் 1912ம் ஆண்டு மாசி மாதம் பிறந்தார்கள். **முஹம்மது மீராசாயிபு** என்பது இவரது தந்தை

பெயராகும். தாயாரின் பெயர் **பாத்து முத்தும்மா,** பாட்டனார் பெயர் **முகமது பிச்சை.** இவர் இந்தியாவிலுள்ள தொண்டியைச் சேர்ந்தவர். எனவே இவர் **தொண்டிப் பிச்சை** என்றே அழைக்கப்பட்டார். அதுவே புலவரவர்களது குடும்பப் பெயராகவும் வழக்கிலிருந்தது.

புலவரவர்களின் துணைவியார் பெயர் **சுலைஹா உம்மா.** இவர்கள் பிறந்து வளர்ந்ததெல்லாம் பக்கத்து ஊரான ஆண்டாங்குளத்திலாகும். பாட்டனார் வழியிலே ஏற்பட்ட சொந்த பந்தம் காரணமாகவே புலவரவர்களுக்கும் சுலைஹா உம்மாவுக்கும் திருமணம் நடந்ததாக அறிய முடிகின்றது. இந்த இலட்சியத் தம்பதியருக்கு மொத்தம் ஆறு பிள்ளைகள். இதிலே முதற்பிள்ளை பிறந்து ஆறாவது மாதத்திலே தவறிவிட்டது. மற்றையவர்களில் மூவர் ஆண்கள், இருவர் பெண்கள். ஆண் பிள்ளைகளில் இருவர் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களாகவும் ஒருவர் மருத்துவராகவும் தொழிற் தகைமை பெற்றனர். பெண் பிள்ளைகள் இருவரும் படித்தபின் இல்லறத்திலே இணைந்தனர். மூத்த மகன் **அன்ஸாரி** பாடசாலை அதிபராகச் சேவை செய்த பின் ஓய்வு பெற்ற நிலையில் அண்மையில் காலமானார்.

காஸிம் புலவரவர்கள் தனது வீட்டிலே ஒரு நூலகத்தை உருவாக்கியிருந்தார். ஆரம்பத்திலே சுமார் இருநூறு புத்தகங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகம் வடபுலத்திலிருந்து இனச் சுத்திகரிப்பினால் முஸ்லிம் பெருங்குடி மக்கள் புலம் பெயர்ந்த போது சுமார் ஐயாயிரம் புத்தகங்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டது. ஐம்பெருங் காப்பியங்கள் உட்பட பல கிடைத்தற்கரிய நூல்கள்,

இஸ்லாமிய புராணங்கள், நிகண்டுகள், ஓலைச்சுவடிகள் போன்ற அரிய பொக்கிஷங்கள் இருந்துள்ளன. அவற்றிற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இந்த நூலகத்திற்கு தனது மூத்த மகனின் பெயரை முன்வைத்து **அன்ஸாரி நூலகம்** என்ற பெயர் சூட்டப்பட்டிருந்தது. வன்னி மாநிலத்திலே, இஸ்லாமியரொருவரின் தனியார் நூலகம் இது என்ற பெருமை அன்ஸாரி நூலகத்திற்கு உண்டு! இதுவொரு அசாத்தியத் துணிவாகும்.

கல்வியும் தொழிலும்

புலவரவர்கள் இந்தியாவிலுள்ள காயல் பட்டினத்திலேதான் மார்க்கக் கல்வியையும், இலக்கிய அறிவாற்றலையும் பெற்றிருக்கின்றார்கள். அந்தக்காலத்திலே 'கள்ளத் தோணியில்' இந்தியா போய் வருவது மிக இலகுவான காரியமாகும். இந்த வகையிலே புலவரவர்களுக்குத் தமிழகத்து இஸ்லாமியக் கிராமங்களிலே சொந்த பந்தங்கள் இருந்தமையினால் அங்கே தங்கியிருந்து கல்வி கற்றிருக்கின்றார்கள்.

தமிழகத்து அறபு, இஸ்லாமிய மதரசாக்களிலே 'ஒஸ்தாது' (ஆசிரியர்)களாக இருந்த 'உலமா' எனும் மார்க்க அறிஞர்கள் இதிகாசம், இலக்கியத் துறைகளிலேயும் பாண்டித்தியம் பெற்ற விற்பன்னர்களாகத் திகழ்ந்ததால் தம்மிடம் கல்வி பயிலும் சீடர்களிலே ஆர்வமுள்ளவர்களுக்கு இலக்கியம் பயின்று கொடுத்துள்ளனர். ஒரு கல்லிலே இரண்டு மாங்காய் என்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, மார்க்கக் கல்வியையும் தமிழ் இலக்கியத்தையும் முறைப்படி பயின்று அதிலே ஆலிம் எனும் பண்டிதர் பட்டத்தைப் பெற்றார்கள்.

புலவரவர்கள் இந்தியாவிலிருந்த காலத்திலே அங்கிருந்து வெளியாகும் தமிழ் இலக்கியப் புதினத் தாள்கள் மற்றும் சஞ்சிகைகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அப்போதைய பிரபல தென்னிந்திய இஸ்லாமியப் பத்திரிகைகளான, **ஷாஜஹான், பிறை,** தூதன், **நூறுல் ஹக், தாரகை** போன்றவற்றிலே புலவரவர்கள் கவிதைகள், கட்டுரைகளை எழுதி வந்தார்கள். முறைப்படி இலக்கண, இலக்கியங்களைப் பயின்ற புலவரவர்கள் நிறைந்த அனுபவமும் ஆளுமையும், வினைத்திறனும் பெற்று நாடு திரும்பினார்கள்.

தமிழகத்திலுள்ள பிரபல நிறுவனங்களான ஆதம் டிரஸ்ட், டில்லி குதுப் கானா, பிறை பிரின்ட்ஸ், ஹாஜி புக் டெப்போ போன்ற புத்தக ஸ்தாபனங்கள் புலவரவர்களது இலக்கிய வளர்ச்சிக்கு எல்லா வகைகளிலுமே அனுசரணைகள் வழங்கி ஊக்குவித்தன. பிரபல இஸ்லாமிய இலக்கியங்களான **முகீதீன் புராணம், குதுபு நாயகம், சீறாப் புராணம், ஷாதுலி நாயகம், புகாரி புர்தா, முனாஜாத்து காஸிம் படைப்போர், செய்யது படைப்போர்** போன்ற கிரந்தங்களை ஐயந்திரிபறக் கற்றறிந்து அவற்றிற்கு விரிவுரை செய்யும் தகைமையும், புலமையும் பெற்றுத் திகழ்ந்தார்கள்.

புலவரவர்கள் வெளியிட்ட நூல்கள்

1952ம் ஆண்டளவில் வெளியிடப்பட்ட **'கள்ளத்தோணிக்குத் தீர்ப்பு'** என்ற குறுநாவல் புலவரவர்களின் கன்னிப் படைப்பாகும். அன்ஸாரி நூலகத்தாரின் வெளியீடாக, மன்னார் அச்சகத்தில் அச்சிடப்பட்ட அறுபது பக்கங்களைக் கொண்ட இந்நூலின்

விலை முப்பது சதங்களாகும். தென்னை மரமுள்ள சிறு தீவொன்றில் தோணியொன்று கரையொதுங்கிய மாதிரியான கருத்துப்படம் முகப்பு அட்டையை அலங்கரிக்கின்றது. நியூஸ் பிரிண்ட் தாளில் அச்சிடப்பட்டது.

சட்ட விரோதமாக இந்தியாவிலிருந்து நாட்டுப் படகொன்றில் இலங்கை வந்த இளைஞனொருவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு இம்சைக்குள்ளாகி நீதி விசாரணைகள் எதுவுமின்றிச் சிறையிலே அடைக்கப்படுகின்றான். பிற்காலத்திலே அந்த இளைஞனே இந்த நாட்டின் முதுகெலும்பான, தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவழியினரின் தானைத் தலைவனாகவும் பிற்காலத்தில் இலங்கை அரசின் தலைவிதியையே நிர்ணயிக்கக்கூடிய, சக்தி மிக்க தளபதியாகவும் திகழ்கின்றான்.

புலவரவர்களின் முதல் படைப்பான இக்குறுநாவலில் நல்ல கற்பனை வளமும், வசன கவர்ச்சியும் வாசிப்பவர்களை விறுவிறுப்படையச் செய்ததால் அதன் விற்பனையும் அமோகமாய் அமைந்ததாகச் சொல்லப்பட்டதுடன், வன்னிப் பிராந்தியத்திலே ஒரு முஸ்லிம் எழுத்தாளரின் அச்சில் வெளிவந்த முதல் தமிழ் நூல் என்ற பெருமையும் இந்நாவலுக்கே உரியது.

இஸ்லாமிய தத்துவார்த்தம்

புலவரவர்களின் இரண்டாவது படைப்பு 1956ம் ஆண்டில் வெளியிடப் பட்டது. எழுபத்து ஆறு பக்கங்களைக் கொண்ட இஸ்லாம் மார்க்கம் சம்பந்தப்பட்ட இப்புத்தகத்தின் விலை எழுபத்தைந்து சதம். மன்னார் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. அன்ஸாரி நூலக வெளியீடு.

மன்னார் நாட்டுப் பாடல்கள்

1970களில் மன்னார் மாவட்டக் கலாசாரப் பேரவையால் அதன் தலைவராக இருந்த '**பிறையன்பன்**' **பேராசிரியர் சு. வித்தியானந்தன்** (யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர்) அவர்களால் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

மொத்தம் ஐம்பது பாடற்தொகுதிகளைக் கொண்ட இந்நூல் ஓர் அரச வெளியீடாகையால் விற்பனைக்கு விடப்படவில்லை. பாடசாலைகள், நூல் நிலையங்கள், வாசிக சாலைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

படிப்பதற்குச் சுவையான, சிலேடை அர்த்தங்கள் மற்றும் புதிர், விடுகதைகள் போன்றனவும் காலிம் புலவரவர்களின் நாட்டுப் பாடல்களிலே இழையோடியிருப்பதையும், வன்னி மண்வாசனை வீசுவதையும் காணலாம்.

1973ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட '**மாநபியே**' கவிதை நூல் நூற்றுப்பத்து 'நாலடிகள்' கொண்ட தொகுதியாகும். முப்பது பக்கங்களில் அச்சிடப்பட்ட இது புலவரவர்களின் முதலாவது கவிதை நூலாகும். யாழ் - கலைவாணி அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை - ஒரு ரூபா, ஐம்பது சதம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்கள் கடுகைத் துளைத்துக் கடலைப் புகுத்திக் குறுகத்தறித்த மாதிரி சின்னஞ்சிறு வரிகளிலே ஆச்சரியமான முறையிலே அழகாகச் சொல்லப்பட்டுள்ளது.

பல வரலாற்றுக் கதைகளைக் கனகச்சிதமாக, நயம்படச் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் லாவண்யம்

போன்ற பல்வேறு சுவையம்சங்கள் நிரம்பிய 'மாநபியே!' எனும் கவிதைத் தொகுதி ஓர் அற்புதப் படைப்பாகும்.

1974ல் புலவரவர்களால் **பத்வா - மார்க்கத்தீர்ப்பு** - என்ற நூல் மறுபிரசுரம் செய்யப்பட்டது. அன்சாரி நூலகத்தாரின் வெளியீடான இது யாழ். கலைவாணி அச்சகத்தில் அச்சிடப்பட்டது. அனுசரணையாளர்களுடன் வெளியிடப்பட்ட இது இலவசமாக நாடெங்கிலும் விநியோகிக்கப்பட்டது.

இவை தவிர **'கபுகாபு'** என்ற வரலாற்று நாடகம் **"அலுக்கோசு நாச்சியார் மான்மியம்"**என்ற சரித்திரக் குறுநாவல் போன்றன புலவரவர்களால் எழுதப் பெற்று அச்சுக்குத் தயாராக, கையெழுத்துப் பிரதிகளாக இருந்த நிலையில் புலவரவர்கள் காலமாகி விட்டார்கள். பிற்பாடு நடந்த வடமாநில முஸ்லிம் பெருங்குடி மக்களின் புலம் பெயர்வின்போது, இவ்வரிய பொக்கிஷங்கள் காணாமற் போய் விட்டமை, கவலை தருவதாகும். அது காலத்தின் வஞ்சனை.

பொதுக் குறிப்புகள்

புலவரவர்களின் பிள்ளைகள், சீடர்கள் மற்றும் ஊர்ப் பெரியர்கள் முதலானோரிடமிருந்து அறிந்த தகவல்களின்படி புலவரவர்கள் ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட கவிதைகள், இருநூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், ஆறு நாடகங்கள் வரை எழுதியுள்ளார்கள்.

அறுநூறுக்கும் மேற்பட்ட மேடைப் பிரசங்கங்கள், நூற்றுக்கு மேற்பட்ட கவியரங்குகள், பத்து வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்கள்.

இவை தவிர கும்மி, கழிகம்பு கோலாட்டம், ஆசைக்கவி, தாலாட்டு, முனாஜாத்துப் பாடல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்கள்.

கிராமிய மட்டத்திலே அசைவுறு கலைகள், பிரபல்யமானவை. மங்கள நிகழ்வுகள், பெருநாள் கொண்டாட்டங்கள், திருமண வைபவங்களிலே கும்மி கோலாட்டம், சீனடி சிலம்படி, வாள்வீச்சு போன்றவை உள்ளங் கவருவன. அவற்றிலே இசைக்கப்படும் பாட்டுகளை இயற்றுவதிலே காசீம் புலவரவர்கள் சாணக்கியர்.

"கொழும்புக்குப் போன மச்சான் - கொள்ளை நாளா நிக்காதேங்க-ஹஜ்ஜுப் பெருனா மாசம் - கழிகம்படிக்க வந்திடுங்க" என்ற பாடல் போன்று பலநூறு பாடல்கள் உள்ளன.

பொது வாழ்க்கை

புலவரவர்களின் புலமைக்கு ஒப்பாருமில்லை மிக்காருமில்லை எனலாம். நாவன்மை அவரோடு கூடப்பிறந்த செல்வம்.

இலக்கிய இலக்கணம் மற்றும் இதிகாசங்களைப் புலவரவர்கள் நன்றாகவே பயின்று தேர்ச்சி பெற்றமையினால் பழம்பெரும் இஸ்லாமிய இலக்கியக் களஞ்சியங்களான **முகிதீன் புராணம், சீறாப்புராணம், இராஜநாயகம், ஷாதுலி நாயகம் முனாஜாத்து, படைப்போர் புத்தர்** போன்ற பல காப்பியங்கள் புராணங்களுக்கு அழகிய முறையிலே வியாக்கியானம், தெளிவுரை மற்றும் விரிவுரைகள் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தார்கள்.

'பாட்டுப் படித்தல்' எனும் இஸ்லாமிய இலக்கிய விழா, வன்னி மாநிலத்திலே தொன்று தொட்டு வழக்கிலுள்ள பிரபல்யம் பெற்றதொரு அம்சமாகும். கிழக்கிலே சில முஸ்லிம் கிராமங்களிலும் இந்த விழா கொண்டாடப்பட்டாலும் வன்னியிலேயே இது பிரசித்தி பெற்றது. இதனைப் புகழ் பெறச் செய்ததிலும், மக்கள் மத்தியிலே நிலை பெறச் செய்ததிலும் காஸிம் புலவரவர்களின் பங்களிப்பு மிக மகத்தானது.

ஊர் மத்தியிலே மேடை கட்டிப் பூப்பந்தலிட்டு, மின் விளக்கு அலங்காரங்கள் செய்து, ஒலி பெருக்கி பூட்டி, ஐந்து அல்லது ஏழு நாட்கள் தினமும் இரவு தொடக்கம் அதிகாலை வரை ஊர் மக்கள் பக்தி சிரத்தையுடன் குழுமியிருக்க புலவரவர்கள் மேடையிலே அமர, அவருக்கு முன்பாக 'ஆமாப் புலவர்' என்றொரு சீடர் அமர்ந்திருப்பார். புலவர் சொல்லும் விரிவுரையைச் செவிமடுத்து ஒவ்வொரு பேச்சுக்குமிடையே ஆமாப்புலவர் தலையை ஆட்டியவாறு 'ஆமா' என்று சொல்ல வேண்டும். இடைக்கிடையே தான் சொன்னதைத் திரும்பச் சொல்லுமாறு புலவர் கேட்டால் உடனேயே ஆமாப்புலவர் அதனைச் சொல்ல வேண்டும். இது புலவரை உற்சாகப்படுத்தவும், சபையோரின் கவனத்தை ஈர்ப்பதற்கும் செய்யப்படும் ஒருவித கிரியா ஊக்கியாகும். தவிர, புலவரின் இருமருங்கும் ஐந்து பேர் வீதம் பத்துப்பேர் அமர்ந்து படிக்கப்படும் புராணத்தின் கவிதை வரிகளை எடுத்தியம்ப அக்கவிதை வரிகளுக்குப் புலவரவர்கள் பொருளும் வியாக்கியானமும் சொல்வார்.

முற்று முழுதுமாகப் பக்தி ததும்பும் இந்நிகழ்வின் இறுதி நாளன்று 'கந்தூரி' எனும் அன்னதானம் பாரிய அளவில் செய்யப்பட்டுச் சகல மக்களுக்கும் வழங்கப்படும்.

அயலூர் மக்களெல்லாம் இதிலே கலந்து கொள்ளச் சாரி சாரியாக வருவர். ஊரிலே பஞ்சம், வரட்சி, தொற்று நோய் போன்ற பீடைகள் நீங்க இத்தகைய சடங்குகள் நடாத்துவது மரபு.

வன்னியில் விஷேடமாக காக்கையன் குளம், முசலி, தாராபுரம், ஆண்டான் குளம், விடத்தல் தீவு, பெரியமடு போன்ற முஸ்லிம் கிராமங்களிலே பாட்டுப் படித்தலில் காஸிம் புலவரவர்கள் புகழ் பெற்றுக் கொடிகட்டிப் பிரசித்தம் பெற்றிருந்தார்கள்.

கவிஞர்

நினைத்ததும் கவிதை பாடும் ஆற்றல் புலவரவர்களின் பிறவிக்குணமாகும். இலக்கண நெறிபிறழாது சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த கவிதைகள் படைப்பதிலே கீர்த்தி பெற்றவர்.

பாமரன் முதல் பண்டிதன் வரை படித்துச் சுவைக்கும்படியான மரபுக் கவிதைகள் இயற்றுவதிலே புலவரின் பேனா பாக்கியம் பெற்றது. புலவரவர்களின் கவிதா ஆற்றலை வெளிப்படுத்த பல நூறு கவிதைகள் உள்ளன. அவற்றைப் பகுப்பாய்வு செய்து வெளிப்படுத்தும் பாரிய பணியிலே பல்கலைக்கழகப் பின்பட்டப்படிப்பு மாணவர்கள் சிலர் களமிறங்கியுள்ளதாயும், புலவரவர்களின் கவிதை விமர்சனங்களை உயர்வு வகுப்பு மாணவர்கள் பலர் தமது 'ஒப்படைக்குச்' சமர்ப்பித்துச் சித்தியடைந்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

'சீர் மிகு சீறா' என்ற புலவரவர்களின் கவிதையொன்று அகில இலங்கை ரீதியிலே 1974ம் ஆண்டளவில் இலங்கை கலாசாரப் பேரவையின்

தங்கப்பதக்கம் வென்றது. காந்தி நூற்றாண்டுக் கவிதைப் போட்டியிலே '**இளம்பிறை**' சஞ்சிகையின் தங்கத்தாமரை விருதையும் புலவரவர்கள் தனதாக்கிக் கொண்டார்கள்.

முன்னை நாள் தமிழ்மொழி அமுலாக்கல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவிருந்த **சொல்லின் செல்வர் - செல்லையா இராஜதுரையவர்கள்** புலவரவர்களின் கவித்துவத்தைப் பாராட்டி, தனது அமைச்சுக்கு அழைப்பித்து பொற்கிழி, பொன்னாடை, பாராட்டு போன்ற பல உபசாரங்களை வழங்கிக் கௌரவித்தமை அப்போதைய ஊடகங்களிலே மிகவும் ஏற்றமாகப் புகழப்பட்டது.

மேடைப் பேச்சாளர்

காஸிம் புலவரவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். தனது பீரங்கிக் குரலால் மேடைகளிலே தமிழ் முழக்கம் செய்வார். நாவன்மை மிக்க இப்பெரியார் அடுக்கு மொழியிலும் சிலேடைத் தன்மை, சங்கிலித் தொடர் மற்றும் உவமான உவமேயங்களிலே ஆற்றொழுக்காகச் சொற்பொழிவாற்றுதலிலே நிபுணர்.

மீலாத் மேடைகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், இலக்கிய மேடைகள், மார்க்க உபன்னியாசங்கள் மற்றும் அரசியல் மேடைகளிலே பேச வருகின்றாரென்றால் அதற்கென்றே தனிக்கூட்டம், தனி விளம்பரம், தனிக்கௌரவம் இருக்கும். புலவரவர்கள் இஸ்லாத்தில் எவ்வளவு அறிவும், ஆற்றலும், புலமையும் பெற்றிருந்தார்களோ அதேயளவு அறிவும், ஆற்றலும் இந்து, கிறிஸ்தவ மதங்கள் மீதும் இருந்தன. இதனாலே கோயில்கள், ஆலயங்களில் நடைபெறும் சமய நிகழ்வுகளிலே கலந்து

பேருரையாற்றிச் சிறப்பிப்பார். ஒரு இஸ்லாமியப் பெரியார் மற்றைய மதங்களிலே பெற்றுள்ள ஞானத்தை அந்தந்த மதத்தினரே கேட்டு வியப்படைவர்.

1956ம் ஆண்டுகளிலிருந்து தமிழரசுக் கட்சியின் முழுநேர பிரசாரகராகத் தன்னை மாற்றிக் கொண்ட புலவரவர்களின் அரசியல் ஆசான்களாக இரும்பு மனிதன் **நாகநாதன், சேர். கந்தையா வைத்தியநாதன், சிற்றம்பலம் தந்தை செல்வநாயகம்** போன்றோர் திகழ்ந்தனர். வடக்கே காங்கேசன்துறை தொடக்கம் கிழக்கே பொத்துவில் வரை நடைபெறும் தமிழரசுக் கட்சிப் பிரசார மேடைகளிலே புலவரவர்கள் சொல்மாரி பொழியத் தவறுவதில்லை.

மீலாது மேடைகளிலே புலவரவர்கள் சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிவார்கள். சைவ சமய விழாக்களிலே தேவாரம், திருவாசகம், நாயன்மார் சரித்திரம், இராமாயணம், பெரிய புராணம், கீதா உபதேசம் என எல்லா ஞானங்களிலும், நாவிலே சொற்தென்றல் வீசும், இன்னும் கத்தோலிக்கத் திருச்சபைகளிற் கூட தேவ வசனங்கள், புதிய பழைய ஏற்பாடுகளிலிருந்தெல்லாம் மேற்கோள் காட்டிக் கேட்போர் மெய்மறக்கச் சொற்பெருக்காற்றுவார்கள் எம்மதமும் சம்மதம் என்ற கோட்பாடு புலவரவர்களின் சொல், செயல், சிந்தனை சகலதிலும் தாண்டவமாடும். புலவரவர்கள் ஒரு முஸ்லிமாயிருந்த போதும் சுத்த சைவ உணவுகளையே உண்பார்கள்.

சமூக சேவையாளர்

ஓர் இலக்கிய வாதியிடம் சமூக சேவைப் பண்புகள் இழையோடியிருப்பது நூதனமானது. ஆனால் புலவரவர்களின் சொல்லிலும் செயலிலும் அது ஒன்றறக்

கலந்திருந்தது. புலவரவர்கள் தனது வாழ்நாளின் அதிக காலத்தை சமூகப் பணிகளுக்கென்றே செலவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதனாலே அவர் தனது குடும்பத்தைக் கூட வளப்படுத்த முயலவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. புலவரவர்கள் காலமானபோது உப்புத்தரவையில் ஒரு பழைய வீடும் இரண்டு ஏக்கர் எல்-டூ-ஓ வயல் காணி மட்டுமே சொத்துக்களாக இருந்தன.

புலவரவர்கள் மேற்கு மூலை எனப்படும் காக்கையன் குளம் கிராமத்தின் கிராம சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்தே அவர்களது சமூகத் தொண்டு ஆரம்பமானதாகச் சொல்லப்படுகிறது. அப்போது அவருக்கு வயது இருபத்தி ஐந்து.

மிகவும் பின்தங்கிய காட்டுக் கிராமமான அச்சிற்றூர் அவர்களது சமூகப் பணிக்குப் பெரும் சவாலாக இருந்தது. தனது அரசியற் செல்வாக்கு, சொல்வாக்கைப் பயன்படுத்தி, வீதிகள் அமைத்தார். பாடசாலை, சனசமூக நிலையம், வவுனியாவரை பஸ் போக்குவரத்து, குடிநீர்க் கிணறுகள், பள்ளிவாசல் இப்படியே பல முக்கிய தேவைகள் ஏற்படுத்தப்பட்டு, புதிய வீடமைப்புத் திட்டம், நெசவு சாலை போன்றன உருவாக்கி அதனை நவீன கிராமமாக மாற்றியமைத்தார். இதனாலே அக்கிராமத்தவர்களிடையே புலவரவர்கள் ஒரு முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். இக்கிராமமே புலவரவர்கள் புராண விரிவுரைகள் எனும் பாட்டுப் படித்தல், விழாவிற்குப் பிரதான ஆடுகளமாகவும் திகழ்ந்தது. இக்கிராமத்து மக்கள் என்ன செய்வதென்றாலும் புலவரைக் கலந்தாலோசிக்காமல் செய்வதே இல்லை.

புலவரவர்கள் தனது சொந்த ஊரான விடத்தல் தீவு கிராமத்துப் பள்ளி பரிபாலன சபையின் பிரதம

தர்மகர்த்தாவாக, கிராம அபிவிருத்திச் சபைத் தலைவராக, இணக்க சபை, ஐக்கிய நாணய சபை போன்றவற்றின் செயலாளராக, இவை போன்ற இன்னும் பல பொது நல ஒன்றியங்களின் முக்கிய பங்காளராகத் திகழ்ந்து அந்த ஊரின் அபிவிருத்திக்குக் கணிசமான பங்களிப்புச் செய்ததுடன் அவ்வூரின் பெயரை உலகறியச் செய்தார். அவ்வூரின் முடிசூடா மன்னனாகவும் திகழ்ந்தார்.

விடத்தல் தீவு - பெரிய மடு வீதியின் நான்காவது மைல் கல்லிலே அமைந்துள்ள சன்னார் எனும் கானகத்தில் அரசாங்க ஏற்பாட்டிலே விவசாயப் பண்ணை ஒன்றினை ஏற்படுத்தி இளைஞர்களுக்கான சுய உழைப்பு வேலைவாய்ப்புத் திட்டமொன்றினை உருவாக்கினார். இதனால் பல நூறு கிராமத்து இளைஞர்களுக்கு வாழ்வுக்கு ஒளியூட்டப் பட்டது. மறுமலர்ச்சி உருவானது, இப்பண்ணைக்கு அப்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராகவிருந்த திரு. **எஸ். ஜெகநாதன்** அவ்விவசாயப் பண்ணைக்கு **காஸிம் புலவர் பண்ணை** எனப் பெயரிட்டுக் கௌரவித்தார்.

அடம்பனிலிருந்து மேற்கே மூன்றாவது மைல் கல்லிலுள்ள 'ஆண்டான் குளம்' எனும் கிராமத்திலுள்ள பள்ளிவாசற்பிட்டி என்ற இடத்திலே புலவரவர்களின் பெரும் முயற்சியால் அழகியதொரு பள்ளிவாசல் கட்டப்பட்டு 'வக்பு' செய்யப்பட்டது.

அடம்பனுக்கு அருகிலுள்ள பிரதேசத்திலே குடியேற்றத் திட்டமொன்றை உருவாக்கி அதற்கு **'மினுக்கன்'** எனும் பெயரிட்டுக் கௌரவித்த பெருமை புலவரவர்களுக்கே உரியது.

பட்டங்கள் விருதுகள்

இலங்கை மக்களுக்கு நன்கு அறியப்பட்ட தமிழ் முழக்கம் விருது சூடிக் கொண்ட பெருமை காஸிம் புலவருக்கே உரியதாகும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் மாநில மாநாடு 1969களில் அதன் மாவட்டப்பிரதிநிதி திரு.எஸ். செல்லச்சாமி தலைமையில் மன்னார் முற்ற வெளி மைதானத்திலே மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான சௌமியமூர்த்தி தொண்டைமானவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அங்கே நடைபெற்ற பாராட்டு விழாவிலே அமைச்சர், காஸிம் புலவருக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கி தமிழ்முழக்கம் எனும் பட்டத்தையும் சூட்டிப் பாரெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என வாழ்த்தி வணங்கினார்.

செந்தமிழ்ப் புரவலர்

பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரத்திலே வருடா வருடம் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஏற்பாட்டிலே திருவாசக விழா நடப்பது வழக்கம். மன்றத்தின் தலைவர் திருவாளர் சரவணமுத்துச் சுவாமிகள் இதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்வார்கள்.

வருடா வருடம் நடைபெறும் இப்பெருவிழாவிலே பல்வேறு தலைப்பகளிலே பேருரையாற்ற நாட்டின் நாலா பக்கங்களிலுமிருந்து அறிஞர் பெருமக்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அழைக்கப்படுவர். இவர்களனைவரும் தமிழர்களாகவேயிருப்பர். இவர்களிடையே ஒரு

சிறப்பம்சமாக, சபை நடுவே கம்பீரமாக துருக்கித் தொப்பியணிந்த ஒரு முஸ்லிம் பெரியாரும் சொற்பெருக்காற்ற, வீற்றிருப்பார். அவர்தான் காஸிம் புலவர். இப்பெருமகனாரின் பேச்சைக் கேட்பதற்கென்றே பக்தர் கூட்டம் அலைமோதும். திருக்கேதீஸ்வரம் திருவாசக மண்டபத்திலே வருடம்தோறும் நிகழும் அதிசயம் இதுவாகும்!

இலக்கியத்துக்கும் கலைக்கும் மொழி இல்லை, சாதி இல்லை. பிராந்திய வேறுபாடு இல்லை. தமிழும் இஸ்லாமிய இலக்கியச் சித்தாந்தங்களும் தென்கிழக்காசியாவைப் பொறுத்தவரை தொன்றுதொட்டுப் பின்னிப் பிணைந்ததாகவே இருந்து வருகின்றது. கம்பன் வீட்டுக் கைத்தறியும் சீறாவின் செல்வர் உமறுப்புலவரின் வீட்டுக் கைராட்டையும் ஒரே விதமாகவே கவிபாடின, கூடிக் குலாவின.

இதனடிப்படையிலே நோக்கினால் காஸிம் புலவரிடமிருந்த இந்து மத ஞானமும் அதன் ஆற்றல்களும் வியப்பானதல்ல! 1971ம் ஆண்டு நடைபெற்ற மேற்படி திருவாசக விழாவிலே சிறப்புச் சொற்பெருக்காற்றிய காஸிம் புலவரவர்களுக்கு அவையோரின் ஏகோபித்த தீர்மானம், விருப்பப்படி **செந்தமிழ் புரவலர்** எனும் பட்டமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப் பெற்றுப் பட்டுச்சால்வை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அப்போதைய மன்னார் மாவட்ட அமைச்சராக இருந்த மர்ஹூம் **M.E.H. மஹ்ரூப்** அவர்களாலேயே திருவாசக மடக் குருக்கள் சார்பில் இப்பட்டம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் திருக்கேதீஸ்வரத்திலிருந்து நேரடியாக அஞ்சல் செய்தது.

செந்தமிழ் வாரிதி

இலங்கையின் எப்பகுதியிலாவது இலக்கிய கலை விழாக்கள், மீலாது விழாக்கள், இந்து, சன்மார்க்க நிகழ்வுகள் நடைபெறுமாயின் கண்டிப்பாகப் புலவரவர்களுக்கும் அழைப்பு வந்துவிடும். சில சமயம் காரும், ஆட்களும் கூட வந்து காஸிம் புலவரவர்களைக் கையோடு கூட்டிப் போய்விடுவார்கள்.

1973ம் ஆண்டு திருகோணமலை இந்து இளைஞர் பேரவை மாநாடு நடைபெற்ற போது அதிலே சிறப்புச் சொற்பொழிவாக 'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்' என்ற தலைப்பிலே பேருரை நிகழ்த்திய புலவரவர்களைப் பாராட்டி **செந்தமிழ் வாரிதி** எனும் பட்டம் சூட்டிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சிவநெறி அன்பன்

ஈழத்துத் திருத்தலங்களிலே மேன்மை வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலிலே 1976ம் ஆண்டில் பிரம்மஸ்ரீ மணி ஐயர், தலைமையிலே கம்பன் விழா நடைபெற்றது.

இதிலே காஸிம் புலவரவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். 'கம்பன் இராமாயணத்திலே வம்புகள் செய்தானா?' என்ற தலைப்பிலே சிறப்புச் சொற்பெருக்காற்றியமைக்காக மணி ஐயர் அவர்களாலே '**சிவநெறியன்பன்**' எனும் பட்டம் சூட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார். இவ்வாறு பல பட்டங்களும் பாராட்டுதல்களும் புலவரவர்களின் புலமைக்காகப் பரிசுகளாகக் கிடைத்தன.

சமாதான நீதவான்

நாடறிந்த இலக்கிய வாதியும் சிறந்த சமூக சேவையாளருமாகிய புலவரவர்கள் தனது வாழ்நாளின் பெரும்பகுதியைப் பொது நலன்களுக்கென்றே தியாகம் செய்தவராவார்.

விடத்தல்தீவிலே 1956ம் ஆண்டளவில் நடைபெற்ற மதக் கலவரத்தைத் தடுத்து நிறுத்தி பல நூறு அப்பாவி உயிர்கள் அநியாயமாகப் பலியாவதைத் தடுத்ததுடன் மரண தண்டனைக் கைதிகள் சிலரையும் கூட, தூக்கு மேடையேறாமல் தடுத்த பெருமையும் அவருக்குண்டு. இதை அவ்வூர் மக்கள் இன்னும் கூட நன்றியுணர்வுடன் நோக்குகின்றனர். சமுதாயப் பணிகளுக்கென்றே தன்னை அர்ப்பணித்தவர் தனது குடும்பத்துக்கென விட்டுச் சென்றது பேரையும் புகழையுந்தவிர வேறொன்றும் கிடையாது.

புலவரவர்களின் சமூக சேவைகளைக் கௌரவிக்கு முகமாக, இலங்கை அரசாங்கத்தின் சார்பாக 1972களில் அப்போதைய தேசிய அரசுப் பேரவையின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி நீதி அமைச்சருமாக இருந்த மர்ஹூம் அல்-ஹாஜ் நெய்னாமரைக்கார் அவர்களின் சிபாரிசின் பேரிலே காலிம் புலவரவர்களுக்கு **சமாதான நீதவான்** பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறு சிறப்புகளும் பெருமைகளும் பெற்று இசைபட, கோடு போட்டு வாழ்ந்த காலிம் புலவரவர்கள் மிக எளிமையாகவே வாழ்ந்து காட்டினார். எதுவித பந்தாவோ, அன்றி மேதாவித்தனமோ அவரிடம் காணப்படவில்லை. எல்லோருக்கும் தேவைப்பட்ட எல்லோராலும் உவக்கப்பட்ட மனிதராகவே விளங்கினார்கள்.

முடிவுரை

மர்ஹூம் புலவர் - எம்.பீ.எம் - முகம்மது காஸிம் ஆலிம் அவர்களது தமிழ்ப்பணி - சமுதாயப்பணி - ஆத்மிகப் பணி - என்ற திரிகோணத்திலே மேற்கொள்ளப்பட்ட நெடுநாள் ஆய்வின் 'முன்மொழிவாக' அமைந்ததே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

இந்தச் சாதனையாளரது பணிகள் இன்னமும் நுனித்தாய்வுக்குரியதாகவே கருதப் படுகின்றது. இப்பெரியார் தனது முயற்சிகளுக்கு வரைபடமமைத்துச் சென்ற திசை நூதனமானதும் வியப்புக்குரியதுமாகவே கருதப்படுகின்றது. இவர்களது முயற்சிகளும் செயற்பாடுகளும் ஒரு குறுகிய வட்டத்துள் அமையாமல், பாரிய வியூகத்துள் ஆட்படுத்தப் பட்டுள்ளதை உணரமுடிகின்றது.

தனக்குப் பின்னால் ஒரு ஆரோக்கியமான பரம்பரை, வாழையடி வாழையாக வரவேண்டுமென்ற முயற்சியில் புலவரவர்கள் எதுவித அக்கறையும் காட்டவேயில்லை. எனினும் புலிக்குப் பிறந்தது புலிகளாகவே உள்ளன என்பது மனநிறைவு தருகின்றது. இவரது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளில் கணிசமானோர் சிறந்த கவிஞர்களாக, எழுத்தாளர்களாக, இலக்கியவாதிகளாகத் திகழ்வது பேறுபெற்ற செல்வமாகும்.

பம்பரமாய்ச் சுழன்று பல கலை வித்தைகள் புரிந்த வித்தகரான இப்பெரியார், அந்திம காலத்தில் நோய்வாய்ப்பட்டுப் போனார்கள். எனினும் படுக்கையில் வீழ்ந்து விடவில்லை. ஒருநாள் நள்ளிரவு பனிரெண்டு மணியளவில், இப்பெருந்தகையின் இன்னுயிர்

படுக்கையிலிருந்தவாறே மிக அமைதியாகப் பிரிந்தது. 1987ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் திகதி காஸிம் புலவரவர்கள் நிரந்தர ஓய்வுறக்கம் கொண்டார்கள்.

உசாத்துணை

1. இலங்கை முஸ்லிம்கள் வரலாறு - 1974 - கலாநிதி கே.எம்.எச். காலிதின் M.A.
2. வாழ்வோரை வாழ்த்துவோம் - 1994 - முஸ்லிம் சமய கலாசார திணைக்களம்.
3. உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2002 - மாநாட்டு மலர்.
4. பாவாரம் - கவிதை நூல் - முஸ்லிம் சமய கலாசார அமைச்சு - 2002
5. யாத்ரா - சங்கப்பலகை - 2003
6. ஆய்வுக்கோவை - 2005 முஸ்லிம் கலாசார அலுவர்கள் திணைக்களம்
7. இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் - புண்ணியாமீன் - 2004
8. வடபுல முஸ்லிம்கள் வரலாறு - பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் - 1995
9. புலவரவர்களின் குடும்ப உறுப்பினர்களின் வாய் மூலத் தகவல்கள்
10. உள்ளூர் வயோதிபர்களின் வாக்கு மூலங்கள் - பேட்டிகள்

- ''கலை அமுதன்''

டாக்டர் எம்.ஸீ.எம். இக்பால் ஜே.பி.

குருணாக்கல்

"தமிழ்த்தூது" தந்த வண.பிதா.

தனிநாயகம் அடிகள்

யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சார்ந்த **ஸ்தானிஸ்லாஸ் கணபதிப் பிள்ளை - செசில் இராசம்மா** தம்பதியினருக்கு 1913ம் ஆண்டு ஆவணித்திங்கள் இரண்டாம் நாள் **சேவியர் ஸ்தனிஸ்லாஸ்** பிறந்தார். இவரின் இளமைப் பெயர் **சேவியர்** என்பதாகும். அச்சேவியர் தான் பின்னர் **வண. பிதா. சேவியர் தனிநாயகம்** ஆனார். **திருமதி நாகநாதன், திருமதி தெரெசா பிலிப்புப்பிள்ளை, தமிழாள சிங்கம்** (தம்பி) என்போர் இவரின் உடன்பிறப்புக்களாவர். இவரது பள்ளிப்படிப்பு ஊர்காவற்துறை புனித அந்தோணியார் பாடசாலையிலாகும். ஆங்கிலம், லத்தீன் போன்ற மொழிகளிலே நல்ல தேர்ச்சி பெற்ற இவர் தமிழ்மொழியைத் தனியாக ஓர் ஆசிரியரின் துணையுடன் கற்றார். தமிழ் மீது அவர் கொண்ட விருப்பு அம்மொழியிலேயே மிகுந்த உயர்வான அறிவைப் பெற வேண்டுமென ஊக்குவித்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே முதுகலைமாணி, முதுவிலக்கியமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

உலகில் பல நாடுகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரை ஆற்றினார். **தமிழ்த்தூது,**

ஒன்றே உலகம் என்ற தமிழ் நூல்களையும் எழுதியதோடு நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதினார். உலகின் பல நாடுகளுக்குச் சென்று அவரவர் மொழிகளிலே தமிழ்மொழியின், தமிழ் இலக்கியத்தின், தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புகளை எடுத்துக் கூறினார். ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், இத்தாலியம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜேர்மன் ஆகிய மொழிகளிலே புலமையுடையவராவார். சமஸ்கிருதம், மலையாளம், போர்த்துகீசம், எபிரேயம், மலாய், ரஷ்யன் ஆகிய மொழிகளையும் அறிந்தவர். இதனால் அவருடைய தமிழ்தூது பயனுடையதாக இருந்தது. அடிகளாருடைய விரிவுரையைக் கேட்டவர்கள் தமிழ்மொழி பற்றி அறிய ஆவல் கொண்டனர். இவ்வாறு அவர் மேற்கொண்ட தமிழ்தூது பயண அனுபவங்களை யெல்லாம் தொகுத்து **"தமிழ்த்தூது"** எனும் நூலை வெளியிட்டார்.

தூத்துக்குடி மறைமாவட்டத்தில் இணைந்து அம்பாறை மாவட்ட ஆயர் **ரோச் ஆண்டகை**யும் துணைத்தலைமை ஆசிரியராக வடக்கண் குளத்தில் பணியேற்ற புனித தெரெசாள் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் **லோபோ அடிகளும்** தமிழறிவு மிக்கவர்களாதலால் அடிகளாரின் தமிழ்க்கனலைத் தூண்டினர். அதன் விளைவாக அங்கிருந்த சிதம்பரம் பண்டிதர் **குருசாமி சுப்பிரமணிய ஐயர்** என்பாரிடம் 4 ஆண்டுகள் நற்றமிழ் கற்றார். ஆயர் ஆண்டகை சேவியர் ஒரு தமிழ்ப் பெயரினைச் சூட்டிக் கொள்ள வேண்டும் எனக் கூறியதற்குத் தங்கள் முன்னோர் காஞ்சிபுரம் தனிநாயக முதலி என்பதறிந்து தம் பெயரினை "**சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனிநாயகம்**" என மாற்றினார்.

1934ல் சமயயியல் கற்றிட உரோம் சென்று குருமடத்து மாணவராகி டர்பன் பல்கலைக்கழகத்தில் 5 ஆண்டுகள் படித்தார். 1948ம் ஆண்டு உரோம் நகரிலே மறையியலிலே கலாநிதி பட்டம் பெற்றார். **'கார்த்த ஜீனிவன் குருமார்'** எனும் தலைப்பிலே அவர் ஆய்வு செய்தார். அத்துடன் ஹிபுரு, கிரீக், இத்தாலிய மொழிகளைப் பயின்றதுடன் ஐரோப்பிய கலை, தொல்பொருளியல் ஆகியவற்றிலும் பயிற்சி பெற்றார். உரோமபுரியில் சமய உயர் படிப்பை பயின்றபோது அங்கு **வீரமாமுனிவர் கழகத்தை** நிறுவி **தமிழோசை** செய்தார். தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகத்தை நிறுவி பல நூல்களை அச்சேற்றினார். தமிழரின் பண்பாடுகள் பற்றி உரைகள் நிகழ்த்தினார். அந்தந்த நாட்டு மக்கள் தமிழ் மொழியிடத்து ஆர்வமும் தமிழ் பண்பாட்டில் கருத்தும் கொள்ள அத்திபாரமிட்டார்.

தூத்துக்குடி ரோச் ஆண்டகையின் ஊக்கத்தினால் 1945ல் அண்ணாமலை பல்கலைக்கழகம் சென்று அங்கு முதுகலையில் சேர்ந்தார். அப்போது அவரின் வயது 32 ஆகும். பலர் தமிழை ஒதுக்கிய காலத்தில் அடிகள் சிறப்புப்பாடமாக தமிழைக் கற்றதின் காரணிகள், தமிழின் சொற்செறிவு - செழிப்பு, தமிழ் இலக்கியங்களில் கிடந்த வாழ்வியல் தத்துவங்கள் போன்றனவாகும்.

பேராசான்களின் புலமை, நண்பர்களின் தமிழ் நேயம் அடிகளினது அருந்தமிழ்ப் பற்றையும் வளத்தையும் பெருக்கின. சங்க இலக்கியத்தில் தனி ஈடுபாடு கொண்டார். சிலப்பதிகாரத்திலும் சிந்தை வைத்தார்.

1947ல் முதுகலைப்பட்டம் பெற்றதும், தொடர்ந்து செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதரை நெறியாளராகக்

கொண்டு "**பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை**" எனும் பொருள் பற்றி ஆய்ந்து 1949ல் எம்.லிட் பட்டம் பெற்றார். அவர் ஆய்ந்ததே 1952ல் நூலாகியது. இவர் மீண்டும் தூத்துக்குடி திரும்பியதும் சமய தமிழ் பணி புரிதற்காக 1948ல் ஒரு தமிழ் கழகம் நிறுவினார். அதுவே தமிழ் இலக்கியக் கழகமாகும்.

1952ம் ஆண்டு முதல் 1961ம் ஆண்டு வரை இலங்கை பல்கலைக் கல்வித்துறையிலே விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் மலேசியப் பல்கலைக்கழக இந்தியவியல் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஈடுபட்டது போல் அடிகள் நவீன தமிழிலக்கியங்களிலும் ஈடுபட்டார். பாரதி, பாரதிதாசன் போன்றோருடைய கவிதையையும் மறைமலையடிகள், வி. கல்யாண சுந்தர முதலியார், கல்கி, மு. வரதராசன் போன்றோருடைய வசன இலக்கியங்களையும் அடிகளார் ஆராய்ந்தார். அடிகளார் தமிழ் இலக்கிய வரலாறு, பண்பாடு, கல்வித்துறை ஆகியவற்றிலும் ஈடுபட்டார்.

தனிநாயகம் அடிகளின் நிலைத்த புகழிற்கு காரணமாக அமைந்தது உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் நிறுவியதும், அதன் மூலம் உலகத் தமிழ் மன்றம் நிறுவியதும் தமிழராய்ச்சி மாநாடுகளை நடத்தியதுமே என்பது மிகையாகாது. (1966ல் மலேசியாவிலும் 1968ல் சென்னையிலும் 1970ல் பிரான்சிலும், 1974ல் யாழ்ப்பாணத்திலும், 1981ல் மதுரையிலும் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றன) அடிகளின் தமிழ்ப் பணிகளிலே தலையாயது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடே. அடிகளாரின் அருந்தமிழ்ப் பெரும் பணிகளின் மகுடமாக

அமைந்தது அதுவாகும். அடிகளாரை உலகத் தமிழர் யாவரும் உச்சிமேல் வைத்து, மெச்சும் வகையில் அடிகளாரின் தமிழ்ப் பணியின் உச்சகட்ட கொடுமுடி அதுவாகும்.

தம் சமய வாழ்விலும், தமிழ்ப்பணியிலும் மனித நேயத்தை ஆணிவேராகக் கொண்டிருந்தவர். உலகப் புகழ்பெற்ற உயர்ந்தவராயினும் அனைவருடன் எளிதே இனிதே பழகவல்லவர். தமிழ் மொழியின் தனி மாண்பையும், தமிழினத்தின் பண்பினையும் உலகமெல்லாம் அறியச் செய்த அருமையும், பரவும் வகை செய்த பெருமையும் திருத்தந்தை தனிநாயக அடிகளாரையே சாரும். சுத்தோலிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் எங்கிருப்பினும் அவர்களையெல்லாம் அழைத்து அழைத்து ஊக்குவித்து அவர்களிடத்து ஒரு விழிப்பினை ஏற்படுத்தினார்.

கிட்டத்தட்ட 75 ஆண்டுகளுக்கு முன்பே உலகின் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு தம் பயண அனுபவங்களையெல்லாம் தொகுத்து **"ஒன்றே உலகம்"** எனும் நூலாக வெளியிட்டார். தமிழ் உலகின் பயண இலக்கியத்திற்கு வித்திட்ட வித்தகர் தனிநாயகம் ஆவார். ஐரோப்பாவில் 5 ஆண்டுகளும் இந்தியாவில் 10 ஆண்டுகளும் பயணித்துள்ளார். அத்துடன் இங்கிலாந்தில் 2 ஆண்டுகளும், வட தென் அமெரிக்காவில் 2 ஆண்டுகளும் பயணித்தார். தென்கிழக்கு ஆசியாவிலும், யப்பானிலும், மத்திய கிழக்கிலும், வடமத்திய ஆபிரிக்காவிலும் மிகுதியாகப் பயணித்தார். ரஷ்யா தொடக்கம் உலகில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள பல்கலைக்கழகங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் பரவலாகப் பயின்றவர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், அல்ஜீரியா, ஆர்ஜன்டீனா, ஆபிரிக்கா, ஒல்லாந்து, ஆஸ்திரியா, இந்தியா, இங்கிலாந்து,

இத்தாலி, இந்தோனேசியா, ஈரான், ஈராக், உகண்டா, உருகுவே, எகிப்து, எத்தியோப்பியா, எக்குவாதோர், கம்போடியா, கொங்கோ, கிரீஸ், கென்யா, ஜப்பான், சிலி, சிங்கப்பூர், சீனா, ஜெர்மனி, செனகல், சோவியத் ரஷ்யா, சுவிட்சர்லாந்து, சுவீடன், சூடான், தாய்லாந்து, தன்சானியா, துருக்கி, தூனீசியா, நோர்வே, பர்மா, பனாமா, பிரான்சு, பின்லாந்து, பிரேசில், பெல்ஜியம் பேரு, போர்த்துக்கல், மலேசியா, மார்ட்டினிக், மெக்சிகோ, மொரீசியஸ், லெபனான், ரினிடாட், டென்மார்க், வியட்நாம், ஸ்பெயின், ஜமெய்க்கா என 54 நாடுகட்கு அடிகளார் சென்றுள்ளார். தமிழ்நாட்டில் இதுவரை மறைந்திருந்த தம்பிரான் வணக்கம் போர்த்துக்கீச தமிழ் அகராதி என்பவற்றை லிஸ்பன் பல்கலைக்கழகத்தில் கண்டு அவற்றை அச்சேற்றுவித்தார். இவ்வாறு ஐரோப்பாவிலுள்ள ஏராளமான பழம்பெரும் தமிழ் நூல்களை அச்சேற்றுவித்த பெருமை அடிகளாரையே சாரும்.

இவர் தம் உரைகளைத் தொடங்கும் முறையே அழகானதாகும் ''அகர முதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' எனும் குறட்பாவைக் கூறி விவிலியத்தில் வரும் ''நானே அகரமாய் இருக்கிறேன்'' என்ற திருமொழியையும் இணைத்து விளக்கித் தொடங்குவார்.

இவர் தொடங்குவதை கண்டு சபையோர் மெய்சிலிர்ப்பர். இவரது பொழிவின் ஊடே பாரதியின் 'யாமறிந்த மொழிகளிலே செந்தமிழ் நாடெனும் போதினிலே, பரிபாடலிலிருந்து 'தீயினுள் தென்றல் நீ பூவினுள் வாசம் நீ கல்லினுள் மணியும் நீ, சொல்லினுள் வாய்மையும் நீ' போன்றவற்றை அண்ணாமலை இசைக்கல்லூரியில் அறிந்த இசை முறை கொண்டு இசைத்துக்காட்டி மக்களை தன் பால் ஈர்ப்பார்.

திரைப்படச் சுருள்களை மூலமும் விளக்குவார். தமிழ்க் கலைகள் பற்றி உரையாற்றும் போது தமிழகக் கோயில் கட்டிடக்கலை நாட்டியக் கலைகளை, தம்முடன் எடுத்துச் சென்று திரைப்படங்களைக் போட்டுக்காட்டி விளக்கியுள்ளார். கருத்துகளை காட்சியாகக் காட்டியவுடன் கருத்துகள் அனைத்தும் மக்கள் மனதில் இலகுவாக காட்சியாக பதிவடைந்தன. அவை மக்களிடத்தே பெரும் வரவேற்பையும் ஏற்படுத்தியது. இவை மேல் நாட்டவரிடமும் வரவேற்பைப் பெற்றன.

தம்முடன் எடுத்துச் சென்ற நூல்களை ஆங்காங்கேயுள்ள பல்கலைக்கழகங்களில் எங்கெல்லாம் இந்தியத் துறை என்னும் பெயரில் வடமொழித்துறை விளங்கியதோ அங்கெல்லாம் அவற்றை அளித்தார். "இவற்றையும் கொஞ்சம் படியுங்கள். இந்தியத் திருநாட்டில் இத்தகு பழமையான நாடு, பழமையான இனம், தொன்மையான மொழி, தொல் பண்பாடு உண்டென உணருங்கள். இதுவரை ஒன்றும் அறியாமல் இருக்கும் நீங்கள் முழு வரலாற்றையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு பாருங்கள்" என தனிநாயகம் கூறியுள்ளார். இவ்வாறெல்லாம் "ஒன்றே உலகம்" என்ற கருத்தை உரைத்திடும் போதெல்லாம் அமெரிக்க மக்கள் வியப்பில் ஆழ்வர். அமெரிக்கர்களையே வியக்க வைக்கும் அளவிற்கு இவரது சொல்வலிமை காணப்பட்டது.

அடிகளார் நல்ல பண்பாளர், தமிழ்ப் பண்பாட்டை பாரெங்கும் பரப்பியவர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயரிய பண்பாட்டில் உள்ளம் பறிகொடுத்தவர். உலகெங்கனும் தமிழ்ப் பண்பாடே ஊடுருவி இருப்பது உணர்ந்தார். தூத்துக்குடியிலும் கொழும்பிலும் தமிழர்

பண்பாட்டுக் கழகம் தோற்றியவர். எனவே தம் இதழுக்கும், **"தமிழ்ப் பண்பாடு"** என்ற பெயரை இட்டார். செய்திப் பகுதி, தமிழியல், வாசகர் மடல், மேற்கோள், நூல் திறனாய்வு, இரங்கல் கட்டுரைகள் என 7 பகுதிகளைக் கொண்டது. அறிவார்ந்த கட்டுரைகளை தம் இதழில் சேர்த்தார். பிறரையும் எழுதத் தூண்டினார். "தமிழர்கள் உணர்ச்சி வயப்பட்டவர்கள் அதனாலேயே உயராது போனார்கள்" எனக் கூறியுள்ளார்.

உலகத் தூதினை அப்படியே காற்றில் விட்டுவிடாது **தமிழ்த்தூது** *(1952)*, **ஒன்றே உலகம்** *(1963)*, **தமிழியல் நூல்கள் ஆய்வடங்கள்** *(1966)*, **வெளிநாடுகளில் தமிழ்க்கல்வி** *(1968)* **தமிழ்ப்பண்பாடும் நாகரிகமும்** *(1970)* என்ற 5 அரும் நூல்களாக அப்படியே பதிவு செய்து கொடுத்து விட்டார். வருங்கால ஆவணங்களாக அவை விளங்கும்.

உலங்கெங்கனும் நெல்லிக்காய் மூட்டைகளாகச் சிதறிக்கிடந்த தமிழர்களையெல்லாம் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வென கூறி ஒன்று சேர்த்தார். "உலகத் தமிழறிஞர்களே ஒன்றுபடுங்கள்" எனக் கூறி ஒருங்கிணைத்தார். ஆராய்ச்சி கருத்தரங்கு மாநாடுகளை கூட்டினார். முதல் முயற்சியே முழுமையான செழுமையான சிறந்த முயற்சியாக அமைந்தது. பல்வேறு கழகங்களில் வெவ்வேறு பகுதியினர்க்கு நல்லுரை நிகழ்த்தியுள்ளார். தென்னிந்திய இலக்கியம், தென்னிந்தியாவின் பண்பாடு மரபு தென்னகத்தில் அறியப்படா இலக்கியம், புதிய இந்தியா, தமிழரின் தன்மை, தமிழின் தொன்மை, தமிழ்ப்பண்பாடு, யாதும் ஊரே யாவரும் கேளிர் போன்ற தலைப்புகளிலே சொற்பொழிவாற்றினார்.

இவ்வாறு தமிழியல் ஆய்வில் புதிய மறுமலர்ச்சியை தோற்றுவித்தும் பிறநாடுகளில் தமிழின் சிறப்பையும் பண்பாட்டின் உயர்வையும் அறிய வைத்தும் பன்மொழி அறிவில் ஒப்பியற் கருத்துகளை உரைத்தும் அன்புடனும் பண்புடனும் அறிஞர்களை அணுகியும் இடைவிடாத முயற்சியில் ஈடுபட்டும் எழுதியும், உரையாற்றியும் அடிகளார் செய்த பணிகளால் அவர் திருவுருவம் தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைப்பெற்று விட்டது. அடிகளார் விண்ணுலகையும் மண்ணுலகையும் விட்டு 1980ம் ஆண்டு இறையடி சேர்ந்தார்.

- தியாகராஜா உதயசாந்தன்

தனிநாயகம் அடிகள் - இன்னொரு பார்வை

தனிநாயகம் அடிகளாரின் வாழ்வில் 1952 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். தம்மை முழுமையாகத் தமிழ்ப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டது அவ்வாண்டிலிருந்துதான். அந்த ஆண்டில் "தமிழ்க் கல்ச்சர்" ஆய்விதழை வெளியிட்டார். அவ்வாண்டிலேயே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் விரிவுரையாளர் பொறுப்பை ஏற்றார்.

1952 ஆம் ஆண்டு முதல் 1961 ஆம் ஆண்டு வரை அடிகளார் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். கல்விக் கொள்கைகள், தமிழ் மொழியைக் கற்பிக்கும் முறைகள், சமூகக் கல்வியியல் போன்ற தலைப்புகளில் விரிவுரைகள் நிகழ்த்தினார். 1955-57ஆம் ஆண்டுகளில் இலண்டன் பல்கலைக்கழகத்தில்

பயின்று பழந்தமிழ் இலக்கியங்களில் கல்விச் சிந்தனைகள் எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

அடிகளார் விரிவுரையாளராகப் பணிபுரிந்தாலும் அப்பொழுது இலங்கையில் உருவாகி வளர்ந்து வந்த அரசியல் அவரையும் பாதித்தது. 'தேசியம்', 'இன உணர்வு', 'இனப்பிரச்சினை' சார்ந்த பல்வேறு நிலைமைகளுக்கு முகங்கொடுத்ததோடு தம்மளவில் கருத்துத் தெளிவுகளையும் கொண்டிருந்தார்.

1956 இல் 'சிங்களம் மட்டுமே இயக்கம்' தீவிரமடைந்ததைக் கண்டு கலங்கினார். பிரதமர் பண்டாரநாயக்காவை அடிகளார் நேரில் சந்தித்துச் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் ஆக்கி இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும் எனக் குறிப்பிட்டார். இதற்கு பெல்ஜியம், கனடா, சுவிட்சர்லாந்து நாடுகளின் முன்னுதாரணங்களையும் எடுத்துரைத்தார். ஆனால், பிரதமரின் அணுகுமுறை அடிகளாருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

தமிழ்மொழிக்கு உரிமை வழங்கப்படவேண்டும் என்னும் வேண்டுகோள்களில் சில சிங்களப் பிரமுகர்களின் ஒப்பங்கள் பெற்று அவற்றையும் பகிரங்கமாக வெளியிட்டார். அடிகளார் தமிழியல் ஆராய்ச்சியில் ஒரு கூறாகவே தமிழ் மக்களின் போராட்ட எழுச்சியையும் இனங்கண்டார்.

ஒரு நாட்டுக்குள் பல மொழியினங்களுக்கு மொழி உரிமை வழங்குவதே இன்று நடைமுறையாக இருக்க இலங்கையில் மட்டும் தமிழ் மொழிக்கு ஏற்கனவே இருந்த

உரிமைகளைப் பறிப்பதும் ஒடுக்குவதும் நடைமுறை ஆவதை வருத்தத்துடன் அடிகளார் எடுத்துக் காட்டினார். அரசியல் பிரச்சினை குறித்துக்கூட ஓர் தெளிவான கோட்பாட்டு அணுகுமுறை சார்ந்த தனது கருத்துக்களை முன்னெடுக்கும் ஆற்றல் படைத்தவராகவே விளங்கினார்.

கட்சி அரசியலோடு தொடர்பற்றவராயினும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அடிகளார் உழைக்கப் பின்னிற்கவில்லை. தமிழர்கள் தங்கள் நியாயமான உரிமைகளை வலியுறுத்துவதற்காக 1956, 1961 ஆம் ஆண்டுகளில் நடத்திய அறப் போர்களில் அடிகளார் பங்கு பற்றினார். 1956 இல் காலி முகத்திடலிலே தமிழ் மக்கள் தெரிவித்த எதிர்ப்புப் போராட்டத்தில் காடையர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு போராட்டத்தில் இணைந்து கொண்ட அவரது உறுதி உண்மையில் மெய் சிலிர்க்க வைக்கும். தாம் மதகுரு என்பதையும் பொருட்படுத்தாது இரத்தம் ஓடும் மக்களோடு மக்களாய்த் தம்மையும் இணைத்து நின்றமை அவர் தமிழ் மீதான காதலுக்கு சாட்சி. அஞ்சாநெஞ்சம் படைத்தவராகவே இருந்தார்.

- தெ. மதுசூதனன்

நன்றி : "தினக்குரல்"

11-9-2005

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென் றூதூது சங்கே!
பொங்கும் தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

- பாவேந்தர் பாரதிதாசன்

முஸ்லிம்களின் அரசியல் நிழல் ஒன்றுக்கு
உருவும் கருவும் கொடுத்தவர்

கவிஞர் திலகம் அப்துல்காதர் லெப்பை

இலங்கையின் 'காயல்பட்டினம்' என்று வர்ணிக்கப் பெறும் கிழக்கிலங்கைக் காத்தான்குடியைத் தாயகமாகக் கொண்ட **கவிஞர் அப்துல் காதர் லெப்பை** அவர்கள் ஆசிரியப் பயிற்சியை முடித்துக் கொண்டு, கண்டி உடதலவின்னை தமிழ்ப் பாடசாலையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார்.

1939ஆம் ஆண்டு, கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்கள் கல்முனை நற்பிட்டிமுனைப் பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றார். அக்காலக்கட்டத்தில் தான் **சேர் ராஸிக் பரீத்** அவர்களின் முஸ்லிம் பாடசாலைப் போராட்டம் ஆரம்பமானது. அப்போராட்டத்தில் கவிஞர் தன்னையும் அர்ப்பணித்துக் கொண்டார். அப்போராட்டத்தின் வெற்றியே, முஸ்லிம் பாடசாலை, முஸ்லிம் ஆசிரியர், மௌலவி ஆசிரியர், முஸ்லிம் பாலர் வாசகம், நோன்பு விடுமுறை, வெள்ளிக்கிழமை அரைநாள் விடுமுறை என்பனவாகும்.

நற்பிட்டி முனையில் கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்களுக்கு அறிஞர் **எ.எம்.ஏ. அஸீஸ்** (மர்ஹூம்) அவர்கள்

அறிமுகமாகின்றார். அப்பொழுது, அறிஞர் அஸீஸ் அவர்கள் கல்முனை உதவி அரசாங்க அதிபராகக் (A.G.A) கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள், கவிஞர் அறிஞர் அஸீஸைச் சந்திக்கச் சென்றிருந்தார். முதற் சந்திப்பு.

''நான் நற்பிட்டிமுனைப் பாடசாலைக்கு வந்துள்ளேன்,'' என்று பேச்சை ஆரம்பித்தார்.

அங்கு, மேசையிலிருந்த **'தாருல் இஸ்லாம்'** பத்திரிகை மீது கவிஞரின் பார்வை பதிந்தது. பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் போது, அதில் கவிஞரின் கவிதையொன்று காணப் பெற்றது.

'தாருல் இஸ்லாம்' பத்திரிகையில் **'அதான்'** என்னும் புனைப் பெயரில் கவிதைகள் எழுதுபவர் யார்? என்று அறிஞர் அஸீஸ் கேட்டார்.

கவிஞருக்கு மட்டில்லா மகிழ்ச்சி.

'அது என்னுடைய கவிதைகள்' என்றார்.

ஆச்சரியத்தால் அகல விரிந்தன அறிஞரின் விழிகள்.

'நான் தேடிக் கொண்டிருந்த கவிஞர் நீங்கள் தானா? உங்கள் கவிதைகளிலுள்ள ஆழ்ந்த கருத்துகள் என்னை ஆட்கொண்டுள்ளன. தொடர்ந்து எழுதுங்கள்' என்று உற்சாகப்படுத்தினார்.

அன்று முதல் இருவரும் நெருங்கிய நண்பர்களாகவும் கருத்தொருமித்தவர்களாகவும் ஆகிவிட்டனர்.

முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கிய சமூகமாக இருப்பதற்கான காரணிகளை இருவரும் சிந்திக்கத் தொடங்கினர். முஸ்லிம் மாணவர்கள் சர்வகலாசாலைவரைச் செல்வதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர். '**முஸ்லிம் கல்விச் சகாயநிதி**' ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டனர். அதன் விளைவாக கல்முனையில், '**முஸ்லிம் முன்னேற்றச் சங்கம்**' உருவானது. அதன் மூலம் இவர்களது கனவு நினைவானதோடு, **வை.எம்.எம்.எ.** அமைப்பும் நாடளாவிய ரீதியில் வியாபிக்கலாயிற்று.

1961 ஆம் ஆண்டு, பதுளையில் ஆரம்பிக்கப் பெற்ற முஸ்லிம் சிறார்களுக்கான அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஒரு நிரந்தரத் தலைமை ஆசிரியர் இல்லாத குறையை நிறைவு செய்வதற்கு கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்கள் 1943ஆம் ஆண்டு பதுளைக்கு வந்தார்கள்.

பதுளை ஏழை முஸ்லிம் சிறார்கள் கல்வி கற்பதில் ஆர்வம் இல்லாதவர்களாகவே இருந்த காலமது. ஒரு சில பணம் படைத்த ஆங்கில மோகங் கொண்டவர்களின் குழந்தைகள் மாத்திரமே கல்லூரிகளில் பயின்று கொண்டிருந்தனர். தமிழ் கற்கும் ஏழைப் பிள்ளைகளைக் கிண்டல் செய்யவும் தயங்கவில்லை.

எங்கிருந்தோ வந்த கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்கள் இவ் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சிந்திக்கும் ஒரு பரம்பரையையே உருவாக்கி விட்டார். அக்காலை, அப்துல்காதர் லெப்பை பிள்ளைகளைக் கெடுத்து விட்டார் என்று குற்றஞ்சாட்டினர்.

கனிஷ்ட பாடசாலையாகவிருந்த அரசினர் பாடசாலையைச் சிரேஷ்ட தரத்திற்கு உயர்த்தி 1952 ஆம் ஆண்டு, ஊவா மாகாணத்திலே முதன் முதல் எஸ்.எஸ்.ஸி பரீட்சைக்கு மூவரைத் தோற்றச் செய்து, நூற்றுக்கு நூறு வீதம் சித்தியடையச் செய்தார். தொடர்ந்து 1961ஆம் ஆண்டு வரை சிறந்த பெறுபேறுகளைப் பெறச் செய்தார். ஊவா மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற அத்தனை பேரும் கவிஞரின் மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கவிஞரது மாணவர்கள் இலட்சியப் பிடிப்பும் தியாக மனப்பான்மையும் கொண்டவர்களாகவும் கவிதை, நாடகம், பேச்சு ஆகிய துறைகளில் வல்லவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்களின் வாழ்வில் மற்றுமொரு திருப்பமாக **கவிஞர் எம்.ஸி.எம். சுபைர்** அவர்களின் தொடர்பைக் குறிப்பிடலாம். (இவர் பற்றியக் கட்டுரை ஒன்றும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது - தொகுப்பாசிரியர்)

60களில், பண்டாரவளை ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய கவிஞர் எம்.ஸி.எம். சுபைர் அவர்கள், மாணவர்களுக்காக '**மணிக்குரல்**' என்ற சஞ்சிகையை பதுளையில் அச்சுப் பதிப்புச் செய்ய வந்தார். அவ்வேளை, கவிஞரைச் சந்தித்து ஆலோசனை பெற வந்திருந்தார்.

ஒருதினம், **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** அவர்களின், '**உமர்கையாம்**' பாடல் நூலைக் கவிஞரிடம் காட்டி, அதில் காணப் பெற்ற சில ஒவ்வாக் கருத்துகளைச் சுட்டிக் காட்டி, மூலத்தின் சாயலில் உமர் கையாம்

பாடல்களை இயற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்கள், **பிற்ஸ் ஜெரால்ட்** ஆங்கில மொழியில் பெயர்த்த உமர் கையாமைப் படித்து, 'ரூபாய்யாத்' என்னும் தலைப்பில் தமிழ்க்கவிதைகளாக்கினார். அக்கவிதைகள் 'மணிக்குரல்' சஞ்சிகையில் வெளிவந்தன. பின்னர் நூலுருவானது. 1961ஆம் ஆண்டு, அந்நூலுக்கு சாஹித்திய மண்டலப் பரிசும் கிடைக்கப் பெற்றது.

1960 வரை, கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்கள் ஒரு சிறந்த கவிஞர் என்பது மறைவாகவே இருந்து வந்தது. அதை வெளிக்கொணர்ந்த பெருமை கவிஞர் எம்.ஸி.எம். சுபைரையே சாரும்.

இக்பால் இதயம், இறசூல் சதகம், தஸ்தகீர் சதகம், செய்னம்பு நாச்சியார் மான்மியம், முறையீடும் தேற்றமும், மெய்ந்நெறி, ஜாவீது நாமா, பாதும்மா சரிதை, கார்வான் கீதம் ஆகிய கவிதை நூல்களைப் படைத்துள்ளார்.

'தினகரன்' பத்திரிகையில் '**ஆய்வாளன்**' என்ற புனைப்பெயரில் '**கலாசாரம்**' என்னும் கட்டுரைத் தொடரை எழுதினார்.

கவிஞரது '**என் சரிதை**' நூல் தன்னைப் பற்றி மிகவும் சுருக்கமாகவும் அலட்டிக் கொள்ளாமலும் எழுதப் பெற்றதெனலாம். '**எனது நினைவில் ஒரு கவிஞர்**' என்ற எனது நூல் நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டது. ஆனால், 'என் சரிதை' எழுபத்தாறு பக்கங்ளோடு

முடிகின்றது. இதிலிருந்து கவிஞரது நேர்மையான போக்கும் அடக்கமான சுபாவமும் நன்கு வெளிப்படுகின்றதெனலாம்.

பதுளையில், முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வித்திட்டு, பதினெட்டு ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டு, பதுளையிலிருந்து இருபத்தைந்து மைல்களுக்கு அப்பாலுள்ள 'குருத்தலாவ' என்னும் கிராமப்பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்று, அங்கும் தன்னுடைய கல்விப் பணியைச் செவ்வனே பத்து ஆண்டுகள் மேற்கொண்டு, இறுதியாகத் தனது சொந்த ஊரான காத்தான்குடி சென்று, மத்திய மகாவித்தியாலய அதிபராக ஒரு சில காலம் பணிபுரிந்து 1971ஆம் ஆண்டு கல்விப் பணியை முடித்துக் கொண்டார்.

கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்களின் இறுதிக்காலம் மாத்தளையில் தனது பெறாமகன் **ஐ. ஆப்தீன்** அவர்களின் வீட்டில் இனிது கழிந்தது.

மாத்தளையில் வைத்துத்தான் மர்ஹூம் அமைச்சர் **எம்.எச்.எம். அஷ்ரப்** அவர்களைக் கவிஞர் சந்திக்கின்றார்.

அடிக்கடி ஐ. ஆப்தீன் இல்லத்தில் மாவட்ட நீதிபதி உசைன் (கல்முனை) எம்.எச்.எம். அஷ்ரப், கவிஞர் ஆகிய மூவரும் சந்திப்பது வழக்கம். அந்தச் சந்திப்பின் போது, ஓர் அரசியல் தலைமைத்துவம் அவசியம் என்பதை கவிஞர் வலியுறுத்தி வந்தார். அதன் விளைவாகவே, 'முஸ்லிம் **காங்கிரஸ்**' உதயமானது. அந்த அத்திவாரத்தில் முளைத்த விருட்சமே, முஸ்லிம்களுக்கு அரசியல் நிழலைக் கொடுத்தது.

கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்களைப் பற்றி **எம்.எச்.எம். அஷ்ரப்** அவர்கள் குறிப்பிடும் பொழுது,

"கடந்த எட்டு ஆண்டுகளாக எனக்கும் கவிஞருக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. கவிஞனாக முதலில் கண்ட நான் - நான் சந்தித்த மிகப் பெரும் தெளிவுற்ற சிந்தனையாளர்களில் ஒருவராய் அவரை உணர்ந்தேன். முஸ்லிம்களின் அரசியல் நிலை பற்றி அவர் மிகவும் கவலையடைந்திருந்தார். இலங்கை சிங்களக் கட்சிகளுடன் உறவுகள் இல்லாத முஸ்லிம்களுக்கான தனிப்பெரும் அரசியல் ஸ்தாபனம் ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று இருவரும் கனவு கண்டோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உதயமும் அமைதியானதும் காத்திரமானதுமான அதன் பணிகளில் நான் சோர்வடையும் போதெல்லாம் அவரின் (கவிஞரின்) கடிதங்களும் அதன் கருத்துகளும் எனக்கு நிறைய உற்சாகத்தைத் தந்தன. கவிதை உலகம் அடையும் இழப்பைவிட சிந்தனை உலகம் அடையும் இழப்பே அதிகமாகும்"

என்று சுட்டிக் காட்டியிருப்பதிலிருந்து, கவிஞர் ஓர் **அரசியல் ஞானி** என்பதுவும் புலனாகின்றது.

கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்கள் ஓர் ஆசிரியர் மாத்திரமல்லாமல், கவிஞராக - சிந்தனையாளராக- சீர்திருத்தவாதியாக - அரசியல் ஞானியாக ஆன்மிகவாதியாக - இக்பால் தாசராக வாழ்ந்து தனக்குரிய பணியைத் தலை மேற்கொண்டு வாழ்ந்து மறைந்த ஒரு மேதையாவார்.

கிண்ணியா இஸ்லாமிய கலை - இலக்கிய மாநாட்டிலும் கௌரவம் அடைந்து பாராட்டுப்பெற்றவர்.

கவிஞர் பெற்ற மகன், **அமீரலி** அவர்கள் தந்தையோடு வாழ்ந்த காலம் மிகமிகக் குறைவு. அவரது குழந்தைகளாக மாணவர்களே இருந்து வந்துள்ளனர்.

'ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன்பிள்ளை தானே வளரும்' என்ற வாசகத்திற்கு அமீரலி அவர்கள் ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

தற்போது, டாக்டர் அமீரலி அவர்கள் அவுஸ்திரேலிய Murdoch சர்வகலாசாலையில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

1913.07.09 ஆம் நாள் பிறந்த அப்துல்காதர் லெப்பை அவர்கள், ஆசிரியர் திலகமாக - கவிஞர் திலகமாகப் பாராட்டப் பெற்று *1984.7.10*ஆம் நாள் இவ்வுலகை விட்டும் பிரிந்தார்.

- இலக்கிய மாமணி - கலாபூஷணம் **சாரணா கையூம்**
பதுளை.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

- பாவேந்தர் பாரதிதாசன்

திருக்கோணேஸ்வரத் திருமகனார்

பண்டிதர் வடிவேல்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் - வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே

நல்லவர்கள் இப்படித்தான் எண்ணுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் பார்வையில் எல்லாமே நல்லவையாகத்தான் படுகின்றன. கெட்டதாக எதையும் பார்க்க முடிவதில்லை. கெட்டவர்களாக எவரையும் பார்க்க முடிவதில்லை. அவர்களுடைய மனம் அப்படி அமைந்திருக்கிறது.

அதேசமயம் கெட்டவர்கள் போக்கு இதற்கு மறுதலையாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம் அவர்களுடைய மனம்தான். இதனால் தான், உலகில் ஒருவன் காண்பது அவனது மனதின் எதிரொலி என்று இந்துமத தத்துவம் கூறுகிறது. நல்லவர்களுக்கு உலகம் நல்லதாகத் தோன்றுகிறது. கெட்டவர்களுக்கு அது கெட்டதாகத் தோன்றுகிறது.

பண்டிதர் வடிவேல் ஐயா அவர்களைப் பற்றி எண்ணும் போது இந்தச் சிந்தனைதான் என் மனதில்

தோன்றுகிறது. பல்வேறு விடயங்கள் பற்றிப் பல்வேறு கதாப்பிரசங்கங்களில் அவருடன் உரையாடியுள்ளேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் மற்றவருடைய குறைகளைப் பற்றிப் பேசுவதில்லை. அவருடைய நூல்கள் தொடர்பாகக் கூட சில முறையற்ற செயல்கள் நடந்துள்ளன. அதைச் சுட்டிக் காட்டிய போதும் அவர் கிஞ்சித்தும் சலனம் அடைவில்லை. அவற்றை அவர் பொருட்படுத்தவேயில்லை.

அபூர்வ மனிதர்

இத்தகைய அபூர்வ மனிதர்களை நாம் உலகில் காண்பது அரிது. இவர்கள் இறைவனின் செல்லக் குழந்தைகள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

எண்ணிப் பாருங்கள். உலகில் ஒவ்வொருவரும் "எனது குடும்பம் எனது பிள்ளைகள், எனது சொத்து எனது வெளிநாட்டுப் பயணம்" என்று ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கும் போது பண்டிதர் வடிவேல் அவர்களைப் போன்ற ஒரு சிலர் மட்டும், நமது மக்கள், நமது வாழ்வு என்று பொது நோக்கிலேயே சிந்தித்தார்கள், செயற்பட்டார்கள். எந்நேரமும் இறை சிந்தனை, எந்நேரமும் இறைநாமம், எந்நேரமும் இறைவாக்கு. எண்ணம், சொல், செயல் மூன்றும் தெய்வ அர்ப்பணம் - இதுவே பண்டிதர் வடிவேல் அவர்கள்.

திருகோணமலையில் நடைபெறும் இந்துசமய நிகழ்வுகள் கோயில் உற்சவம், இலக்கிய விழா எதுவாக இருந்தாலும் பண்டிதர் வடிவேல் அவர்கள் அதில் ஒரு பார்வையாளராக இல்லாமல் பங்களிப்பாளராகச் சம்பந்தப்பட்டிருப்பார்.

இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் இறைவன் இட்ட ஒரு பணியை நிறைவேற்றும் நோக்குடனேயே பிறக்கிறார்கள். அந்த வகையில் மக்களுக்கு நல்லதைச் சொல்லி, அவர்கள் இதயங்களில் நல்ல எண்ணங்களை விதைக்கும் நற்பணியில் ஈடுபடுவதற்கென்றே இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டவர்களில் ஒருவர்தான் பண்டிதர் வடிவேல் அவர்கள்.

ஒரு மனிதன் நல்லவன் ஆவதற்கு சத்சங்கம் அவசியம் என்பார்கள். பண்டிதரைப் பொறுத்தவரை கோயில், பூசை, திருமுறை, பண்ணிசை, கதாப்பிரசங்கம், சமயப் பிரசங்கம் ஆகியவையே அவருடைய **"சத்சங்கம்."** எனவே அவர் எப்படி வேறு மனிதர் ஆகமுடியும்?

நிறைகுடம்

*09.12.1919*ல் மட்டக்களப்பில் பிறந்த பண்டிதர் ஐயா, ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் அ, ஆ படித்தவர் என்றால் அதற்கு வேறு பொருள் உண்டு. இப்பாடசாலையில் அக்காலத்தில் சுவாமி விபுலாநந்தர். அருணாசல தேசிகர் ஆகியோர் பிள்ளைகளைச் சமயத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி வளர்த்தார்கள். திருமுறைப்பால் ஊட்டினார்கள். திருநெறி ஆடையால் போர்த்தினார்கள். அத்தெய்வப் பண்ணையில் வளர்ந்தவர்தான் பண்டிதர் ஐயா அவர்கள்.

அவர் வளர்ந்து வாலிபனானதும் அவர் மேற்கொண்டது ஆசிரியப் பணி. மட், களுதாவளை RKM பாடசாலை, மட் ஆனைப்பந்தி RKM பாடசாலை, திருகோணமலை RKM இந்துக் கல்லூரி - திருகோணமலை RKM கோணேஸ்வரா வித்தியாலயம். இதுவும் ஒரு தெய்வக்

குறிப்பு. அவரது கல்விப்பணி முழுவதும் இராமகிருஷ்ண சங்கப் பின்னணியிலேயே நிறைவேறியுள்ளது. 35 வருட ஆசிரிய சேவையில் 25 வருடம் அதிபராகப் பணியாற்றியுள்ளார்.

அவரது சேவைக்காலத்தில் அவரை வந்தடைந்த பட்டங்கள் பற்பல

i. **மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்** *(1950)*

ii. **சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜ சைவப் புலவர்** *(1953)*

iii. **சைவ சித்தாந்த சிகாமணி** *(காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம்)*

iv. **கதாப்பிரசங்க வாரிதி** *(இந்துசமய கலாசார அமைச்சு)*

v. **திருமுறைச் செல்வர்** *(திருப்பனந்தாள் ஆதீனம்)*

vi. **ஞானசிரோன்மணி** *(இந்துசமய கலாசார அமைச்சு)*

இவை தவிர மட்டக்களப்பில், கொழும்பில், திருக்கோணமலையில் பற்பல விழாக்களில் இவருக்குப் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கி, பட்டம் வழங்கிக் கௌரவித்தார்கள்.

இத்தனை புகழையும் சுமந்து கொண்டு இவர் எப்படி அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறார். அதுதான்

நிறைகுடத்தின் பண்பு; ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்கும் தெளிவு.

இலக்கியப் பணி

இவருடைய இலக்கிய வாழ்வை நோக்கும்போது இவர் திருகோணமலையுடனும், திருகோணேஸ் வரத்துடனும் இரண்டறக் கலந்து விட்ட பாங்கு நன்கு தெரிகிறது.

ஒரு சில நூல்களைப் பார்ப்போம்.

i. **திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்** *(பிரதேச அபிவிருத்தி அமைச்சு)*

ii. **திருகோணமலை கோணேசர் கோயில் வரலாறு** *(இந்து தர்ம நூல் வெளியீடு)*

iii. **சண்முகா சரணம்** *(திருமலை முத்துக்குமார சுவாமி கோயில் தேவஸ்தான வெளியீடு)*

iv. **திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு** *(திருமலை இந்து இளைஞர் பேரவை)*

v. **அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில்** *(கும்பாபிஷேகச் சிறப்பு மலர் 1983)*

vi. **திருகோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர்** *(1963)*

vii **திருகோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர்** *(1981)*

viii **திருகோணேசர் தொன்மையும் வன்மையும்** *(திருமலை இந்து இளைஞர் பேரவை)*

ix **திருகோணமலை அந்தாதி** *(இந்து சமய கலாசார திணைக்களம்)*

x **கோணேசர் கல்வெட்டு**

xi **ஞானாமிர்தம்** Iம் பாகம் *(எழுத்துப்பிரதி)*

xii **ஞானாமிர்தம்** IIம் பாகம் *(எழுத்துப்பிரதி)*

இப்பட்டியலைப் பார்த்ததும், இது ஒரு பாரிய நிறுவனம் செய்ய வேண்டிய வேலை, பண்டிதர் வடிவேல் அவர்கள் இதைத் தனிமனிதராக நிறைவேற்றியிருக்கிறாரே என்ற மலைப்புத்தான் ஏற்படும். உண்மையில் இந்த நூல்களைப் படிக்கும் போது பண்டிதர் அவர்களின் பரந்த அறிவும், மதி நுட்பமும், நுண்மான் நுழைபுலமும் பளிச்சென‌த் தெரிகின்றன.

சமய அறிவு மட்டுமல்லாது, வரலாறு, இலக்கியம், மொழி முதலிய துறைகளிலும் ஐயாவுக்குள்ள ஆழ்ந்த புலமை இவற்றின் மூலம் வெளிப்படுகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவருடைய கடும் உழைப்பு, ஏடுகளைத் தேடி அலையும் அலைச்சல், கோயில்கள் தொடர்பாக, மேற்கொண்ட கடும் பயணங்கள், நித்திரை விழிப்பு, ஊண், உறக்கமின்றிப் பட்ட பாடுகள் எல்லாம் தெற்றெனத் தெரிகின்றன.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த யாராவது இந்த நூல்களைப் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதினால் இந்நூல்களின் சிறப்பு, பெறுமதி நன்கு தெரிய வரும்.

ஆக்க இலக்கியங்கள்

பண்டிதர் அவர்கள் பல பிரபந்தங்களைப் பாடி உள்ளார். அவை பெரும்பாலும் கோயில்களோடு தொடர்பு

பட்டவை. இப்பாடல்களின் கருத்தாழமும், கவிச்சுவையும் நம்மை மெய்மறக்கச் செய்கின்றன. சில நூல்கள் வருமாறு:

i. **நெஞ்சுவிடு தூது** (கதிர்காமக் கந்தன் மீது பாடிய உருக்கமான பாடல்கள்)

ii. **கோணேசர் அருள்கேட்டல் பதிகம்** (பக்திச்சுவை சொட்டும் பாடல்கள்)

iii. **கோணேசர் கண்ணொளி ஈந்த பதிகம்** (நெஞ்சம் நெகிழ்ந்துருகும் பாடல்கள்)

iv. **திருவூஞ்சல்** (லாலி, பராக்கு, எச்சரிக்கை, மங்களம் உட்பட சுமார் 20 ஆலயங்களுக்கு மேல் இவ்வாறு திருவூஞ்சல் பாடப்பட்டுள்ளது.

v. **தனிப்பாடல்கள்** - (100க்கு மேற்பட்ட பாடல்கள்)

vi. **பல்வேறு கட்டுரைகள்** (சமயம், இலக்கியம், உற்சவம், ஆலயம் முதலியன)

vii. கதாப்பிரசங்க, எழுத்துப் பிரதிகள் (நூற்றுக்கு மேற்பட்டவை)

viii. **வானொலி உரைகள், சைவ நற்சிந்தனை, இலக்கிய உரைகள் சமய உரைகள்** எழுத்துப் பிரதிகள்.

பண்டிதர் அவர்களின் சமய, இலக்கியப் பணிகளுக்கு மேற்படி பட்டியல் ஓர் உரைகல்லாகும். அவரது பணிகளில் 3 முக்கியமான பணிகள் விசேஷமாக குறிப்பிடப்பட வேண்டியவை.

அவை.

1. கதாப்பிரசங்கம்

2. பண்ணிசைப் பாராயணம்

3. சமயப் பிரசங்கம்

இவை வானொலியில் இடம் பெற்றாலும் சரி, கோயில் மேடைகளில் இடம் பெற்றாலும் சரி, அவற்றில் ஒரு ஆழமும் தனித்துவமும் பிரதிபலிக்கும். எடுத்துக் கொண்ட பொருளை விட்டு நழுவி விடாமல், அதை ஒட்டிய பொருத்தமான புராண இதிகாசப் பாடல்களை இணைப்பது இவரது தனிச்சிறப்பு.

மேற்குறித்த ஆய்வு இலக்கியங்களும் பல்கலைக்கழக பிரமுகர்களின் ஆய்வுக்கு ஏற்றது.

நைடிக பிரமச்சரியம்

''கடமையைச் செய் பலனை பகவானுக்கு அர்ப்பணித்து விடு'' என்பது கீதை வாசகம். பல துறவிகளால் கடைப்பிடிக்க முடியாத இத்தத்துவத்தை உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள பலர் கடைப்பிடிக்கின்றனர். கிராமப்புறத்தில் கூட இத்தகைய பலர் உள்ளனர். ''என் செயலாவது யாதொன்றுமில்லை. எல்லாம் நின் செயலொன்றே அறிந்தேன்'' என்ற மனோபாவத்துடன் இவர்கள் வாழ்கிறார்கள். அவர்களை இல்லத் துறவிகள் அல்லது உலக வாழ்க்கைத் துறவிகள் என நாம் அழைக்கலாம்.

அத்தகைய ஒரு துறவிதான் பண்டிதர் வடிவேல் அவர்கள்.

அவர் காவி உடுத்தவில்லை. மொட்டை அடிக்கவில்லை. ஜடாமுடி தரிக்கவில்லை. ஆனாலும் என்ன, அவர் துறவியாகவே வாழ்க்கை நடத்தினார். "மழித்தலும் நீட்டலும் வேண்டாம்; உலகம் பழித்தது ஒழித்துவிடின்" என்ற வள்ளுவர் வாக்கே இவருக்குப் பொருத்தமானது.

உண்மையில் துறவிகளாக தனிமைச் சூழலில் அல்லது துறவியர் கூட்டத்தில் துறவறத்தைக் கடைப்பிடிப்பதை விட உலக வாழ்க்கையில் உழன்று கொண்டே துறவறத்தைக் கடைப்பிடிப்பது கடினமானது என்பதை நாம் அறிவோம். பலவிதமான பிரச்சினைகள், கவர்ச்சிகள் (புகழ், பாராட்டு, போற்றுதல் உட்பட) உலக வாழ்க்கையில் சர்வ சகஜம். இவற்றால் பாதிப்படையாது தாமரை இலைத் தண்ணீர் போல் வாழ்க்கை நடாத்துவது எத்தகைய சவால் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

பிரமச்சரியம் என்பது ஒரு பெரும் தவம். அதிலும் நைடிக பிரம்மச்சரியம் (நித்திய பிரம்மச்சரியம்) என்பது மிகவும் கஷ்டமான தவம்.

இதிலும் ஒரு விஷயம் கவனத்தில் கொள்ள வேண்டியது. பலர் காதல் தோல்வியினால் அல்லது மனைவியின் நிஷ்டூரத்தால் அல்லது இல்லறத்தில் ஏற்பட்ட சலிப்பினால் துறவறத்தை மேற்கொள்கின்றனர். ஆனால் பண்டிதர் வடிவேல் அப்படியில்லை. இறைப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதாலே துறவு மேற்கொண்டவர்.

சமூகப் பணிகள்

சமூகப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள், தனவந்தர்கள் பற்றி நாம் அறிவோம். பெரும்

பிரச்சாரத்துக்கு மத்தியில் இவை மேற்கொள்ளப்படும். பொதுக்கூட்டங்கள், பூமாலை, புகழ்மாலை, பத்திரிகை முதலியவற்றில் இவை பிரதிபலிக்கும். கோயிலுக்கு ஒரு திரைச் சீலையை அன்பளிப்புச் செய்தால்கூட "இன்னாருடைய ஞாபகமாக இன்னாரது உபயம்" என்று கொட்டை எழுத்துகள் அதில் பொறிக்கப்பட்டிருக்கும். இவ்வாறான செயல்களை சமூகப் பணி என்பதை விட பிரச்சாரப் பணி என்பதே பொருத்தமானது.

உண்மையில் சமூகப்பணி வலது கைகொடுப்பதை இடது கை அறியாமல் கொடுப்பதைப் போன்றது.

தனது வாழ்நாளையே சமூகத்துக்காக அர்ப்பணித்த ஒருவரிடம் சமூகப்பணி எது, தனது பணி எது, என்று பிரித்தறிய முடியுமா? இல்லை. அதுதான் பண்டிதர் வடிவேலுடைய வாழ்க்கை.

35 வருடம் அவர் மேற்கொண்ட ஆசிரியப் பணியே ஒரு சமூகப்பணி. அதில் கடமை நேரம் போக மீதி நேரம் எல்லாம் கோயில் அல்லது சத்சங்கம். ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிய பின், முழுநேரமும் சமூகப்பணி, ஊர்த்தொண்டு, கோயில் தொண்டு.

பகல் வேளைகளில் பயணங்கள், ஆய்வுகள், இரவு வேளைகளில் கோயிலில் சமயப் பிரசங்கம்; கதாப்பிரசங்கம், இத்தியாதி.

இலங்கையின் பல பாகங்களிலும் 40 வருடங்களுக்கு மேலாக சமயப் பிரசங்கம், இலக்கியப் பேச்சுகள், கதாகாலட்சேபம், புராண படலம், கோயில் நிகழ்ச்சிகள், கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் என்று பல்வேறு பணிகளை

மேற்கொண்டார். இவற்றுக்கு மத்தியில், வானொலிப் பேச்சுகள், கதாப்பிரசங்கங்கள், சைவ நற்சிந்தனை உரைகள், பத்திரிகைகளில் கட்டுரைகள் எனப் பல ஆக்க வேலைகளும் மேற்கொள்ளப் பட்டன. சமூகப் பணியை முழுநேரப் பணியாக - வாழ்க்கைப் பணியாகக் கொண்டவர்களுக்கு அல்லாது வேறு யாருக்கு இவற்றுக்கெல்லாம் நேரம் கிடைக்கும்.

ஆய்வு வேலைகள்

திருகோணமலை மாவட்டத்தின் பழைய வரலாறு. கோயில்களின் வரலாறு, இலக்கிய வரலாறு என்பவற்றின் மேல் பண்டிதருக்கு ஒரு பைத்தியம். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு இது தெரியும். அவர் வீட்டில் போய்ப் பார்த்தால், மேற்படி வரலாறுகள் தொடர்பான நறுக்குகள், கட்டுரைகள், நூல்கள் என்பன கட்டுக்கட்டாக இருப்பதைப் பார்க்கலாம். இவை தவிர பல்வேறு ஊர்களில் உள்ள நூற்றுக்கணக்கான பெரியார்களைப் பேட்டி கண்டு அவை பற்றிய குறிப்புகளைத் தனியாகத் தொகுத்து வைத்துள்ளார். புதிய இடங்களுக்குப் போனால் இதுதான் அவரது முதல் வேலை. இது பற்றிய சிற்சில குறிப்புகளை அவர் தொகுத்துள்ள பல்வேறு நூல்களின் முன்னுரைகளில் காணலாம்.

உண்மையான வரலாறு கிராமப் புறங்களில் உள்ள கிழவர்களின் வாய்க்குள்தான் இருக்கிறது என வேடிக்கையாகச் சொல்வார் பண்டிதர்.

"திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்" என்னும் பாரிய நூல் அப்போதைய இந்து சமய கலாசார தமிழ் மொழி அமுலாக்கல், பிரதேச அபிவிருத்தி அமைச்சின்

ஆரம்ப காலப் பணிகளுள் ஒன்று. அப்போது அமைச்சராக இருந்த திரு. செல்லையா இராசதுரை, இப்பணிக்காகப் பண்டிதரையே தேர்ந்தெடுத்தார். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்" என்பது குறள். இதற்கேற்ப பண்டிதரின் ஆற்றலையும், உழைப்பையும் நன்கு அறிந்திருந்த அமைச்சர் இவ்வேலையைப் பண்டிதரிடம் ஒப்படைத்தார். அவரும், தனது இயல்புக்கேற்ப கண்துஞ்சாது, பசி நோக்காது, கருமமே கண்ணாகி இப்பணியை விரைவாக முடித்துக் கொடுத்தார்.

ஏனைய மாவட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாறான நூல் வெளியீட்டுத் திட்டம் இருந்தது. அவை நிறைவேறவே இல்லை.

"மட்டக்களப்பு மாவட்ட சைவக் கோயில்கள்" என்னும் நூல் பல வருடங்கள் தாமதித்து வெளிவந்தது. இதிலிருந்து பண்டிதரைப் போன்று பிற மாவட்டங்களில் ஒருவர் அகப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். பின்னால் அதே அமைச்சின் பணிப்பின் பேரில் **"கோணமலை அந்தாதி"** (பதிப்பு) **"கோணேசர் கல்வெட்டு"** (பதிப்பு) நூல்கள் வெளிவந்தன.

பண்டிதரின் ஆய்வு வேலை பற்றி அவரது ஒவ்வொரு நூல் தொடர்பாகவும் விரிவாகக் கூற வேண்டும். ஆனால் இக்கட்டுரையில் அதற்கான வாய்ப்பு இல்லை.

திருகோணேஸ்வரம், தொன்மையும் வன்மையும்

பண்டிதர் வடிவேல் அவர்கள் திருகோணேஸ்வரத்துடன் இரண்டறக் கலந்து விட்டவர்

என முன்னர் குறிப்பிட்டோம். இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. அவரது பேச்சு மூச்சு எல்லாமே திருகோணேஸ்வரம்தான். அவருடன் எப்போது உரையாடினாலும் திருகோணேஸ்வரம் பற்றி ஒரு செய்தி இடம் பெறாமல் போகாது. பல வருடங்களாக திருகோணேஸ்வரம் தொடர்பான தகவல்களை அவர் சேகரித்து வந்தார். அதன் பயனாக வெளிவந்ததே அவருடைய அண்மைக்கால நூலான **"திருகோணேஸ்வரம் தொன்மையும் வன்மையும்"**

இந்நூலில் பண்டிதர் ஆய்வுமுறைக்கு அப்பாற் சென்று, உள்ளுணர்வால் உணர்ந்த பல விடயங்களை மனக்கண்ணில் கண்டு எழுதியுள்ளார். இத்தகைய உள்ளுணர்வு தெய்வ கடாட்சத்தால், தெய்வத் திருக்குறிப்பால் ஏற்பட்டிருப்பதை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். சுவாமி விபுலானந்தர் தனது யாழ் நூலில் இடம்பெறும் "ஆயிரம் நரம்பு யாழ்" பற்றிய தெளிவை அவ்வாறு அறிந்ததாகக் கூறியுள்ளார். சம்பந்தமூர்த்தி நாயனார், திருகோணேஸ்வரத்துக்கு வராமல், ராமேஸ்வரக் கரையில் இருந்தே "நிரைகழலரவம்..." என ஆரம்பிக்கும் திருகோணமலைப் பதிகத்தைப் பாடியதாகச் சொல்லப்படுகிறது. பல விஞ்ஞானிகள், தமது கண்டு பிடிப்புகளை உள்ளுணர்வில் உணர்ந்து செயற்பட்டதாக எழுதி வைத்திருக்கின்றனர். இவையெல்லாம் தெய்வத் திருக்குறிப்பால் ஏற்படுவது, பண்டிதர் அவர்களுக்கும் அவ்வாறே ஏற்பட்டுள்ளது.

எனவேதான் கலாநிதி செ. குணசிங்கத்தின் **"கோணேஸ்வரம்"** க. தங்கேஸ்வரியின் **"குளக்கோட்டன் தரிசனம்"** முதலிய நூல்களில் இடம்பெறாத சில

விடயங்கள் பண்டிதர் வடிவேல் அவர்களின் நூலில் இடம் பெறுகின்றன.

இந்நூலைப் படிக்கும் எவரும், நூலாசிரியர் திருகோணேஸ்வரத்துடன் இரண்டறக் கலந்து விட்ட தன்மையை நன்கு உணரலாம். இந்நூலுக்காக அவரது தேடல் முயற்சிகளின் தீவிரத்தை அறிந்து கொள்ளலாம். கண் துஞ்சாது, பசி நோக்காது அவர் மேற்கொண்ட உழைப்பைத் தெரிந்து கொள்ளலாம்.

செய்யுள் நூல்கள்

பண்டிதர் அவர்கள் இயற்றியுள்ள செய்யுள் நூல்கள் பற்றி முன்னர் குறிப்பிட்டோம் (ஆக்க இலக்கியம்) இந்த நூல்களில் இடம் பெறும் செய்யுள்கள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன.

இச் செய்யுள்களில் உள்ள யாப்பமைதி, பொருள், ஆழம், அணிச்சிறப்பு, ஓசைநயம், சந்தச் சிறப்பு முதலியவற்றை பட்டினத்தார், ராமலிங்க வள்ளலார் ஆகியோரது பாடல்களுடன் ஒப்பிட்டு விரிவாக எழுத வேண்டும். அவை ஒவ்வொன்றும் தனித்தனிக் கட்டுரைகளாக எழுதப்பட்டால்தான். அந்த அந்த நூல்களின் சிறப்புப் பற்றி ஓரளவாவது கோடி காட்ட முடியும்.

"அப்பரும், சுந்தரரும், ஆளுடைப்பிள்ளையும், அருணகிரி நாதரும், அருட்சோதி வள்ளலும் - எப்படிப் பாடினரோ? என்று கேட்டார் ஒரு கவிஞர். அதற்குரிய பதில் பாடியது அவர்களல்ல. இறைவனே தான் பாடினான் என்பதுதான்" அவர்கள் வாயசைக்க இறைவன் பாடிய

பின்னணிப் பாடல்கள்தான் அந்தத் தெய்வீகத் திருப்பாக்கள்.

ஆலயத்துக்குச் சென்றவுடனே அருவிபோல் பாடல்கள் கொட்டுவதென்றால் அது தெய்வத் திருக்கடாட்சம் அல்லாமல் மனிதப் பிரயத்தனம் என்று எவ்வாறு கூற முடியும்?

அதே பாணியில் தான் பண்டிதர் வடிவேல் அவர்களும் பாடியுள்ளார். இவர் தனது 85வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

- இரா. நாகலிங்கம்
(அன்புமணி)
ஆரையம்பதி

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிஉறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

- பாவேந்தர் பாரதிதாசன்

தமிழாராய்ச்சியிலும் நாட்டுப்புறக் கலைகளிலும்
நல்ல பணிகள் புரிந்த

சு. வித்தியானந்தன்

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்களை அறியாத தமிழ் மக்களே இருக்க முடியாது. தனது 65 வயதிற்குள் அவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் உயர்விற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணத்தில் வீமன்காமம் என்ற கிராமத்தில் 08.05.1924ம் ஆண்டு சுப்பிரமணியம் - முத்தம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை வீமன்காமம் தமிழ் பாடசாலையிலும், அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளை ஆங்கிலக் கல்லூரியிலும் (தற்போதைய யூனியன் கல்லூரி) யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று 1941ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் இணைந்தார்.

இவர் தனது பதினேழாவது வயதில் பல்கலைக்கழகக் கல்லூரியை ஆரம்பித்தன் மூலம் ஒரு சாதனையை ஏற்படுத்தினார். பல்கலைக்கழக கல்லூரியில் தமிழ்

ஆங்கிலம், இலத்தீன் ஆகிய பாடங்களைக் கற்று லண்டன் இடைநிலைத் தேர்வில் தேறியதுடன் உயர்தர பரீட்சையிலும் இந்த மூன்று பாடங்களிலும் தேர்ச்சி பெற்று மற்றுமொரு சாதனையை நிகழ்த்தியவர் வித்தியானந்தன். 1942ல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாக தேர்வு செய்து தனது இருபதாவது வயதில் (1944) சித்தி பெற்ற இவர் தொடர்ந்தும் அதே பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தை 1946ல் பெற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பதவியேற்ற அவர் கலாநிதிப் பட்டம் பெற லண்டன் சென்றார்.

வித்தியானந்தன் அவர்கள் நாற்பது ஆண்டு காலமாக ஆசிரியப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதலாவது துணை வேந்தராக நியமிக்கப்பட்டார். இவருக்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர்.

தமிழ்ப் பேராசிரியராக இருந்த காரணத்தால் தமிழ் மொழி இலக்கியம் பண்பாடு பாரம்பரியம் நாட்டுக்கூத்து என்பவற்றில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டதோடு தமிழ் ஆராய்ச்சியில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவராவர். இதனால் தான் 1974ல் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடாத்த அதி தீவிரமாக உழைத்தார்.

இவருடைய முதலாவது நூலாக 1953-ல் வெளியான **"இலக்கியத் தென்றல்"** வித்திக்கு பெரும்புகழைத் தேடிக் கொடுத்தது எனலாம். 1961ல் **"கலையும் பண்பும்"** எனும்

நூலை இவர் வெளியிட்டார். இவர் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு **"தமிழியற் சிந்தனைகள்"** என்ற தலைப்பில் நூலாக 1979ல் வெளியிடப் பட்டது.

இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசுகளை இவரது **"தமிழியற் சிந்தனைகள்"** என்ற நூலும் **"கலையும் பண்பும்"** என்ற நூலும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவர் 239 கட்டுரைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள் ஆகியவற்றில் தமிழில் எழுதியதுடன் 10 ஆங்கிலக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இதனைவிட இவருடைய முக்கிய நாட்டம் பாடல்கள் மீதே இருந்தது. இந் நாட்டம் காரணமாக மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், **மன்னார் நாட்டுப் பாடல்கள்** என பதிப்பித்து வெளியிட்டார்.

ஈழத் தமிழர் போராட்டத்தில், இவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 1961 சத்தியாக்கிரகத்தில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களைக் கலந்து கொள்ள வைத்ததுடன் ஊர்வலம் ஒன்றையும் நடாத்தினார். 1974ல் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் இடம் பெற்ற துன்பியல் சம்பவங்கள் அவரது மனதில் தமிழருக்காக போராடும் ஒரு உத்வேகத்தை மேலும் கொடுத்தது எனலாம்.

ஈழத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த நாட்டார் பாடல்களைத் தொகுப்பதிலே ஈடுபட்டவர், பாமர மக்களின் உணர்ச்சிக் கவி வளமுள்ள பாடல்கள் காலவெள்ளத்தால் அழியாமல் நிலைத்து நிற்பதற்காக மட்டக்களப்பிலும் மன்னாரிலும் நிலவி வரும் நாட்டார்

பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார். **மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்** என்னும் நூல் 1960லும், **மன்னார் நாட்டுப் பாடல்கள்** 1964லும் பதிப்பித்து வெளியிடப்பட்டன. ஈழத்து நாட்டுப் பாடல் ஆய்வுக்கு, இந்நூல்கள் ஆவணங்களாக அமைகின்றன.

தமிழாய்வில் உள்ள ஈடுபாடு, பேராசிரியரை உலகத் தமிழாராய்ச்சி மன்றத்துடன் இணைத்தது. கோலாலம்பூர், சென்னை, பாரீஸ், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் பேராசிரியர் பங்கு பற்றிக் கட்டுரைகள் படித்துள்ளார். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைக்கு இவர் தலைவராக இருந்த காலத்திலே, 1974ம் ஆண்டு பல்வேறு இடர்களுக்கு நடுவிலும் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடாத்தினார். 1976ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் இலங்கைக் கிளை பேராசிரியருடைய அறிவுறுத்தலின்படி, மட்டக்களப்பில் ஒரு மாவட்ட மாநாட்டை ஒழுங்கு செய்தது. மட்டக் களப்புப் பற்றிய எல்லாத் தரவுகளும் இம்மாநாட்டு முயற்சியினால் ஆவணப்படுத்தப் பட்டன. இதேபோன்று 1983ல் வன்னி மாவட்டத் தமிழாராய்ச்சி மாநாடு ஒன்றினை முல்லைத்தீவிலே பேராசிரியர் வித்தியானந்தன் சிறப்புற நடத்தினார். வன்னி மாவட்டம் தொடர்பாகப் பல ஆய்வுகள் இவ்வேளையிலே வெளிவந்தன. தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தியதனூடாகப் பேராசிரியர் வித்தியானந்தன் தமிழியலுக்கு அளப்பரிய பணி செய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக பேராசிரியர் 1978ம் ஆண்டு

பதவியேற்றார். ஒன்பது ஆண்டுகளாக துணைவேந்தராக இருந்தார்.

பல்கலைக் கழகத்திலே கல்வி பயிலும் மாணவர்களுள், வசதி குறைந்த மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்கு வேண்டிய பண வசதியினை ஏற்படுத்தி கல்வி பயிலும் வாய்ப்பினை ஏற்படுத்திய அவர், மாணவர்களது பிரச்சினைகளை, நெருக்கடிகளையெல்லாம் செவிமடுத்துக் கேட்டு அவற்றிற்கான பரிகாரத்தினை நல்கி வந்த மாமனிதன். தனக்கு தீமை செய்தவர்கள் கூட, பின் ஒரு கால் அவரிடம் உதவி கேட்டுச் சென்றால் பரிவுடன் உதவி செய்தவர். அவரது மனிதன நேயப் பண்புதான் அவரை மாமனிதன் ஆக்கியது,

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவராகவும், பெரும் பொருளாளராகவும் பணிபுரிந்து, சங்கத்தை வழிநடத்தினார். தமிழ்ச் சங்கத்தின் **இளங்கதிர்** வெளியீடு, நாடகப் போட்டிகள், விவாதப் போட்டிகள், விழாக்கள் நடத்துதல் போன்றவற்றிற்கு வித்தியின் வழிகாட்டலும் ஆலோசனையும் உறுதுணையாக அமைந்தன.

1979ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி பேராசிரியரின் வாழ்வில் ஒரு பெரும் இழப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைத்திய பீடம் அமைப்பது தொடர்பான உயர் மட்டக் கூட்டமொன்று பல்கலைக்கழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. பல கல்விமான்கள் அங்கு கூடியிருந்தார்கள். தென் இலங்கையிலிருந்தும், பல்கலைக்கழக மானியக்குழுவில் இருந்தும் பலர் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தனர். யாழ்

பல்கலைக் கழகத்தில் வைத்திய பீடம் அமைத்துக் கொள்வது தொடர்பான, சாதக பாதக நிலைமைகள் பற்றி அக்கூட்டத்தில் ஆராயப்பட்டுக் கொண்டிருந்த போது பல்கலைக்கழகத்தின் தலைவரும், அன்றைய கூட்டத்தின் தலைவரும் என்ற வகையில் பேராசிரியர், விடயங்களை நெறிப்படுத்திய வண்ணமிருந்தார்.

இதே நேரத்தில் தான் பேராசிரியரது துணைவியார் வீட்டில் கடும் உடல் நலக் குறைவுக்குள்ளாகின்றார்.

பேராசிரியர் நிலைமையை விளங்கி, உடன் துணைவியாரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்படியும், கூட்டம் முடிவுற்றதும் தான் அவ்விடம் வந்துவிடுவதாகவும் கூறுகின்றார். தான் இச்சந்தர்ப்பத்தில் இல்லாது விட்டால் நிலைமை மாற்றமடைந்து விடலாம், யாழ் பல்கலைக்கழகத்துக்கு கிடைக்கவிருக்கும் வைத்திய பீடம் கிடைக்காது போய்விடலாம்; இதனால் தான் சார்ந்த சமூகம் பெறவிருந்த நன்மை தவறிப்போய் விடலாம் அல்லது காலதாமதப்பட்டு விடலாம் என்ற ஆதங்கத்தால் அவ்விடத்தை விட்டுச் செல்ல பேராசிரியர் மனம் இடம் கொடுக்கவில்லை.

பேராசிரியரோ தான் கொண்ட குறிக்கோளில் கண்ணாயிருந்து கடமையாற்றுகின்றார். இறுதியில் மனைவியின் உயிரற்ற உடலையே கண்டார் என்றால் தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவையில் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டவராக இருந்தார் என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

பேராசிரியர் வித்தியானந்தனுக்கு முன்னரும் பிற்பட்ட காலத்திலும் எத்தனையோ பேராசிரியர்கள்

எம்மிடையே உருவாகியுள்ள போதிலும், இன்று வரை சகல மட்டத்துத் தமிழ் மக்களாலும் பேராசிரியர் போற்றப்படுவதற்குக் காரணம் அவர் வெறுங் கருத்தளவில் மட்டும் நின்று விடாது, களத்திலும் இறங்கிச் செயலாற்றியமையேயாகும்.

ஈழத்தின் தமிழ் இலக்கிய மரபு தனித்தன்மை கொண்டதாக விளங்க வேண்டுமென்பதில் பேராசிரியர் அதிக அக்கறை கொண்டிருந்தார். 1974ல் யாழ்ப்பாணத்தில் அவர் தலைமையில் நடந்த மகாநாட்டில் அன்னாரது பங்களிப்பானது ஈழத்தமிழ்த் தேசிய இலக்கியம் பற்றிய சிந்தனைகளையும் தமிழினத்தின் மீது கொண்டிருந்த பற்றினையும் எடுத்தியம்புவதாக அமைந்ததெனலாம்.

இன்று பேராசிரியரின் மாணவர்கள் பலர் பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாக விளங்குகின்றனர். ஆயினும், பேராசிரியரின் இடம் வெறுமையாகவே உள்ளது. அவரது பணிகளும், நினைவுகளும் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளவரை நினைவு கூறப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

விண்ணிடை இரதம் ஊர்ந்து
மேதினி கலக்கு தற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப்
பாரினை மயக்கு தற்கும்
மண்ணிடை வாளை யேந்திப்
பகைப்புலம் மாய்ப்ப தற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும்நிலை காண்ப தென்றோ?

- பாவேந்தர் பாரதிதாசன்

'செத்துவிடு சமுதாயம் சீரழிந்தால்'
எனக் கூவிய ஆன்மிகக் கவிஞர்

மௌலவி தாசீன்

கொளுத்திவிடு சத்தியத்தீ
கொளுந்து விட்டுளரியட்டும்
அழுத்திச் சொல் அல்லாஹ்வே
அவனன்றி எவர்க்குமஞ்சோம்
பழுத்தகலை ஞானங்கள்
பண்பு நிறை ஒழுக்கங்கள்
உளத்தில் தூய ஈமான்
உள்ளவரை அச்சமேனோ?

- எனப் புரட்சிக்கீதம் இயற்றி சமுதாய வாலிபர்களை நோக்கி, "**செத்துவிடு சமுதாயம் சீரழிந்தால்**" எனக் கட்டளையிட்டு "**சாவின்றி வாழ்வேது**" எனத் தத்துவம் பேசிய "**கம்மல்துறை மறைதாசன்**" மறைந்து ஆண்டு பல ஆயினும் மாறாது உள்ளங்களில் வாழும் **மௌலவிதாசீனின்** வாழ்க்கையைச் சற்றுப் பார்ப்போம்.

கடற்கரையோரக் கம்மல்துறைக் கிராமத்திலே 1932-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் திகதி

உதுமலமரிக்காரின் மகனாக முகம்மது தாசீன் பிறந்தார். ஐந்தாம் வகுப்பு வரை கல்வியைக் கிராமப் பாடசாலையில் கற்றுவிட்டு மார்க்கக் கல்வியைப் பெற மகரகமக் கபூரியாவில் சேர்க்கப்பட்டார். மதிப்பிற்குரிய உமர் ஹசரத் அவர்களின் அன்பிற்குரிய மாணவனாக மாறிய தாசீன் தம் ஆசிரியரிடம் மார்க்கக் கல்வி, அறபு மொழி ஆகியவற்றுடன் தமிழ் இலக்கணத்தையும் பயின்றார். இளமையிலே கவிபாடும் ஆற்றல் கை வந்தது. கபூரியாவில் இருந்து விலகி கல்ஹின்னை மதரசாவில் சில காலம் கற்றுவிட்டு காலி பஹ்ஜதுல் இப்றாஹிமியாவில் சேர்ந்து கற்று மௌலவியாக வெளியேறினார்.

அறிவுத் தாகத்தை நிவர்த்தி செய்ய 1954-ஆம் ஆண்டு லக்னோவின் நத்வதுல் உலமாவின் மாணவராகச் சேர்ந்தார்.

"பரந்த இஸ்லாமிய ஞானத்தைப் பறித்தெடுக்கும் பழத்தோட்டம்" என நத்வாவைப் பற்றிக் குறிப்பிட்ட மௌலவிதாசீன் அங்கு மார்க்கக் கல்வியை மேலும் ஆழமாகக் கற்றார். உர்து மொழியில் பாண்டித்தியம் பெற்றவராகவும் மாறினார். மௌலவி தாசீனின் திறமைகள் அதிபர் மௌலானா அபுல்ஹசன் அலி நத்வீயின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. தமது அன்புக்கும் நேசத்துக்கும் உரியவராக அவரை ஏற்றுக்கொண்டார். இப்பாசமும், நேசமும் தாசீம் மௌலவியின் இறுதிக்காலம் வரை நீடித்தது. உலகை விட்டுப் பிரிய சில தினங்களுக்கு முன்புகூட மௌலவி தாசீன் லக்னோ சென்று தனது ஆசானுடன் சில நாட்களைக் கழித்தார்.

லக்னோவில் மௌலவி பாஸில் பட்டத்தைப் பெற்றுத் திரும்பிய தாசீன் அவர்கள் ஹ்மீத் அல்ஹுசைனியில்

ஆசிரியராகச் சேர்ந்தார். மாணவர்கட்கு அறபு மொழியையும், மார்க்கக் கல்வியையும் மாத்திரமின்றி ஓய்வு நேரங்களில் ஆங்கிலத்தையும் கற்பித்தார். விசேடமாக தோமஸ் ஹாடியின் நூல்களை அவர் சுவைபடக் கற்பித்ததை மாணவர்கள் இன்றும் நினைவு கூர்கின்றனர். அவர் தங்கியிருந்த அரை உயர்வகுப்பு மாணவர்களாலும், அக்காலத்தில் பல்கலைக் கழகங்களில் பட்டப் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்வோர்களாலும் எந்நேரமும் நிரம்பிக் காணப்பட்டது.

அறிவைத் தேடிவரும் அனைவருக்கும் அதனை அள்ளி வழங்கும் வள்ளலாகவே தாசீன் மௌலவி காணப்பட்டார். ஓய்வென்றால் என்ன என்பதனையே **உணர**ாதவராகவே அவர் வாழ்ந்தார். எந்நேரமும் **வாசிப்ப**தை மறக்காத அவரது சொந்த நூலகத்தில் ஆங்கிலம், தமிழ், உருது, அறபு நூற்கள் ஆயிரக்கணக்காகக் கிடந்தன. இவற்றால் பலனடைந்தோர் ஏராளம்.

சமூகச் சீர்திருத்தம் என்பதே அவரின் வாழ்க்கையின் இலட்சியமாக இருந்தது. இதனை அடைவதற்கு தமது திறமைகள் அனைத்தையும் தயங்காது உபயோகித்தார். அவரது கவிதைகளை தமிழகத்திலும், இலங்கையிலும் வெளியாகிய சஞ்சிகைகள் பெருமையுடன் வெளியிட்டன.

"அல்-இல்ம்", "ஷாஜஹான்", "உண்மை உதயம்" போன்றவை அவரது கருத்துக்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. இஸ்லாமிய வரம்பு மீறாத மௌலவி தாசீனால் எழுதப்பட்ட சிறு**கதை**கள் 1952 முதற்கொண்டே தினகரனிலும், அதனைத் தொடர்ந்து சிந்**தாமணி**யிலும் வெளியாகின.

அவரது மேடைப் பேச்சுக்களைக் கேட்க மக்கள் ஆயிரக்கணக்கில் கூடத் தொடங்கினர். மௌலவி தாசீன் உரையாற்றாத மீலாத் மேடைகள் மிகவும் அரிதாகவே காணப்பட்டன.

அவரது உரைகளில் அடிக்கடி அல்லாமா இக்பாலின் கவிதைகளில் இருந்து மேற்கோள் காட்டுவார். அல்லாமா இக்பாலின் ஆளுமைக்குட்பட்டிருந்த மௌலவி அவர்கள் 'ஜவாபே ஷிக்வா' முறையீடும், பதிலும் என்ற கவிதையின் அர்த்தத்தில் மயங்கிடவே, அதே பாணியில் ஒரு முஸ்லிம் "தனது இழிநிலை கண்டு முறையிடும்" குர்ஆனே கூறாயோ எனத் தொன்னூற்றொன்பது விருத்தப்பாக்களில் பாடி முடித்தார்.

எனினும், அதன் பதிற் கவிதைகளை பாடத்தான் காலம் அவருக்கு இடம் கொடுக்கவில்லை.

இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி அவரது திறமைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டது. கவிதைகள் இசைச் சித்திரமாக ஒலி பரப்பப்பட்டன. ஓராண்டுக்கு மேலாக ஒலிபரப்பப்பட்ட "தித்திக்கும் திருமறை கதை கேளீர்" என்ற உரைத்தொடர் அனைவராலும் பாராட்டப்பட்டதாகும். இக்காலத்தில் மௌலானா வஹீதுத்தீன் கான் அவர்களால் எழுதப்பட்ட உர்து நூலை "நவயுகத்தின் வாசலிலே" என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்தார். மௌலானா அபுல் அஃலா மௌதூதி அவர்களது "காதியானிப் பிரச்சினை" என்ற நூலையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

இஸ்லாமிய மொழிக் கொள்கை தொடர்பாக மௌலவி தாசீன் அவர்கள் 1967ல் ஆற்றிய உரை

இஸ்லாத்தின் மொழிக்கொள்கை என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. இந்நூல் அறிஞர் அசீஸ் அவர்கட்கும், மௌலவி தாசீன் அவர்கட்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது.

அறிஞர் அசீஸின் நூலக அறையில் தாசீன் மௌலவி அவர்களும், அறிஞர் அசீஸும் மணிக்கணக்காக சமுதாயப் பிரச்சினைகளையும், மார்க்கப் பிரச்சினைகளையும் பற்றி அலசி ஆராய்ந்தனர்.

மௌலவி தாசீன் அவர்களது தொடர்பை பற்றி அறிஞர் அசீஸ், "அவரது நுண்அறிவும், சமுதாயத்தில் அவருக்கிருந்த பற்றுதலையும் நான் அறிந்தேன். அவரது நட்பு அல்லாஹ்வால் எனக்கருளப்பட்ட வரப்பிரசாதம் என்றே நான் கருதுகிறேன்" எனக் குறிப்பிட்டார்.

இரண்டு அறிஞர்களினதும் தொடர்பு இறுதிக்காலம் வரை நீடித்திருந்தது. இக்காலத்தில் இலங்கை ஜமாத்தே இஸ்லாமியின் தலைவராகவும் சில காலம் அன்னார் கடமையாற்றினார். இலங்கை வாழைச்சேனை முஸ்லிம் நிகழ்ச்சியில் "அல்-குர்ஆன் வகுப்பு" முதன் முதல் அன்னாராலேயே ஆரம்பிக்கப்பட்டது. மறைந்த எகிப்து ஜனாதிபதியின் மரணச் சடங்கு அஞ்சலை சுமார் 12 மணி நேரம் அறபியிலிருந்து தமிழாக்கித் தந்தது இன்றும் ஓர் வரலாறாகவே கணிக்கப்படுகிறது.

அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேருக்குப் புலமைப் பரிசில் கிடைத்தது. இவர்களுள் ஒருவரான தாசீன் மௌலவி அவர்கள் அல்-அஸ்ஹரின் எம்.ஏ. வகுப்பில் நேரடியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அல-அஸ்ஹரின் வரலாற்றில்

இலங்கையைச் சேர்ந்த ஒரு மாணவர் நேரடியாக எம்.ஏ. வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது அதுவே முதல் தடவையாகும். திறமையுடன் எம்.ஏ. பரீட்சையை அங்கு முடித்த முதலாவது இலங்கை மாணவன் மௌலவி தாசீன் என்பதும் எமக்குப் பெருமை அளிப்பதாகும்.

அவரது அறபு மொழிப் புலமையினாலும், ஆழ்ந்த அறிவினாலும் கவரப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் தமது தலைவராக அன்னாரைத் தெரிவு செய்து கொண்டனர். அல்-அஸ்ஹரில் கற்ற காலத்தில் நூல் நிலையங்களே அவரது வாசஸ்தலங்களாய் இருந்தன என்று கூறலாம். அறிவுத் தாகத்தினால் அலைந்து திரிந்த மௌலவி தாசீன் அல்-அஸ்ஹரின் ஷெய்குல் அஸ்ஹர் கலாநிதி அப்துல் ஹலீம் மஹ்மூத், டாக்டர் எம்.எல். பத்ரான் புரபஸர் முகம்மத் அல் கஸ்ஸாலீ, டாக்டர் அப்துல் வஹித் வாபி ஆகியோருடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். பாரசீக மொழியிலும் வல்லவராக மௌலவி தாசீம் தம்மை இங்கு மாற்றிக் கொண்டார்.

எகிப்தில் வாழ்ந்த காலத்தில் இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தினரின் செயற்பாடுகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. அதன் முக்கிய தலைவர்களுடன் அவருக்குப் பரிச்சய மேற்பட்டது. சதிக்குற்றஞ் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஷஹீத் செய்யித் குதுப் அவர்களைச் சந்திக்க அவரது குடும்பத்தினருக்கே அனுமதி மறுக்கப்பட்டிருந்த காலத்தில் தமது சாதுரியத்தினாலும், செல்வாக்கினாலும் சிறைக் கூடம் சென்று செய்யித் குதுப் அவர்களைத் தாசீம் மௌலவி சந்தித்தார்.

ஏழு நிமிடங்கள் மாத்திரமே நிகழ்ந்த அச்சந்திப்பு ஏழு யுகங்களாக இருந்தன என மௌலவி தாசீம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அறிஞர் டாக்டர் தாஹா ஹுசைன், கவிஞர் அஹ்மத் சௌக்கி, கவிஞர் ஆசிப் ஆகியோரின் கருத்துக்கள் அறிஞர் தாசீன் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

இலங்கைக்குத் திரும்பிய மௌலவி தாசீன் அவர்கள் மீண்டும் ஹமீத்-அல்-ஹுசைனியில் ஆசிரியராக சேர்ந்தார். பாடசாலை நேரம் போக ஏனைய நேரமனைத்தையும் திரும்பவும் சமூகப் பணியில் ஈடுபடுத்தத் தொடங்கினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார்.

இக்காலத்தில் மார்க்கக் கல்வியையும், நவீன கல்வியையும் இணைத்து வழங்கும் ஓர் ஸ்தாபனத்தை அமைக்க மதிப்பிற்குரிய நளீம் ஹாஜியார் அவர்கள் முன் வந்தார்கள். இது தொடர்பான ஆரம்ப வேலைகளில் அறிஞர் அசீஸ், ஓய்வு பெற்ற நீதிபதி எம்.ஐ.எம். அமீன், மதிப்பிற்குரிய மசூத் ஆலிம் சாகிப், கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி ஆகியோருட்பட இன்னும் பல கல்விமான்களுடன் மௌலவி தாசீம் அவர்களும் ஈடுபட்டார்கள்.

1973-ம் ஆண்டு ஜாமிஆ நளீமியா ஆரம்பிக்கப்பட்ட போது அதன் அதிபர் பதவியை ஏற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்பதில் ஆரம்பத்தில் அன்னார் தயக்கங் காட்டினார். ஆயினும் தனது சிந்தனைகட்கும், சமூக சீர்திருத்தப் பணிகட்கும் உகந்த இடமாக ஜாமிஆநளீமியா அமைய இருப்பதால் பல்வேறு வசதிகளையுடைய அரசாங்கப் பதவியைத் துறந்துவிட்டு ஜாமிஆவின் அதிபராகப் பதவி ஏற்றார்கள்.

அவரது பரந்த அறிவும் ஆளுமையும், நுணுக்கமான பார்வையும், ஜாமிஆவின் இளவல்களைக் கவர்ந்தது. முன்னுதாரணமற்ற ஓர் ஸ்தாபனத்தைக் கட்டி வளர்ப்பதில் அவர் பெரும் பாடுபட வேண்டி இருந்தது.

சுருக்கமாகச் சொன்னால் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஜாமிஆவின் வளர்ச்சிக்காகவே அவர் பயன்படுத்தத் தொடங்கினார். பலனைக் காணும் முன்னர் அன்னார் உலகை விட்டுப் பிரிந்தாலும் அன்னாரின் ஆசானாகிய மௌலானா அபுல்ஹசன் அலி அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஜாமிஆவின் முதலாவது முதலாவது பட்டமளிப்பு விழாவில் ஜாமிஆவின் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள் மௌலவியின் திறமைகளைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்.

> "இலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் சிறந்த இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவராகவும், சிந்தனையாளராகவும் விளங்கிய, ஜாமிஆவின் ஆரம்ப முயற்சியிலேயே தீவிரமாகப் பங்கு கொண்டு உழைத்து அதன் முதல் அதிபராகக் கடமை புரிந்த மௌலவி யூ.எம். தாசீன் நத்வி அவர்களை நாம் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம். பல சிரமங்கள் பிரச்சினைகளுக்கு மத்தியில் அதனை வளர்த்த பெருமை அவர்களையே சாருகின்றது."

45 வயதை அடையும் பொழுதே அதிபர் விரிவுரையாளர், நாவலர் கவிஞர், பன்மொழிப்புலவர், எழுத்தாளர் எனப் புகழையும் பாராட்டையும் பெற்ற

மௌலவி அவர்களை அல்லாஹ் தன்னிடம் அழைத்தான். "யா அல்லாஹ் பரந்த அறிவை எனக்குத் தந்தாய்; கற்றுக்கொண்ட அளவு என்னால் சேவை செய்ய முடியவில்லையே. அதற்கு முன்பே என்னை அழைக்கிறாயே" என அல்லாஹ்வின் நாமத்தை உச்சரித்தவராய் 1977ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை அறிஞர் தாசீன் இறையடி சேர்ந்தார்.

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

- அ.லெ.மு. ராசீக்
பந்தாவ, பொல்கஹவெலை.
நன்றி: 'இதயத்தில் வாழ்வோர்'

நலம் தரும் ஞானமெல்லாம் நிறைந்து
நற்புகழ் பெறும் தமிழ் மொழியே
நானிலம் முழுவதையும் நயந்திணைக்கும்
நட்பொளிர் மொழியே
யாதுமூர் யாவரும் கேளிர் என்னும்
பண்பாடுறை மொழியே
பேதமெல்லாம் ஒழித்தே பெருமைதரும்
சமத்துவ மொழியே!

- கல்ஹின்னை கவிஞர் எம்.ஸி.எம். சுபைர்

'மலையகத்தின் தமிழகம்' தந்த

கவிஞர் எம்.ஸி.எம். சுபைர்

அழிந்து போகும் பொருட்செல்வத்தைவிட கல்விச் செல்வத்தைத் தமதாக்கி வாழும் '**மலையகத்தின் தமிழகம்**' என்று இலக்கிய மேதைகளால் வர்ணிக்கப்படும் **கல்ஹின்னை** கிராமத்தில் **பெரியவர்** என்று ஊர் மக்களால் அழைக்கப்பட்ட **காஸிம் ஹாஜியார்** தம்பதியின் இரண்டாவது மகனாக **முஹம்மது சுபைர்** *1933.08.27*ல் பிறந்தார். இன்று கல்ஹின்னை அல்மனார் தேசியப்பாடசாலை என்று அழைக்கப்படும் பாடசாலையிலேயே திரு **எஸ். நல்லையா** அதிபராக இருந்த காலத்தில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். விளையும் பயிர் முளையில் தெரியும் என்பதற்கிணங்க தனது சிறு வயது முதலே அறிவிற்சிறந்து விளங்கியதோடு, செந்தமிழ்க் கவிகளையும், சிறுவர் கவிகளையும், நாட்டுப் பாடல்களையும், இயற்றுவதில் சிறப்புப் பெற்றிருந்தார். கற்கும் காலத்தில் அதிபர் எஸ். நல்லையா அவர்களும், தமிழ் கற்பித்த **பண்டிதர் குமரேசையா** அவர்களும் முஹம்மது, சுபைர் அவர்களின் ஆற்றலையும், ஆர்வத்தையும் முறையாக நெறிப்படுத்தியமையே இதற்கான முக்கிய காரணமாகும்.

பட்டங்களையும், பதவிகளையும் தம் பெயருக்கு முன்னே தாங்களாகவே போட்டுக் கொள்கின்ற ஒரு காலகட்டத்தில் கவிஞர் எம்.ஸி.எம். சுபைர் என்ற பெயராலேயே ஊராரினாலும் மற்றவர்களாலுமே அவர் அழைக்கப்பட்டமை கவித்துறையில் அவர் மேல் மற்றையோர் கொண்ட கரிசனையையும் ஆதிக்கத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. 'கவிஞர்' என்றால் அது எம்.ஸி.எம். சுபைர்தான் என்பது கிராமத்தவர்களின் ஆணித்தரமான நினைப்பாக இருந்தது.

1950ல் சிரேஸ்ட் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்து, 1952ல் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி சென்று அங்கு இரு வருடங்கள் பயின்று, தனது 17வது வயதில் இஸ்லாமிய இலக்கியத்தைக் கருப்பொருளாகக் கொண்டு தான் இயற்றி வைத்திருந்த **'மலர்ந்த வாழ்வு'** என்ற ஆக்கத்தை தனது இரண்டாவது வருட முடிவில் சுய ஆக்க சமர்ப்பணமாக சமர்ப்பித்தார். இம்மதிப்பீட்டுக்குப் பொறுப்பாயிருந்த உப அதிபர் திரு. **சம்பந்தன் எம்.ஏ.** அவர்கள் இக்கவிதைத் தொகுப்பு அச்சிட்டு வெளியிடப்பட்டால், மிகவும் பயனுள்ளதாயிருக்கும் என்று கூறி வைத்திருந்தார்.

அவர் தம் கவிதைகளிலுள்ள ஆற்றொழுக்கும் மொழிப் பற்றும் சிந்தனை முயற்சியும் 276ஆம் பக்கத்திலுள்ள அவரின் கவிதையை படிக்கும் போது நன்கு புலனாகும்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியாக கவிஞர் 1954ல் முதன் முதலாக பண்டாரவளை சாஹிரா வித்தியாலாயத்திலேயே ஆசிரியராகப் பதவி ஏற்றார். தனக்குத் தமிழ் கற்றுத் தந்த தனது மதிப்பிற்குரிய

ஆசான்களின் கோரிக்கையை மனதிற் கொண்டிருந்த கவிஞர், இங்கு பணிபுரியும் போதுதான் அதாவது 1956ல் தனது 23வது வயதில் 'மலர்ந்த வாழ்'வை அச்சிட்டு வெளியிட்டார்.

தமிழ்ப் பற்றும் தமிழ்மேல் அவருக்கிருந்த வாஞ்சையும் கவிஞர் சுபைர் அவர்களின் கவிதைகளில் செறிந்துள்ளதாக நூலின் அணிந்துரையில் பேராசிரியர் திரு. கணபதிப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார். அதே வேளை இந்நூல் பாடசாலைகளின் உப-பாடப் புத்தகமாக கல்வித் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டமையானது இதன் தரத்தைக் காட்டுகின்றது.

தனக்குள்ளிருந்த கவித்துவத்தினதும், ஆற்றலினதும் தாக்கத்தைக் கொண்டு இளம் சந்ததியினரை கவியாக்கத்திலும், எழுத்துத் துறையிலும் ஈடுபடுத்த வேண்டும் என்ற நப்பாசையின் காரணமாக 1960ல் **மணிக்குரல்** என்ற பெயரில் மாதாந்த சஞ்சிகை ஒன்றைத் தொடங்கினார். இளைய சமுதாயத்துக்கென்று ஒரு தமிழ்ச் சஞ்சிகை உருவாக்கப்பட வேண்டும் என்ற துணிவு யாழ்ப்பாணத்திலோ, மட்டக்களப்பிலோ, கொழும்பிலோ வாழ்ந்த ஒரு தமிழ்மகனுக்கு ஏற்படாத காலகட்டத்தில், கனிசமான சிங்களமொழி பேசுவோர் வாழ்கின்ற மலையகத்தின் பண்டாரவளையில் ஒரு பள்ளி அசிரியராக இருந்து கொண்டு நான்கு வருடகாலமாக **'மணிக்குரல்'** என்ற பெயரில் ஒரு பத்திரிகையை வெற்றிகரமாக நடாத்தியமை ஒன்றே போதுமானது அவருக்கு இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சாஸ்வதமான ஓர் இடத்தைப் பிடித்துக் கொடுக்க.

'மணிக்குரல்' களம் அமைத்துக் கொடுத்து, உருவாக்கிய எழுத்தாளர்களும், இலக்கியவாதிகளும் கல்விமான்களும் இன்றும் தமது எழுத்துகளால் மக்களைத் தட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

தவிர, 18 வருட காலமாக இலக்கியத்தைத் துறந்திருந்த ஒரு பெருங்கவியை - **கவிஞர் அப்துல் காதர் லெப்பை** அவர்களை (இவர் பற்றிய கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது - தொகுப்பாசிரியர்) மீண்டும் கவித்துறைக்குத் தொண்டாற்றத் தூண்டிய பெருமையும் கவிஞர் சுபைர் அவர்களின் மணிக்குரலையே சாரும்.

வானொலிக் கலைஞர்

வானொலியில் வாய்ப்புக் கிடைப்பதென்பது அரிதாகவிருந்த ஒரு காலகட்டத்தில், வானொலி வாய்ப்பைப் பற்றியே அவர் சிந்திக்காத ஒரு நேரத்தில், திடீரென அந்த வாய்ப்பு அவரைத் தேடி பண்டாரவளை வரை சென்றதென்றால் அவரின் திறமையை என்னென்பது? அந்த வாய்ப்பின் மூலம் 1954ம் ஆண்டு ஜூன் 30ம் திகதி அவரால் நிகழ்த்தப்பட்ட கன்னி உரையானது, பின்னர் **சுதந்திரன்** என்ற பத்திரிகையில் கட்டுரையாக வெளிவந்து, கலைவாணிப் பதிப்பகத்தாரின் 6ம் வகுப்புப் பாடநூலான **உமாவாசகத்தில்** ஒரு பாடமாகக் கூடச் சேர்க்கப்பட்டது. அவரது உரையின் தரமும் அதில் வெளிவந்துள்ள கருத்துச் செறிவும் இதிலிருந்து புலனாகின்றது. 23 வயதைக் கூட எட்டியிராத காலகட்டத்தில் அவர் எழுதிய கட்டுரையானது இவ்வளவு தரமுள்ளதாக இருந்தால், அறிவும் அனுபவமும் பெற்ற பின்னர் அவரால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் எவ்வளவு உயர்வானவையாக விளங்கியிருக்கும் என்று மதிப்பிற்குரிய ஆய்வாளர் ஆசிரியர்

ஏ.ஏ.எம். புவாஜி அவர்கள் கவிஞர் பற்றிய தனது நூலில் கேள்வி எழுப்பியுள்ளார்.

1954ல் இலங்கை வானொலியில் அறிமுகமான பின்னர் வானொலிக்கென கவிதைகளையும் கவிதை நாடகங்களையும், வரலாற்று நாடகங்களையும் எழுதியதோடல்லாமல், காலத்தின் தேவைக்கேற்ப சொற்பொழிவுகளையும் இலங்கை வானொலியில் நிகழ்த்தியுள்ளார்.

இலங்கை வானொலியின் **வளரும் பயிர்** நிகழ்ச்சிக்கு கவிதா நாடகங்களையும், சரித்திர நாடகங்களையும் எழுதியுள்ள அவர், 1961ல் இலங்கைப் பாடசாலைகளிலே இஸ்லாமிய இலக்கியம் அறிமுகப்படுத்தப்பட்ட போது, **சீறாப்புராணம், முஹியத்தீன் புராணம், புதுகுஷ்ஷாம், இராஜநாயகம்** போன்ற நூல்கள் பற்றியும், அவற்றை இயற்றிய புலவர்கள் பற்றியும் ஆற்றிய வானொலிப் பேச்சுகள் இஸ்லாமிய இலக்கியம் பற்றி அறிந்து கொள்ளத் துடித்த மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரும் துணையாக இருந்தது. இலங்கை வானொலியின் அவரால், பிரதியமைக்கப்பட்ட 1973ல் **குறிஞ்சித் தேன்மலர்** என்ற நிகழ்ச்சியின் மூலமும் 1974 முதல் ஒலி பரப்பான **மருதமலர்** நிகழ்ச்சியின் மூலமும் பின்னர் **இலக்கிய மஞ்சரி** எனும் நிகழ்ச்சியின் மூலமும் வானொலி நேயர்கள் பெற்ற பயனோ அளப்பரியன. தவிர, இஸ்லாமிய கீதங்கள் பலவற்றை எழுதியும் நாற்பது வருட காலமாக இலங்கை, வானொலிக்குத் தன் பங்களிப்பைச் செய்துள்ளார். **இன்றும் கூட மலையகத்தின் சில பாடசாலைகளில் கவிஞர் சுபைர் அவர்கள் இயற்றிய கீதங்களே பாடசாலைக் கீதங்களாக இசைக்கப்படுகின்றன.**

குழந்தைக் கவிஞர்

சிறுவர் உணர்வுகளை அறிந்தவராகவும் மொழி வளம் உள்ளவராகவும், சிறுவர் உபயோகிக்கும் சொற்ப சொற்களை வைத்தே கவிதைகளை இயற்றக் கூடியவராகவும் இருக்க வேண்டியது ஒரு குழந்தைக் கவிஞருக்கான இலட்சணமென்றால், அவை அனைத்தும் **கவிஞர்** சுபைர் அவர்களிடம் அமைந்திருந்தன என்றே கூற வேண்டும். இந்தியக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியாப்பாவுக்குச் சமனாக இலங்கையில் கவிஞர் சுபைர் ஒப்பிடப்படுகின்றார். அவர் சிறுவர்களுக்காக எழுதிய **மலரும் மனமும், எங்கள் தாய்நாடு** போன்ற கவிதைத் தொகுப்புகள் இதனைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. அதுவுமல்லாது காலத்துக்குக் காலம் குழந்தைக் கவிதைகளை பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார். 1977ல் **அழ. வள்ளியப்பாவின்** பாடல் தொகுப்பில் கவிஞர் சுபைர் அவர்களின் பாடலும் **இடம்** பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டுப் பாடல்கள்

நாட்டுப்பாடல்களின் தாயகம் என்று கருதப்பட்ட கிழக்கிலங்கையுடன் கவிஞர் சுபைர் அவர்களுக்கு மிகக் குறுகிய தொடர்பே இருந்தபோதிலும், அக்கால கட்டத்தில் வெளியான நாட்டுப் பாடல்களில் அவர் தம் உள்ளம் மயங்கி, தனது கற்பனை வளத்தைக் கொண்டு சொற்சித்திரங்கள் பலவற்றைத் தீட்டினார். அவை இலங்கைப் பத்திரிகைகளில் மட்டுமல்லாது, தென்னிந்திய, மலேசிய சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. பின்னர்,

அவற்றை ஒன்று சேர்த்து **கண்ணான மச்சி** என்ற பெயரில் 1969ல் நூலுருப்படுத்தினார். கள்ளமில்லா மக்களின் உள்ளத்து ஆசைகள், உணர்வுகள், ஊடல்கள் இக்கிராமியக் கவிதைகளின் தொகுப்பிலே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

கட்டுரைகள் மூலம் இலட்சிய வேட்கை

கவிஞர் சுபைர் அவர்கள் வெறுமனே நுனிப்புல் மேயும் எழுத்தாளராக இருக்கவில்லை. இலட்சிய வேட்கை கொண்டவராகவே சமூகம் அவரை மதித்தது. அதற்குக் காரணம் வெறுமனே கவிதைகளை மாத்திரம் எழுதுவதில் நின்றுவிடாது, காலத்தின் தேவைக்கேற்ப கட்டுரைகளையும் அவர் எழுதிக் கொண்டிருந்தமையே.

தமிழ் இலக்கியத்தின் மாண்பிலும், மாட்சியிலும், தன்னைப் பறிகொடுத்த கவிஞர் அவர்கள் தான் தமிழ் இலக்கியத்தில் கண்டெடுத்தவற்றை வாசகர்களோடு பகிர்ந்த கொள்ள வேண்டி இஸ்லாமியத் தமிழ் புலவர்களையும் அவர் தம் கவிதைகளையும் தனது கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தினார். ஒரு நல்ல கட்டுரையாளனுக்குரிய சகல தகைமைகளும் கவிஞரிடம் இருந்தமையால், அவரது கட்டுரைகள் அக்காலத்தில் பெரும் வரவேற்புப் பெற்றன.

தனது கட்டுரைகளினால் அவர் சாதித்தவை பல. இஸ்லாமிய இலக்கியத்தையும், இஸ்லாமியப் புலவர்கள் பற்றிய விபரங்களையும் அக்காலப் பாடநூற்களில் சேர்க்கப்பட, இவரது கட்டுரைகளின் உந்துதலும் முக்கிய காரணமாக இருந்தன.

உமறுப் புலவர், சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், அப்துல் காதர் நெய்னா லெப்பை ஆலிம் ஆகியோர் பற்றியும், அவர்களின் பாக்கள் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மகாகவி இக்பால் பற்றியும் அவர்தம் ஆக்கங்கள் பற்றியும் தனது கட்டுரைகள் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

வாசகர் பாராட்டுகளினால் தூண்டப்பட்ட கவிஞர் சுபைர் அவர்கள், தனது வானொலி உரைகள், பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த தனது கட்டுரைகளைத் தொகுத்து 1989ல் **இலக்கிய மலர்கள்** என்ற நூலை வெளியிட்டார். இதன் உள்ளடக்கமானது இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களையும், புலவர்களையும் அறிமுகப்படுத்துவதாக அமைந்தமையால், அவற்றைத் தேடிப் படிக்கும் ஆர்வத்தை மக்களுக்கு ஊட்டின.

உரையாசிரியர்

இலங்கையில் பரீட்சைக்காக அறிமுகப் படுத்தப்பட்ட சீறாப் புராணம் - பதுறு படலம் என்ற முதல் இஸ்லாமிய நூலுக்கு உரையெழுதி, முஸ்லிம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவினார். இஸ்லாமிய இலக்கிய நூல்கள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளியீட்டாளர்

தம் சமூகத்திற்குத் தரமான நூல்களை வழங்க வேண்டும் என்ற நோக்கில், தம்முடைய ஆக்கங்களைப்

பிரசுரிப்பது பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், தமது காலநேரத்தைப் பயன்படுத்தி தம் சொந்தப் பணத்தில் பிறர் ஆக்கங்களை வெளியிடுவதில் கவிஞர் சுபைர் முன்னின்றுள்ளார்.

ஜாவீது நாமா, இக்பால் இதயம் ரூபய்யாத், இஸ்லாமியத் தென்றல் இரசூல் சதகம், செய்னம்பு நாச்சியார் மான்மியம், தியாகச் சுடர் போன்ற தரமான நூற்களை அவர் பதிப்பித்துள்ளார். சொந்தமாக நூல்களை வாங்கிப் படிக்கும் பழக்கம் தமிழ் வாசகர்களிடம் - குறிப்பாக தமிழ்பேசும் முஸ்லிம்களிடம் அரிதாக இருந்த நிலையிலும் கூட, தரமான ஆக்கங்களுக்கு நூலுருவம் கொடுத்து, அவற்றைச் சமுதாயத்திற்கு வழங்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் பிரசுரித்தார். விற்பனை அருகி, அவற்றில் அவர் நட்டமே அடைந்த போதிலும், அதனைப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டார்.

ஆங்கில மொழிபெயர்ப்புகளிலும் தமிழ் தழுவல்களிலும் பிழையாகச் சித்திரிக்கப்பட்டிருந்த உமர்கையாமை, இலங்கை வாசகர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை அவர்களிடம் கோரி, உமர்கையாமின் ரூபய்யாத்தை அற்புதமாக மொழிபெயர்த்து வெளியிட்டார். இது, 1965ல் கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பைக்குச் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கவிஞர் சுபைர் அவர்களின் மற்றுமோர் சேவை, கடந்த நூற்றாண்டின் ஆரம்பத் தசாப்தங்களில் காத்தான்குடி முஸ்லிம்கள் மத்தியில் நிலவிய திருமணச்

சம்பிரதாயங்களையும் மற்றும் சடங்குகளையும் சித்திரிக்கும் **செய்னம்பு நாச்சியார் மான்மியம்** என்ற கவிதைத் தொடரை 'மணிக்குர'லில் தொடராக வெளியிட்டு பின்னர் நூலுருவில் பிரசுரித்ததாகும்.

பட்டமும் பாராட்டுகளும்

1981.11.11ல் 'கவிஞர் சுபைர்' பாராட்டு விழா **நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார்** தலைமையில் நடைபெற்ற போது, **'ஈழத்துக்கவிமணி'** என்ற பட்டத்தை யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் **பேராசிரியர் வித்தியானந்தன்** வழங்கினார்.

1991ல் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட **வாழ்வோரை வாழ்த்துவோம்** பாராட்டு விழாவின் போது **கவித்தாரகை** பட்டம் வழங்கப்பட்டது.

மலேசியத் தமிழறிஞர் பட்டர்வெர்த் ஜெய்னுதீன் அவர்களின் தலைமையில் இயங்கும் கவிமாலை இலக்கிய அமைப்பு **'இலக்கிய மணி'** என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியது.

1993ம் ஆண்டு தென்னிந்திய ஐயம்பேட்டையில் நடைபெற்ற அல்குர்ஆன் மாநாட்டில் கௌரவப் படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், சுகயீனம் காரணமாக சமுகமளிக்காததால், அதே ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் கொழும்பு 'ரமதா ரெனய்ஸான்ஸ்' ஹோட்டலில் நடைபெற்ற பாராட்டு விழாவின் போது, அன்றைய **பாராளுமன்றச் சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச். முஹம்மது** அவர்களால் பொன்னாடை

போர்த்தியும், இராஜாங்க அமைச்சர் **பி.பி. தேவராஜ்** அவர்களால் விருது வழங்கியும், வீட்டைப்புத்துறை அமைச்சர் அல்ஹாஜ் **இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்** அவர்களால் பொற்கிழி வழங்கியும் பாராட்டப் பட்டார்.

- ஐ.ஏ. ஸத்தார் (செம்மைத்துளியான்)
ஆசிரியர்: (சிந்தனை)

சங்கம் வைத்துத் தமிழ் மொழி வளர்த்த
தமிழகம் இன்று தன்னகத் தடங்கிய
கலைகளும் இலக்கிய நூல்களும் தன்னுடைக்
கலாசாரங்களும் பண்பா டுகளும்
அழிந்து ஒழிந்தும் மறைந்திடு நிலைமையில்
அல்லலுற் றிருக்கும் அவலங் கண்டும்
அவற்றைச் சிறிதும் அறியார் போல
மேல் நாட்டவருடை மொழி யினைக் கற்று.
அம் மொழி வழியே நாமும் அவராய்
மாறிட நினைக்கின்றோம் மடமை! மடமை!!
தாய் மொழிப் பெருமை தளர்வதை நம்மாற்
சகித்தல் கூடுமோ தருமம் ஆகுமோ!
ஆதலின் அன்பீர் அன்போடு வேண்டினேன்
பிற மொழி யாவையும், பிழை யறப் படித்துத்
தமிழ் மொழி தழைக்கத் தொண்டுகள் புரிமின்!

- கவிஞர் எம்.ஸி.எம். சுபைர்

தாய்மொழி தமிழெனக் கொண்ட இரு சமூகங்களும்
ஒருமித்து வாழக் கனவு கண்ட கவிஞர்

எம்.எச்.எம். அஷ்றஃப்

இலங்கைக் கிழக்கு மாகாணத்தின் கல்முனை பிரதேசத்தில் 1948 அக்டோபர் மாதம் 23ம் தேதி பிறந்த **எம்.எச்.எம். அஷ்றஃப்** அவர்கள் 10-12 வயது காலப்பகுதிகளிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கி கட்டுரை, சிறுகதைகள் போன்றனவற்றையும் எழுதியுள்ளார். **'தாய்'** என்ற இவரது முதலாவது கவிதை 1962 செப்டம்பர் 16ம் திகதி **'தேசிய முரசு'** எனும் சஞ்சிகையில் வெளியானதைத் தொடர்ந்து இவரது எழுத்துகளை இலங்கையின் தேசிய பத்திரிகைகள் அங்கீகரித்து வெளியிட்டன.

சிறு வயதிலேயே இஸ்லாமிய மார்க்க சீர்திருத்த இயக்கங்களில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்ட அஷ்றஃப் அவர்கள் தன் எழுத்துகளையும் தான் சார்ந்த சமூகத்தின் விடுதலைக்காக மாற்றிக் கொண்டார். இலங்கையின் இனப்பிரச்சினை உச்சத்தைத் தொட்டிருந்த காலப்பகுதிகளில் வடகிழக்கு முஸ்லிம்கள் அனாதைகளாக கேற்பார், பார்ப்பார் அற்ற சமூகமாக இருந்தமையால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்த அஷ்றஃப் வெளியேறி முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி அரசியல் விலாசத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

மதீனா உம்மா, முஹம்மட் ஹுசைன் என்பவருக்கு மூத்த மகனாக பிறந்த அஷ்றஃப் அவர்கள் நல்ல செல்வாக்கும் கௌரவமுமிக்க குடும்பத்தின் வாரிசாக இருந்த போதிலும் தகப்பனின் விதானையார் ஊதியத்திலேயே குடும்ப வாழ்க்கை சுழன்றமையினால் ஏழையாக வாழ்ந்தார். இவர் கவிதைகளையோ, கட்டுரைகளையோ, சிறுகதைகளையோ, திட்டமிட்டு எழுத வேண்டும் என்பதற்காக எழுதுபவரல்ல, தனக்குள்ளிருந்து எழும் பிரச்சினைகள், அனுபவங்கள், சமூகத்தின் கருத்துகளின் தாக்கங்களையே கலை உலகில் சமர்ப்பித்து எழுத்துருவம் கொடுத்தவராவார்.

பாடசாலைக் காலம் முதலே கலை இலக்கியத் துறையில் தன்னை ஆழப்பதித்த அஷ்றஃப் அவர்கள் ஒரு செய்தியாளராக தனது வாழ்வினைத் தொடங்கி 1974 ஆம் ஆண்டு இலங்கை மீயுயர் நீதிமன்ற சட்டத்தரணியானார்.

இலங்கையில் அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட முஸ்லிம்களின் விடுதலைக்கான விருட்சமாக **ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்** எனும் அரசியல் கட்சியை ஸ்தாபித்து தனது நாவன்மையாலும், சிந்தனைத் தெளிவாலும் பல தடைகளைத் தாண்டி நிலைநாட்டினார். அது மாத்திரமல்லாது தனது ஆளுமைகளை சர்வதேச மட்டங்களிலும் வளர்த்து கொண்ட இவரின் சிந்தனைகள் உலக அரங்கில் பல தாக்கங்களை ஏற்படுத்தச் செய்தன.

ஆறு ஆண்டு காலம் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராகவும், ஐந்து வருடங்கள் அமைச்சராகவும் பதவி வகித்த அஷ்றஃப் அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் கிங்மேக்கராகவும், தலைவனாகவும், ஜனாதிபதி சட்டத்

தரணியாகவும் பதவி வகித்து ஓயாத அரசியல் பணிகளுக்கு மத்தியில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமானிப் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

நெருப்புத் தனல்களைப் போல் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசியலின் இனத்துவ முரன்பாட்டை களைந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒருமித்து வாழ வேண்டும் என்று சிந்தித்து அயராது செயற்பட்டார்.

இவ்வாறான தனது சிந்தனைக்குள்ளும் வேலைப் பளுக்களுக்குமிடையில் **கவிஞன்** என்ற தனது அடையாளத்தை அழித்து விடாமல் தொடர்ந்து கவிதைகளை எழுதி வந்தார். இதனால் அஷ்றஃப் அவர்களுக்கு 1997 ஜூன் மாதம் 19ம் திகதி இலங்கையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவில் **கவிக்கோ அப்துல் ரகுமானினால் கவிஞர் திலகம்** என்று பட்டம் சூட்டி கௌரவிக்கப் பட்டார்.

கவிஞர் திலகம் என்ற நாமம் சூடிக் கொண்டதன் பின்போ அஷ்றஃப் அவர்கள் தனது முதலாவது கவிதை நூலினை இவ்வுலகிற்கு சமர்ப்பித்தார். கடந்த முப்பது ஆண்டுகளாக கவிஞர் எழுதிய 179 கவிதைகளை **நான் எனும் - நீ** எனும் தொகுப்பில் தந்துள்ளார். இவரின் முழுமையான கவிதைத் தொகுப்பு இதுவென்றாலும் கூட கவிஞர் 1990ம் ஆண்டுக்குப் பின்னரே அதிகமான கவிதைகளை எழுதியுள்ளார். இந்தச் செயற்பாடு தனது அதிகாரத்துவ காலத்திலேயே ஒரு தொகுப்பினை வெளியிட்டு கவிஞர் என்ற விலாசத்தினை ஏற்படுத்திச் செல்லலாம் என்று கவிஞர் எண்ணினாரோ என்பது

கேள்வியாக இருக்கிறது. 1960-70 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கவிஞர் யாப்பு இலக்கணக் கவிதைகளை எழுதியுள்ளார். இவற்றை அவரது ஆரம்பகாலக் கவிதைகளில் காணலாம்.

1970ற்குப் பின்னர் ஈழத்து கவிதை உலகம் புதுக்கவிதையாகவே வளர்ச்சி பெற்றது. அஷ்றஃப் அவர்களது பிற்காலக் கவிதைகள் பெரும்பாலும் புதுக்கவிதைகளாகவே காணப்படுகின்றன. ஆனால் கவிஞரின் 'நான் - எனும் - நீ' தொகுப்புக்கு முன்னுரை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்துறை பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் "கவிஞரின் யாப்புக் கவிதைகளில் காணப்படும் இறுக்கமும் செறிவும் அவரது புதுக்கவிதையில் காணப்படவில்லை. குறிப்பாக இவரது நீண்ட கவிதைகள் சொற்சிக்கனமற்று வசனத்தன்மை உள்ளதாகவே காணப்படுகிறது" என்கிறார்.

தந்தையற்ற உயிர் ஒன்றைப் பெற்றெடுத்தேன்
தரணியிலே வேசியெனும் பெயரைப் பெற்றேன்.

(- விலைபோகா மாது -)

இவ்வரிகள் கவிஞரின் யாப்புத்திறனுக்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

கலையாக் கனவைத் தருகின்றாய்
கனவில் நிலைக்க மறுக்கின்றாய்

(- காதல் வேதனை -)

இப்படி 1970களிற்கு புறப்பட்ட காலப்பகுதிகளில் கவிஞர் புதுக்கவிதை வடிக்கிறார்.

'நான் எனும் நீ' தொகுதியின் முகவுரையில் கவிஞர் கவலைப்பட்டுக் கொள்கிறார். 1983 மே மாதம் 07ம் தேதி ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட வேண்டும் என்ற அவாவில் கவிஞர் முகவுரையை எழுதியிருக்கிறார். அது நடக்கவில்லை. அது 16 வருடங்களின் பின்னரே நிறைவேறியிருக்கிறது. அதனால் அம்முகவுரையை 'நான் எனும் நீ' தொகுப்பின் பின்னிணைப்பில் சேர்த்துள்ளார். இது தான் எல்லா எழுத்தாளனுக்கும் இன்று நடக்கும் ஓர் துன்பவியல் சம்பவமாகும்.

நான் எனும் நீ கவிதைத் தொகுதி பற்றி கவிஞர் இப்படிச் சொல்கிறார்:

> "இது ஒரு வெறும் கவிதைத் தொகுப்பாக அமைந்து விடக் கூடாது 1961க்கும் 1999 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு மனிதனின் வாழ்வுப் பாதையில் இருந்த ஒவ்வொரு வளைவையும், சுழிவையும், சந்தியையும் காட்டுகின்றது. பல தடவைகள் திசைமாறிய ஒருவரின் எழுத்துகள் இவை திசை மாறிய போதும் வைத்த குறி மாறாத வாழ்வுப் பாதையில் ஒரு சில தடயங்களே இவை"

என்கிறார் கவிஞர் எம்.எச்.எம். அஷ்றஃப்.

இன்னல்களைத் தாண்டுகையில்
இரத்தம் வடிகிறது
தடைகளைத் தாண்டுகையில்
தாடை உடைகிறது

(- புதிய பாதை -)

எனும் வரிகளூடாய் அவரின் போராட்ட வரலாற்றை அழகாக படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இலங்கையில் முஸ்லிம்களுக்காக பாராளுமன்றத்தின் முதன் முதலாய் ஒங்கி உரைத்த குரல் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கு கவிதையில் ஓர் கடிதம் எழுதுகிறார் கவிஞர்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள்
பறங்கியர்கள் எங்கள் எல்லோரினதும்
இறைவன் ஒருவனே (- எஸ்.ஜே.வி.-)

இனவாதத்தையும், பிரிவினையையும் கவிஞன் ஏற்றுக் கொள்ளாது **'அனைவரும் ஓர் மனித இனம் மாத்திரமே'** என்கிறார் இக் கவிதையில்!

இன்னொன்றில் -

கோழிக் கறியா கொண்டு போறாய்
தாளித்த பாலாணம் தயிருக் கரையல்
வாழைப்பழம் இன்னுமென்ன
வடிவான சாப்பாடுதான்
ஏழு மாசமாய் நீ வளர்த்த
கோழிச் சாவலை
அறுத் தெடுத்து
அறுத்தாப்புக் கிழங்கும் போட்டு
சோக்கான சாப்பாட்டை
ஆக்கிக் கொண்டா அவசரமாய் ஓடிப்போறாய்!

இப்படி நீ இளைத்து ஓடாதே
ஓய்வும் கொஞ்சம் உனக்குத் தேவை
இப்படித்தான் உண்ட
வாப்பாவும் ஒரு நாள் வரம்படியில் மௌத்தானார்!
(- வாப்பா வரம்படியில் மௌத்தானார் -)

கிராமப் புறத்து மொழிநடையிலே அழகாக கிழக்கு மக்களின் உணவு வகைகளை படம் பிடித்துக் காட்டுவதுடன் கிழக்கு மாகாணத்தின் பிரதான தொழில் நெல் உற்பத்தியே. உழவுக் காலமும், வெட்டுக் காலமும் ஓர் சந்தோஷமே நிலவும் அப்பிராந்தியத்தில் அக்காலத்தில் விடியும் முன்னரே வீதிக்கு சனங்கள் வந்து விடுவார்கள். ஒரு சிலர் பரம்பரையாக பல ஏக்கர் காணிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். அவர்களை போடிமார்கள் என்று அழைப்பது வழக்கம். அவர்களின் வயல்களில் வேலை செய்பவர்களே அனைத்து வேலையும் செய்வது வழக்கமாயிற்று. அதனைத்தான் கவிஞர் சொல்கிறார். போடியாருக்கு நேரத்துக்கு சாப்பாடு கொண்டு செல்லும் வயல்காரனைப் பார்த்து உனது வாப்பாவும் வயல்காரன் இப்படித்தான் மவுத்தானார் என்று கவிஞர் சொல்லும் விதம் பிரமிக்கத் தக்கவைதான்.

சிவனின் பாலன்
சிவனடியைச் சேர்ந்தானோ!
அருணாசலத்தின்
அருள் தவறிப் போனதுவோ!
சிவ மணியினது
சிவனும் ஒழுங்கியதோ!
ஜீவராணியின்
பொட்டும் வழிந்ததுவோ!
புன்னகையும் மறைந்ததுவோ!

(- நெருப்புக் கென்ன நீ செய்தாய் -)

கவிஞரின் ஆன்ம நண்பன் சட்டத்தரணி **அருணாச்சலம் சிவபாலன்** திருமணம் செய்து சில

மாதங்களில் தீ விபத்தில் இறந்த போது இவ்வரிகளை அவருக்காய் எழுதி கல்முனை மயானத்தில் பாடி பலரினை அழ வைத்திருக்கிறார். தந்தையை விட்டு மகள் பிரிவதும் மனைவியின் பொட்டு புன்னகையும் மறைவதை எப்படி சிலாகித்து பாடியிருக்கிறார் கவிஞர்.

என் விழிகள் ஒரு
மொழியை எழுதின
அவள் இதயமெனும்
தாளில் நேரடியாய்
பதிந்த மொழியது

(- புதிய எழுது கோல்கள் -)

முதன் முதலாய் தரிசித்து சொல்லத் துடிக்கும் ஒரு மனிதனின் உணர்வுகளைச் சொல்கிறார் கவிஞர்.

சுரண்டல்களும் ஒழிக!
சூதுமேதான் ஒழிக!
வறுமையும் ஒழிக!
வட்டியுந்தான் ஒழிக!
அடக்குமுறை ஒழிக!
மடமைகளும் ஒழிக!
மமதையுமே ஒழிக!

(-ஸ்ரீ.ல.மு.கா. கட்சிக் கீதம் -)

பஞ்சமா பாதங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கவிஞர் எழுதுகிறார். தான் சார்ந்த கட்சியின் கீதத்திலேயே இதனை அழுத்திச் சொல்லியிருக்கின்றார்.

நான் எனும் நீ தொகுதி ஒரு கவிஞன் எழுதிய கவிதைகள் அல்ல, ஒரு விலை மாதுவின் கண்ணீர், ஒரு

போராளியின் ஆக்ரோசம், ஒரு கணவனின் புலம்பல், ஒரு காதலனின் உள்ளக் குமுறல், மொத்தத்தில் இது சிந்தனையில் பிறப்பெடுத்த சித்திரம் அல்ல வாழ்வியலில் நடந்த நிஜங்களையே இவர் பாடியிருப்பது எதிர்கால சந்ததியினருக்கு ஓர் படிப்பினையாகும். இப்படியான தொகுப்பினை முதலில் தந்த கவிஞன் என்ற புகழை இவரே தட்டிக் கொண்டுள்ளார் என்றால் மிகையாகாது. இது இவரின் கவிதைக்கு கிடைத்த பரிசே!

நான் எனும் நீ கவிதைத் தொகுதியில் கவிஞனைப் பற்றி கலைஞர் மு. கருணாநிதி இப்படிச் சொல்கிறார்:

> "அரசியல் சிக்கலுக்கப்பால் நின்று அன்னைத் தமிழில் அற்புதக் கவிதைகளை படைத்திருக்கிறார் கவிஞர் அஷ்றஃப் அவர்கள்."
> "கவிதை பூவுலகம் அரசியல் முள்ளுலகம் இரண்டும் எதிரானவை. கவிஞன் அரசியல்வாதியாக இருப்பது விநோதமான நிகழ்வு"

என்று கவிக்கோ அப்துல் ரகுமான் சொல்கிறார்.

> ஒரு மனிதன் எழுதிய பாடல்கள் அல்ல இது
> ஒரு சரித்திரம் எழுதிய சுவடுகள் இவை!

என்று சொல்கிறார் பதிப்பாளர் எம். பௌஸர்.

உண்மையும் இது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. தனது கவிதைகள் ஊடாய் தான் கடந்து வந்த பாதையைச் சொன்ன கவிஞன் தனது பாதையின் முடிவினையும் எழுதி விட்டுச் சென்றுள்ளான். "போராளிகளே புறப்படுங்கள்" எனும் கவிதையில் தனது மரணம் பற்றியும் அடுத்து என்ன நடக்கும் என்பதையும் அறிந்து சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்.

இஸ்லாமிய மார்க்கத்தில் நல்லடியார்களுக்கு (இறை நேசர்களுக்கு) மாத்திரமே மரணம் அறிவிக்கப்படும் இது அஷ்றஃபின் சூபிஸம் வாழ்வில் கிடைத்த வெற்றியோ தெரியவில்லை.

போராளிகளே புறப்படுங்கள்
ஒரு துப்பாக்கியின் ரவைகளினால்
எனது இரைச்சல் அடங்கி விட்டதற்காய்
நமது எதிரி
வென்று விட்டான் என்று நீ
குழம்பிவிடக் கூடாது.

(- போராளிகளே புறப்படுங்கள் -)

இதுவே 2000ம் ஆண்டு செப்டம்பர் 16ம் திகதி கிழக்கில் உதித்த சூரியன் மேற்கில் மறைவதற்கிடையில் அஷ்றஃப் ஆகாய விமானத்துக்குள்ளேயே வைத்து மறைக்கப்பட்டார்.

எனது மூக்குக்குள்ளும்
எனது காதுகளுக்குள்ளும்
பஞ்சுத் துண்டுகளை வைத்தென் முகத் தோற்றத்தை
பழுதாக்கி விடாதீர்கள்!

அவர் சொன்ன இந்த வரிகளைப் போல எதுவுமில்லாமலேயே அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

இலங்கைத் தீவில் குறுகிய காலத்துக்குள் **கவிஞர், எழுத்தாளர், தலைவர், சட்டவல்லுனர், அமைச்சர்** என்று பல உச்சிகளைத் தொட்டு தனது வாழ்வின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை நிகழ்வுகளைச் சொல்லிவிட்டு அதனை கவிதையூடாக ஆதாரமாக தந்தவர் அஷ்றஃப் அவர்கள்தான்.

மர்ஹூம் அஷ்றஃப் அவர்களை ஓர் நல்ல கவிஞர் என்பதை விட எல்லாம் தெரிந்த ஓர் "சித்தாந்தி" என்றே நான் சொல்வேன்.

- எம்.எச். முஸ்தாக் முஹம்மட்
அக்கரைப்பற்று

✷ தங்கத் தமிழே!
அன்று உன்
நேச விரல்களல்லலோ
கேசம் கோதி உச்சி முகர்ந்து
என் முதல் சுவாசத்திற்கு
முன்னுரை எழுதியது!

✷ நீயல்லலோ இந்த
மானுடத்தின் ஒலிகளை
செல்லமாய் என்
செவிக்குள்ளிட்டு,
என் சிறுகாந்தக் கண்களில்
ஒளித்துருவங்கள் நாட்டினாய்!

✷ காலத்தைக் கரைத்து நான்
வளர்ந்தபோது
என்னைத்
தத்தெடுத்த உனக்குக்
கொத்தடிமை யானேன்!

- கவிஞர் எம்.இ. பிரபாகரபாபு (சென்னை)

குறிப்புகளுக்காக



இந்நூலாசிரியரைப் பற்றி...

1966களில் இலங்கையில் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்த வ.மா. குலேந்திரன் இலங்கை இலக்கியப் பேரவை அமைத்து அதன் தலைவராக செயல்பட்டார்.

1974இல் அகில இலங்கை ரீதியாக பரதநாட்டியப் போட்டி ஒன்று இவர் தலைமையில் நடைபெற்றது. இலங்கையில் வழக்காடுமன்றம் என்ற நிகழ்ச்சி இவரால் அறிமுகப்படுத்தப் பட்டதாகும் 'விகடன்' என்ற சஞ்சிகையும் 'செய்தி முரசு' என்ற வாரப் பத்திரிகையையும் இவர் நடத்தினார்.

ஐரோப்பாவில் 'செய்தி முரசு' என்ற வாரப் பத்திரிகையே முதலாவது தமிழ்ப் பத்திரிகையாகும். அத்துடன் ஐரோப்பாவில் முதலாவது மாலைத் தினசரி 'லண்டன் மாலை' இவரால் ஆரம்பிக்கப்பட்டது. சுனாமி பற்றிய முதலாவது ஆவண நூல் 2004 டிசம்பரிலேயே வெளியிடப் பட்டது.

இலங்கை வானொலி இளைஞர் மன்றத்தில் பங்காற்றிய இவர் தற்பொழுது லண்டனில் கானக்குயில் ஒலிபரப்பில் அறிவிப் பாளராகவும் உள்ளார்.

லண்டனில் 'தமிழினி' மாதச் செய்தி இதழும் தமிழினி மஞ்சரி சஞ்சிகையும் பிரபல்யம் வாய்ந்தவையாகும்.

சிறந்த குடியேற்ற சட்டவாதியான இவரால் பலர் லண்டனில் வதிவிடம் பெற்றுள்ளனர்.

புலம் பெயராத 12 எழுத்தாளர்களின் படைப்புகளை நூலாக ஆக்க பேருதவி புரிந்தவர். தமிழர் தந்தை ஆதித்தனாரைப் பற்றிய மாணவர்களுக்கான கட்டுரை போட்டியும், சுனாமி பற்றிய கட்டுரை போட்டி யும் நடத்தி உலகளாவிய அளவில் புகழ் பெற்றவர். அடுத்த நூலான அகராதிக் கவிதைகள் இவருடைய சிந்தனை அபிநயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

சுனாமி பற்றிய இவருடைய வரலாற்று பதிவு போற்றுதலுக்குரிய ஒன்று. உலகத் தமிழர் பேரவையின் பொதுக் குழு கூட்டத்தில் கலந்துக் கொண்ட ஒரே வெளிநாட்டுத் தமிழர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

-ரவிதமிழ்வாணன்
(மணிமேகலைப் பிரசுரம்)